# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
புக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 141 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை 16.04.2017


## குப்பை மேடு சரிவு; உயிரிழந்தோர் எண்ணிக்கை 16

கொழும்பு, ஏப். 16

கொலன்னாவை – மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 16 ஆக உயர்வடைந்துள்ளது. புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த இடரில் சிக்கி 145 வீடுகள் சேதமடைந்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் 625 பேர் வரையில் அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த இடர் தொடர்பில், உண்மைத் தன்மையைக் கண்டறிய பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 10 புவிச்சரிதவியலாளர்கள் அழைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(விரிவான செய்தி 16ஆம் பக்கத்தில்)

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பாக

## கால அட்டவணையைக் கோரி கூட்டமைப்பு அரசுடன் பேசும்

உதயனின் புதுவருடக் கொண்டாட்டத்தில் மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்:16

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அரசிடம் இருந்து கால அட்டவணை ஒன்றைப் பெறுவதற்கான பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் ஈடுபடவுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்ட >> 52



உதயனின் ஏற்பாட்டில் மாபெரும் சித்திரைப் புதுவருட விழா சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடியில் நேற்று நடைபெற்றது. இதில் சறுக்கு மரம் ஏறும் போட்டி பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்றது.

(மேலும் படங்கள் 7ஆம், 8ஆம், 9ஆம் பக்கங்களில்)

## இன்று வியட்நாம் செல்கிறார் ரணில்

கொழும்பு, ஏப். 16

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இன்று வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்கிறார் என்று கொழும்பு அயலுறவு அமைச்சு அறிவித்தது.

“வியட்நாம் தலைமை அமைச்சர் இன்குயென் க்ஷுவன் ஃபுக் விடுத்துள்ள அழைப்பின் பேரில் வியட்நாமுக்குச் செல்லும் தலைமை அமைச்சர் ரணில் நாளை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரையும் அங்கு தங்கியிருப்பார். அவருடன் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் செல்கிறார்.

பயணத்தின்போது, வியட்நாம் தலைமை அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள தலைமை அமைச்சர் ரணில், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக, பொருளாதார, கைத்தொழில்துறைகளில் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதில் கவ >> 52

# மைத்திரி உத்தரவிட்டு ஒரு வருடமாகியும் கூட காணி விடுவிப்பில்லை

வருத்தத்துடன் அவரே ஒத்துக்கொண்டார்

கொழும்பு, ஏப்ரல் 16

தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதற்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிவிக்குமாறு ஒரு வருடத்திற்கு முன்னரே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டபோதும் இதுவரையில் ஆக்கபூர்வமான எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தை வருத்தத்துடன் அவரே ஒப்புக் கொண்டும் உள்ளார்.

“இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து காணிகளையும் கைதிகளையும் எப்போது எப்படி விடுவிக்கப் போகிறீர்கள் என்று அறியத்தரும்படி கேட்டிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. நீங்கள் இப்போது அது பற்றி படைத் தளபதிகளுடன் பேசப்போவதால், மீண்டும் அது பற்றி நான் >> 52

## மீதொட்டமுல்ல இடருக்கு அரசே முழுக் காரணம்

சாடுகிறார் மகிந்த

கொழும்பு, ஏப் 16

மீதொட்டமுல்ல பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமைக்கு அரசே முழுக் காரணம் என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். >> 52

## பால் புரைக்கேறி மூன்றரை மாத குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஏப். 16

பால் புரைக்கேறியதால் மூன்றரை மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை >> 52

அமெரிக்காவை எச்சரிக்க

## வடகொரியா அணிவகுப்பு



பியாங்யாங், ஏப். 16

கொரியாவில் இருந்து வடகொரியாவைப் பிரித்தெடுத்த இரண்டாம் கிம் ஜோ சங் இனது 105 ஆவது பிறந்த தினத்தை; அமெரிக்காவை மிரட்டும் வகையில் மிகப்பெரும் இராணுவ அணிவகுப்புடன் நேற்றுக் கொண்டாடியது வடகொரியா.

அணுவாயுத விவகாரத்தில் வடகொரியா >> 52

## கொக்கிளாய் கடற்கரைப் பகுதி செவ்வாயன்று மீள நில அளவீடு

வாடிகள் அமைப்பதில் எழுந்த சிக்கலை அடுத்து

முல்லைத்தீவு, ஏப். 16

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் வாடிகள் அமைக்கப்பட்ட பிரதேசம் நீதிமன்றின் உத்தரவுக்கமைவாக >> 52

## வடக்குமாகாணசபையின் சிறப்பு அமர்வை நிறுத்த திரைமறைவில் முயற்சி

அமைச்சர் ஒருவரே மும்முரம்

யாழ்ப்பாணம், ஏப். 16

மாகாண சபை உருவாக்கப்பட்டு 42 மாதங்களில் ஒவ்வொரு அமைச்சுக்களும் என்ன செய்துள்ளன என்பது தொடர்பில் விவாதிக்கச் சிறப்பு அமர்வை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறப்பு >> 52

## பாலியல் குற்றம் புரிந்த இலங்கைப் படைகளை பன்னாட்டு விசாரணை மூலமே தண்டிக்கலாம்

கூறுகிறார் நிர்மலநாதன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 16

போரின் இறுதிக் கட்டத்தில் எமது பெண்களுக்கு எதிராகப் பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக் >> 52




# வடக்கு மாகாண அமைச்சர்களால் எதுவுமே செய்ய முடியாத நிலைமை

## ஒப்புக்கொள்கிறார் ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம், ஏப். 16
வடக்கு மாகாண சபையில் உள்ள 5 அமைச்சர்களுமே பெயருக்காகத்தான் இருக்கின்றோம். கொழும்பு அரசின் சுற்றறிக்கைகளுக்கு அமைய நிர்வாகம் நடத்தும் நிலையிலேயே நாம் உள்ளோம். எங்களால் எதனையும் செய்ய முடியாத நிலையே இருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கவலையுடன் தெரிவித்தார்.

புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் அம்பலவாணர் கலையரங்க திறப்பு விழா வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனசமூக நிலையம் ஒன்றைத் திருத்திக் கொடுப்பதற்குச் சிமெந்து மூட்டைகளை வாங்கிக் கொடுப்பதற்குக் கூட வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் எங்களால் முடியாத நிலையே இருக்கின்றது. வடக்கு மாகாண சபைக்குக் கடந்த வருடம் கொழும்பு அரசு ஒதுக்கிய நிதியை விட சரி அரைவாசி நிதியே நடப்பாண்டுக்குகிடைத்துள்ளது. உலக வங்கியில் எமது நாட்டுக்கு நிறையக் கடன் உள்ளது. அதற்காக அதிகளவான வட்டியைக் கட்ட வேண்டியுள்ளது எனக் கொழும்பு அரசு எமக்குச் சாக்குப்போக்குச் சொல்கின்றது. ஆனால் உண்மை நிலைமை அதுவல்ல. தற்போதைய கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மாகாண சபைகள் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்களையும், அதற்குக் கிடைக்க வேண்டிய நிதிகளைப் பாதியாகக் குறைத்து அரசில் இருக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் ஊடாக மேற்கொள்கின்றனர். வடக்கு மாகாண விவசாய அமைச்சராகிய நானும் கிணறுகள், குளங்கள் போன்றவற்றை திருத்துகின்றேன். கொழும்பு அமைச்சில் இருக்கும் மீள்குடியேற்ற அமைச்சரும் கிணறு. குளங்களைத்தான் புனரமைக்கின்றார். முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவும் வடக்கில் குளங்களைப் புனரமைக்கும் வேலையைத்தான் செய்கின்றார். இவ்வாறு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வடக்கு மாகாண சபையினால் இவ்வாறான கலையரங்கு ஒன்றை அமைக்க முடியுமா என்றால் இல்லை. எமது அமைச்சுக்குத் தந்த நிதியை வைத்து ஏதாவது வேலைத் திட்டங்களைச் செய்ய முயற்சித்தால் அதற்கும் பல சவால்கள் இருக்கின்றன. ஏதாவது வாழ்வாதார உதவிகளை வழங்கினால் அதற்கும் விளக்கங்கள் கேட்கப்படுகின்றன. கடந்த வருடம் வழங்கிய வாழ்வாதார உதவிகளுக்கு நடப்பாண்டிலும் விளக்கம் கோரப்படுகின்றது. இது தான் எமது மாகாண சபையின் நிலைமை ஆகும் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குரு குலராஜா எனப் பலர் கலந்து கொண்டனர். (த-8)

## கேள்வி கோராமலேயே சிற்றுண்டி விநியோகம்

### வடக்கு மாகாண சபை அமர்வுகளில்

யாழ்ப்பாணம், ஏப். 16
வடக்கு மாகாண சபை அமர்வு நாள்களில் வழங்கப்படும் சிற்றுண்டி விநியோகம், கேள்வி கோரல் நடைமுறையைப் பின்பற்றாமலேயே வழங்கப்படுவதாகப் பேரவைச் செயலகத்தினால் வழங்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை அமர்வு நாள்களில் காலைச்சிற்றுண்டி, மதிய உணவு ஆகியவற்றை வழங்கும் தனியார் நிறுவனம் எது? மேற்படி உணவு வழங்கல் தனியார் நிறுவனத்திற்கு கேள்வி கோரல் மூலம் வழங்கப்பட்டதா? எத்தனை நிறுவனங்கள் கேள்வி கோரலுக்கு விண்ணப்பித்திருந்தன? போன்ற விடயங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பேரவைச் செயலகத்திடம் வினவப்பட்டிருந்தது.

காலைச் சிற்றுண்டி, காலப் பகுதிக்கு ஏற்பவும் அவசிய அவசரத் தன்மையைக் கருத்திற் கொண்டும் இலகுவாகவும், தரமாகவும் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாகவும் கேள்வி கோரல் நடைமுறையைப் பின்பற்றாமல் சிறுகட்டு நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்படுவதாகப் பேரவைச் செயலகம் வழங்கியுள்ள பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை,மதிய உணவு விநியோகத்துக்குக் கேள்வி கோரல் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதாகவும், மூன்று நிறுவனங்கள் மாத்திரமே விண்ணப்பித்ததாகவும், பேரவைச் செயலகத்தின் பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## யானையின் தாக்குதலுக்கு இலக்கான முதியவர் கிளி. வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, ஏப். 16
ஒட்டுசுட்டான், ஒலுமடுப் பகுதியில் அதிகாலை வேளையில் யானையால் தாக்கப்பட்ட முதியவர் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒலுமடுவைச் சேர்ந்த 79 வயதான காளிமுத்து என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றார்.

"ஒலுமடுவில் வசிக்கும் முதியவர் தனது வாழ்வாதாரத்துக்காக அயலில் உள்ள குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளார். கடந்த வியாழக்கிழமையும் மீன்பிடிப்பதற்காக அதிகாலை 5 மணியளவில் அவர் குளத்துக்குச் சென்றுள்ளார்.

குளத்தின் கரையில் யானை நிற்பதை அவதானிக்காத முதியவர், அதன் அருகே சென்றுள்ளார். முதியவரை யானை தூக்கி எறிந்துள்ளது. அவர் குளத்தின் நீர்ப் பகுதியில் வீழ்ந்தமையால் முதியவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

முதியவர் எழுப்பிய சத்தத்தின் காரணமாக அயலில் உள்ளவர்கள் ஓடிச் சென்று அவரை நீரில் இருந்து கரை சேர்த்துள்ளனர். அயலவர்களின் உதவியுடன் முதியவர் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்" என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
(வ-5-101)

## தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை வழங்குகிறார் ஜயம்பதி எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 16
தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு இந்த முறை தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் பேராயர் ஜெபநேசன் தலைமையில் யாழப்பாணத்தில் இடம்பெறும் நிகழ்வின் சிறப்புப் பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ண கலந்து கொள்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பொது நூலகம் அருகே உள்ள தந்தை செல்வா சதுக்கம் அமைந்துள்ள வளாகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுகள் தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் பேராயர் ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் அரசமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண நினைவுப் பேருரை ஆற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-101)

## விபத்தில் ஒருவர் சாவு; மூவர் காயம்

காஞ்சிரங்குடா பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்துள்ளனர் எனறு பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி என்பவை ஒன்று டன் ஒன்று மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது.

விசாரணைகளை வவுணதீவு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கப் புலம்பெயர் தமிழர்கள் உதவவேண்டும்

### வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் புங்குடுதீவில் வைத்துக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.16
புங்குடுதீவில் நிலவும் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள் உதவ வேண்டும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் அம்பலவாணர் கலையரங்க திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புங்குடுதீவுப் பகுதியில் நீண்ட காலமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது. இந்தக் கலையரங்கைக் கட்டுவதற்குப் புலம்பெயர் நாடுகளில் வாழும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டனரோ அதேபோல இங்குள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான அபிவிருத்திகளைச் செய்ய முன்வரவேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் நீர்த்தாங்கிகளை அமைத்தல், நீர் சேமிப்பு சார்ந்த அபிவிருத்திகளை மேற்கொள்ளல் போன்ற முக்கிய விடயத்துக்கு பங்களிப்புச் செய்யப் புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் முன்னைய காலத்தில் பத்து அறைகளைக் கொண்ட நூற்றுக்கணக்கான வீடுகள் காணப்பட்டன. ஆனால் இன்று அந்த வீடுகளைக் காண முடியவில்லை. இங்கு வாழ்ந்தவர்கள் பலர் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்போது வாழ்ந்துவரும் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சவாலை எதிர்நோக்கி வருகின்றனர். குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு புலம்பெயர்ந்தவர்கள் உதவி செய்யும்போது இந்தப் பிரதேசம் செழிக்கும் வாய்ப்பு உள்ளது.

இங்குள்ள ஏராளமான விவசாய நிலங்கள் இப்போது பயன்படுத்தாமல் உள்ளன.

அவற்றை விவசாயத்துக்குப் பயன்படுத்தி இந்தப் பிரதேசம் மீண்டும் ஒரு சிறந்த பிரதேசமாக முன்னேற உதவிகளைச் செய்யவேண்டும் என்றார். (த-8)

## முதியோர் கௌரவிப்பும் விளையாட்டு போட்டியும்

யாழ்ப்பாணம், ஏப். 16
குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோன்பு நிலையத்தால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, முதியோர் கௌரவிப்பும் விளையாட்டுப் போட்டியும் இன்று பி.ப. 2.30 மணிக்கு யா/பரமானந்தர் ம.வி. விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

து.கலியுகவரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொள்ளவுள்ளார்.
(ற)

# ஜனநாயகப் போராட்டங்களால் அதிர்ந்துபோயுள்ளது கூட்டு அரசு

## *புதுவருட விழாவில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப் 16

இன்று எமது நிலங்களை மீட்கவும் காணாமற்போனோரைத் தேடியும், அரசியல் கைதிகளை விடுவிக்கவும், பரந்துபட்ட மக்களின் ஜனநாயகப் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. எங்கோ மூலைகளில் நடக்கும் போராட்டங்கள் இன்று அரசையே அதிர வைக்கின்றன. அந்த அளப்பரிய பணியில் ஊடகங்கள் ஆற்றிவரும் பங்கு ஒப்பற்றது. உதயன் அப்பணியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதை நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன்.

உதயனின் ஏற்பாட்டில் மாபெரும் சித்திரைப் புதுவருட விழா நேற்று சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடியில் நடைபெற்றது. இதில் தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அரசியலில் நேரடியாகக் களமிறங்குவதற்குப் பல வருடங்கள் முன்பே உதயன், தமிழ் மக்களின் உரிமைக் குரலாகப் பிறப்பெடுத்தது. எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அம்பலப்படுத்தியது. அநியாயங்களுக்கு எதிராக அச்சமின்றிக் குரல் கொடுத்தது. அரச படைகளின் படுகொலைகள் முதல் பாலியல் கொடுமைகள் வரை அத்தனையையும் மக்கள் அரங்குக்குக் கொண்டு வந்தது. புதைக்கப்பட்ட உடலங்களையும், மறைக்கப்பட்ட உண்மைகளையும் எமது பேனா உறுதியுடன் நிமிர்ந்து நின்று கிளறியெடுத்தது. அரச அதிகாரத்தில் பங்காளிகளாகத் தொங்கிக் கொண்டு மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொலைகளையும் கொள்ளைகளையும் செய்த நோய்க் கிருமிகளை எமது ஊடகம் இனம் காட்ட என்றுமே தயங்கியதில்லை. நீட்டப்பட்ட துப்பாக்கிகளாலோ எறியப்பட்ட கைக் குண்டுகளாலோ எங்கள் நக்கீர நாவுகள் சுருண்டு விடவில்லை. அது ஓங்காரமாக ஒலித்தெழுந்து ஊடகப் போர் நடத்தியது.

இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் எல்லாத் துன்பங்களையும் ஏற்று எமது மண்ணிலேயே விதையாய் விழுந்த ஒப்பற்ற தியாகிகள் மாவீரர்கள். விடுதலை இலட்சியத்தைத் தலையில் சுமந்து இன்னல்களையும் இழப்புக்களையும் ஏற்றுக் களமாடியவர்கள் போராளிகள்! இரவுக்கும் பகலுக்குமான பேதத்தை அவர்கள் உணர்வதில்லை. வெயில், மழை, பனி, இருள் எவற்றையும் அவர்கள் பொருட்படுத்தியதில்லை. பசி, தாகம் அவர்களின் பணியின் வீச்சைத் தளர்த்தியதில்லை.

அவர்கள் விடுதலை என்ற இலட்சியத்துக்காக தங்களையே அர்ப்பணித்து நடத்திய ஆயுதப் போர் அது.

அந்தப் போருக்குக் கரம் கொடுக்க அவர்களுக்கும் சமாந்தரமாகப் பேனா முனை என்ற ஆயுதத்தைக் கையெடுத்து உரிமைப் போரில் ஒருவனாக உதயனும் நடந்தான். அந்தப் பயணம், மலர்கள் நிறைந்த நந்தவனத்தில் மாலை நேரத் தென்றல் காற்றை வாங்கியவாறு நடக்கும் சுகமான அனுபவமல்ல. ஓங்கி அலையடிக்கும் கடற்கரையில் மணலில் கால் புதைய நடக்கும் இன்ப அனுபவமுமல்ல. அது எரியும் நெருப்பைக் கடந்து தகிக்கும் வெப்பக் காற்றைத் தாங்கி அள்ளிச் செல்லும் வெள்ளப் பெருக்கைத் தாண்டி நடக்கும் பயணம்.

அப்படியான பயணத்தில் தன்னை ஊடகப் போராளியாக இணைத்துக் கொண்டு உதயன் நடத்திய பயணத்தில் எதிர்கொண்ட இன்னல்கள் ஏராளம், ஏற்படுத்தப்பட்ட இழப்புகள் ஏராளம், உயிர்ப்பலிகள் உட்படக் கொடுக்கப்பட்ட விலைகள் ஏராளம்! எனினும் எமது பயணம் தொடர்ந்தது! எமது பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் இன்னும் எமது பயணம் தொடரும். இன்னல்களைத் துடைத்தெறிந்துவிட்டு எடுத்து அடிவைத்த இலட்சியப் பயணத்தில் உதயன் தளராத துணிவோடு நடைபோடுகிறான்.



உதயனின் உறுதியான பயணம் அரச கைக்கூலிகளை அச்சம் கொள்ள வைத்தது. சமூக விரோதிகளை சல்லடை போட்டது. துரோகிகளைத் துளைத்தெடுத்தது. மக்கள் விரோதிகளைக் கலங்க வைத்தது.

உதயனின் ஊடகப் போரைத் தடுத்து நிறுத்த, வன்முறை உதயன் பணிமனை வாசல் வரை வந்தது. காடைத்தனம் ஊடகப் பணியாளர்களின் உயிர்களை விலை கேட்டது. கொலை முயற்சிகள் ஆசிரியர்கள் மீதும் பணியாளர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ஆசிரியர்கள் படுகாயப்படுத்தப்பட்டனர். பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். விநியோகஸ்தர்கள் தாக்கப்பட்டு அவர்களின் வாகனங்கள் எரியூட்டப்பட்டன. உதயன் பணிமனைக்குள் அதிகாலையில் புகுந்த சமூக விரோதிகள் அச்சு இயந்திரங்களைத் தீயிட்டு எரித்தனர். எத்தனை கொடிய முயற்சிகள் செய்த போதும், அவர்கள் எவ்வளவு சக்திவாய்ந்த பின்னணிகளைக் கொண்டிருந்த போதும் உதயன் வெளிவருவதை ஒரு நாள் கூடத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஐந்து மணியளவில் இயந்திரங்கள் எரியூட்டப்பட்டன. ஆனால் ஏழு மணியளவில் பத்திரிகைகள் கடைகளில் விற்பனைக்குத் தயாராயிருந்தன. எரியூட்டப்பட்ட செய்தியைத் தலைப்புச் செய்தியாகத் தாங்கி.

ஆம் இது ஓயாத பயணம். ஓய வைக்க முடியாத பயணம்! தமிழ் மக்களின் உரிமைக்குரலை உலகமெங்கும் ஒலிக்கும் வகையில் தொடரும் உன்னத பயணம்.

நீண்ட நெடிய பயணத்துக்கு நாம் கொடுத்த விலைகள் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை. உதயன் மீது இதுவரை 48 தாக்குதல்கள் நடந்தேறியிருக்கின்றன. உயிர்களும் விலை கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இற்றை வரையில் ஒரு தாக்குதலாளி தன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அல்லது நிறுத்துவதற்கும் முயற்சிக்கப்படவில்லை. குற்றவாளிகள் இவர்கள்தான் என்று சுட்டுவிரல் நீட்டி அடையாளப்படுத்திய போதும், அவர்களைச் சந்தேகத்தில் விசாரணைக்குக் கூட உட்படுத்தவில்லை. ஆட்சி மாறிய பின்னராவது மாற்றம் ஏற்படும் என்றால், அதுவும் நடக்கவில்லை. தென்பகுதி ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபர்கள் விசாரணை வளையத்துக்குள் மடக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனை வரவேற்கின்றோம். இதே போன்ற எமதும், எம்மின சக ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்நிறுத்துங்கள்.

ஒரு அத்துமீறலோ படுகொலைகளோ இடம்பெறும் போது அதன் உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்த உடனடியாகவே ஊடகவியலாளர்கள் அங்கு நிற்பார்கள்.

உயிராபத்தான பணி அது? ஆனாலும் அவர்கள் அதை செய்யத் தவறுவதில்லை.

போரின் இறுதிக் கட்டத்தில் அரசின் படைகள் தாம் புலிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்தனர். வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்றவர்களைக் கொன்று தள்ளினர். தமது உறவினர்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட போராளிகள் காணாமற் போக வைக்கப்பட்டனர். பெண் போராளிகள் கேவலமான முறையில் கொல்லப்பட்டனர். இந்தக் கொடூர நடவடிக்கைகளை ஊடகங்கள் அம்பலப்படுத்தத் தவறியிருந்தால், அவையெல்லாம் மனிதாபிமான நடவடிக்கை என்ற போர்வையால் மறைக்கப்பட்டிருக்கும்.

அன்று ஊடகவியலாளர்கள் உயிரைக் கொடுத்து உடலுறுப்புக்களை விலை கொடுத்துச் சேகரித்த தகவல்களே இன்று இலங்கைப் படையினரின் போர்க்குற்றங்களையும் மனித குல விரோத நடவடிக்கைகளையும் வெளியே கொண்டு வந்தன.

இன்று இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனது தீர்மானங்கள் மூலம் திணறடிக்கிறது. பொறுப்புக் கூற வேண்டிய சந்தர்ப்பத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

இது ஊடகவியலாளர்களின் சாதனை என்பதை மறுக்க முடியுமா? இவை குருதி சிந்திப் பெற்ற தகவல்கள் என்பதை இல்லையென்று சொல்லிவிட முடியாது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்க வைக்கப்பட்டது. ஆனால் நாம் கொடுத்த உயிர்ப்பலிகளும் பேரிழப்புகளும் வீண் போகவில்லை. அதன் மௌனம் இன்று எமது நிலங்களை மீட்கவும் காணாமற்போனோரைத் தேடியும், அரசியல் கைதிகளை விடுவிக்கவும், பரந்துபட்ட மக்களின் ஜனநாயகப் போராட்டங்களாக வெடித்திருக்கின்றன.

எங்கோ மூலைகளில் நடக்கும் போராட்டங்கள் இன்று அரசையே அதிர வைக்கின்றன. அந்த அளப்பரிய பணியில் ஊடகங்கள் ஆற்றிவரும் பங்கு ஒப்பற்றது. உதயன் அப்பணியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதை நீங்கள் அறிவீர்கள்.

எனவேதான், உதயன் மக்கள் குரலாக மக்களின் உரிமைப் போராட்டத்தின் உந்து விசையாக என்றும் செயற்படுமென்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உதயன் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக் குரலாகச் சுதந்திரமாக ஒலிக்கும் என்பதைக் கூறி உங்கள் பேராதரவு தொடர்ந்து எமக்கு வழங்கப்படவேண்டும் என்று அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (கு)

# தமிழரின் உரிமைகள் மறுக்கப்படுமானால் குருதிக் களரியை நாடு மீண்டும் சந்திக்கும்

## வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16

"தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுமானால் மீண்டும் இந்த நாட்டில் குருதிக் களரியை சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலமை ஏற்படும்"

இவ்வாறு எச்சரித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

புங்குடுதீவு கலைப் பெருமன்றத்தின் அம்பலவாணர் கலையரங்க திறப்புவிழா வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களுக்குத் தேவையானதை நாமே தீர்மானித்துக் கொள்ளவும் எமது உரிமைகளைப் பெறவும் இந்த அரசிடம் முயலவேண் டும். மாகாணத்தின் கூட்டுறவு ஆணையாளரைக் கூட நியமிக்க முடியாத நிலமையே இன்று எம்மிடம் காணப்படுகின்றது. தற்போதைய அரசு பெயரளவில் மட்டும் கூட்டு அரசாக இருக்கின்றது. இந்த அரசும் முன்னைய அரசைப் போலவே செயற்படுகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்று அண்மையில் என்னைச் சந்தித்தது. தாயாரும் அவரது இரண்டு பிள்ளைகளும் வந்திருந்தனர். அந்த தாய் தனக்கு வாழ்வாதார உதவி கேட்டு வந்திருந்தார். அந்தத் தாயார் சில விடயங்களை என்னிடம் கூறினார்.

"எமது சிறிய வயது மகன் ஆனையிறவு பற்றிப் பேசுகின்றான். பலாலிக்குள் எப்படியாவது போக வேண்டும் என்கின்றான். நெடுந்தீவுக்கு அண்மையில் சென்றிருந்த போது அங்கிருந்த கடற்படையினரை பார்த்து இவர்களை நாங்கள் சுட்டவர்கள் அல்லவா? என்று கூறுகிறான். அவன் ஓர் மாவீரனின் மறுபிறப்பாகத்தான் வாழ்ந்து வருகின்றான்" என்று அந்தத் தாயார் என்னிடம் தெரிவித்தார்.

இதை வைத்து அவதானித்துப் பார்த்தால் இந்த சிறுவர்கள் வளர்ந்து வாழும் காலப்பகுதியில் எமது மக்களின் உரிமைகள் மறுக்கப்படுமானால் மீண்டும் ஒரு குருதிக் களரி ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

வடக்கு மாகாண முதலமைச்சர், அரச தலைவருக்கு வேலைதேடும் பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பாக கடிதம் எழுதி இருந்தார். ஆனால் அவரின் செயலாளர் அவரின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக அலுவலகத்தில் வைத்து வேலைதேடும் பட்டதாரிகளின் பிரச்சினை கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார். இதெல்லாம் முன்னைய ஆட்சியின் தொடர் நிலையையே காட்டுகின்றது.

அரசு ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு தீர்க்கப்படாது போனால் மீண்டும் இந்த நாட்டில் விரும்பத்தகாத சில சம்பவங்கள் இடம்பெறும். அரசு சில சலுகைகளைக் கொடுத்து எங்களை அடக்கப்பார்க்கின்றது. இவ்வாறான மறுப்புக்கள் காரணமாக அது அரசியல் பிரச்சினைகளாக மாறி நாட்டில் மீண்டும் விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறும் என்றார். (வ-8)



# யாழ். மாவட்டத்தில் மணல்அகழ்வுக்கு புதிய இடம் தெரிவு

## நேரில் சென்று ஆராய்ந்த பின்னரே இறுதி முடிவு என்கிறார் மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், ஏப்.16

வனஜீவராசிகள் திணைக்களத்தால் மணல் அகழ்வுக்குத் தடை விதிக்கப்பட்டதை அடுத்துப் புதிய இடத்தில் மணல் அகழ்வது தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்து எதிர்வரும் வியாழக் கிழமை முடிவு எடுக்கப்படும்.



இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தில் மணல் அகழப்பட்ட இடத்தில் மண்ல் அகழ வனஜீவராசிகள் திணைக்களம் தடை விதித்துள்ளது.

அந்த இடம் தமக்குரியது என்று அடையாளப்படுத்தியுள்ளது. அதையடுத்து யாழ். மாவட்டத்தில் பெரும் மணல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. தற்போது மணல் அகழ்வுக்காக மாற்று இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

"மாவட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்காகத் தற்காலிகமாக மணல் பெற்றுக் கொள்வதற்கான இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் நேரில் சென்றுஆராய்ந்து இறுதி முடிவு எட்டப்படும்.

அந்தப் பகுதி மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர், மாவட்டச் செயலரின் பிரதிநிதிகள், சுற்றுச் சூழல் அதிகார சபையின் பிரதிநிதிகள், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள், கடலோரப் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்கள் அடங்கிய தரப்பினர் அந்தப் பகுதியை நேரில் பார்வையிடுவர். அங்கு மணல் அகழ்வதால் பாதிப்பு ஏற்படாது என்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்கள் பரிந்துரைக்கும் அறிக்கையின் அடிப்படையில் மணல் விநியோகம் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்." என்று யாழ்.மாவட்டச் செயலர் குறிப்பிட்டார். (ற-5,101)



# சக்கரம் மாற்ற புத்தரை பயன்படுத்தியோர் கைது

கொழும்பு, ஏப். 16

வாகனம் ஒன்றின் சக்கரத்தை மாற்ற புத்தர் சிலை ஒன்றைப் பயன்படுத்திய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் சக்கரத்தில் உள்ள பிரச்சினை காரணமாக சக்கரத்தை மாற்றுவதற்கு புத்தர் சிலை ஒன்றை வாகனத்துக்கு முட்டாகப் பயன்படுத்தியுள்ளனர்.

வணக்கத்துக்குரிய புத்தர் சிலையை இவ்வாறான நடவடிக்கையில் பயன்படுத்துவதைக் கண்ட, பிரதேச மக்கள் கடும் அதிருப்தி அடைந்த நிலையில் பேராதனை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புத்தளம் பிரதேசத்தில் இருந்து பேராதனைக்கு வருகை தந்துள்ளனர் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

# வீட்டுத் திட்ட வீடுகளுக்கான இறுதிக் கொடுப்பனவு தாமதம்

## முல்லை. மாவட்ட வீட்டுத் திட்ட பயனாளிகள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்ட வீடுகளுக்கான இறுதிக் கட்டக் கொடுப்பனவு இதுவரை வழங்கப் படவில்லை என்று பயனாளிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு 600 வீடுகள் அமைக்க மீள்குடியேற்ற அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டது. அவற்றுக்கான இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. சிலருக்கு இரு கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. திட்டம் மாவட்டத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் முன்கனெடுக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதும் பல நூறு வீடுகள் பூர்த்தி யாக்கப் படாதுள்ளன. பலர் வீட்டுக் கட்டுமானத்தை நிறைவு செய்யக் கடன் பெறும் நிலையும் காணப்படு கின்றது." என்று பாதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

"மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கான நிதியில் 18 மில்லியன் ரூபா இதுவரை எமக்குக் கிடைக்க வில்லை. அதனாலேயே இந்த நிலமை காணப்படுகின்றது. நிதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. விரைவில் நிதியைப் பெற்று இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்." என்று முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ற-101)

# கேப்பாபிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறது



முல்லைத்தீவு, ஏப்.16

கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வலியுறுத்திக் கேப்பாபிலவு மக்கள் நடத்தி வரும் தொடர் அறவழிப் போராட்டம் நேற்று 46 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

"புதுவருடப் பிறப்பை எமது காணிகளில் கொண்டாடும் ஆர்வத்துடன் இருந்தோம். ஆனால் புதுவருடத் தினம் எமக்கு கரிநாளாக மாற்றப்பட்டது. எமது காணிகளுக்குள் செல்லும் வரை போராட்டம் தொடரும்." என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு மக்களின் போராட்டம் கடந்த மார்ச் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமானது. (ற-7)

# வீட்டுத் திட்டத்தில் குளறுபடிகள் எனில் தயக்கமின்றிக் கேளுங்கள்

## மக்களுக்கு அறிவுறுத்துகின்றார் கே.கே. மஸ்தான் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப்.16

மீள்குடியேற்றச் செயலணியால் வழங்கப்படவுள்ள வீடுகளுக்கான புள்ளி வழங்கலில் அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அதிகாரிகளிடம் அதுகுறித்துத் தயக்கமின்றித் தட்டிக்கேட்கலாம்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மீள்குடியேற்றச் செயலணியின் உப குழுவில் இணைக்கப்பட்டுள்ள கே.கே. மஸ்தான் அரச தலைவரின் சிறப்புப் பணிப்பின் பேரில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளார். அதன் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் மன்னார், அடம்பன் பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களுக்குத் தெளிவுபடுத்தும் செயற்றிட்டத்தை முன்னெடுத்தார். அதன்போது வீட்டுத் திட்டத்தில் குளறுபடிகள் நடந்துள்ளன என்று மக்கள் முறையிட்டனர் என்று அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

வீட்டுத் திட்டம் தொடர்பான புள்ளியிடலையும், பெயர்களையும் பொது இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும். அதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் வெளிக்கொணரப்படும். கூட்டரசில் எந்தப் பொதுமகனும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றேன். எனது அரசியல் பிரவேசத்துக்கு முன்னரான குறைபாடுகளே இப்போது அதிகம் சுட்டிக்காட்டப்படுகின்றன. அந்தத் தவறுகள் இனியும் நடக்க இடமளிக்கக் கூடாது என்றுள்ளது. (ற-10)

# பேராதனை பல்கலை நாளை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 16

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாகப் பல்கலைக்கழக முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

திடீரெனப் பரவிய வைரஸ் காய்ச்சல் காரணமாகப் பல்கலைக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதால் விடுதிகளில் தங்கிக் கல்வி கற்கும் மாணவர்கள் இன்று மாலைக்குள் தங்களது விடுதிகளுக்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (து-4)

# வடக்கு பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பில் மைத்திரிக்கு அறிக்கை

## யாழ். வந்த அவரது இணைப்புச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

வாக்குறுதி வழங்கி உங்கள் போராட்டத்தை இடைநிறுத்துவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. இது தொடர்பில் ஆராய்ந்து அரச தலைவருக்கு அறிக்கையொன்றைச் சமர்பிக்கவே வந்துள்ளோம்.

இவ்வாறு வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகளைச் சந்தித்த இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும் அரச தலைவரின் இணைப்புச் செயலாளருமான மனுல பெரேரா தெரிவித்தார்.

குறித்த செயலாளர் உள்ளிட்ட குழுவினர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை நேற்றுப் பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அரச தலைவரின் செயலாளர் சந்திப்பதாக முன்னர் தமக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் வராது இலங்கைத் தொழிற்சங்கச் செயலாளர் வந்திருந்தமை தொடர்பில் பட்டதாரிகள் கேள்வியெழுப்பினர். அதன்பின்னர் மனுல பெரேரா ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது,

நாம் இலங்கைச் சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள். உங்களைச் சந்திக்க வந்ததன் நோக்கம் உங்களுக்கு வெற்று வாக்குறுதிகளை தந்து அல்லது குறிப்பிட்ட கால வரையறையைக் கூறி அதற்குள் வேலை வாய்ப்பு வழங்குவோம் என்று கூற அல்ல. இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையை அரசதலைவருக்கு வழங்கவே.

கடந்த ஆட்சிக் காலத்திலும் அரச தலைவருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்துள்ளோம். அதனை நாம் உடனடியாகச் செய்யவில்லை. 2010ஆம் ஆண்டு வழங்கவதாகக் கூறிய வேலை வாய்ப்பு 2012ஆம் ஆண்டே பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருந்தது. கடந்த 31ஆம் திகதி அரச தலைவருடன் நாம் பேசியபோது பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் சாதகமான பதிலொன்றை தந்திருந்தார். பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் குழுவொன்றை அமைத்திருந்தார். அந்தக் குழு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கூடி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான வேலைத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அரச தலைவருக்குச் சமர்ப்பிக்கும். பட்டதாரிகளது வேலையில்லாச் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக திறைசேரிப் பணிப்பாளர், உள்நாட்டுவிவகார அமைச்சு, நிதியமைச்சு ஆகியோருடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தோம். இவர்களே வேலைவாய்ப்பு தொடர்பாகத் தகவல்களைத் தயாரிப்பவர்கள் - என்றார். (க-4-106)



ஈராக்கின் மேற்கு மோசூலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகக் கடும் போர் நடைபெற்றுவருகிறது. ஈராக் அரசபடைகள் கிட்டத்தட்ட வெற்றிபெற்றுவிட்ட நிலைப்பாடே தற்போது அங்குள்ளது. போர் தந்த சேதங்களைப் பார்த்தவாறு போரின் எச்சத்தில் அமர்ந்திருக்கும் இந்த நபரின் ஒளிப்படம் சமூக வலைத்தளங்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. (ம)

# அமெ. – வடகொரியா இடையே போர் வெடிக்கும் அபாயமுள்ளது

## சீனா கருத்துப் பகிர்வு

பியாங்யாங், ஏப். 16



அமெரிக்கா - வடகொரியா இடையே எந்த நேரத்திலும் போர் வெடிக்கும் அபாயம் உள்ளது என்று சீனா எச்சரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ள பன்னாட்டுச் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறு ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதுவரை அந்த நாடு ஐந்து தடவைகள் அணுவாயுதச் சோதனைகளை நடத்தியுள்ளது. ஆறாவது சோதனைக்கும் அந்த நாடு தயாராகி வருகிறது. தமது ஆயுதங்களில் பல அமெரிக்காவுக்கு எதிரானவை என்று வடகொரியா எச்சரித்ததால் கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கா வின்சன் என்ற விமானம் தாங்கிப் போர்க் கப்பலையும், அதில் போர் விமானங்களையும் நிறுத்தி யுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இரு நாடுகளும் கடும் முறுகல் நிலையில் உள்ளன. இந்த நிலையிலேயே சீனா இவ்வாறு எச்சரித்துள்ளது.

வடகொரியவிவகாரத்தில்எந்த நேரத்திலும் போர் மூளலாம். இந்தபோரில் எவருக்கும் வெற்றி கிடைக்கப்போவதில்லை. இதனால் கொரியத் தீப கற்பத்தில் பதற்றம்தான் ஏற்படும்.

எனவே பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்று சீன அயலுறவுத்துறை அமைச்சர் வாங் தெரிவித்தார்.

கொரியத் தீபகற்பத்துடன் தொடர்புடைய ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகள் தமது சுயபாதுகாப்பை இரட்டிப்பாக்கியுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# சீனா – நேபாளம் இடையே கூட்டு இராணுவப் பயிற்சி

காத்மண்டு, ஏப். 16

சீனா-நேபாளம் ஆகிய நாடுகளிடையே மேற்கொள்ளத் திட்டமிட்ட கூட்டு இராணுவப் பயிற்சி இன்று ஆரம்பமாகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவிலேயே இந்தப் பயிற்சி ஆரம்பமாகிறது.

சகர்மாதா நட்பு 2017 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சகர்மாதா என்பது எவரெஸ்ட் சிகரத்துக்கு நேபாளத்தில் வழங்கும் பெயர்.

இந்தப் பயிற்சி, தீவிரவாத எதிர்ப்பு மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுவதாக நேபாள இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளம் மற்றும் சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)





## ரசிடினில் 70 ஆயிரம் மக்கள் திடீர் வெளியேற்றம்

சிரியாவின் ரசிடின் நகரில் சிரியப் படைகள் முகாமிட்டுள்ளன. இதனால் அங்கு அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கும் அரச தரப்புக்கும் இடையில் இன்னும் சில நாள்களில் கடும் போர் வெடிக்கும் என்று கருதப்படும் நிலையில் அங்கிருந்து 70 ஆயிரம் மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிரிய அதிபர் அல் அசாத்தை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தோற்றம் பெற்ற அழுத்தக். குழுக்கள் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவாக மாற்றம் பெற்றுள்ளன. இந்தக் குழுவின் பிடியில் அலெப்போ, அதனுடன் தொடர்புடைய ரசிடின் நகர்கள் இருந்தன.

அலெப்போ மீண்டும் சிரியப் படையின் கட்டுப்பாட்டில் சென்றுள்ளது. ரசிடினைக் கைப்பற்றுவதற்கு சிரியப் படைகள் தற்போது முனைப்புக் காட்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அடையாளம் அம்பலம்

குருத்தோலை ஞாயிறு தினத்தில் எகிப்துத் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார் என்று எகிப்து உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. குருத்தோலை ஞாயிறு சிறப்புத் திருப்பலியின் போது எகிப்தில் டான்டா மற்றும் அலெக்சாந்திரியா பகுதிகளில் உள்ள தேவாலங்களில் தற்கொலைதாரிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல்களில் 45 பேர் கொல்லப்பட்டனர். அடுத்த மூன்று மாதங்களுக்கு எகிப்து முழுவதும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. தாக்குதல் நடத்தியவர் எவர் என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அலெக்சாந்திரியா பகுதியில் தாக்குதல் நடத்தியவரின் அடையாளம் இனங்காணப்பட்டது. டான்டாவில் தாக்கு தல் நடத்தியவர் எவர் என்ற கோணத்தில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று எகிப்து உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. (ம)



## அமெரிக்காவை எதிர்கொள்ள அணுவாயுத ரீதியிலும் தயார்

### வடகொரியா மீண்டும் இறுமாப்பு

பியாங்யாங், ஏப். 16

அமெரிக்கா - வடகொரியா இடையே போர்ப் பதற்றம் உச்சம் தொட்டுள்ள நிலையில், அணுவாயுத ரீதியிலும் அமெரிக்காவை எதிர்கொள்ளத் தயார் என்று நேற்று அறிவித்தது வடகொரியா.

வடகொரியா மீது தொடுக்கப்படும் எவ்விதப் போரையும் நேரடியாகச் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம் என்பதை அமெரிக்கா அறிந்திருக்கும். எம்மீது நடத்தப்படும் அணு ஆயுத தாக்குதலுக்கும், எமக்கே உரிய பாணியில் சரியான பதிலடி கொடுப்போம் என்று வடகொரியாவின் இரண்டாம் நிலை தலைமை அதிகாரியும், ஆளும்கட்சித் தலைவரும், இராணுவத் தளபதியுமான சோய் ரியாங் தெரிவித்தார்.

வடகொரியா இன்னமும் சில தினங்களில் தனது 6 ஆவது அணுகுண்டுச் சோதனையையும் நடத்தும் என்ண கணிப்பும் உலக நாடுகளிடையே உள்ளது. (ம)

# சென்னையில் 4,525 மாணவிகள் ஒரே இடத்தில் பரதம்

சென்னையில் 4 ஆயிரத்து 525 மாணவிகள் ஒரே இடத்தில் பரதம் ஆடி கின்னஸ் சாதனை படைத்தனர்.

சென்னை பல்லாவரம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்லூரி மைதானத்திலேயே இந்தச் சாதனை படைக்கப்பட்டது. 4 ஆயிரத்து 525 மாணவிகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பரத நாட்டியம் ஆடியமை அங்கு கூடியிருந்தவர்களை வெகுவாகக் கவர்ந்தது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. 30 திருக்குறள்களை மையமாக வைத்து இசையமைக்கப்பட்ட 21 நிமிட பாடலுக்கே மாணவிகள் நடனமாடினார்கள்.



600 பரதநாட்டிய ஆசிரியர்களின்பயிற்சிக்குப் பின்னர் மாணவிகள் கின்னஸ்சாதனையை நிகழ்த்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக 2 ஆயிரத்து 100 பேர் நிகழ்த்திய சாதனையையே இந்த முறை 4 ஆயிரத்து 525 பேர் முறியடித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வெடிகுண்டுகளின் தாயால் 94 ஆயுததாரிகள் வேட்டை

## ஆப்கான் அரசு வெளிப்படுத்தல்



காபுல், ஏப். 16
ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு செயற்பட்டு வந்த இடத்தில் அணுகுண்டு அல்லாத மிகப் பெரிய குண்டை அமெரிக்கா வீசி நடத்திய தாக்குதலில் உயிரிழந்த ஆயுததாரிகளின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்தது. இந்தத் தகவலை ஆப்கானிஸ்தான் அரசு வெளிப்படுத்தியுள்ளது.
வெடிகுண்டுகளின் தாய் என்று அழைக்கப்படும் சக்திவாய்ந்த குண்டான ஜி.பி.யு. - 43 ரக குண்டே அமெரிக்காவால் நேற்று முன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) வீசப்பட்டது. அமெரிக்கத் தயாரிப்பில் அணுகுண்டுகள் இல்லாத ரகத்தில் இதுதான் மிகப் பெரிய வெடிகுண்டு. 9 ஆயிரத்து 797 கிலோ எடை கொண்ட இந்த மிகப் பெரிய வெடிகுண்டை ஈராக் போர் தொடங்குவதற்கு முன்னர் கடந்த 2003 ஆம் ஆண்டு அமெரிக்கா பரிசோதித்துப் பார்த்திருந்தது.
பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள ஆச்சின் பகுதியில் உள்ள மலைகளில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகள் பதுங்கியுள்ளனர் என்று கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. 36 ஆயுததாரிகள் சாவடைந்தனர் என்று முதல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுததாரிகளின் சாவு எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது என்று ஆப்கானிஸ்தான் அரசு வெளிப்படுத்தியது.
மலைகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தமது பதுங்கும் இடங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இதனால் மலைகளைத் தகர்ப்பதற்காகவே இந்தக் குண்டு பயன்படுத்தப்பட்டது என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## துல்லியத் தாக்குதலுக்கு டொனால்ட் ட்ரம்ப் பாராட்டு

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் நிலைகளின்மீது அமெரிக்கப் படைகளால் நடத்தப்பட்ட துல்லியமான தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது பாராட்டைத் தெரிவித்தார்.
அமெரிக்க இராணுவத்தை எண்ணிப் பெருமையடைகிறேன் என்று ட்ரம்ப் தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டார்.
அமெரிக்க செனட் உறுப்பினர்களும் ட்ரம்பின் நடவடிக்கையைப் பாராட்டியுள்ளனர்.
ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்திவரும் ஆயுதக் குழுக்களுக்கு இந்தத் தாக்குதல் ஒரு தெளிவான தகவலை அனுப்பியிருக்கும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
ஆப்கானிஸ்தானில் உள்ள ஆயுதக் குழுக்கள் மீது போர் முனைப்பில் நடத்தப்பட்டுள்ள முதல் தாக்குதல் இது என்று அமெரிக்கா இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் அடம் தெரிவித்தார். (ம)





## விஜயபாஸ்கரிடம் சி.பி.ஐ. விசாரிப்பு

சென்னை, ஏப். 16
ஆர்.கே. நகர் தொகுதி இடைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட விருந்ததாகச் சொல்லப்படும் பணம் தமிழக சுகாதாரதுறை அமைச்சர் விஜயபாஸ்கரின் வீட்டில் மீட்கப்பட்டது. இது தொடர்பில் மத்திய புலனாய்வுத் துறை விசாரணை நடத்த உள்ளது.
தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் வீடுகள், அலுவலகங்கள் உள்ளிட்ட 55 இடங்களில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சோதனை நடத்தப்பட்டன. இந்தச் சோதனையில் கிட்டத்தட்ட 89 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) ஆர்.கே. நகர் இடைத்தேர்தலுக்கு வாக்குகள் விலைக்கு வாங்கப்படுவதற்காக தயார் நிலையில் இருந்ததும், விநியோகிக்கப்பட்டதும் கண்டறியப்பட்டது. குறிப்பாக தினகரனின் ஆதரவாளரும், தமிழக சுகாதாரத்துறை அமைச்சருமான விஜயபாஸ்கரின் வீட்டில் 3 கோடி ரூபா பணமும், இடைத்தேல்தலுக்கு வழங்கப்படவிருந்த துண்டுப்பிரசுரங்களும் மீட்கப்பட்டன. இது தொடர்பிலேயே மத்திய புலனாய்வுத்துறை விசாரணை

## அதிர்ந்தது சிலி

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் நேற்று நில அதிர்வு ஏற்பட்டது.
சிலியின் தெற்குப் பகுதியில் உள்ள கலாமா நகரின் தென்கிழக்கே கிட்டத்தட்ட 144 கிலோமீற்றர் தூரத்தில் கிட்டத்தட்ட 188 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவு கோலில் 6.1 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.
சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. சேதவிபரம் தொடர்பில் முழுமையான தகவல்களும் வெளியிடப்படவில்லை. (ம)





சிரியாவின் பல்மைரா நகரின் ஒளிப்படமே இது. பழமைகளை உள்ளடக்கிய நகர் என்று புகழ்பெற்ற இந்த நகரின் தொல்பொருள் சின்னங்கள் பலவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் இடித்தழிக்கப்பட்டுள்ளன. நகர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ள போதிலும் போரின் எச்சங்கள் இனமும் மாறவில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)

## சிரியாவுக்கு ஆதரவாக வீட்டோவை பயன்படுத்தியது ரஷ்யா

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிரியாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தால் இல்லாமல் செய்தது.
சிரியாவின் சேகுன் நகரில் கடந்த 4 ஆம் திகதி நடத்தப்பட்ட வான் வழி இரசாயனத் தாக்குதலில் 86 பேர் சாவடைந்தனர். இந்தத் தாக்குதலை சிரியாவே நடத்தியது என்று அமெரிக்கா உறுதிபடக் கூறுகிறது. இந்தத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐ.நா. சபை அறிவித்தது. இந்தத் தாக்குதலுக்கு எதிராக அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டு வந்தன. ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தால் தீர்மானத்தை இல்லாமல் செய்தது. (ம)



## இத்தாலிக் கடற்பரப்பில் 2,000 அகதிகள் மீட்பு

உரோம், ஏப். 16
இத்தாலிக் கடற் பரப்பில் நேற்றுமுன்தினம் மட்டும் 2 ஆயிரம் அகதிகளை மீட்டுள்ளோம் என்று அந்த நாட்டின் கடலோரக் காவல் படை அறிவித்தது.
ஈராக், சிரியா, சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் லிபியாவுக்கு வந்து பின்னர் அங்கிருந்து மத்திய தரைக்கடலின் வழியாக இத்தாலி நோக்கிச் செல்கின்றனர். அவ்வாறு 16 படகுகளில் இத்தாலி நோக்கிச் சென்ற 2 ஆயிரத்து 74 அகதிகளே இத்தாலிய கடலோர காவல் படையால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டனர். (ம)

# உதயனின் சித்திரைப் புதுவருட விழா 2017













# உதயனின் சித்திரைப் புதுவருட விழா 2017















படங்கள்: ச.தர்சன்





# உதயனின் சித்திரைப் புதுவருட விழா 2017




படங்கள்: த.தர்சன்




தாச்சிப் போட்டி








யானைக்குக் கண் வைத்தல்



# இந்தியாவும் இலங்கையும் இணைந்தே ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்தன

## நடிகர் ராஜ்கிரண் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 16
இலங்கை மற்றும் இந்தியா ஆகியவை இணைந்தே ஈழத்தமி ழர்களை படுகொலை செய்தன என்று தென்னிந்திய நடிகர் ராஜ்கிரண் தெரிவித்தார்.
சினி உலகம் ஊடகத்துக்கு அண்மையில் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈழத்தமிழர் பிரச்சினை ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் பேசி முடிக்கும் சாதாரண பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினையானது உலக அளவிலான பிரச்சினை ஆகும்.
இலங்கை மற்றும் இந்தியா ஆகியவை இணைந்து ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை அழித்தார்கள். போராளிகள் பலரைச் சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள். இன்னும் பலருக்கு என்ன நடந்தது என்பது கூடத் தெரியாது. உலகில் எங்கும் நடக்காத கொடுமையே ஈழத்தில் நடந்தது. இலங்கையும் இந்தியாவும் இணைந்துதான் இந்தக் கொடூரத்தைச் செய்தன.
இந்தியா இறையாண்மை உள்ளதொரு நாடு என்பது ஈழத்தமிழர்கள் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏற்பாடாகும். இந்த விடயத்தில் எம்மால் ஆதங்கப்பட மட்டுமே முடியும். ஈழத்தமிழர்கள் விடயத்தில் எம்முடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாமே தவிர இதற்கான எந்த முயற்சியும் எம்மால் செய்ய முடியாது. ஈழத்தமிழர்கள் விடயத்தில் இறைவன் ஒருவன் தான் இதற்கு நல்ல வழி காட்ட வேண்டும். ஈழத்தமிழர்களுக்கா கக் கட்சி ஆரம்பிப்பது, கூட்டத்தில் பேசுவது என்பது அனைத்துமே ஒரு நாடகம். தங்களது கட்சியைப் பலப்படுத்துவதற்கும், சுய இலாபத்துக்காகவும், ஈழத்தமி ழர்களின் பிரச்சினையை ஒரு சிலர் கையில் எடுத்துள்ளனர். அவர்களால் ஈழத் தமிழர்களுக்கு எந்த வித உதவியும் கிடைக்காது - என்றார். (ஐ - 10)






## இ.போ.சபைக்கு ஐந்து நாள்களில் மில்லியன் கணக்கில் வருமானம்

*தலைவர் ரமால் சிறிவர்தன தகவல்*



கொழும்பு, ஏப். 16
இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளது. கடந்த 5 நாள்களுக்குள் 84 மில்லியனுக்கும் 86 மில்லியனுக்கும் இடைப்பட்ட வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது - என்று சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு கடந்த 5 நாள்களுக்குள் 84 மில்லியனுக்கும் 86 மில்லியனுக்கும் இடைப்பட்ட வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சாதாரணமாக நாளாந்தம் 72 மில்லியனுக்கும் 74 மில்லியனுக்கும் இடைப்பட்ட தொகையே வருமானமாக ஈட்டப்பட்டு வந்தது. கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் தேசிய போக்குவரத்துச் சபையின் வருமானம் அதிகரித்துள்ளது.
புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள், மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்காக இன்று முதல் சிறப்புப் பேருந்துச் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. பயணிகளின் வசதி கருதி தொடருந்துச் சேவைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன - என்றார்.
சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் அதிவேக வீதிகளைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று அதிவேக வீதியின் பராமரிப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான பணிப்பாளர் எஸ். ஓபநாயக்க தெரிவித்தார். (ஐ - 10)

## மரக்கிளையில் புது வருடம் கொண்டாடிய குடும்பத்தினர்

கொழும்பு, ஏப். 16
காட்டு யானைத் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கும் குடும்பம் ஒன்று, வித்தியாசமான முறையில் புத்தாண்டைக் கொண்டாடிய சம்பவம் இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.
இந்தச் சம்பவம் மொனராகலை, இதிபதுர கிராமத்தில் நடைபெற்றது. மரத்தின் மீது உள்ள கிளை ஒன்றிலேயே இவர்கள் புத்தாண்டைக் கொண்டாடியுள்ளனர்.
இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட 50 குடும்பங்கள் வாழ்ந்து வந்தபோதிலும், தொடர்ந்து காட்டு யானைகள் தாக்குவதால், அங்கிருந்து அனைவரும் வேறு பகுதிக்குச் சென்றுள்ளனர். தற்போது அந்தக் கிராமத்தில் வசந்தகுமார என்பவரின் குடும்பத்தினர் மாத்திரமே வாழ்ந்து வருகின்றனர். காட்டு யானைத் தாக்குதலுக்குப் பயந்து அவர்கள் தங்களது மகளை உறவினர்கள் வீட்டில் தங்க வைத்துள்ளனர். விவசாயம் செய்து குடும்பம் நடத்தும் அவர்கள், மிகவும் வறுமையில் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்கள் இந்த முறை தமிழ் சிங்களப் புத்தாண்டை மரக் கிளையொன்றில் கொண்டாடியுள்ளனர். (ஐ - 10)

## யானை தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஏப். 16
தனமல்வில, கிதுல்கோட்டே பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் 60 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். யானை தாக்கிப் படுகாயமடைந்த குறித்த நபர், தனமல்வில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார். அவரது உடலம் தனமல்வில மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெறவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ - 10)

## புதிய கடவுச்சீட்டு தயாரிக்கத் திட்டம்

கொழும்பு,ஏப். 16
புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்று இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பன்னாட்டுத் தரத்துக்கமைய புதிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டுத் தயாரிக்கும் நோக்கில் இந்த குழு நியமிக்கப்படவுள்ளது.
குழுவின் ஊடாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டுத் தயாரிப்பது தொடர்பில் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படும் என்று நிர்வாக இயக்குநர் என்.ஏ.ரணசிங்க தெரிவித்துள்ளார். (ஐ -10)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஏப். 16
புத்தாண்டின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் செய்ய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
புத்தாண்டு விடுமுறையையொட்டி வெளிநாடுகளுக்கு சென்றுள்ள அமைச்சர்கள் நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றம் செய்ய அரச தலைவர் திட்டமிட்டுள்ளார்.
அமைச்சரவையில் மாற்றம் செய்ய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தலைமை அமைச்சரின் வெளிநாட்டு பயணங்களின் பின்னர் அமைச்சரவை மாற்றம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (ஐ - 10)

# நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்

## 2 ஆம் ஆண்டு 29 ஆம் ஆண்டு

மலர்வு
14.12.1934

உதிர்வு
08.05.2015





மலர்வு
19.02.1970

உதிர்வு
29.01.1988

### அமரர் கணபதிப்பிள்ளை துரைஐயா

(ஓய்வு நிலை அஞ்சல் ஊழியர்)

திதி : அபரபட்ச பஞ்சமி [16.04.2017]

இரண்டாண்டுகள் கழிந்தாலும் உதிராது உம் நினைவு
மறையாது உங்கள் உருவம் நித்தம் நித்தம்
தவறாது உதிப்பீர்கள் எம் மனதில் தெய்வமாக நாம்
மறவாது பிரார்த்திப்போம் உமது ஆத்ம சாந்திக்காக

### அமரர் செல்வி துரைஐயா சிவரமணி

உம்மைப் பிரிந்து 29 ஆண்டுகள் கழிந்தாலும்
எம் விழிகளில் உம் நினைவுகளை சுமக்கின்றோம்
நித்திரையைத் துறக்கிறோம் நித்தியமான
உமது புன்னகையில் எம்மையே இழந்தாலும்
நித்தமும் வாழ்கின்றீர் நிலையான எம் நெஞ்சில்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

முதலாம் ஒழுங்கை,
விளையாட்டு அரங்கவீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி தேவரத்தினம் தம்பிராசா



பிறப்பு
15.08.1938

இறப்பு
13.04.2017

சரசாலை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல 29/1, சிவநகர் உருத்திர புரத்தை வசிப்பிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகக் கொண்ட வருமான திருமதி தேவரத்தினம் தம்பிராசா 13.04.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து தம்பிராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் சிவனேச மூர்த்தி வசந்தாதேவி, சிவனேசமலர், சிவஞானசூரி(ஆசிரியை - வவுனியா இந்துக் கல்லூரி, கோயிற்குளம்), சிவபாலன்(அப்பன், ஆட்டோ உரிமையாளர் - வவுனியா), சிவகுமார்(பிரான்ஸ்), சிவனேஸ்வரி(இந்தியா), சிவாகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தவராசா, நித்தியானந்தன், வளர்மதி(ஆசிரியை - கிளி/உருத்திரபுரம் ம.வி), கெலன்குமார் (இந்தியா), துஷி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கந்தசாமி காலஞ்சென்றவர்களான ஞானம்மா, லோகநாதன் மற்றும் பூலோக நாயகி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தெய்வநாயகி, நல்லம்மா, மலர்மணி, தவமணி, அருந்தவநாதன், பாக்கியதேவி, பாக்கியநாதன் (போட்டோ கிளி), இந்திராதேவி, சந்திரவதனி (அதிபர் கிளி/ பரந்தன் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும் யாழினி, மதன், பிரதீபன், சுதா, வாணி, கீர்த்தனா, கௌசிகன், மயூரன், நவாம்ஷினி, யனுஸ், பேராளன், துஷான், பானுகோபன், தேஸ்வின், கஸ்ரின் ஆகியோரின் பேர்த்தியும் அபினா, அருண்சன், பிரித்திகா, பவிசா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல - 10 சிவபுரம்,
மன்னார் வீதி, வவுனியா.

தகவல்
குடும்பத்தினர்.

077 360 8335/ 077 134 0097

**சொர்க்கம் திருமண சேவை**

கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய Engineer ஆக பணிபுரியும் செவ்வாய்க் குற்றம் இல்லாத மணமகனுக்கு படித்த அழகான மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 30.35.39 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த அழகான மணமகள்களைத் தேடுகிறோம்.

TP & Viber: 001 416 666 1855 &
001 647 504 3336

**நீரிழிவுநோய் தொடர்பான விழிப்பூட்டல்**

"அரசன் அன்று கொல்வான்
நீரிழிவு நின்று கொல்லும்"

நீங்கள் நின்று கொல்லும் நீரிழிவு நோயாளரா? என்பதனை அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாக பரிசீலித்து அறிந்து கொள்ளவும் காலம் தாழ்த்தின் காலை இழக்க நேரிடும்.

**யாழ் நீரிழிவு கழகம்**

**விளம்பர அனுசரணை:**
**பருத்தித்துறை பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்**



**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி.**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

# துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்க பன்னாடுகள் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 16

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை முதலீட்டுக்காக சீனாவுக்கு வழங்குவதற்கு இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என்று இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டு அங்கு வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டால், துறைமுகத்தின் முழுமையான கட்டுப்பாடு. பாதுகாப்பு. உட்புகுதல். வெளியேறுதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என இந்த நாடுகள் இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளன.

சீனா முன்னர் பாகிஸ்தானின் கவ்டார் துறைமுகத்தில் இப்படியான முதலீடு ஒன்றை செய்திருந்தது. இது பிராந்திய பாதுகாப்பு பலம் தொடர்பான சமநிலைக்கு பெரிய தடையாக இருப்பதன் காரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதை அமெரிக்கா. இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் எதிர்த்துள்ளன என்று கூறப்படுகிறது.

இந்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் திருகோணமலை துறை முகத்தின் அபிவிருத்தியில் முதலீடுகளைச் செய்யுமாறு, அரசு, இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. திருகோணமலைத் துறை முகத்தில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்குத் தொடர்ந்து வழங்கவும் அரசு யோசனை ஒன்றை முன்வைத் துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-10)

# திருமணம் செய்யாமைக்கு காரணம் கூறுகிறார் நாமல்



கொழும்பு, ஏப். 16

நான் திருமணம் செய்து கொண்டால் அதற்கான செலவு விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கோரி நிதி மோசடி விசாரணைப் பிரிவு என்னை அழைக்கும்.

இவ்வாறு நாமல் ராஜபக்ச தெரிவித்தார். கடந்த 10ஆம் திகதி நாமல் ராஜபக்ச தனது 31 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். நாமல் ராஜபக்ச ஏன் திருமணம் செய்வதற்குக் காலம் தாழ்த்துகின்றார் என்பது குறித்து இந்த நிகழ்வின் போது பேசப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். நாமலின் பிறந்த தினத்தன்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கால்டன் இல்லத்துக்குச் சென்றிருந்தது டன் திருமணம் செய்து கொள்ளுமாறு நாமலிடம் யோசனையையும் முன் வைத்துள்ளார். இதன் போது நாமல் ராஜபக்ச தான் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்கான காரணத்தை வெளியிட்டுள்ளார். திருமணத்திற்கு செய்த செலவு குறித்து வாக்குமூலம் வழங்க பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு செல்ல நேரிடும். இதனாலேயே நான் எனது திருமணத்தை தாமதித்து வருகின்றேன் என்றார் அவர். (ற-10)

# பெண் கொலை தொடர்பில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 16

கொட்டதெனியாவ பிரதேசத்தில் பெண் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த படுகொலைச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரிப்பதற்கு முயற்சி செய்த போதே அந்தப் பெண் உயிரிழந்துள்ளார் என்று கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பகா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

# மகிழ்கள நிகழ்வு

நாவற்குழி.ஏப்.16

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா மழலைகளின் 2017 ஆம் ஆண்டுக்கான மகிழ்கள நிகழ்வு, மாதுமை கல்வி நிலைய வளாக மைதானத்தில் இன்று 16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மாதுமை கல்விப் பூங்கா இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தி னர்களாக யாழ். பல்கலைக்கழக மொழி பெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி க.கண்ணதாஸ், திருமதி திருமகள் கண்ணதாஸ் ஆகியோரும், சிறப்பு விருநதினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் பூநகரி நல்லூர் மகாவித்தியாலய அதிபர் திருமதி சூரியகுமாரி இராசேந்திரம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் சந்திராபுராஸ்கந்தவரோதய மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர் திருமதி இ.பாலகணேசன். மட்டுவில் வடக்கு குடும்ப நலஉத்தியோகத்தர் திருமதி கு.குமரதாஸ் ஆகியோ ரும் கலந்து கொள்வர். (ற-131)

ENGLISH/TAMIL MEDIUM-CLASSES
ONE ON ONE/GROUP-HOME VISIT
ACCOUNTING- GR 10.11.A/L
ENGLISH- ANY GRADE
ENG.LIT/GEO/CITIZENSHIP GR 8,9,10,11
077 331 6402

**காணி விற்பனைக்கு**
அச்சுவேலி வசாவிளான் றோட்டில் செந்திரேசா மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
021 223 0336/ 077 510 7121

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
We wish our patrons a Happy New Year!
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**வேலைவாய்ப்பு**
Tilers, Painters மற்றும் அலுமினியம் ஆபரேட்டர்கள் பமபலப்பிட்டி கொழும்பு தளத்துக்கு வேண்டும். மேலும் விவரங்களுக்கு
071 397 5695, 071 164 1078/ 077 675 1512

**வேலைவாய்ப்பு**
தச்சர்கள். Barbenters, மற்றும் Labours களுத் துறையில் உள்ள வேலை தளத்தில் உண்டு. மேலும் விவரங்களுக்கு
077 740 9953 / 034 222 9850/ 077 700 2636/ 071 234 3876

**வேலைவாய்ப்பு**
தச்சர்கள். Barbenters, மற்றும் Labours அநுராதபுரத்தில் உள்ள வேலை தளத்தில் உண்டு. மேலும் விவரங்களுக்கு
071 164 2180/ 077 257 1408 / 071 460 4108

**வேலைவாய்ப்பு**
G.C.E.A/L படித்த ஆண் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சிபரா ஸ்தாபனத்துக்கு எடுக்கப்படுவர். இப்பயிற்சியானது Safety. Survey asst, Aluminium workers. store keeping helpers security in all island sites பயிற்சியின் போது அலவன்ஸ் கொடுக்கப்படும்.
077 257 1408

**வேலைவாய்ப்பு**
மேசன்கள். தச்சர்கள். Barbenters மற்றும் வேலையாள்கள் கொழும்பு தளங்களுக்கு தேவை. மேலும் விவரங்களுக்கு
071 164 2884, 071 164 2944, 071 164 1078

**வேலைவாய்ப்பு**
மேசன்மார். வைலர்ஸ். மார்மெண்டேர்ஸ். சட்டரிங் கார பெண்டேர்ஸ். எலக்ரீசியன்ஸ்.அலுமினியம். வெப்பிரிகேற்றர்ஸ். பிளம்பர்ஸ். செகியூரிட்டி ஆபீசர்ஸ் தேவை. பம்பலப்பிட்டி 077 961 6232. களுத்துறைக்கு 077 740 9953. கொழும்புக்கு 071 164 2884. 077 535 2935 கொம்பனி வீதி சைற்றிற்கு 077 945 7953. அநுராதபுரம் சைற்றிற்கு 077 257 1408

**வேலைவாய்ப்பு**
01. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (NCT(Civil,HND (Civil) or Equivalent)
02. படவரைஞர் Certificate in Draughtsman and AutoCAD
Your CV and Covering letter must be send before 21st April 2017
077 712 0945, 021 221 3663
No -207, Navalar Road,Jaffna.
E-Mail - vacancynsc@gmail.com

**வாடகைக்கு**
நல்லூர் இராஜவீதியில் (சட்டநாதர் கோயில் முன்பாக) வசதியான வளவுடன் ஆறு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கும் ஏற்றது.
077 861 7740, 077 489 6306

**மணமகள் தேவை**
ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
077 835 5455. 021 491 9370

**மணமகன் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த மகம் நட்சத்திரம் 12 இல் செவ்வாய் 21½ பாவக்கிரகம் உடைய மணமகளுக்கு உள்நாடு அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை.
078 208 3157

**மணமகன் தேவை**
யாழ் இந்து 29 வயதுடைய அரச துறையில் உயர் பதவியில் உள்ள பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர்.
077 664 8382, 077 418 5388

**காணி விற்பனைக்கு**
A9 றோட் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அருகில் 156 ஆம் கட்டையில் 47' அகலம் 100' நீளம் கொண்ட காணி (மாடிகடைகள் அமைக்கக்கூடியது) உடன் விற்பனைககுண்டு 16 அடி கடைதுண்டுகளாகவும் பிரித்துகொடுக்கப்படும்.
077 668 9565

**காணி விற்பனைக்கு**
பலாலி றோட் கோண்டாவில் றாஜா பிளாசாவிற்கு 100m முன்பாக (அருகில்) 15 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
075 542 9401, 077 452 7317

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி. பாண்டியந்தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434

**வீடு வாடகைக்கு**
4 ஆம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணத்தில் மூன்று அறை, மூன்று ஹோல் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 89/212. ஜெம்பட்டா வீதி. கொழும்பு-13 இல் கீழ் வீடு வாடகைக்கு உண்டு.
077 922 7748, 021 205 9183

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில் சந்திக்கும் இராஜவீதி சந்திக்கும் இடையில் 1¼. 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.
076 697 2287

**தேவை**
யாழ் நகரில் பிரபல தனியார் நிறுவனமொன்றிற்கு
- கணக்கு லிகிதர்
- Computer Typing
- Data பதியுனர்
(ஆண்/பெண்)
- விற்பனைப்பிரதிநிதிகள்
- புடைவை மொத்த வியாபாரத்தில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

குறிப்பு:- சொந்த கையெழுத்து பிரதிவிண்ணப்பிக்கவும்.

விளம்பர இல-5530
மே/பா- உதயன்
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்குண்டு**
சண்டிலிப்பாயில் வீடு வாடகைக்குண்டு.
077 301 3060

# மனிதர்களாக எம்மை மதித்து எம் பிரச்சினைகளை தீருங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கண்ணீர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 16

எங்கள் ஆயுள் முடியும் வரை நாம் பிள்ளைகளைத் தேடி அலைந்து கொண்டேதான் இருக்க வேண்டுமா?. எங்கள் அலைச்சலை துன்பத்தை வேதனையைக் கண்டு யாரும் மனமிரங்குகிறார்கள் இல்லை. நாங்களும் மனிதர்கள்தானே. எங்களையும் சக மனிதர்களாக மதித்து, எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வையுங்களேன். சிங்கள மக்களுக்கு ஏதாவது துன்பம் நடந்தால் துடி துடித்து உதவி செய்யும் ஆட்சியாளர்கள் எங்களை மாற்றானாக நடத்துவது ஏன்?. இவ்வாறு காணாமற் போனோரின் உறவினர்கள் மனவிரக்தியுடன் கேள்வி எழுப்பினர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அவர்கள் புதுவருட தினத்தைக் கறுப்பு தினமாகக் கடைப்பிடித்தனர். நேற்று வழமை போன்று தமது போராட்டங்களைத் தொடர்ந்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமான போராட்டம் நேற்று 55 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. மக்கள் தங்கள் பிள்ளைகளின் உறவுகளின் படங்களை ஏக்கத்துடன் கையில் தாங்கிப் பிடித்திருந்து போராட்டம் நடத்தினர். வவுனியா நகரில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் நேற்று 51 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 39 ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று 32 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (ற-5,6,7)

## உயிர்ப்புடன் வாழ்த்துக்கள் பகிர்வோம்

கல்லறை திறந்தது
கார்மேகம் கலைந்தது
உத்தமன் இயேசு உயிர்த்தார் என
உலகமே கூடி மகிழ்ந்தது

சாவுக்கு சாவுமணி அடித்து
சர்வ உலகுக்கும் விடுதலை தர
உயிர்ப்பினால் சாட்சியம் பகர்ந்தார்
உத்தானத்தால் உலகையே மீட்டு
சரித்திரம் படைத்தார் இயேசுபிரான்

நம்பியோர் நலம்பெற்று மகிழ
நயவஞ்சகர் பூண்டோடு ஒழிய
துன்புறுவோர் துயர்கள் அகல
தூதுரைப்போர் வாழ்வு மலர
உண்மைக்குச் சாட்சியாளர் இயேசு
உலகுக்கு விடுதலை வாழ்வுதர
என்றும் எம் மீட்புக்காய் உடனிருக்கும்
உயிர்த்த இயேசுவின் ஆசீர் பெறுவோம்
உயிர்ப்புடன் நல்வாழ்த்துக்கள் பகிர்வோம்

**செ. யோசப்பாலா,**
**உள சமூகச் சீராளன்**

## இயேசுவின் பாடுகளும் மரணமும்

பாரகர் மூப்பர் ஆசாரியர் கூடி
பரிசுத்த வானைக் கொல்ல
பெரிய திட்டங்கள் தீட்டி அலைந்தனர்
பகைமையைத் தீர்த்துக் கொள்ள
உரிய நேரத்தில் சதியின் வலையில்
யூதாசும் சிக்கிக் கொள்ள
அரிய சந்தர்ப்பம் அகல விடாது
அவனை அணைத்து மெல்ல

பற்பல கதைகள் பரிவுடன் பேசி
தப்பில்லை என உரைத்து
இப்புவி காத்திடும் இறைமகனை இனம்
காட்டிடவே பணித்து
முப்பது வெள்ளிப் பணத்தைக் கொடுத்து
மனந்தனை மகிழ வைத்து
அப்பொழுது முதல் ஆவலாய் இருந்தனர்
வேளையை எதிர்பார்த்து

ஆகக் கூடிய பெறுமதி அன்று
அண்ணலின் உயிருக்கு _ பண
மோகம் கொண்ட யூதாஸ் மதித்தான்
முப்பது வெள்ளிக்கு
சோக மான முடிவொன்று உண்டு
தனது வாழ்வுக்கு _ என
சாகும் வரையில் தோன்றவில்லை
யூதாஸ் மனதுக்கு

**டே.த.எட்வின் உடுவில்**

### ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ
## மரண அறிவித்தல்



**சுந்தரம் நற்குணராஜா**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் நற்குணராஜா 14.04.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பார்வதி தம்பதிகளின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான அமரசூரிய - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், தனுபதனின் (வணிகர் கழகம்) அன்புத் தந்தையும், அகிலாண்டேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயகுமார் மற்றும் விஜயலக்சுமி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லத்துரை, மகேஸ்வரி, லட்சுமணன், ஜெயமதி, புஸ்பராணி, யாழ்ராஜ், செல்வராணி, திலகராணி, காலஞ்சென்ற பவளராணி மற்றும் புஸ்பலதா, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும், சந்திரலிங்கம், ஸ்ரீதேவி, சிங்காரவேல், நடேஸ்வரன், ஆனந்தராஜா ஆகியோரின் சகலனும், சுரேஸ்குமார், சுதர்சினி, சுபாசினி, சுகந்தினி, தனுஷியா, கந்தகோகிலன், சுபேந்திரன், மோகன்ராஜ், யாழினி ஆகியோரின் மாமனும், சுந்தரகுமார், பிரணகா, பிரசாந், பிரஷானி ஆகியோரின் சித்தப்பாவும், விநோதன், அனோஜன், கஜவாணி, ஜனோஜி, சுவேதிகா, திலக்சிகா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6/6, பெருமாள் கோயிலடி,**
**வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 4538**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
07 . 01 . 1947

ஆண்டவன் அடியில்
10 . 05 . 2012

திதி:
அபரபக்க பஞ்சமி
(16.04.2017)

**அமரர் பொன்னையா கணேசன்**

(ஸ்தாபகர் - கணேசன் ஸ்ரோர்ஸ், வாகையடி - மட்டுவில் தெற்கு)

காலனும் தன் கணக்கைக் கணப்பொழுதில் முடித்து விட
ஆண்டைந்து அவனியிலே கரைந்ததப்பா!
கண்டது கனவென்று தினமும் கண் திறந்து பார்க்கின்றோம்
கண்முன்னே நின்னுருவம் கண்ணீரிலே கரைகிறது
காரிருள் சூழ்ந்த பாரினிலே எமைத் தவிக்கவிட்டு
பரமனடி நாடிச் சென்றீரோ அப்பா!
வாழ்வாங்கு காத்து எமை வாழவைத்த தெய்வமே!
ஈசன் திருவடியில் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்!

**வாகையடி, மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**திருமதி நல்லம்மா மகேசன்**

(உடுவில், சுன்னாகம்)



ஜெனனம் 20.01.1948
கர்த்தருக்குள் 13.04.2017

கொக்குவிலை பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா மகேசன் கடந்த 13.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அம்மன் கோயில் வீதி, உடுவிலில் அமைந்துள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் கோயில் வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

**தகவல்: பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், மருமக்கள்.**

## நீங்கா நினைவலைகள் 8

**கந்தசாமி மரிய விதுர்சன்**

மண்ணில்
05.06.1999

விண்ணில்
16.04.2009



அழகான தேன்கூட்டில்
அனல் வீழ்ந்ததோ? நல்ல
வளமான பூங்காற்று புயலானதோ?
எழில் வீச பொழில் மீது இடி
வீழ்ந்ததோ - நாம்
அதிவியந்து தவிக்கின்ற
நிலை வந்ததோ
ஏங்கி ஏங்கி கண்ணீரால்
மிதக்கின்றேன்!
நாம் அழும் குரல் கேட்கவில்லையா!
வாச மலராய் வந்து உதித்த
பாச மகனே
நெஞ்சிருக்கும் காலமதில் உன்
நினைவோடு வாழ்வோம்.

**கந்தசாமி குடும்பத்தினர்.**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய் V-C அருகில்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



15.03.2017 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**S.K. ஜெகநாதன்**

தோற்றம்
07.08.1928

மறைவு
15.03.2017

அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஈசன் இல்லம்'
மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

**குடும்பத்தினர்.**

## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவு



அன்னை மடியில்
30 . 04 . 1962

ஆண்டவன் அடியில்
27 . 04 . 2016

**அமரர் வல்லிபுரம் கிருஷ்ணலிங்கம்**

திதி: பஞ்சமி

ஆண்டுகள் எத்தனை அகன்றிடினும்
ஆறாது துயரம் மாறாததுவே
அப்பா என்றழைக்கும் அமுதமொழி கேட்க
அபலைகள் எமக்கிங்கு வழியில்லையே
எப்போதும் எம் கூட இருந்திடும் உங்கள்
நினைவால் வாழ்வு நகருதே
தப்பாது இறையடியில் நித்திய சாந்திபெற
முப்போதும் மலர் தூவி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பெரியாவுடை,**
**கொல்லங்கலட்டி.**

**குடும்பத்தினர்**

# இயேசுவின் உயிர்ப்பின் சமாதானம் உரிமைத் தீர்வைத் தருவதாக!

ஆண்டவருக்குக் கல்லறையா? உலகைப் படைத்தவரை நான்கு சுவர்களுக்குள் அடக்கமுடியுமா? உலகின் ஒளி மண்ணுக்குள் முடங்கிடுமா? உண்மை உறக்கம் கொள்ளுமா? காவல் தகர்ந்தது; கல்லறை புரண்டது; பூமி அதிர்ந்தது; கல்லறை வெறிச்சோடியது உயிர்ப்பும் உயிரும் நானே என இயேசு சாதித்துக் காட்டினார். அவரது உயிர்ப்பு எமக்கு நம்பிக்கையையும் உறுதியையும் தந்து திருமறையின் மகிமையைப் பறைசாற்றியது. அநீதி, ஆக்கிரமிப்பு, அடிமைத்தனம், பகைமை, பழிவாங்கல், காட்டிக்கொடுப்பு, சர்வாதிகாரம் அனைத்துக்கும் சவுக்கடி கொடுத்து சமாதானத்தையும் அமைதியையும் பகிரும் மன்னனாக எழுந்து நின்றார். நம்பிக்கையிழந்து பயந்து முடங்கிக் கிடந்த சீடர்களுக்குப் புத்தெழுச்சியோடு கூரைமீது ஏறிநின்று நற்செய்தியைப் போதிக்கும் துணிச்சலைக் கொடுத்தது இயேசுவின் உயிர்ப்பே. அதனால் தான் அவர்கள் உயிரையும் தியாகம் செய்து சான்று பகர்ந்தனர். உயிர்ப்பைக் கொண்டாடும் எமக்கு, உயிருடன் எழுப்பப்பட்டார் என்பது இன்று ஒரு தகவல் அல்ல. அது நம்மில் இழையோடும் இறையனுபவம் ஆகட்டும். எமது பாவக்கட்டுக்களை சிலுவையோடு அறைந்து இருண்ட உள்ளத்து அறைகளை ஒளியேற்றி, கிறிஸ்துவோடு உயிர்பெறுவோம். எமது வாழ்வால் கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சான்று பகர்வோம். நாடும் வீடும் அமைதிபெற இயேசுவின் உயிர்ப்பு ஆசி தருவதாக.




எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

அழகியல் டிப்ளோமா
பிரிட்டிஷ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342
BCBL @KU



Diploma in Beauty Culture
மணப்பெண் அலங்காரம்,பல்வகையான விசேட முக அலங்காரம்,சாறி அலங்காரம்,நகம் மற்றும் தோல் பராமரிப்பு, மெகந்தி,விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 வகையான அலங்காரங்களையும் அவற்றில் பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி
British College of Business and Languages
No 788/4,செம்மணி வீதி,நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

வேலைவாய்ப்பு
யாழ்.நகரில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு ( Super Market ) பின்வரும் ஆளணியினர் வேண்டப்படுகின்றனர்.
01) காசாளர்கள்
02) எழுதுநர்கள்
} இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
வயதெல்லை - 30 வயதுக்குட்பட்டவர்கள்
கணினி அடிப்படை அறிவு அவசியம்
077 399 1727

பதவி வெற்றிடம்
திருநெல்வேலியில் உள்ள பிரபல ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்துக்கு கீழ் குறிப்பிடப்படும் பதவி நிலைகளுக்கு ஊழியர்கள் தேவை
✓ களஞ்சியக்காப்பாளர் - 01 ✓ கடன் வசூலிப்பாளர் - 01
✓ காசாளர் - 01
✓ கணினி பதிவாளர் - 02 ( Data Entry Operater பெண்கள் விரும்பத்தக்கது)
✓ பொதி சுமப்பவர் - 01
திறமைக்கேற்ற சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
077 484 9102, 077 278 4004

கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி
கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இளைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.
அறிகுறிகள் { கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு
எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.




Hotline:
0777555600
0777708310
0777708330
FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.
Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

# உயிர்ப்பு பெருவிழாவான இன்று இறை ஆசீர்வாதம் கிடைக்கட்டும்

## அரச தலைவர் வாழ்த்து



துக்கத்தில் பிறந்து, துக்கத்தையே அனுபவிக்கும் மானுடனை, பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக இயேசுபிரான் செய்த ஒப்பற்ற உயிர்த் தியாகத்தின் மகிமையே உயிர்ப்புப் பெருவிழாவில் என்றென்றும் நிலைத்து நிற்கின்றது.

உயிர்ப்புப் பெருவிழாவான இன்று அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் இறை ஆசீர்வாதம் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது உயிர்த்த ஞாயிறு பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மிகுந்த பக்தியுடன் உயிர்ப்புப் பெருவிழாவை நினைவு கூரும் கிறிஸ்தவப் பெருமக்களிடமிருந்து, மனிதத்துவத்தைக் கடந்து தெய்வீக நிலையை எட்டும் அந்த அதி உன்னத அர்ப்பணிப்பே வெளிப்படுகின்றது.

மனிதர்களின் மனதைப் பாவத்திலிருந்து விடுவித்ததன் மூலம் மனித குலத்தின் இருப்பை நிலைப்படுத்திய இயேசுபிரான், ஒருவரை அழிக்க முடிந்தாலும் கூட, தோல்வி அடையச் செய்ய முடியாதென்பதையும், தெய்வீக அன்பே நிலையான அன்பாகும் என்பதையுமே தனது சகோதர மக்களுக்காக தமது உயிரையே தியாகம் செய்யுமளவுக்கு தியாகத் தன்மையை கொண்டிருந்ததன் மூலமாக, ஒட்டு மொத்த மனித குலத்துக்கும் எடுத்துரைத்தார்.

உலக வாழ் கிறிஸ்தவ மக்கள் அன்றுதொட்டு இன்று வரை உயிர்ப்புப் பெருவிழாவுடன் நினைவு கூரும் அந்த அன்பின் உன்னதத்தை அனைத்து உள்ளங்களும் உணரச்செய்தல், இன்றைய உலகின் இருப்புக்கான முதன்மைத் தேவையாகும்.

மனித மனங்களைக் கருணையினால் உருக வைக்கும் இறைவனின் கொடையான அன்பானது, உயிர்ப்பு பெருவிழாவின் ஊடாகவே மனித உருவில் மனிதனை நோக்கி வந்துள்ளது என்றுள்ளது. (ற- 5)

# மானிடம் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்ப இணையுங்கள்

## தலைமை அமைச்சர் ரணில் வாழ்த்து



இயேசுநாதர் வழங்கிய வாழ்க்கை முன்மாதிரியைப் பின்பற்றி சமாதானம், அன்பு, நல்லிணக்கம் என்பவற்றின் ஊடாக மானிடம் நிறைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவது எம் அனைவரினதும் பொறுப்பு என்பதை இந்தப் பெரிய வெள்ளியன்று விசேடமாக நினைவுபடுத்துவதுடன், இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு இனிய பாஸ்கா பண்டிகையாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது உயிர்த்த ஞாயிறு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அதில் உள்ளதாவது

மானிடவர்க்கத்துக்கு விடுதலையின் பாதையைக் காட்டித் தருவதற்காக உயிர்த் தியாகத்துடன் செயற்பட்ட உலகில் தோன்றிய மிகச் சிறந்த போதகராக இயேசுநாதர் கருதப்படுகிறார்.

இயேசுநாதரின் நற்செய்திக்கான பணி அன்று காணப்பட்ட சமய,அரசியல் அதிகார வர்க்கத்திற்குச் சவாலாக அமைந்தமையால் ஏற்பட்ட கசப்பான துன்பங்கள்,சிலுவையில் அறையப்பட்டமை என்பவற்றை நினைவுபடுத்தும் தவக் காலத்தை உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவ மக்கள் ஜெபம்,விரதம்,புண்ணியக் காரியங்களைக் கொண்டு மிகுந்த பக்தியுடன் நினைவு கூருகின்றனர்.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டமையை நினைவூட்டும் பெரிய வெள்ளியுடன் ஆரம்பிக்கும் பாஸ்கா பண்டிகையின்போது அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தமை வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு உயிர்த்தெழுந்தமையானது,மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அர்த்தபூர்வமான வாழ்வை வாழும் ஒருவரை மரணத்தால் கூட தோற்கடிக்கமுடியாது என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

இயேசுநாதர் வழங்கிய வாழ்க்கை முன்மாதிரியைப் பின்பற்றி சமாதானம், அன்பு, நல்லிணக்கம் என்பவற்றின் ஊடாக மானிடம் நிறைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவது எமது அனைவரினதும் பொறுப்பு என்பதை இந்தப் பாஸ்கா சிறப்பாக நினைவுபடுத்துவதுடன், இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கு இனிய பாஸ்கா பண்டிகையாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்- என்றுள்ளது. (ற)

# எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்குகின்ற தினம் இன்று

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வாழ்த்து



உயிர்த்த ஞாயிறு தினமானது கிறிஸ்தவ, மக்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டும் பெருநாளாகும். இந்த நாளானது கடந்தவற்றைத் திரும்பிப் பார்த்து, நிகழ்காலத்தில் உள்ளவற்றை மதிப்பீடு செய்து, எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கும் ஒரு தினமாகும்.

இவ்வாறு இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்திலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகின்ற இலங்கையர் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மக்களிடையே கட்டியெழுப்பப்பட வேண்டிய அன்பு, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றிற்கு இயேசு நாதர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இயேசு நாதரின் வாழ்க்கையானது நியாயத்திற்காகவும், சமூகத்திலிருந்து ஒதுக்கி தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இயேசு நாதரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு, பல்வேறு இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை மேலோங்கச் செய்வதற்கும், நமக்கிடையே நிலவுகின்ற நம்பிக்கையின்மையை அகற்றுவதற்கும் இப்புனித உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஒரே நாட்டு மக்களாக நாம் அனைவரும் முயற்சித்தல் வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். எமது நாட்டின் வரலாற்றிலே முக்கியமானதொரு காலகட்டத்தை நாம் தற்போது அடைந்துள்ளோம். எனவே உயிர்த்த ஞாயிறு தினத்தின் உண்மையான தாற்பரியங்களை அடைந்து, அனைத்து இன மக்களும் சமத்துவமாகவும், சமாதானமாகவும், நம்பிக்கையுடனும் வாழ்வதற்கான நல்லிணக்கம் ஏற்படக் கூடிய எதிர்காலத்தை அடைந்துகொள்வதற்காக அனைத்துச் சவால்களுக்கும் முகம் கொடுத்து ஒன்றிணைந்து பணியாற்றுவதற்காக அனைவரும் கைகோர்த்து செயற்படுவதற்கு முன்வருமாறு இலங்கை மக்கள் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றுள்ளது. (ற)

அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
Sri Lakshmi Plaza



T.P. 021 222 9296, 075 783 6550
0044 7466 578511
(London)

* திருமண நிகழ்வுகள்
* பூப்புனித நீராட்டுவிழா
* பிறந்தநாள் நிகழ்வுகள்
* ஒன்றுகூடல்கள்



இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெருச் சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.
Email: jaffnasrilakshmiplaza@gmail.com.
https;//www.facebook.com/jaffnasrilakshmiplaza


Lenovo
VIBE
அணிவகுப்பு
ஒருபோதும் காணாத புதிய அனுபவம்
Lenovo
ரூ.6,000/-
தள்ளுபடி
இலவசம்
VR பொக்ஸ்
Lenovo டீ-சேர்ட்
K5 Note
ரூ.31,999
K5
இலவசம்
பவர் பேங்க்
Lenovo டீ-சேர்ட்
SD காட்
ரூ.4,500/-
தள்ளுபடி
Lenovo
ரூ.20,999
0115 999 000
நாடளாவிய சகல அபான்ஸ், அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் மற்றும் விற்பனை முகவர்களிடம் பெறலாம்.
Abans


LG
Life's Good
ரூ.3,806 இலிருந்து
மாதாந்த தவணைக் கட்டண முறையில்
LG உண்மையான RO நீர் சுத்திகரிப்பு
இயந்திரமொன்றை இன்றே
உங்கள் இல்லங்களுக்கு
எடுத்துச் செல்லுங்கள்!
வட்டியில்லா
15 மாத
கொடுப்பனவு
கண்மூடித்தனமாக
சுத்திகரிக்கப்படாத
எந்த நீரையும்
பருகாதீர்கள்!
கண்களுக்குப் புலப்படாத மற்றும் புலப்படும் பெரிய துகள்கள், துரு, கரை, சேறு, மணல், மண், கன உலோகம், கல்சியம், உப்பு, பக்டீரியா, வைரஸ், கிருமிநாசினிகள் மற்றும் ஆசனிக் ஆகியவற்றை நீக்கி 100% தூய்மையான மற்றும் ஆரோக்கியமான நீரை பெற்றுத்தருகிறது.
காற்றுப் புகாத மூடியைக் கொண்ட ஸ்டைன்லெஸ் ஸ்டீல் தாங்கியில் நீர் எப்போதும் புத்துணர்வோடு இருக்கும்.
நீர் தாங்கி மற்றும் நீர் பயணிக்கும் சகல பாதைகளையும் தன்னியக்க டிஜிட்டல் பராமரிப்பு இயந்திரம் மூலம் தொடர்ந்து கிருமியழித்து சுத்திகரிக்கின்றது.
யாழ்ப்பாணம் A-021-2220981, யாழ்ப்பாணம் B-021-5776107, யாழ்ப்பாணம் RC 2-021-5776153, திருநெல்வேலி -021-2220247, சுன்னாகம்-021-2240440, சங்கானை-021-2250106, மானிப்பாய்-021-5776100, அச்சுவேலி-021-3202027, நெல்லியடி -021-2264934, சாவகச்சேரி-021-2270005, மல்லாவி-021-5776108, முள்ளியவளை -021-5776104, முல்லைத்தீவு RC 2-021-5776154, புதுக்குடியிருப்பு-021-5776156, கிளிநொச்சி RC 1-021-5776103, கிளிநொச்சி RC 2-021-5776155, பருத்தித்துறை RC 1-021-2262456, தெல்லிப்பளை RC 2-021-5776152, மன்னார் RC 1-023-2251193, மன்னார் RC 2-023-5776097, மூழங்காவில் RC 2-021-5776151, முருங்கன் - 023-3238552, பளை - 077-3358560, கொடிகாமம் - 021-5776109
Abans

# மீதொட்டமுல்லவில் பெரும் சோகம்

## 4 சிறுவர்கள் உள்ளிட்ட 11 பேர் சாவு







கொழும்பு, ஏப். 16
சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் கொலன்னாவப் பிரதேசத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய இடரில் சிக்கி 4 சிறுவர்கள் உள்ளிட்ட 11 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 30 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். 50 இற்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நேற்று மாலையும் தொடர்ந்தன.

கொலன்னாவ மீதொட்டமுல்லவில் உள்ள 300 அடி உயரமுள்ள குப்பை மேட்டின் உச்சியில் நேற்று முன்தினம் பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டது. சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, கொளுத்தப்பட்ட பட்டாசால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தீ விபத்தை அடுத்து குப்பை மேடு சரிந்து, அருகில் இருந்த வீடுகளுக்கு மேல் விழுந்தது. அந்தப் பகுதியில் இருந்த 100 வீடுகளில் 50 வீடுகள் இதில் புதைந்து போயின. வீடுகளுக்குள் பலர் சிக்கினர்.

புதைந்து போன வீடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். வான்படையின் உலங்குவானூர்தி தீயணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

இந்த விபத்தில் நான்கு சிறுவர்கள் உள்ளிட்ட 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 30 பேர் காயமடைந்து தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மிகப் பெரும் இடர் காரணமாக கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருமளவு பாதுகாப்புத் தரப்பினர் நேற்று மாலை இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். புத்தாண்டில் ஏற்பட்ட இந்தப் பெரும் இடர், அந்தப் பிரதேசத்தை சோகத்தில் மூழ்கடித்துள்ளது. (ஐ -5)

## இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும்

### இடர்முகாமைத்துவ அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஏப். 16
மீதொட்டமுல்லவில் தற்போதைய நிலைமையைக் கண்காணித்து, பேச்சு நடத்தி உயிரிழந்த மற்றும் காயமடைந்த நபர்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இடரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இவ்வாறு இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இந்தப்பிரதேசத்தில் புத்தாண்டு தினத்தில் ஏற்பட்ட இடரால் 11 பேர் இதுவரை உயிரிழந்தனர். இந்தப் பாதிப்புத் தொடர்பில் இடர்முகாமைத்துவ அமைச்சர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவையான உணவு மற்றும் குடிதண்ணீர் அரச மற்றும் உதவி வழங்குவோர்களிடமிருந்து பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இது போன்ற சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இது சம்பந்தமாக அறிவுறுத்தியுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்கள் சுமார் 80 பேர் வரை உள்ளனர். அது 200 பேர் வரை அதிகரிக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. எத்தனை பேராக இருந்தாலும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். இந்தக் குப்பை மேடு சம்பந்தமாக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தது. அதற்கு முறையான தீர்வொன்று தேவை. சுகாதாரமான முறையில் குப்பைகளைக் கொட்டும் இடத்தை அமைப்பது இதற்கான தீர்வாகும். கொரிய நாட்டின் உதவியுடன் தொம்பே பிரதேசத்தில் இது போன்ற இடம் அமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாடு பூராகவும் இது போன்ற 5 குப்பை கொட்டும் இடங்களை அமைப்பதற்கு முன்னர் பேசப்பட்டன. அது ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று எனக்கும் தெரியாது.

மற்றொரு தீர்வாகக் குப்பைகளுக்கு தீ வைக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கலாம். இதற்குப் பெரிய செலவு ஏற்படும் என்பதால் மக்களிடமிருந்து சிறு தொகை பணம் அறவிட வேண்டும். இந்தத் திட்டத்தை தனியார் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ - 5)

## சாகலவை திட்டித் தீர்த்த மீதொட்டமுல்ல மக்கள்

கொழும்பு, ஏப். 16
ஏன் இங்கே வந்தீர்கள் எனக் கேட்டு, அமைச்சர் சாகலவை மீதொட்டமுல்ல மக்கள் வெளியேற்றினர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள மீதொட்டமுல்லவில் 300 அடி உயரமான குப்பைமேடு, புதுவருடத் தினமான நேற்றுமுன்தினம் சரிந்து வீழ்ந்தது. இந்த இடரில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். 4 சிறுவர்களும் அதில் உள்ளடங்குகின்றனர்.

இடரில் பாதிக்கப்பட்ட மக்களை, அமைச்சர் சாகல ரத்நாயக்கா நேற்று நேரில் பார்வையிடச் சென்றார். பாதிக்கப்பட்ட மக்கள் கோப மிகுதியால் அமைச்சரைத் திட்டித் தீர்த்தனர். “எல்லோரும் செத்த பின்னர் இங்கு என்ன பார்க்க வந்தீர்கள்?” என்று கேள்வி எழுப்பிய மக்கள், அமைச்சரை அங்கிருந்து வெளியேற்றினர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.
(ஐ - 5)

## முறையில்லாத முகாமைத்துவமே மீதொட்டமுல்ல இடருக்குக் காரணம்

### மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 16
மீதொட்டமுல்ல இடர் இயற்கையானது அல்ல. முறையில்லாத முகாமைத்துவத்தினாலேயே இந்தச் சம்பவம் ஏற்பட்டது. இவ்வாறு கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 300 அடி



உயரமான குப்பைகள், மக்கள் எதிர்ப்புக்கு மத்தியிலேயே குவிக்கப்பட்டன. இதற்குத் தீர்வு சொல்ல அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் முன்வரவில்லை. கொல்லன்னாவ, மீதொட்டமுல்லக் குப்பை மேட்டை அகற்றுவதற்கான நடவடிக்கையை இதன் பிறகாவது உணர்வு பெறவேண்டும்”. இவ்வாறு அதிகாரிகளிடம் அவர் பகிரங்க வேண்டுகோளை விடுத்துள்ளார்.
(ஐ - 5)

# இலங்கை - ஜப்பான் படைகளுக்கிடையில் ராணுவப் பாதுகாப்பை வலுப்படுத்தத் திட்டம்

கொழும்பு, ஏப். 16
இந்தியப் பெருங்கடலில் அமைதியைப் பாதுகாப்பது என்ற பொதுவான தளத்தின் கீழ், இலங்கை ஆயுதப் படைகளுக்கும், ஜப்பானிய தற்பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த புதன்கிழமை ரோக்கியோவில் ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர் ரொமோமி இனாடாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே, இந்தியப் பெருங்கடலில் அமைதியைப் பாதுகாக்கும் நோக்கில் இரண்டு நாடுகளின் படைகளும் இணைந்து செயற்படுவது குறித்து கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானுக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் போது, இந்த விவகாரம் தொடர்பாக மேலதிக பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சரிடம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புராதன காலத்தில் இலங்கையின் பொருளாதாரச் செழிப்பு, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டில் தான் தங்கியிருந்தது. இந்தியப் பெருங்கடலில் அமைதியை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இரண்டு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று தலைமை அமைச்சர் மேலும் தெரிவித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)



சாவகச்சேரி கத்தோலிக்க பங்கு மக்கள் தவக்காலத்தின் இறுதி நாளான பெரிய வெள்ளி தினமான நேற்று முன்தினம் இரவு இயேசு கிறிஸ்துநாதரின் திருவுடலைத் தாங்கிய பேழையை இரவு வேளையில் தீப்பந்தங்களுடன் புனித லிகோரியார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். இந்த நிகழ்வில் பெருமளவு கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர். (ஐ-9)



வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி வ.நடராசாவும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் வை.விஜயகுமாரனும் கலந்து கொண்டனர். (ஐ-122)






உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## உள்ளார்ந்த அன்புதான் உண்மையில் வேண்டும்

கேப்பாப்பிலவில்தமதுகாணிகளைத்திருப்பித்தரும்படி கேட்டுப்போராட்டம்நடத்தும்மக்களுக்குபுத்தாண்டு தினத்தில் படையினர்வாழ்த்துக்களைத் தெரிவித்து பலகாரங்களையும் வழங்கியுள்ளனர். ''உங்கள் காணிகள் விடுவிக்கப்படும், கவலைப்படாதீர்கள்'' என்றுகூறியும்சென்றிருக்கின்றனர். பாரம்பரிய உடைகளில் ஆண், பெண் இராணுவத்தினர் சிரித்தமுகத்துடன்அந்தமக்களைஅன்போடுஅணுகும்ஒளிப்படங்கள்ஊடகங்களில்வெளியாகியிருக்கின்றன.அவற்றைப் பார்க்கும்போது உண்மையில் மன நெகிழ்ச்சி உண்டாகிறது.

இவ்வாறு இரு இனத்தவரும் அன்னியோன்னியமாக உறவாடி, பெருநாள்களைக் கொண்டாடி மகிழும் ஒரு காலம் வரவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகின்றார்கள். ஆனால்அத்தகையஒருகாலம்உருவாகுவதற்கானவிடிவெள்ளி இதுவரையில் தெரியவேயில்லை என்பதுதான் கவலை.

இராணுவத்தினர் கேப்பாப்பிலவு மக்களுடன் புதுவருடத்தைக் கொண்டாடியது உண்மையான அன்பின் பாற்பட்டது என்றால் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவது கடினமானதன்று. ஆனால் அதுவே வெளி உலகுக்கான போலி வேடம் என்றால், ஒருபோதுமே நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது.

இங்கேஇராணுவத்தினரின்செயலைப்போலிவேடம்என்று சந்தேகம் கொள்வதற்கு நியாயமான பல காரணங்கள் இருக்கின்றன. மக்கள்தமதுகாணிகளைத்திரும்பக்கேட்டு அமைதியான முறையில் போராட்டத்தை ஆரம்பித்தபோது இராணுவத்தினர்அவர்களுடன்இவ்வளவுஅன்போடும்அன்னியோன்னியத்தோடும் மக்களின் பிரச்சினையைப் புரிந்துகொண்டவர்களாகநடந்துகொள்ளவில்லை.பதிலாகப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மறைமுகமாக அச்சுறுத்தவும் நீதிமன்றத்தின்ஊடாகப்போராட்டக்காரர்களைஅந்த இடத்திலிருந்து அகற்றவுமே படையினர் முயன்றனர்.

மக்கள்தமதுகாணிகளைத்திரும்பக்கேட்பது என்பது ஏதோ இராணுவத்துக்கு எதிரான எழுச்சி, தனிநாட்டுக்கான போராட்டம், மீண்டும் வன்முறையை நாடும் முயற்சி என்பதாகத்தான் ஆரம்பத்தில் படையினரால் புரிந்துகொள்ளப்பட்டு அந்த விடயம் அணுகப்பட்டது. அப்போதெல்லாம் மக்கள் மீது அன்பு கொண்டு, ஆறுதலாக நடந்துகொள்வதற்குப் படையினர் முன்வந்திருக்கவில்லை.

இத்தகையநிலையில்திடீரெனபுத்தாண்டுதினத்தில்மட்டும் மக்களிடம் சென்று படையினர் அன்பு செலுத்துவதில் உண்மை இருக்கின்றது என்பதைநம்ப மனம் மறுக்கின்றது. அதனாலேயேஇந்தச்செயல்போலியானது;வேடப்புனைவு என்று எண்ண வேண்டியிருக்கிறது.

உண்மையில் இந்தப் போலி வேடத்தைக் களைந்துவிட்டு இராணுவம் தனது நிலையில் இருந்து இறங்கிச் சென்று மக்களின் துயரங்களையும் சோகங்களையும் செவிமடுக்க வேண்டும். அப்போதுதான் போர் என்கிற இயந்திரத்தின் முதுகெலும்பான தாங்கள் நிகழ்த்திய மனிதப் பேரவலங்களை அவர்களால் உணர முடியும். அவ்வாறு உணர்ந்துகொள்ளும் போது தான் மக்கள் மீது அவர்களால் உண்மையான அன்பு செலுத்தமுடியும்.அவர்களின்பிரச்சினையைப்புரிந்துகொண்டு அவர்களுக்கு இடம்விட்டு ஒதுங்க முடியும். அவர்களை எதிரியாகவும்பயங்கரவாதிகளாகவும்பார்ப்பதைத்தவிர்க்க முடியும்.

அவ்வாறு இறங்கிச் சென்று மக்களுடன் கலந்துரையாட இராணுவத்தைஅரசுகள்அனுமதிக்கமாட்டா.அப்படிநடந்துவிட்டால் இராணுவத்ரதை அரசுகளின் ஏவல் இயந்திரங்களாகவைத்திருக்கமுடியாது.அதனால்தான்இராணுவத்தை எப்போதுமே தனிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். தாம் ஏவும் போதெல்லாம் மனிதத்தைத் தொலைத்துவிட்டு மிருகங்களாக இராணுவத்தினர் நடந்துகொள்ளவேண்டும் என்றே அரசுகள் எதிர்பார்க்கின்றன. இராணுவத்தினரும் அப்படியேதான் நடக்கின்றனர். இலங்கை இராணுவமும் அதற்கு விதிவிலக்கல்ல.

அதனால் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்காக மட்டுமே போராடும் மக்களுக்கு வாழ்த்துச் சொல்வதால் அன்பும் நல்லிணக்கமும்உருவாகிவிடமாட்டாது.மக்களின்உணர்வுகளைப் புரிந்துகொண்டுஅவர்களின்கோரிக்கைகளைநிறைவேற்றிக் கொடுக்கும்போதுதான் உண்மையான அன்பும் நல்லிணக்கமும்உருவாகும்.உண்மையில்வேண்டப்படுவதும்அதுதான்.

# கைவசமிருந்த அதிகாரத்தை கைகழுவிவிட்ட வடக்கு மாகாண சபை

■ லோகதயாளன்

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஓர் அதிகாரத்தை மத்திய அரசுக்குவாரிச்சுருட்டிக்கொடுத்து தவறான முன் உதாரணம் ஒன்றை உருவாக்கி வைக்கும் நிலைக்குச் சென்றுள்ளதோடு ஏனைய மாகாணங்களையும் திரிசங்கு நிலைக்கு இட்டுச் செல்லும் நிலையை வடக்கு மாகாண சபை உருவாக்கியுள்ளது.

மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்படாது மத்திய அரசு அதிகாரங்களைத் தானே குவித்து வைத்துள்ளது; இதனாலேயே எம்மால் செயல்பட முடியவில்லை என்பது வடக்கு மாகாண சபை, அன்று முதல் இன்றுவரையில் சுமத்தி வரும் ஒரு முக்கிய குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது அல்ல; அது உண்மையானதுதான். மத்தியின் மேலும் பல அதிகாரங்கள் மாகாணங்களின் கைகளுக்கு வரவேண்டும் என்பதே அதிகமானோரின் மன விருப்பமாகும்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ்வரும் சில விடயங்களை நடைமுறைப்படுத்தத் தெரியவில்லை என்கின்கின்றகுற்றச்சாட்டுக்கள் பல தடவை எழுந்தபோது வடமாகாணமுதலமைச்சர் உட்பட ஆளுங் கட்சியினர் குறித்த குற்றச்சாட்டைப் பகிரங்கமாகவே மறுத்தும் வந்தனர். ஆனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை எம்மால் நடைமுறைப்படுத்தமுடியவில்லை. அதனால் இந்தப் பணியையும்நீங்களேநிறைவேற்றுங்கள் என எமது மாகாண சபை ஒரு முக்கிய விடயத்தை மத்திய அரசிடம் வாரிச் சுருட்டிக் கொடுத்து விட்டது.

### தம் வசமிருந்த அதிகாரத்தைத் தாரை வார்த்த வடக்கு மாகாண சபை

அதாவது இவ்வளவு காலமும் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரத்திற்குக் கீழ் இருந்து வந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் என்கின்ற விடயத்தை மாகாண சபையினால் நடைமுறைப்படுத்த இயலாது போனதால் இதனை நீங்களே நடைமுறைப்படுத்துங்கள் என ஆளுநருக்கு எழுத்தில் அறிவித்து விட்டனர். இவ்வாறு அறிவிப்பதற்கான ஒப்புதலையும் வடக்குமாகாண அமைச்சரவைவழங்கியுள்ளது. இந்தச் செயலானது மாகாண சபை துரும்பைக் கைவிட்டு வாலைப் பிடிக்கும் நிலையில் உள்ளதை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது தமது கைவசம் உள்ள அதிகாரத்தையும் மத்திய அரசுக்குத் தாரை வார்க்கும் வடக்கு மாகாண சபையினர் அதிகாரப்பகிர்வு கோருவதற்கு தகுதியானவர்கள் தானா? என்ற சந்தேகத்தையும் இது எழுப்பும்எனக்கொள்ள இயலும். ஒரு வலயக் கல்விப் பணிப்பாளரைக்கூட தேர்வு செய்யத் திறமையற்ற சபையாகவா எமது வட மாகாண சபை உள்ளது என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. இதற்குக் கல்வி அமைச்சர் மட்டுமன்றி ஒட்டுமொத்த அமைச்சரவையும் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும். வடக்கு மாகாண சபையின் அனுமதியின்றி அமைச்சரவையின் ஒப்புதலுடன் தாரைவார்த்த இந்த அதிகாரக் கையளிப்புக்கான பொறுப்பு அமைச்சரவையின் 5 அமைச்சர்களையுமே சாரும்.

குறித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பதவியை நிரப்புவதில் ஏற்பட்ட இழுபறியை மூடி மறைப்பதற்காக தம்வசமிருந்த அந்த அதிகாரத்தையே மாகாண சபை நிர்வாகத்தில் அனாவசியாமாக புகுத்தப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டும் கல்வியியயாளர்கள் இந்த அதிகாரத்தை மத்தியிடம் வழங்கிய அமைச்சரவையே உடனடியாக மீண்டும் பெற்று மாகாணத்திடம் கையளிக்க ஆவன செய்யவேண்டும் எனக்கோருகின்றனர். இன்று கல்வி அமைச்சுக்கு ஏற்பட்ட இந்த அவல நிலைமை ஏனைய அமைச்சுகளுக்கும் பரவாமல் உடன்பாதுகாக்க வேண்டும் என அவர்கள் கோருவதில் நியாயம் உண்டு.

இதேநேரம் குறித்த அதிகாரத்தை மத்திக்குக் கையளித்தமையானது மாகாண அதிகாரிகளின் தவறாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. அதாவது கிளிநொச்சி வலயத்தில் ஏற்பட்ட கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உரிய தகுதியுடைய ஓர் அதிகாரி கிளிநொச்சி மாவட்டத்தில் இல்லாத நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தகுதியானவர்கள் குறித்துத் தேடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அந்த நிலைக்குத் தகுதியான உத்தியோகத்தர்கள் மூவர் இருந்த போதிலும் எவருமே கிளிநொச்சிக்குச் சென்று பணியாற்ற முன்வரவில்லை. அந்தப் பதவியை ஏற்குமாறு அவர்கள் கோரப்பட்ட போதிலும் எவ்ருமே இணங்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. குடாநாட்டில் விரைவில் ஏற்படவுள்ள இரு வெற்றிடங்களையும் எதிர்பார்த்தே அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வெற்றிடத்தை ஏற்க மறுத்ததாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனவே ஓர் இடைநிலை அதிகாரிகளின் மனோநிலையே மாகாண அரசுக்கு உரிய அதிகாரத்தையே இன்று மத்தியிடம் அடைவு வைக்கவேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதனை இந்த கல்வித் திணைக்கள அதிகாரிகள் புரிந்து கொள்வார்களா? என்பதும் சந்தேகமே.




தாரைவார்ப்பது நியாயமான ஒன்றாகக் கொள்ள இயலாதது. இந்த மாகாண சபை தற்போது கையளித்த குறித்த அதிகாரத்தை எதிர்காலத்தில் மத்திய அரசு பயன்படுத்தி மாகாண அரசின் செயற்பாடுகளில் நேரடியாகவே தலையீடுசெய்ய வழிவகுக்கும். உதாரணமாக 2017ஆம் ஆண்டில் தென்மராட்சி , வடமராட்சி , வவுனியா வடக்கு ஆகிய மூன்று கல்விப் பணிப்பாளர்களும், அடுத்த ஆண்டில் மேலும் 3 கல்விப் பணிப்பாளர்களும் மாகாண சபை நிர்வாகத்தில் ஓய்வுபெற்றுச்செல்லவுள்ளனர்.

### மத்தியின் தலையீட்டை வலிந்து தேடிக் கொண்ட செயற்பாடு

இதன்காரணமாக நேரடியாகவே மத்தியின் தலையீடு

# பட்டதாரிகளுக்கு நியமனம் கிடைக்க நாடாளுமன்றம் உதவிடல் வேண்டும்

செ.ரமேஸ்



அரசதலைவருக்குத் தெரிவியுங்கள்; தகவல் அறியும் சட்டம், என்பவை வடக்கில் எந்த அளவுக்கு இதுவரை வெற்றியளித்தன. எதிர்காலத்தில் இவற்றின் மெய்ப்பெறுமானம் துலங்குமா என்ற எதிர்மறையான கேள்விகளே இன்று வடக்கு வாழ் மக்கள் மத்தியில் நிலவி வருகிறது

இன்றைய நாட்டுச் சூழலில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்து மாணவர்களை கற்கைநெறிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்யும் வீதமும் அதிகரித்துவிட்டது. இதனைவிட வெளிவாரிக் கற்கைகள், தனியார் கல்லூரி பட்டதாரிகள் என மூன்று வருடங்கள் நான்கு வருடங்கள் படித்து பட்டம் பெற்று முடித்தவர்கள், வேலையற்ற பட்டதாரிகள் என்ற பிரிவுக்குள் இணைந்துகொள்வர். வட மாகாணத்தைப் பொறுத்த மட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் இதர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுமாக இந்த வேலையற்றோர் பட்டியலில் உட்சேர்த்துவிடுவர்.

இதிலும் நுண்மதி கூடியவர்கள் பட்டம் பெற்றவுடன் தீவுதழுவிய ரீதியில் இடம்பெறும் போட்டிப்பரீட்சைகளில் தேறி உயர்ந்த நிலைக்கு சிறிவயதுகளிலேயே (26 வயதுக்குள்) சென்றுவிடுவர்.

இவ்வாறு தனியார் துறைவேலை வாய்ப்புக்கும் செல்லாது, நுண்மதி பரீட்சைகளிலும் தேறமுடியாதவர்களே வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக போராட்டம் நடத்திய போது நாட்டின் அரச தலைவர், "மைத்திரிபால சிறிசேனாவுக்குச் சொல்லுங்கள்" என்ற நிகழ்வை யாழ். ஆளுநர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்தார். வடக்கின் பல அரச உயரதிகாரிகள் மாகாண்சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா எமது வடபகுதி இளைஞர்களின் துன்ப துயரங்களை எடுத்துக் கூறி, வீதியில் போராடும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குமாறு பலதடவைகள் வற்புறுத்தினார். ஆனால் இந்தப்பேச்சை அரசதலைவர் எந்த அளவுக்கு உள்வாங்கினார்; அதனை எத்தனை வீதம் செவிமடுத்தார் என்பது குறித்து அன்றே மனதில் ஒரு சந்தேகம் நிலவியது.

அரசதலைவர் தனது தலைமையுரையில் பட்டதாரிகள் வீதியில் போராடுவதை விடுத்து, என்னுடன் பேச முன்வந்தால் இன்றே நான்கு, ஐந்து பேருக்கு வேலைவழங்கி விடுவேன் என்று கூறியது சும்மா பேச்சுக்கு மட்டும்தான் என்பது தற்போதுதான் புலனாகிறது. இன்று வரை வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை எனத் தோன்றுகின்றது.

இதனைப்பார்க்கும் போது "அரசதலைவருக்குச் சொல்லுங்கள்" விடயமும் முழுமை பெறுமா? என்பது இன்று தமிழர் நெஞ்சங்களில் கேள்வி குறியாகிவிட்டது.

### தலைமை அமைச்சரது நாக்கால் மூச்சைத் தொடும் வித்தை

இதனைவிட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் அழைப்பின்பேரில் யாழ். பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் தலைமை அமைச்சருடனான சந்திப்பில் தலைமை அமைச்சர் விளக்கமளிக்கையில் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வழங்குவது தொடர்பில் விளக்கமளிக்க முடியாது, நிதியமைச்சின் கீழான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு (MSD) அங்கு வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவழங்குவது தொடர்பிலான ஆளணி வெற்றிடம் உள்ளதா? எனப் பரீசீலித்துப் பார்ப்பேன். இல்லாவிடில் வேலையற்ற பட்டதாரிக்ளுக்கு பல்வேறு அரச துறை திணைக்களங்களில் புதிய ஆளணி உருவாக்கத்துக்கு இடமுண்பா? எனப் பரீசிலித்த பார்த்த பின்னரே முடிவு எட்டப்படும் எனக் கூறினார். செய்திகளும் மிக அழகாக பத்திரிகைகளில் வந்து விட்டன.

எனினும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவின் பதிலுக்கு எமது பட்டதாரி வேலையற்ற இளைஞர்கள், கண்தூங்காது எப்போது ஊடகங்களில் பதில்வரும் என இன்று காத்துக் கிடக்கின்றனர்.

ஏற்கனவே முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் வேலையற்ற பட்டதாரிகள் நியமனமாக 16.05.1999 இல் நியமனம் பெற்ற பட்டதாரிகள் 18 வருடங்கள் கழிந்த நிலையிலும் வகுப்புII , வகுப்பு I மற்றும் சுப்றா தர பதவி உயர்வுகளை பெறமுடியாது இன்னமும் நியமன தரத்திலேயே அவர்களது வாழ்வு சுபீட்சமற்று கதிகலங்கிக் கிடக்கிறது. இது வேலை கிட்டியும் உயர்வு கிட்டாத நிலையில் உள்ள பட்டதாரி அரச அலுவலர்கள் தொடர்பான ஆத்திரமூட்டத்தக்கதொன்று. இதனை விட 2005 இலும் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச காலத்தில் வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் (PA) என்ற நியமனம், இன்று அபிவிருத்தி உத்தியோகத்தர் (DO) என்ற பதவிப் பெயராக மாற்றப்பட்ட போதும், சிறப்பான்தொரு சேவைப்பிரமாணக் குறிப்பு இல்லாது, அரச மட்டத்தில் இடைநிலை முகாமையாளர்களாகவோ அல்லது உயர் நிர்வாக அலகுகளிலோ பதவியை பெறக் கூடியதான நிலை பட்டதாரி அலுவலர்களுக்கு ஏற்படுத்தப்படாது, எங்கு பார்த்தாலும் கட்டமைக்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக வலம் வருகின்றனர்.

மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அரசு தலைவர் மைத்திரி வாக்குறுதி அளித்த போதும் அவர்களது நிலைகளில், பதவி வழங்கலில், பதவி உயர்வுகளில் மாற்றமில்லாத நிலையையே உணர முடிகிறது.

இது வேலையற்றிருந்து பின்னர், வேலை பெற்ற பட்டதாரிகள் தொடர்பிலானது.

### வடக்கு முதலமைச்சரது கருத்தால் அதிருப்தி

இதனைவிட அண்மைக்காலத்தில் எமது வட மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் வேலை யற்ற பட்டதாரிகளுக்கு நூல்நூற்றுக்கும் வேலைபெற்று கொடுங்கள் என தொழில் அமைச்சரிடம் கூறினார்.

தற்போது அரசசேவைக்கு செல்வோர் செல்லட்டும், மீதமானோர் கைத்தொழில் விவசாயத்துறையை நாடுங்கள் என்று கூறியுள்ளார். இதுவும் எமது வடக்கு தமிழ் பட்டதாரி இளைஞர்களுக்கு அதிருப்தியளிக்கும் கருத்து வெளிப்பாடே.

இதேவேளை நல்லாட்சித் தலைவரிடமும் வடக்கு கிழக்கு வேலையற்ற பட்டதாரிகளின் இன்றைய நிலைக்கு விரைந்த தீர்வைப் பெற்றுத் தாருங்கள் எனவும் மீளவும் ஒரு முறை மாகாண முதலமைச்சர் கேட்டுள்ளார்.

இவ்வாறாக வேலையற்ற பட்டதாரிகள் நிலை வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1999 இல் இருந்து பெரிய சுமையான, பேர் இடராக மாறிவிட்டது.

இந்தச் சுமைகளில் 80 வீதமானவை எதிர்காலத்திலும் இல்லாமல் போக வேண்டுமானால் வட மாகாணத்தில் மாவட்டத்துக்கு மாவட்டம், குறைந்தது இரு பெருந்தொழிற்சாலைகள் விரைவில் உருவாக வேண்டும். இவ்வாறாக 5 மாவட்டங்களிலும் குறைந்தது 10 தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டால் மட்டுமே அடுத்து வரும் 2020ஆம் ஆண்டுகளில் ஆவது தொழிற்சந்தையில் 10 ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கலாம். இது குறித்து எவர்களைக் கொண்டு துண்டுதல் மேற்கொள்ளலாம். எம் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டுமே இது இயலும். இதனை விட வடக்குமாகாண சபை உறுப்பினர்களாலும் முடியும். இதற்கு வலுக்கொடுப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மத்தியில் முன்வைத்து அடையப்பட்டால் மெய்யான அபிவிருத்தி வடக்கில் ஏற்படும் இல்லாவிடில் எல்லாம் வெறும்பேச்சளவில் மட்டுமே நின்று விடும். வீதியில் இறங்கிய பட்டதாரிகள் வீதியிலேயே காத்திருக்க் நேர்ந்துவிடும்.





## வாசகர் திருமுகம்

### மற்றொரு உயிர்கொல்லியாக மாறிவரும் வீதி விபத்துக்கள்

புதுவருட தினத்தன்று சுன்னாகத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் மூன்று இளைஞர்கள் படு காயம டைந்துள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைக் கவசம் அணியாது இந்த மூன்றுபேரும் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இளைஞர்கள் விதிமுறைகளை மீறுவதை ஒரு சாதனையாகவே தற்போது நினைப்பதாகத் தெரிகின்றது. ஆனால் இதன் விளைவுகள் மோசமானதாக அமைந்து விடுகின்றன. குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்களின் பாவனை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துவிட்டது. வீதிகளில் பயணிப்பது என்பது உயிருக்கு உத்தரவாதமற்றதாகி விட்டது. தினமும் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் வழக்கமாகிவிட்டன. விபத்துக்களில் காயமடைந்தவர்களால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. மருத்துவர்கள் ஓய்வின்றி உழைக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது: அநேகமான வீதி விபத்துக்கள் வாகன சாரதிகளின் தவறு காரணமாகவே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒருவர் வீதி விதிமுறைகளை மீறுவதால் பலருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. வேகம் விவேகமல்லவெனக் கூறுவார்கள். ஆனால் வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்வதையே இப்போது பலருk; விரும்புகின்றனர். ஆபத்தை வலிந்து அழைத்துக் கொள்கின்றதொரு செயல்தான் இது. சந்திகள் தோறும் வீதிச் சமிக்ஞைகல்ளப் பொருத்தி வைத்திருப்பது பொது மக்களின் பாதுகாப்பின் பொருட்டே என்பதை நாம் ஏன் மறந்து விடுகின்றோம்? எவருக்குத்தான் அவசரம் இல்லை? அதற்காக வலிந்து சென்று ஆபத்தை விலைக்கு வாங்குதல் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. தற்போதுள்ள நிலை தொடருமேயானால் போரின்போது உயிரிழந்தவர்கள் மற்றும் அவயவங்களை இழந்தவர்களுக்கு நிகரானதொரு பாதிப்பை நாம் எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்பதை மறுக்கவே முடியாது.

*வே.பஞ்சநாதன்*
*கொக்குவில்.*



# நீரிழிவும் சிறுநீரக நோயும்



மருத்துவர் எம்.கஜந்தினி

நீரிழிவு என்பது குருதிக் குளுக்கோஸை உடலால் சரியாகப் பயன்படுத்த முடியாமல்போகும்போதுகுருதி மட்டத்தில் குளுக்கோஸ் சாதாரண அளவைவிட அதிகரித்த நிலையில் காணப்படும் நிலமையாகும்.

உலக சுகாதார நிறுவனமானது நீரிழிவுக்கானவரையறையாக Fasting Blood Sugar > 7 mmo1/1(126 mg/Dl) Post Prandial Blood Sugar (PPBS)) (உணவுஉட்கொண்டபின்2மணித்தியாலத்தில்குருதியில்வெல்லத்தின் அளவு)>11.1mmo1/1(200mg/dl) என் குறிப்பிடுவதோடு நீரிழிவு நோய்க்கான அறிகுறிகளும்கருத்தில்கொள்ளப்படுகிறது.

நீரிழிவைக் குணப்படுத்த முடியாது. ஆனால், கட்டுப்பாட்டில்வைத்திருக்க முடியும் கட்டுப்பாடற்ற நீரிழிவால் உடலுறுப்புக்கள் பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாகின்றன.

நீரிழிவு நோயும் சிறுநீரகப் பாதிப்பும்
எமது உடலில் இரு சிறுநீரகங்கள் உண்டு. இந்தச் சிறுநீரகமானது பல்வேறு தொழிற்பாடுகளை செய்கின்றது.

01. குருதியில் உள்ள கழிவுகளை வெளியகற்றுகின்றது.
02. நீர் சமநிலையைப் பேணுகின்றது
03. அமில, கார நடுநிலையைப் பேணுகின்றது.
04. குருதி அழுத்தத்தைச் சீராக்குகின்றது.
05. உடற் தொழிற்பாட்டுக்குத் தேவையான ஓமோன்களைச் சுரக்கின்றது.

ஒவ்வொரு சிறுநீரகமும் பல மில்லியன் கணக்கான வடிபாகங்களைக் (Nephron)கொண்டது. இந்தஅமைப்பானது குருதியை வடிகட்டுவதன் மூலம் கழிவுகளையும் மேலதிக நீரையும் அகற்றுகின்றது.

நீரிழிவு நோயாளர்களுக்கு அதிகரித்த வெல்லமட்டம் காரணமாக இந்த வடிபாக அமைப்பு மெது மெதுவாகப் பாதிப்படைந்து இறுதியில் குருதியை வடிகட்டுவதில் பாதிப்பு ஏற்பட்டு குருதியில் உள்ள புரதமும் (albumin)சிறுநீருடன்சேர்ந்துவெளியேறுகின்றது. அதேவேளை சிறுநீரகக் கலங்கள் இறந்த கலங்களால் (Scared tissue) மாற்றீடு செய்யப்படுகின்றது.

எல்லாநீரிழிவுநோயாளர்களும்சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாவதற்கான சாத்தியக்கூறு உண்டு. இந்தச் சிறுநீரகப் பாதிப்பானது மெதுவானதும் நீண்டகாலமானதுமாகும். நீரிழிவு நோயின் வகை, நீரிழிவு ஆரம்பித்த வயது, குருதியில் வெல்லக் கட்டுப்பாடு, உடலின் குருதி அழுத்த கட்டுப்பாடுபோன்றபல்வேறுகாரணிகளில் சிறுநீரகப்பாதிப்புதங்கியுள்ளது.

நீரிழிவு நோயாளிகளின் சிறுநீரகப் பாதிப்புஏற்படுவதற்கானகாரணிகள்
01. குருதியில் வெல்லமட்டம் கட்டுப்பாடற்ற நிலையில் அதிகரித்துக் காணப்படுதல்.
02. அதிகளவானஉயர் குருதி அழுத்தம்.
03. அதிகரித்த எடை போன்றன

ஆரம்பசிறுநீரகப்பாதிப்பில்அறிகுறிகள்வெளித்தெரிவதில்லை. ஆனால் சிறுநீரகத்தில் நீண்ட காலமாகத் தொடர்ச்சியானபாதிப்பு ஏற்பட்டு இறுதியில் சிறுநீரகம் படிப்படியாக செயலிழந்த நிலையில்
01. களைப்பு
02. உடற்சோர்வு
03. குமட்டல்
04. வாந்தி
05. பசியின்மை
06. கால்வீக்கம்
07. உடற்கடி
08நித்திரையின்மை
09. சுவாசிப்பதில் சிரமம்
10குறைவானசிறுநீர்வெளியேற்றம்
போன்ற அறிகுறிகளுடன் மருத்துவரை நாடுவார்கள்

நீரிழிவுநோயாளர்கள்குருதிவெல்லமட்டத்தைகட்டுப்பாட்டில்வைத்திருப்பதன் மூலம் சிறுநீரகப் பாதிப்பின் வேகத்தைக் குன்றத்துக் கொள்ளலாம். இதற்காக,
01. ஆரோக்கிய உணவை உண்ணல்.
02. சீரான உடற்பயிற்சி செய்தல்.
03 மருத்துவஅறிவுரைக்கு ஏற்ப மருந்துகளை உள்ளெடுத்தல்
04. குருதி வெல்லமட்டத்தை சீரான இடைவெளியில் அளந்து குறித்துக்கொள்ளல்.
05. உடல் நிறையைக் கட்டுப்படுத்தல்.
06. புகைத்தலை நிறுத்துதல்.

நீரிழிவு சிறுநீரகப் பாதிப்பு எவ்வாறு இனங்காணப்படுகிறது?
Urine microalbummin அளவு
சிறுநீரகத்தில் ஏற்படுகின்ற பாதிப்பு காரணமாக அதிகரித்த அளவில் புரதம்(Albumin) சிறுநீருடன் வெளியேறல் நீரிழிவினால் சிறுநீகரம் பாதிப்படைந்துள்ளமைக்கான முதலாவது அறிகுறியாகும். இது ஆரம்பத்தில் rinemicroalbumin என்கின்றபரிசோதனை மூலம் அறியப்படும்.

eGFR(சிறுநீரகத்தால்ஒருநிமிடத்தில் எவ்வளவு இரத்தம் வடிக்கப்படுகிறது என்பது)
Serum Creatinine சிறுநீரகத்தால் வெளியேற்றப்படுகின்றது சிறுநீரகம் செயலிழக்கத் தொடங்குகையில் இதன் பெறுமானம் குருதியில் அதிகரிக்கின்றது (Serum Creatinine அளவு வயது, பால் என்பவற்றுக்குஏற்பeGFRகணிப்பிடப்படுகிறது

இப் eGFR இன் பெறுமானம் அடிப்படையில் சிறுநீரக பாதிப்பு நிலை 1 இலிருந்து நிலை 5 (Stage 1to Stage 5) வரை வகைப்படுத்தப்படுகின்றது நிலை 1 (Stage1) என்பது சிறுநீரக பாதிப்பின் ஆரம்ப கட்டமாகவும், நிலை 5 (Stage 2) என்பதுசிறுநீரகத் தொழிற்பாடுமுற்றாகசெயலிழந்ததாகவும் கொள்ளப்படுகின்றது.

| eGFR (m1/min/1.73m2) | |
|---|---|
| Stage1 | >90 |
| Stage2 | 60_89 |
| Stage3 | 30_50 |
| Stage4 | 15_29 |
| Stage5 | <15 |

சிறுநீரகத்தால் புரதம் குறைவான அளவில் வெளியேறுகையில் சிறுநீரகப் பாதிப்பு இனங்காணப்படுமாயின் இதுவே சிறுநீரக நோயின் ஆரம்பநிலையாகும். இதனை மருத்துவச் சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

அதிகளவு புரதம் வெளியேறுகின்ற நிலையாயின்காலப்போக்கில்படிப்படியாக சிறுநீரகச் செயலிழப்புக்கு உள்ளாகும்சாத்தியக்கூறு உள்ளது.

சிறுநீரகத் தொழிற்பாடு குறிப்பிட்ட மட்டத்தை குறைவடைகையில் குருதி சுத்திகரிப்பு, சிறுநீரக மாற்றீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் நீரிழிவினால் ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்பைத் தடுக்கவோ அல்லது பிற்போடவோ முடியும். அதேவேளை நீரிழிவினால் சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்கள் நீரிழிவைக்கட்டுப்பாட்டில்வைத்திருப்பதன் மூலம் சிறுநீரகப் பாதிப்பின் வேகத்தைக் குறைப்பதோடு சிறுநீரகம் முற்றாக செயலிழக்கின்ற நிலையையும் பிற்போட முடியும்

நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
குறைவற்ற செல்வத்தைப் பெற்றிட
அளவாக உண்போம்
சீனியைத் தவிர்ப்போம்
தினமும் உடல் பயிற்சி செய்வோம்
மன அழுத்தமற்று வாழ்வோம்.

சிறுநீரகப் பிரிவு






மருத்துவர் எம்.அரவிந்தன்

## கேள்வி பதில்

**கேள்வி:**
எனது வயது 25 ஆகும். எனக்கு சிலமாதங்களாகக் கழுத்துப் பகுதியில் வீக்கமொன்று காணப்படுகின்றது. நான்சோம்பல்தன்மையாக இருப்பதாக உணர்வதோடு எனது உடல் நிறை அதிகரித்துச் செல்வதையும் அவதானிக்கிறேன். எனது மாத விடாய் வெளியேற்றமும் அதிகமாக உள்ளது. இது தைரொயிட் தொடர்பான பிரச்சினையாக இருக்கக் கூடுமா? இதற்குத் தேவையான சிகிச்சை முறைகளைப் பற்றி விளக்கிக்கூறவும்?

**பதில்:**
உங்களுக்கு இருக்கின்ற குணங்குறிகளைப் பார்க்கும் போது தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரக்கின்ற நோய் இருப்பதற்கான சாத்தியக் கூறு அதிகமாக உள்ளது. தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரக்கும் போது சோம்பல் தன்மை, நித்திரைத் தூக்கம், உடல்நிறை அதிகரித்தல், மலச்சிக்கல், தலைமுடி உதிருதல், குளிர் தாங்கமுடியாத தன்மை, குரல் மாற்றமேற்படுதல் மற்றும் பெண்களில் மாதவிடாய் வெளியேற்றம் அதிகரித்தல்போன்றபிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே நீங்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். தைரொயிட் ஹோர்மோனின் அளவை குருதிப்பரிசோதனை மூலம் அளவிட்டுக் கொள்ள முடியும். இந்தப் பெறுபேற்றின் அடிப்படையில் தைரொக்ஸின் மருந்தை ஆரம்பிக்க வேண்டியிருக்கும். தைரொக்சின் மருந்தானது (குளிசை) காலைவேளையில்வெறும்வயிற்றில்உள்ளெடுக்கப்பட வேண்டும். இதன்பின்னர் 30 நிமிடங்களுக்குப்பின்னரே தேநீர் போன்ற பானங்களை அல்லது காலை உணவை உள்ளெடுக்க வேண்டும். தைரொக்ஸின் குளிசையுடன் வேறு மருந்துகளை ஒரே நேரத்தில் உள்ளெடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறான மருந்துகளைக் காலை உணவின் பின்னர் உள்ளெடுத்தல் சிறந்தது

தைரொயிட்ட ஹோர்மோனின் அளவைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை பரிசோதித்து தைரொக்ஸின் குளிசையின் அளவை மாற்ற வேண்டியிருக்கும். உங்களுக்கு கழுத்துப் பகுதியில் வீக்கம் காணப்படுவதால் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கர்ப்பம் தரிக்க விரும்பும் பெண்களில் தைரொக்ஸின் ஹோர்மோனின் அளவானது குறிப்பிடத்தக்க அளவில் பேணப்படுவது அவசியமாகும். கர்ப்பம்தரித்தபின்னர் குறிப்பிடத்தக்க அளவில் தைரெக்ஸின் மருந்தை உள்ளெடுக்காதுவிடின் கர்ப்பத்திலுள்ள சிசுவின் உடல், மூளை வளர்ச்சி போன்ற பாதிப்படைய நேரிடுவதோடு கருச் சிதைவு ஏற்படும் சாத்தியக் கூறும் அதிகமாகும். எனவே நீங்கள் உடனடியாகவைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகும்.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி (ஹோர்மோன்)
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



# சூரியகாந்தி

உதயன் 16.04.2017





பக்.30



கலை இலக்கியத்தில் கொய்தலும், கொழித்தலும்

பக்.27



குரும்பட்டித் தேர்

பக். 28

# "கரிநாள் கடந்தும் விடியலில்லை எங்களுக்கு..."

கணேசதாசன்

"இது தமிழற்ற வருசப்பிறப்பு இல்ல. சிங்களவற்றதான். அதுமாதிரியே அவங்களும் இந்தமுறை நாங்கள் றோட்டில கிடக்க, தாங்கள் இனிப்புக் குடுத்துக் கொண்டாடுறாங்கள்"

"என்ர பிள்ளையைத் தாங்கோ என்று கேட்டு எத்தினை நாளா நான் றோட்டில இருக்கிறன். என்ர பிள்ளை எங்க? என்ன செய்யுதோ? இருக்குதோ? இல்லையோ? எண்டு தெரியாமல் என்னால எப்பிடி வருசம் கொண்டாடிச் சந்தோசமா இருக்க ஏலும். நாட்டில எல்லோரும் சந்தோசமாத் தங்கட தங்கடபிள்ளை குட்டிகளோட புது வருசம் கொண்டாடிக் கொண்டிருக்க நாங்கள் இதிலயிருந்து அழுதுகொண்டிருக்கிறம்"





"எங்கட காணிகளைத்தாங்கள்பிடுங்கிக்கொண்டு எங்களை றோட்டில விட்டுட்டாங்கள். இருக்க நிலமில்ல. வீடுவாசலில்ல. எத்தினையோநாளாஇந்தச் செகிட்டுஅரசாங்கத்திட்டக்காணிகேட்டுப்போராடிக் கொண்டிருக்கிறம். புதுவருசத்தன்டும் றோட்டுக் கரையில நாய்கள் மாதிரிக் கிடந்து எங்களைப் போராட விட்டிருக்கிறாங்கள்"

சிங்களவர்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என மூவருக்கும் கடந்த புதுவருடத் தினம் ஏதோ ஒரு வகையில் விசேட நாளாகவே அமைந்திருந்தது. வெடிகொளுத்தியும் இனிப்புப்பண்டங்கள் வழங்கியும் புத்தாடை அணிந்தும் இவர்கள் இந்தத் தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர்.

ஆனால், மறுபுறத்தில், அவர்களின் சக உறவுகள்- சகோதர உறவுகள் வீதி ஓரங்களில் அமர்ந்து இவ்வாறுதான் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். அயலவர்வீடுகள்வெடிச்சத்தங்களாலும்இசை ஆர்ப்பரிப்புக்களாலும்களித்திருக்கஇவர்களுடைய வீடுகள், அவற்றின் நடுவே மயான அமைதியுடன் தகரக் கொட்டகைகளில் தமது சொந்தக்காரர்கள் கூனிக் குறுகி இருப்பதைப் போலவே அவர்களுக்காகக் காத்திருக்கின்றன.

"பிள்ளையைத் தொலைத்துவிட்டுப் பைத்தியக்காரியாக ,எட்டுவருசங்களாக அலைஞ்சுதிரியிறன். இவங்கள்என்ரபிள்ளையைஎங்ககொண்டுபோய்வைச்சிருக்கிறாங்களோ...? என்ன செய்தாங்களோ...? எந்த முடிவும் சொல்லுறாங்களில்லை. அந்தக் குழு. இந்தக் குழு எண்டுஏதேதோபதிஞ்சுகொஞ்சக்காலத்தை இழுத்தடிச்சாங்கள். இப்ப, கடைசியாக நாங்கள் றோட்டில கிடந்து காயுறம். எந்தவொரு குற்றவுணர்ச்சியும் இல்லாமல் அவங்கள்பண்டிகைகொண்டாடுறாங்கள். எங்களுக்கு வாழ்த்துச்செய்தியும்சொல்லுறாங்கள்"தவமணிஅம்மா ஆதங்கமடைந்து கொள்கின்றார்.

இறுதிப்போரின்போது தமது உறவுகளை இராணுவத்திடம்கையளித்த மக்கள்கிளிநொச்சிகந்தசுவாமிகோயில் முன்புறத்தில் இன்று 56ஆவது நாள்களாகவும் வவுனியா நகரப்பகுதியில் 52ஆவது நாள்களாகவும் யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 33ஆவது நாள்களாகவும் முல்லைத்தீவுநகரப்பகுதியில்40ஆவதுநாள்களாகவும் திருகோணமலையில் 43ஆவது நாள்களாகவும் வீதி ஓரங்களில் அமர்ந்திருந்து தங்களுடைய உறவுகளை மீட்டுத்தரக்கோரிப் போராடி வருகின்றார்கள். மறுபுறத்தில்இராணுவம்கையகப்படுத்திவைத்திருக்கின்றதமது காணிகளைவிடுவிக்கக்கோரியும்மக்கள்தொடர்அறவழிப்போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சூழலில் மலர்ந்த புதுவருட தினம் தெரு ஓரங்களிலே அமர்ந்து போராடிக்கொண்டிருக்கும் அவர்களை ஒரு கரிநாளாகவே கடந்து சென்றிருக்கின்றது.

"பாரம்பரை பரம்பரையாக நாங்கள் வாழ்ந்த காணிக்குள்சென்றதன்பின்னர்தான்ஐயாஎங்களுக்குக்கொண்டாட்டம். இந்த வருசப்பிறப்பில்ல கடந்த ஆறுவருசப் பிறப்புகள் எங்களுக்கு இப்பிடிக் கரிநாள்களாகத்தான் கழிந்திருக்கின்றன.

இந்தவருசப்பிறப்பையாவதுஎங்கடசொந்தவீடுவாசலில கொண்டாடுவம்எண்டுநம்பியிருந்தம். அந்தநம்பிக்கையிலையும் மண்ணை அள்ளிப்போட்டுட்டாங்கள்"

தனதுபூர்வீகக்காணியைவிடுவிக்கக்கோரிதொடர்அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 66 வயதுடைய அ. பரமேஸ்வரி அரசைத்தூற்றிக் கொள்கின்றார்.

"தம்பி!என்ர இரண்டேக்கர்காணியை இவங்கள்பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள். அதில 110 தென்னைகளுக்கு மேல நின்றது. ஒரு தடவை காணிக்க விடேக்க பாத்தன் 30தென்னையள்தான்நிக்குது. அதுகளின்ரபயன்களை எல்லாம்அனுபவிக்கிறதுபோதாமஅதுகளைஆமிஅழிக்கவும் செய்யிறாங்கள். நாங்கள் இங்க காசுக்கு எல்லாத்தையும்வாங்கவேண்டிக்கிடக்குது. தோட்டந்துரவுதான் எங்கட தொழில். வீடு முழுக்க எப்பவும் நெல்லுமூட்டை நிறைஞ்சுகிடக்கும். கச்சான், வெங்காயம், பயறு, கௌபி எதற்குமே எங்கட நிலத்து விளைச்சலுக்குக் குறைவிருக்காது.

அந்தக்காலத்தில புதுவருசப் பிறப்பெண்டால் பேரப்பிள்ளைகளுக்குபுதுஉடுப்புகள்எடுத்து, பலகாரங்கள்செய்து, கைவிசேசம் குடுத்துச் சொந்த பந்தங்களோட சந்தோசமாக் கொண்டாடுவம். இப்ப எங்கட வருமானங்களை எல்லாம் ஆமி அனுபவிக்க, செந்தக்காரர்கள் நாங்கள் ஒருநேரம்சாப்பாட்டுக்கேகிடந்துகாயுறம். இதிலகொண்டாட்டம்என்ன வேண்டிக்கிடக்கு?" எனச்சினந்து கொள்கின்றார் அந்தத் தாய்.

"அந்தக்காலத்தில புதுவருசப் பிறப்பெண்டால் பேரப்பிள்ளை களுக்கு புதுஉடுப்புகள் எடுத்து, பலகாரங்கள் செய்து, கைவிசேசம் குடுத்துச் சொந்த பந்தங்களோட சந்தோசமாக் கொண்டாடுவம். இப்ப எங்கட வருமானங்களை எல்லாம் ஆமி அனுபவிக்க, சொந்தக்காரர் நாங்கள் ஒரு நேரம் சாப்பாட்டுக்கே கிடந்து காயுறம். இதில கொண்டாட்டம் என்ன வேண்டிக்கிடக்கு? எனச் சினந்து கொள்கின்றார் அந்தத் தாய்."

"குத்தகைக்காணியிலதோட்டம்செய்தால்எப்படிக்கட்டுபடியாகும்...? காதில மூக்கில கிடந்ததுகளை எல்லாம் இப்பவங்கியிலகொண்டுபோய்வைச்சாச்சுது. இப்படியிருக்க எங்களால எப்பிடிச் சந்தோசமாப் புதுவருசம் கொண்டாட ஏலும்...?" அவரின் கண்களில் இப்போது கண்ணீர் ஊற்றெடுத்தது.



நாடு முழுவதுமுள்ள சிங்களவர்கள்- தமிழர்கள் கடந்த புதுவருட தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்திருந்தார்கள். அரசதலைவர் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தத்தமது பிள்ளைகள், குடும்பத்தினருடன் அதைக்கொண்டாடிஇன்புற்றிருந்தனர். அத்துடன்பத்திரிகைகள் வாயிலாகவும் கைபேசிகளில் குறுஞ்செய்திகளாகவும் ஏனைய ஊடகங்கள் வாயிலாகவும் அரசதலைவர் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் தனது புத்தாண்டுவாழ்த்துக்களைத்தெரிவித்திருந்தார். சாவுச்சடங்குக்குப் புன்னகைத்துக் கொண்டுவந்தவர்போல கண்ணீரும்கம்பலையுமாகவீதிகளில்காய்ந்து, போராடிக் கொண்டிருக்கும் அந்தப் போராட்டக்களத்திலுள்ள மக்களையும் இந்த வாழ்த்துக்கள் சென்றடைந்தன. நல்லாட்சிஎன்பதன்பொருள்இவ்வாறுதான்உள்ளூருக்குள்உலாவித்திரிகின்றதுஎன்றுஇவர்களுக்குத்தெரிந்த விடயம் எப்போது வெளியூரவர்க்கு வெளிச்சமாகுமோ? தமதுஉறவுகளையும்நிலங்களையும்அரசிடம்பறிகொடுத்தஅந்தமக்களுக்குக்கரிநாள்கள்என்பனபுத்தாண்டு தினத்தையும்தாண்டிஇப்போதும்தொடரவேசெய்கின்றன.

# நடக்காமலா?

மலைகள் கரைந்து ஆறாய் ஓடும்
கடல்கள் மிதந்து கரைகளாகும்
கரைகள் வளைந்து கடல்களாகும்
ஒழுங்கு பட்டு-சுற்றிவரும்
கிரகங்கள்கூட

ஒரு கோட்டில் ஓடி
ஒன்றை ஒன்று விலத்தி
ஒன்றுடன் ஒன்று மோதி சுக்குநூறாகும்
சூரியன் மட்டும் சுற்றாமலா போகும்?
சும்மா சூழன்று பூமியில் வீழும்
இவைகளென்ன நடக்காமலா போகும்?
நடக்கத்தான் போகின்றன

ஒன்றுடன் ஒன்றாய்
ஒன்றே ஒன்றாய்
இருந்த இதயங்கள்
கரைந்து ஓடி, தனித்தனியாகி
ஊனப்பிறவிபோல்
உரு வெடுத்திருக்கையில்
இவைகளென்ன
நடக்காமலா போகும்?
நடக்கத்தான் போகின்றன.

உறவே உயிரென்று
உண்மை ஊர்கோலம்
போகையில் என்ன நடந்ததோ?
அந்த உறவே ஊனமாய்
உறைந்து போகையில்

இவைகளென்ன
நடக்காமலா போகும்?
நடக்கத்தான் போகின்றன.

ரி.சிவகுமாரன்



# எத்தனை காலம் தான்...?

அழலாடிக்குட்டன்

இந்தியக் கலைஞர்களுக்கு வடக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சு செலவழித்த பணத்தொகை தொடர்பான செய்தி சென்றவாரம் பத்திரிகைகளில் பிரசுரமாகி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. உள்ளூர்க் கலைஞர்களுக்கு உதவிகள் ஏதும்கிடையாதுஎன்றுஅவர்கள் கொதிப்பு, விசனம் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பான நீள, அகலங்களை அல்லது ஆழத்தை அலசுவது அல்ல இந்தப் பகுதியின் நோக்கம். எனினும் எம்மில் பலரின் மன ஆழத்தில் இருக்கும் இந்த இந்திய ஆர்வம், துதிபாடும் போக்கு, காவித்திரியும் குணம் தொடர்பாகச் சில விடயங்களை இங்கே பார்க்கலாம்.

ஒருகாலத்தில்இந்தியகளத்தை பின்னணியாக வைத்தே இங்குள்ள பலர் கதைகள் எழுதினார்கள். பேச்சு வழக்குக்கூட இந்தியப் பாணியிலேயே இருந்தது.

அவ்வாறான பண்பு பின்னர் மாற்றம் பெற்றாலும் இங்கு நடித்தவர்களை 'ஈழத்துச் சிவாஜி' என்றும் இங்கு பாடியவர்களை 'ஈழத்துச் சௌந்தராஜன்', 'ஈழத்துச் சீர்காழி' எனவும் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்த காலமும் உண்டு.

இதன் தொடர்ச்சியாக இங்குள்ள படைப்பாளிகள், கலைஞர்கள் இந்திய அங்கீகாரத்துக்காக அலைவதும் அங்கீகாரம் கிடைத்தால், அதை ஒரு பெரும் பேறாகவும் பெருமையாகவும் நினைக்கும் மரபும் தோன்றிற்று.

ஆனால் எங்கள் சுயத்தை நாம் பேணிக் கொள்ள வேண்டும்.

"இலங்கையிலே நடந்தது இனப்படுகொலையே அல்ல" என்று ஆனந்த விகடன் 'தடம்' சஞ்சிகையில் தமிழகத்து எழுத்தாளர் ஒருவர் பேட்டி கொடுத்திருந்தார்.

அவர் கருத்துக்கு முகநூலில் மாத்திரம் சில விவாதங்களும் பதிலடிகளும் நடந்தன. அவர் அப்படித்தான் அதனைப் பெரிதுபடுத்த வேண்டாம் எனவும் சில படைப்பாளிகள் தெரிவித்தனர்.

அவ்வாறு கருத்துத் தெரிவித்தவரை நாம் புறக்கணிக்கலாம். ஆனால் அவர் தெரிவித்த கருத்து அப்படியேதான் உள்ளது.

கொம்பர்களாக வர்ணிக்கப்பட்ட ஜெயகாந்தன், சோ, தீபம் நா.பார்த்தசாரதி போன்றோர் என்ன கதைத்தார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்தியப்படை தமது ஒற்றைக்கையைக் கட்டிக் கொண்டு சண்டையிடுவதாகவும், இந்தியப் படைகள் தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் தமிழ்ப் பெண்களைக் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்கள் எனவும் புழுகித்தள்ளினார்கள். ஆனால் இந்தியப்படைகளால்இங்குநிகழ்ந்தது என்ன...? இந்திய வானொலியில் 'அன்புவழி', 'வெற்றி மாலை' எனும் நிகழ்ச்சிகள் வாயிலாக இந்தப் படைகளின் சகல அடக்குமுறை நடவடிக்கைகளையும் மூடி மறைத்து தமது நாட்டுப் படைகளைத் தேவதூதர்களாக அந்த இலக்கியக் கொம்பர்கள் சித்திரித்தார்கள்.

அத்தகையவர்களை நாம் என்ன செய்தோம்?

இன்னும் ஒரு விடயத்தை நாங்கள் கவனத்தில் கொள்ளலாம். பலராலும் போற்றப்படும். சினிமா, இயக்குநர், ஒளிப்பதிவாளர், பாலுமகேந்திரா மற்றும். வி.சி.குகநாதன் போன்றவர்கள் இலங்கையர்கள் என்பது பின்னாளில் தெரிய வந்த உண்மைகளாகும்.

ஆனால் பாலுமகேந்திரா எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தான் இலங்கையன் என்பதையோ, அதுவும் இலங்கைத் தமிழன் என்பதை வெளிப்படுத்தியவர் அல்லர். அவர் தன்னை ஒரு மலையாளியாகவே ஆரம்பத்தில் காட்டித்திரிந்தார்.

இதற்கான காரணம் என்ன என்பது வெளிப்படையானது. பாலுமகேந்திராவின் திறமை ஒன்றும் புதினமானது அல்ல.

ஆனால் என்னதான் திறமை இருந்தாலும் அவர் இலங்கைத் தமிழர் என அடையாளப்படுத்தப்பட்டால் அங்கே அவருக்கான 'இடம்' என்பது கேள்விக் குறியாகிவிடும். இதன் காரணமாகத்தான் அவர் தன்னை யார் என்பதைக் காட்டிக் கொள்வதைத் தவித்தார்.

இதுவே உண்மையான நிலைப்பாடாகும். எங்கள் சொந்த மக்களை, அவர் தம் நலன்களை, எங்கள் பாரம்பரியச் சிறப்புக்களைக் காவு கொடுத்து விட்டுச் சொந்த நலன்களுக்காக எங்கள் தனித்துவங்களை இழக்க முடியாது.

ஏனையவர்களின் அங்கீகாரத்துக்காகவும் அவர்களின் மதிப்புரைகளுக்காகவும் நாங்கள் செயற்படும் வரை எங்கள் தனித்துவங்களை நாங்கள் பாதுகாக்க முடியாது. எங்கள் சுயங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்வோமாக!




இங்குள்ள கலைஞர்கள், கலை இலக்கியக்கப்படைப்பாளிகளில் சிலர் இவ்வாறு கனவு காணுவது மட்டுமல்ல அங்குள்ள பிரபலங்களில் தொண்டர் அடி ஆழ்வார்களாக அல்லது நகல்களாகத் தம்மை உருவாக்கிக் கொள்ள முனைந்தனர்.

தமிழகத்து அங்கீகாரங்களுக்காகவும் அவர்கள் இடும் பட்டியலில் தங்கள் பெயர்கள் வரவேண்டும் என்பதற்காகவும் இங்குள்ளவர்களால் எத்தனையோ தூக்குக் காவடிகள் எடுக்கப்படுகின்றன.

எந்த இடத்து நல்ல இலக்கியத்தையும் நாம் சுவைக்கவும், மதிக்கவும், போற்றவும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

அது தொடர்பான சில விளக்கங்களை தெரிவுகளையாவது அந்தப் படைப்பாளியைக்காவித்திரிபவர்கள் இங்குள்ளவர்கள் தெரிவித்திருக்க வேண்டும்.

எனினும் தமது சொந்த நலன்களுக்காகத் தமது புலம்பெயர் இலக்கியத் தொடர்புகளைக் குழப்பிவிடும் அல்லது இலக்கியப் பட்டியலில் தங்கள் பெயர்களைச் சேர்க்காமல் விட்டு விடுவார்கள் என்ற பயத்தினாலோ? என்னவோ? சம்பந்தப்பட்டவர்கள் மௌனிகளாக இருந்து விட்டார்கள்.

1987களில் இந்திய அமைதிப்படை என்னும் ஆக்கிரமிப்பு இராணுவம் எங்கள் மண்ணில் இருந்த காலத்தில் இலக்கியக்

## உதிரம் தோய்ந்து கிடக்கிறது இந்த மண்



அம்மா;
உயிரைக் காப்பாற்ற ஓடிப்போகவா
சொல்கிறாய் சொல்!
நான் நொந்த போதெல்லாம்
இந்தக் கடற்கரையும்
மணற்பரப்பும்
வயல்வெளியில் சின்னப் பறவைகளும்
மெல்லிய காற்றும்
என்னை அணைத்து ஆறுதல் தந்தன!
இன்று அவையெல்லாம்
நொந்துபோய்க் கிடக்கின்றன!
உயிர் மூச்சை
இழுத்துப்பிடித்துப் போராடுகிறது
இந்த மண்...
நான் அந்நிய தேசத்தின்
அகதி மூச்சை இழுத்தாவது
உயிர் வாழவா சொல்கிறாய்!
கைகோர்த்துத் திரிந்தவர்களும்
பங்கிட்டு உண்டவர்களும்
உன்னதமான உணர்வுகளோடு
உரசிப் பார்த்தவர்களும்
அம்மா
இந்தக் காடுகளிலும்
சாம்பல் மேடுகளிலும்
மண்ணுக்குள் உயிரை
வைத்து விட்டு
உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்
ஒரு சிறு உணர்வோடு
ஒருமுறை இந்த மண்ணை
வெட்டிப்பார் நரம்புகள் மீறிட்டு
இரத்தம் சீறும் நான் கனடாவில்
கால் கழுவி அழுக்குகளை
உனக்கனுப்ப
நீ - வட்டியாக்கி முதலாக்கி
இந்த மண்ணின் மக்களையே
சுரண்ட
மீண்டும் இந்த மண்ணில்
நான்...
உடுத்துக் கொண்டு
நான் திரிந்த தெருக்களின்
சமாதிகளும்
வறுமைப்பட்ட
வயல் வெளிகளும்
உருக்குலைந்த
கட்டடங்களும்
எரிந்து போன சடலங்களும்
இன்னும் எதிர்ப்படும் எல்லாமே
என்னைப்பார்த்து
காறி உமிழ்ந்து விட
நான் நனைந்து
அழுங்கியே போவேன்!
வெட்கமாக இருக்கிறது
என்னைத்துரத்தாதே
நான் போகமாட்டேன்!
இந்த மண்ணையே
சொர்க்கமாக்கும்
நம்பிக்கை என்னிடம்
இருக்கிறது!
இனியும் என்னைத்
துரத்தாதே
என் உதிரத்தில்
நீ சறுக்கி விழுந்திடக் கூடும்!

ம.சி.சந்திரபோஸ்






இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் ஒருநாளில் கிடைப்பது 24 மணித்தியாலங்கள் தான். இந்த நேரத்தை முகாமை செய்து பயன்படுத்தி எமக்கு முன்னர் வாழ்ந்த விஞ்ஞானிகள் பெரிய சோதனைகள் மத்தியில் அரும்பெரும் கண்டுபிடிப்புக்களைச் செய்து, அவற்றை எமக்காக விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் நல்ல நேரம், சகுனம் பார்த்திருந்தால் இன்று நாமெல்லோரும் கற்காலயுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்போம். நவீனயுகம் என்பது எமக்கு எட்டாத தொலைவில் இருந்திருக்கும்.

சுபநேரம் என்ற விடயத்தில் அதீத நம்பிக்கை உள்ள ஒருவர் ஒரு வேலையைத் தொடங்குவதற்கு நல்ல நேரம் எப்பொழுது என பஞ்சாங்க நாள்காட்டியைப் பார்த்துக் கொள்வார். பலர் இந்த நல்ல நேரம் பற்றிய விடயங்களை மனப்பாடம் செய்தும் வைத்திருப்பர். ஆனால் எமக்குக் கிடைக்கும் நல்லவைகள் நல்ல நேரத்திலும் தீயவைகள் தீய நேரத்திலுமா கிடைக்கின்றன? சற்றுச் சிந்திப்போம்.

நாம் ஒரு நல்ல செய்தியை எதிர்பார்த்திருக்கின்றோம். அது இன்று வரலாம். அல்லது நாளை வரலாம். அல்லது சில வாரங்கள் பல மாதங்கள் கழிந்தும்கூட வரலாம். ஒரு நாளில் இதுதான் நல்லநேரம் என நாள்காட்டியில் குறிக்கப்பட்ட நேரத்தில் ஒருவருக்கு நல்லதும் மற்றொருவருக்குத் தீயதும் நிகழ்ந்து விடுகிறதே அது எப்படி? தொழில் வாய்ப்புக்கிடைக்கும் செய்தி, வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும் செய்தி, பதவி உயர்வு, சம்பள உயர்வு, நல்ல பரீட்சைமுடிவு, இவை போன்ற இன்னோரன்ன நல்ல விடயங்கள் கிடைக்கப் பெற்ற நேரங்களில் அவரவர் "நமக்கு நல்ல நேரம் போலிருக்கு" என்று சொல்லிக் கொள்வார்கள். அதேவேளை தீயது நடந்தால் "இப்பொழுது எமக்கு நேரம் சரியில்லைப் போலும்" என்று ஆறுதலடைவதையும் பார்த்திருக்கிறோம். பரீட்சை முடிவொன்றை எதிர்பார்த்திருக்கும் ஒருவர் தான் கணித்துவைத்திருக்கும் நாளில் அந்த முடிவு வெளிவர வேண்டும். அந்த நாளில் வந்தால், முடிவு நல்லதாக அமையும் என எதிர் பார்த்தால் அது முடியுமா? அவர் பரீட்சையில் காட்டிய திறமையைப் பொறுத்தே முடிவு அமையும். மேலும் பரீட்சை முடிவுகள் ஒரு நிருவாக அலகின் திட்டமிடப்பட்ட செயற்பாட்டுக்கு அமைய எந்த வேளையிலும் வெளியிடப்படலாம்.

நல்ல நேரங்கள் பார்க்கப்படுவதற்கான காரணங்கள் பலவாக உள்ளன. முக்கிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் திட்டங்களை வகுப்பதற்கும், அவற்றை வெளிப்படுத்துவதற்கும் சில நாள்கள் தேவைப்படுகின்றன. எனவே அந்த நாள்களில் அந்தக் காரியங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்று கூடிப் பேசும் வசதிக்கும், மனதளவில் நல்ல நம்பிக்கையை ஊட்டுவதற்கும் ஏற்பவே குறித்த சில நாள்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

பொரும்பாலும் வேலைநாள்கள் தவிர்ந்த ஏனைய விடுமுறை நாள்களில் (சனி, ஞாயிறு, பூரணைதினம்) கல்வி, கல்வி சாரா கருத்தமர்வுகள், கலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், வேலைத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பான ஒன்று கூடல்கள், நூல்வெளியீடுகள், நூல் அறிமுகவிழாக்கள், கௌரவிப்பு, பட்டமளிப்பு நிகழ்வுகள் மற்றும் மங்கள நிகழ்வுகள் உள்ளிட்ட இன்னோரன்ன நிகழ்வுகள் ஒழுங்கு செயப்பட்டு நடைபெற்று வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவை மேற்குறித்த தினங்களில் இடம்பெறுவதற்கு அனைவரது பிரசன்னமே முக்கியமாகும். விடுமுறை தினங்களில் அனைவரும் வருகை தரும் வாய்ப்பு அதிகம்.

குறித்த நிகழ்வுகளில் அனைவரும் பங்குபற்றுவதன் மூலம் பலரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றம் நிகழ்வதோடு, குறிப்பிட்ட விடயம் தொடர்பான நல்ல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதால் அவற்றினூடாக பலரும் பயனடைவர். மேலும் போட்டி நிகழ்வுகளாயின் அனைவரும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் மங்கள நிகழ்வுகளாயின் அனைவரும் பரஸ்பரம் கண்டு மகிழ்வதற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கும் அனைவரதும் வருகை அவசியமாகின்றது.

ஆகவே இந்தச் சந்தர்ப்பங்களுக்கு நல்ல நேரம் அல்லது சுப நேரம் என்ற பதங்களைவிட பொருத்தமான நேரம் அல்லது பொருத்தமான காலம் என்பதே சாலப் பொருத்தமானதாகும். 'பருவத்தே பயிர் செய்', 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' போன்ற நன்மொழிகள் நல்ல நேரம் கருதி கூறப்பட்டவையல்ல. பொருத்தமான காலநேரம் கருதியே அமைந்தவையாகும்.

எம் முன்னோர் குறிப்பாக விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள் பயிர்ச் செய்கையில் விதை விதைத்தல் முதல் அறுவடை செய்தல் ஈறான செயற்பாடுகளை வானிலை, காலநிலை, பருவ காலங்கள் என்பவற்றுக்கேற்பவே. திட்டமிட்டுச் செய்து வந்தனர். செய்தும் வருகின்றனர். சில பயிர்களின் விதைகளைச் சுபநேரம் பார்த்து விதைத்தாலும் பொருத்தமான காலம் அல்லாது அவை பயன்தரா. அவை முளையிலே கருகி விடுவதுமுண்டு. இதனைக் குறிக்கவே ஔவை தனது மூதுரையில்

*'அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி*
*எடுத்த கருமங்கள் ஆகா தொடுத்த*
*உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம்*
*பருவத்தால் அன்றிப்பழா'*

*(மூதுரை 05)*

என்று கூறியுள்ளார். இதில் ஒரு நற்செயல் நடைபெற நல்ல நேரமன்றி பொருத்தமான காலமே வேண்டும் என வலியுறுத்தப்படுவதைக் கண்டு தெளியலாம். சில கள விளையாட்டுக்கள் (பன்னாட்டு விளையாட்டுக்கள் உட்பட) நடைபெறும் தினங்கள் காலநிலை பருவ மாற்றங்கள் என்பவற்றுக்கேற்பவே தீர்மானிக்கப்படுகின்றன. அதிக மழை, அதீத பனிப்பொழிவு காலங்கள் விளை யாட்டுக்கள் நடைபெற பொருத்தமற்றவை. இத்தகைய சில இயற்கை நிகழ்வுகளால் பன்னாட்டு விளையாட்டு நிகழ்வுகள் பாதிக்கப்பட்டுவரும் வரலாறுகளும் உள்ளன. இவை சுமுகமாக நடந்தேறுவதற்கு சுபநேரங்களன்றி பொருத்தமான கால நேரங்களே சாதகமானவை. திருக்குறளில் காலத்தின் பொருத்தப்பாட்டுக்குக் காலமறிதல் என்ற ஒரு அதிகாரம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அந்த அதிகாரத்தில் இடம்பெறும் பத்து குறள்களிலும் ஒரு கருமம் நன்முறையில் நிறைவேறப் பொருத்தமான காலமே சிறந்ததென வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

*'காலம் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலம் கருதுபவர்'*

(குறள் 485)

*'பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது'*

(குறள்481)

இந்த இரண்டு குறள்களிலும் அரசர் பகைவருடன் படை எடுத்து வெற்றி பெறுவதற்குப் பொருத்தமான கால நேரத்தைப் பயன்படுத்த வேண்டுமெனக் கூறுகின்றார். இது அரசருக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் பொருத்தமானதே.

1812இல் நெப்போலியன் பொனபாட் சோவியத் ரஷ்யாவுடன் போர் தொடுத்தவேளை எதிர்பாராத அதீத பனிப்பொழிவின் காரணமாக 20 நாள்களில் முடிய வேண்டிய போர் பலநாள்கள் நீடித்து இறுதியில் தோல்வியில் முடிந்ததோடு 2இலட்சம் படையினர் குளிரால் மடிந்தனர் என்பதும் வரலாறு.

ஒருவர் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குச் சுபநேரம் பார்த்து வீட்டிலிருந்து புறப்படுகிறார். வீட்டு வாயிலில் பூனை ஒன்று (துன்தேவை கருதி) குறுக்கே சென்றது. இதனை சகுனப் பிழையாகக் கருதிய அவர் சற்று நேரம் வீட்டில் தாமதித்து பஸ் நிலையம் செல்ல அவர் செல்ல வேண்டிய பஸ் புறப்பட்டுவிடப் பின்னர் வேறு ஊர்தி பிடித்து உரிய இடத்துக்கு அவர் சென்றிருக்க அங்கே நேர்முகப் பரீட்சை முடிவுபெற்றுவிட்டது.

இந்தச் செயலைத்தான் நம்முன்னோர் 'ஐயர் வரும் வரையும் அமாவாசை பொறுக்குமா?' என வினாவாகக் கேட்டு வைத்தனர். அவர் குறித்த வேளைக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பாராயின் தனது எதிர்கால வாழ்வுக்கான ஒரு நல்ல வாய்ப்பை இழந்திருக்க முடியாதல்லவா?

உலகம் முழுவதும் ஒரு நாள் 24 மணி நேரம் கொண்டதாகவும் கிறின்விச் நெடுங்கோட்டை (0 பாகை) மையமாகக் கொண்டு கிழக்கே ஒவ்வொரு பாகைக்கும் நேரம் 4நிமிடங்கள் அதிகரித்தும், மேற்கில் 4நிமிடங்கள் குறைந்தும் செல்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த நியதிப்படி கிழக்கே இலங்கையில் ஒருநாள் விடிந்து மனிதன் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க மேற்கே அமெரிக்காவில் முதன் நாள் இரவில் மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான். அங்கே மேற்கில் உறங்குபவனுக்கும், இங்கே கிழக்கில் இயங்கிக் கொண்டிருப்பவனுக்கும் ஒரே நேரத்தில் நல்லதும் நடக்கலாம். கெட்டதும் நடக்கலாம். இதில் யாருக்கு எது நல்ல நேரம் என்று எப்படிக் கணிப்பது?

பஞ்சாங்க நாள்காட்டியின்படி ஒருநாளில் 10தொடக்கம் 20 வீதம் வரை தான் சுபநேரம் உள்ளதாயின், அந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் எமக்குக் கிடைக்கின்ற நல்ல வாய்ப்புக்களை நாம் தட்டிக் கழிக்க நேரிடும் இது எமது முன்னேற்றத்துக்குத் தடைக்கற்களாகும்.

இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் ஒருநாளில் கிடைப்பது 24 மணித்தியாலங்கள் தான். இந்த நேரத்தை முகாமை செய்து பயன்படுத்தி எமக்கு முன்னர் வாழ்ந்த விஞ்ஞானிகள் பெரிய சோதனைகள் மத்தியில் அரும்பெரும் கண்டுபிடிப்புக்களைச் செய்து, அவற்றை எமக்காக விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் நல்ல நேரம், சகுனம் பார்த்திருந்தால் இன்று நாமெல்லோரும் கற்காலயுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்போம். நவீனயுகம் என்பது எமக்கு எட்டாத தொலைவில் இருந்திருக்கும். ஆதலால் நாம் அனைவரும் எமக்குக் கிடைத்துள்ள அரிய நேரங்களை வீணடிக்காமல் அவற்றை முகாமை செய்து பயன்படுத்தின் கழிந்து போகும் ஒவ்வொரு பொழுதும் எமக்கு பொன்னான நல்ல பொழுதுகளாகவே அமையும்.



குணசேகரன் சக்தீனா



# குற்றமும் தண்டனையும்

நாளை வெள்ளிக்கிழமை என்பதே அந்தத் தீர்ப்பு இன்று வாசிக்கப்படக் காரணமாயிற்று. வழமைபோன்றே நிகழும் மன்றின் செயற்பாடுகளுடன் மேல்மன்றின் நடவடிக்கைகள் நாளை வழமையைவிட நேரத்துக்கு ஆரம்பமாகும் என்று நேற்றே நீதிபதி கூறியிருந்தார். அதற்கமையவே மேல் மன்றின் செயற்பாடுகள் இன்று வேகமாகவிருந்தன.

2014ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி இரவு 12.30மணியளவில் அச்சுவேலியில் தனது உறவுக்காரர் ஒருவரின் வீட்டுக்குள் அத்துமீறி உட்பிரவேசித்த ஒருவர், அங்கு உறக்கத்தில் இருந்த மூன்று பேரை வாளால் வெட்டி உயிர் பிரியச் செய்தார். அத்துடன் இரண்டு பேருக்குக் காயத்தை ஏற்படுத்தினார்.போன்ற ஐந்து குற்றச்சாட்டுக்களுக்குச் சொந்தக்காரனான கொலையாளி, தான் குற்றவாளி என்பதை ஏற்றுக் கொண்டவராய் அந்தக் கூண்டுக்குள் நின்றுகொண்டிருக்கின்றார். கொலையாளியே குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்டதால் இப்போது நீதிபதி அவருக்குரிய தண்டனை வழங்கத் தயாராகின்றார். அந்த நேரம் அந்தத் தீர்ப்புக்குரியவரின் முகம் கற்பனைக்கும் எட்டாத பலவாறான உணர்வுகளைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் சாட்சியம் தனது கணவனின் செயலைச் சிறிதுகூட ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஆனால் அவளுடைய கணவனான அந்தக் கைதி மன்றிடம் மன்றாட்டமாய்க் கேட்டார் எனது பிள்ளையைப் பார்க்க அனுமதி தாருங்கள் என்று அதை மன்று ஏற்றுக்கொண்டது.

மன்றுக்குள் பெரும் பாசப்போராட்டம். 10அடி தூரத்தில் மகனும் எதிரிக் கூண்டுக்குள் தந்தையும். சுற்றியி ருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும் அவர்கள் தந்தை மகன் என்று. ஆனால் அந்த உறவுக்கு-மகனுக்குத் தெரியாது இவர் தனது தந்தை என்று. தனது தந்தையை அறியாத அந்தப் பாலகனுடன் சைகை மூலம் கதைத்துக் கொண்டிருந்தார் அந்தக் கைதி. மறுபுறம் மன்றின் செயற்பாடுகள் வழமைபோன்றே நடக்கின்றது. அதற்குள் இந்த தந்தைமகன் செயற்பாடுகளும் ஒருபுறம். 'பசிக்கிறது அம்மா...' என்று தனது தாயை அழைத்து 'இவர் யார் அம்மா... களவெடுத்தவரா? களவெடுத்தா இப்பிடிக் கூண்டுக்குள்ள விடுவினமா? என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தான் அந்தச் சிறுவன். தாயிடம் பதிலிருக்கவில்லை. அழுகையைத் தவிர.



"என்ர அப்பாஅம்மா யார் என்றே எனக்குத் தெரியாது. அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதும் தெரியாது. சிறுவயதில் அவர்களின் அன்புக்காக ஏங்கியவன் நான். என்னுடைய ஏக்கத்தை யாரும் அவ்வளவு இலகுவில் புரிந்து கொள்வார்களா? என்பது எனக்குத் தெரியாது. என்து மனைவி வந்ததும் எனக்கு ஒரு சொந்தம் வந்திற்று இனி என் மனைவிக்காகவும் என் பிள்ளைக்காகவும் மட்டுமே வாழ வேண்டும் என்று வாழத்தொடங்கினேன். நீதிபதி அவர்களே...! இது ஒரு சாதாரண குடும்பப் பிரச்சினை அப்பொழுது மனைவி மகனைப் பார்ப்பதற்கு அனுமதித்திருந்தால் இவ்வளவு நடந்திருக்காது. இன்று என்னவெல்லாமோ நடந்து இறுதியில் எனது மனைவி, பிள்ளை எனக்கு இல்லை' ஒரு சாவுத் தண்டனைக் கைதியின் இறுதி வார்த்தைகள் இவை. மன்று அமைதியடைந்தது. தீர்ப்புக்காகவா? அல்லது இந்த வார்த்தைகளுக்காகவா? என்று எனக்குத் தெரியவில்லை.

தீர்ப்பு வாசிக்கும் நேரமானது. மன்றில் மயான அமைதி. அனைவரும் எழுந்து நின்றார்கள். விளக்குகள் அணைக்கப்பட்டன. மன்றினுள் இருள் சூழ்ந்தது. நீதிபதி தீர்ப்பெழுதிய பேனாவை முறித்தெறிந்தார்.

'அரசதலைவர் விரும்பும் நேரத்தில், விரும்பும் இடத்தில் இந்தத்தண்டனை நிறைவேற்றப்படும்' என்பதாக அந்தச் சாவுத்தண்டனைத் தீர்ப்பு அமைந்தது. மன்று கலைந்தது. அனைத்தும் முடிந்து விட்டது.

மன்றுக்கு வெளியே பலதரப்பட்ட மக்களால் மிகவும் சுவாரசியமாகவும் கோபமாகவும் இந்தத்தீர்ப்பை பற்றிய குட்டிக் கலந்துரையாடல்கள் பல நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவர்களின் வாதாட்டங்கள் பலவகையில் அமைந்தன. அவரவர் கருத்துக்கள் முட்டிமோதும் இடமாயிற்று நீதிமன்ற வளாகம்.

'ஏன் இவ்வாறு நிகழ்ந்தது? எதற்காக இப்படிச் செய்தான்? சட்டம் கொடுத்த தண்டனை சரிதான்' ஆனால் கைதியின் நிலை என்பது பற்றியதான புதிரான புலம்பல்கள் ஏராளம் இருந்தன. ஒருவர். வயது அறுபதுகள் இருக்கும் போல...! 'சம்பவம் நடக்கும் போது நானும் அந்த இடத்தில நிண்டன். அச்சுவேலி வைத்தியசாலைக்கும் போயிருந்தன். அந்தச்சடலங்களைப் பார்க்கும்போது... எனக்கு இந்தக்கைதி மீது வந்த கோவத்துக்கு... ஏன் இப்படிச் செய்தான்? எதற்காக இவ்வாறான ஒரு வேலையைச் செய்தான்? என்று அன்று முழுவதும் சாப்பிடாமல் இருந்தேன். மனிசீன்ர சகோதரியக் கலியாணம் செய்துதரக் கேட்டுத்தான் இவன் கொலை செய்தான் என்று. இதைக் கேள்விப்பட்டதும் எனது கோபம் இன்னும் மிகுதியானது. எவ்வளவு மிருகத்தனமான வேலை என்று நினைத்தேன். எனக்கு அன்று வந்த கோபம் தீர்ப்பு வரை குறையாமல் தான் இருந்தது. எண்டாலும் அவனின் நியாயமான தந்தைக்கான ஏக்கம் என்னை அவனுக்காகக் கவலைப்படவும் வைத்தது. உண்மைதானே ஒரு மகனைப் பார்க்க தந்தைக்கு உரிமையில்லையா...?"

அருகில் நின்ற இன்னோருவர் 'நான் அந்த வீட்டில் இருந்து கொஞ்ச வீடு தள்ளித்தான் இருக்கிறன். இவனுக்கு இது சரியான தண்டனை தான். சட்டம் தன்கடமையைச் சரியாகத்தான் செய்திருக்கின்றது. இவனையெல்லாம் சாகும் வரைக்கும் தூக்கில போடவேண்டும்' என்று தன் மனதில் உள்ளதை வெளிப்படுத்தினார். 'மனிசீன்ர தமக்கைக்கு ஆசைப்பட்டு மொத்தக் குடும்பத்தயே கொலை செய்து போட்டானே படுபாவி' இன்னும் நிறைய வார்த்தைகள் பொருத்தியும் பொருந்தாமலும் அவரிடமிருந்து வெளிவந்தன.

'பிள்ளை பிறந்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு அவனுக்கு அவன்ர பிள்ளையைக் காட்டவே இல்லையாமே...! இது என்ன ஒரு கொடுமையான விடயம். பெத்த தகப்பனுக்குப் பிள்ளையைக் காட்டாம வைச்சிருந்திருக்கிறாவே இந்தத் தாய். நாங்கள் அவனத் தான் குற்றம் சுமத்தினாங்கள். இப்ப பார்த்தா ஆரம்பம் அங்கயேல்லோ இருக்கு. நாங்களும் அவனத் தானே பிழையா நினைச்சுப்போட்டம். இப்ப. தகப்பனுக்கு மகனக் காட்டியிருந்தால் இந்தக் கொலைகள் நடந்திருக்காது என்ற மாதிரியெல்லோ அவன்ர கதையில இருந்து விளங்குது!! அவருக்கு அருகில் நின்றிருந்த பெண்கள் இருவர் அவருக்குக் கேட்கும்படி சத்தமாகக் கதைத்துக் கொண்டார்கள். சட்டத்தின்படி குற்றவாளி தண்டிக்கப்பட்டாலும் வெளியே பல கோணங்களில் மனிதம் கேள்விகளைத் தொடுக்கவே செய்கின்றது.

**“தீர்ப்பு வாசிக்கும் நேரமானது. மன்றில் மயான அமைதி. அனைவரும் எழுந்து நின்றார்கள். விளக்குகள் அணைக்கப்பட்டன. மன்றினுள் இருள் சூழ்ந்தது. நீதிபதி தீர்ப்பெழுதிய பேனாவை முறித்தெறிந்தார். 'ஜனாதிபதி விரும்பும் நேரத்தில், விரும்பும் இடத்தில் இந்தத்தண்டனை நிறைவேற்றப்படும்' என்பதாக அந்தச் சாவுத்தண்டனைத் தீர்ப்பு அமைந்தது. மன்று கலைந்தது. அனைத்தும் முடிந்து விட்டது.”**

நகைச்சுவைத் தொடர்

# ஓவசி...

மிருசுவில் தமிழ்தாசன்



நேரம் நண்பகல் பதினொன்றைக் கடந்துவிட்டது. வவுனியா பஸ்நிலையத்திலிறங்கித் திருதிருவென முழித்துக் கொண்டிருந்தான் ஓவசி. பார்த்துப் பழகிய முகங்களொன்றுமில்லை. தெரிந்தவர், அறிந்தவர் என்று மருந்துக்கும் யாருமில்லை. சந்திர மண்டலத்தில் இறங்கிவிட்டதுபோன்ற பிரமை ஓவசிக்கு. அவனைப் பொறுத்தவரையில் வவுனியா ஒரு புதிய மண்டலமாகவே தோற்றமளித்தது. என்றைக் கும் வேட்டி கட்டிப் பழக்கமில்லாத ஓவசி அன்று மட்டும் கட்டியிருந்தான். சவுந்தரியைக் கைப்பிடித்த அந்தக் கல்யாணமென்னும் கண்டத்துக்குள் அகப்பட்டபோது கட்டிய வேட்டியை மீண்டும் இப்போது தான் கட்டியிருக்கிறான். ஆந்திராவேட்டி அடிக்கடி அவிழ்ந்து அவிழ்ந்து அவனுக்கு அசௌகரியம் கொடுத்துக் கொண்டிருந்தது. நண்பன் நாதனின் அக்கா மகளுக்கு கல்யாணம். நாதன் டுபாய் போய் ஒருவருடம் தான் ஆகின்றது. கடைக்காரக் கனகண்ணரிடம் ரெலிபோன் மூலமாகப் பேசியபோது ஓவசிக்கும் அழைப்பு விடுத்திருந்தான் நாதன். இத்தனைக்கும் நாதனுடைய அக்காவையும் தெரியாது. கல்யாணம் செய்யப்போகும் மகளையும் தெரியாது. இந்த நிலையில், அங்கேபோய் யாரைப் பார்ப்பது? யாருடன் பேசுவது? என்னதானிருந்தாலும் நாதன் ஒரு உற்ற நண்பன். அவனுடைய அக்கா மகள் திருமணத்துக்கு அழைப்பு வேறு கொடுத்துவிட்டான். எப்படியும் போய்த்தான் ஆகவேண்டும். அதுதான் புறப்பட்டுவிட்டான் ஓவசி.

"வாயிருந்தால் வங்காளம் போகலாம். வவுனியா என்ன சிங்கப்பூரிலேயே இருக்குது? நீங்கள் உங்கடை பாட்டுக்குப் போங்கோ. நான் சரியாய் வந்து கல்யாண வீட்டிலை உங்களைச்சந்திப்பன். நீங்கள்போங்கோ"

இவ்வாறு சொல்லிவிட்டுத் தான் தனியாகப் புறப்பட்ட ஓவசி இப்போதுதான் தன்னுடைய தவறை உணர்ந்து கொண்டான். கல்யாண வீடு என்ன வவுனியா பஸ்நிலையத்திலா? அங்கே இறங்கிக் கற்குளியென்னும் கிராமத்துக்குப் போக வேண்டும். அங்கே போவதற்கு பஸ் கிடையாது. 'நடராசா' தான். அது எங்கே ஓவசி விசாரித்தான், ஒரு முதியவரை. அவர் தமிழே தெரியாத ஒருவர். இன்னுமொருவரைத் தேடிப் பிடித்தான். அவன் மதியமே மப்படித்துவிட்டான். பாவம் ஓவசி இடத்தை யாரிடமும் கேட்டறிய முடியவில்லை. இறுதியில் யாரோ ஒருவர் அந்தக் கிராமதத்துக்குச் செல்லு வழியைக் காட்டினார். சரியோ, தவறோ தெரியாது அந்த மத்தியான வெயில் உடலை வருத்த எப்படியோ போய் அப்படியே கற்குளிக் கிராமத்தையடைந்துதான் விட்டான். நாமகள் சனசமூக நிலையம் – கற்குளி எனும். முகவரியிடப்பட்ட அந்த வாசகசாலைதான் அது சரியான இடமென்பதை உறுதிப்படுத்தியது. இந்தளவில் ஓவசிக்கு ஆறுதல் தான். அமெரிக்காவைக் கண்டுபிடித்த அந்த கொலம்பஸ்ஸுக்குக் கூட இத்தனை மகிழ்ச்சி இருந்திருக்குமோ என்னவோ! ஆனால் ஓவசிக்கோ மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. சரி வவுனியா வந்தாயிற்று. கற்குளியைக் கண்டு பிடித்தாயிற்று. இனி அந்தக் கல்யாணவீட்டைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நடந்தான் நடந்து கொண்டேயிருந்தான். ஒரு ஒழுங்கைக்குள் நுழைந்து விட்டான். எங்கேயோ பாட்டொலி கேட்டது. அந்தத் திசையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். வழியில் இரண்டு சிறுவர்கள் சைக்கிள் வளையத்தை உருட்டி விளையாடிக் கொண்டு வந்தனர். அவர்களை விட்டால் கல்யாண வீட்டைத்தேடிக் கண்டுபிடிப்பது சற்றுச் சிரமமாகவேயிருக்கப் போகின்றது.

"தம்பியவை! இது தானே கல்யாண வீடு" பாடல் ஒலித்துக் கொண்டிருந்த வீட்டைக் காட்டிக் கேட்டான் ஓவசி. அவர்கள் இவன் கேட்க முன்பே இதுதான் என்பதுபோலத் தலையசைத்துவிட்டுச் சென்றார்கள். நல்ல வேளை! ஓவசி பயந்ததுபோல ஒன்றுமில்லை. மிக இலகுவாகக் கல்யாண வீட்டைக் கண்டுபிடித்ததில் ஓவசிக்கு மகிழ்ச்சி.

"ஊரிலை எல்லாரும் ஒரு நக்கலாய் கதைச்சவை. எனக்கு வவுனியா தெரியாது. கல்யாண வீட்டைக் கண்டுபிடிக்கமாட்டன்எண்டுஒருநளினக்கதை! அவர் மனேச்சர் மயில்வாகனத்தாற்றை நக்கலும் நளினமும் கல்யாண வீட்டாலை வீட்டை போய்த்தான் உவையெல்லாருக்குமிருக்குது. கண்டறியாத நக்கலும் நையாண்டியும். யாருடனும் இணைந்து கொள்ளாது யாருடைய வழிநடத்தலுமில்லாது தன்னந்தனியனாக வந்து வவுனியாவில் இறங்கிக் கற்குளியைக் கண்டுபிடித்துக் கல்யாணவீட்டுக்கும்வந்துவிட்டானே. ஓவசிசூரன்தான். கல்யாண வீட்டில் ஏராளமானவர்கள். பந்தி முடித்துவந்து வெற்றிலைபோட்டபடி பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் பந்திக்கு முந்திக் கொண்டிருந்தனர். மணவறையில் மணமகனைக் காணோம்.

மணமகள் மட்டும் மணவறையில் தனித்துக் காணப்பட்டாள். செக்கச்செவேலென்று அழகான தோற்றம். வயதும் அதிகமாகத் தெரியவில்லை.

"உவளுக்கு இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம் குழந்தைப் பிள்ளையைப் பிடிச்சு ஆருக்கோ கட்டி வைச்சிட்டாங்கள். பாவியள். முகத்திலை அடிச்சது மாதிரி நாதனை ஒருக்கால் கேட்கத்தான் வேணும்."

ஓவசி மனத்துக்குள் கறுவிக் கொண்டான். இனியென்ன! என்வலப்பை மணமகளிடம் கொடுத்துவிட்டுச் சாப்பாட்டுப் பந்தியில் போய் குந்த வேண்டியதுதான். மணமகளிடம் என் வலப்பை நீட்டினான். 'தாங்ஸ்' என்று அழகாகக் கூறி அன்பொழுகச் சிரித்தாள் அவள். அவளைப் பார்த்துப் பதிலுக்குச் சிரித்துவிட்டுப் பந்தியை நோக்கினான் ஓவசி.

"அதுசரி! உதிலை ஐந்நூறு ரூபா வைச்சிருக்கிறன். உந்தப் பெட்டைக்கு என்னை யாரெண்டும் தெரியாது. சரி பிரச்சினையில்லை. என்வலப்பிலை கொட்டை எழுத்திலை என்ரைபேர் எழுதியிருக்குது தானே! சாப்பிடுவம்."

பந்திக்கு ஓடோடிப்போய்விட்ட ஓவசிக்கு சம்பா அரிசிச் சாதமும் கடலைப் பிரட்டலும் பருப்பும் வெய்காயச் சம்பலும் இதமாகவிருந்தன. வயிற்றுக்கு வஞ்சனை செய்யாது ஒரு பிடி பிடித்துவிட்டு வந்தான்.

அது சரி எங்கை மாப்பிள்ளையைக் காணயில்லை. பொம்பிளை மட்டும் மணவறையிலை தனிய இருக்குது. மாப்பிளை தம்ம டிக்கப் போட்டாரோ இல்லை ஒண்டுக்கு இரண்டுக்கு......! ஓவசியின் மனம் பல்வேறு விதமான சிந்தனைகளில் சிதறியிருந்தது.

இந்த மாப்பிள்ளையை ஒருதடவை பார்த்து விட்டுப் போகலாமென்றால்...! யாரையாவது கேட்டுப் பார்க்கலாமென்று பக்கத்திலிருந்த வயோதிபர் ஒருவரைக் கேட்டுத்தான் விட்டான.

"என்ன தம்பி! மாப்பிள்ளையோ! சாமத்திய வீட்டிலை வந்து நிண்டு கொண்டு மாப்பிள்ளையைத் தேடுறாய்!" வயோதிபர் சொல்ல ஓவசியின் மனம் சுடுநீருக்குள் விழுந்த பல்லிபோலத்துவண்டு விட்டது.

"கடவுளே! அப்ப இது நாதன்ரை தமக்கையின்ரை வீட்டுக் கல்யாணமில்லையே! இது சாமத்திய வீடாமே! கோதாரி அந்தத் தவ்வலுகளின்ரை விளையாட்டுக் கதையைக் கேட்டு நான் வீடுமாறி வந்திட்டன். எங்கடை ஊரிலையிருந்து எத்தினை ஆட்கள் வந்தவை. அவையோடை வந்திருந்தால் இப்பிடியொரு பிரச்சினை வந்திருக்காது. எல்லாம் தெரியுமெண்டு வெளிக்கிட்டு... இப்ப எவ்வளவு வெட்கமாய் போச்சுது. காசு ஐநூறும் காலி!"

இருக்கையை விட்டு மெதுவாக எழுந்த ஓவசி வெடுக்கென நடக்கத்தொடங்கினான். இப்போது அவன் பஸ் நிலையம்போக வேண்டும். கால்கள் போன பக்கம் நடந்தான் ஒருவித வெறுப்புடன். இனியாரையும் எதுவும் விசாரிக்கப் போவதில்லை. மூளையில் எட்டியதைச் செய்ய வேண்டியதுதான். அந்தப் பாதையால் போகும்போது அங்கேயும் ஒரு வீடு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒலிபெருக்கியிலிருந்து பாடல்கள் பறந்தன.

"எட இதுதான் நாதன் ஆக்காவின்ரை கல்யாண வீடோ!"

ஓவசியின் இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதுபோல அந்தக் கல்யாண வீட்டிலிருந்து ஓவசியின் ஊரவர்கள் சிலர் வெளியே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டுத் திரும்பிவிட ஆயத்தம்!

"டேய்ஓவசி ! இவ்வளவு நேரமும் எங்கையடா கிடந்திட்டு வாறாய்! அங்கை பந்தி நடக்குது. கெதியாய்ப்போ. நாங்கள் பஸ்சுக்குப் போகப் போறம். கடைக்காரக் கனகர் கூறினார்.

"நான் வேளைக்கே வந்திட்டன். உதிலையொரு தெரிஞ்ச ஆக்களின்ர சாமத்திய வீடு போட்டு வாறன்."

மிகப்பெரிய பொய் ஒன்றை அவிழ்த்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான் ஓவசி.

*(தொடரும்)*

உதயன்க்கு எழுதுங்கள்...!

சகல கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கும்...

உங்களுடைய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் இதர எழுத்துக்கள் பலவும் உதயனில் பிரசுரமாக வேண்டுமா...? உதயன் பத்திரிகை, இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இன்றே எழுதுங்கள். தயவு செய்து நீங்கள் அனுப்பும் சகல கலை, இலக்கியப் படைப்புக்களுடனும் உங்கள் தொலைபேசி இலக்கம், முகவரி போன்றவற்றையும் தவறாது குறிப்பிட்டு அனுப்புங்கள். இத்தகைய விவரங்கள் இணைக்கப்படாத படைப்புக்கள் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.



கலை, இலக்கிய படைப்பாளி களின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல் களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

# கலை இலக்கியத்தில் கொய்தலும், கொழித்தலும்

■ தி. இராஜநாயகி

> இதர துறைகளில் அயோக்கியர்கள் இருப்பதுபோல எழுத்துத் துறையி லும் இருக்கிறார்கள். அரசுப் பரிசுகள், விருது கள், மான் யங்கள் இவைக் காக அசாத்திய மாகப் பொய் பேசுகிறார்கள்.

## இலக்கியம்



■ பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்

'இலக்கியம்' என்னும் சொல், எத்தகைய நூலைச் சுட்டுகிறது என்பதை வரையறுத்துக் கூறுவதுஒருசிக்கலானசெயல். ஆனால்அதனைநடைமுறை வாழ்க்கையில்எளிதில்இனம் கண்டுகொள்ளஇயலும். ஒருவருடையமேசையின்மீதுபுகை வண்டிகளின்காலஅட்டவணை, இந்திய வரலாறு, மாநிலத் தன்னாட்சி ஆய்வு அறிக்கை, பாரதியார் கவிதைகள் என்னும் நூல்கள் இருப்பதாகக் கொள்ளுவோம்.

உயர்நிலைப்பள்ளிமாணவன்ஒருவனிடம்அந்தமேசையின்மீதுள்ளஇலக்கியத்தைக் கொண்டுவா, என்று சொன்னால், அவன் மேசையின் மீதுள்ள புத்தகங்களைப்புரட்டிப்பார்த்து 'பாரதியார்கவிதைகள்' எனும் நூலையே பொதுவாக எடுத்துக்கொண்டுவந்துதருவான்.

இதிலிருந்து புலனாவது யாது? ஓரளவிற்குக்கல்வியறிவுஉடையவர்கூட 'இலக்கியம் என்பது யாது?' என்பதை அனுபவத்தின் வாயிலாக எளிதில் அறிந்துகொள்ள இயலும்என்பது தெரிகிறது.

மேலேகுறிப்பிடப்பட்டநூல்களுள் 'பாரதியார் கவிதையை' இலக்கியம் எனவும், மற்றவற்றை வெறும் நூல்கள் எனவும் கருதுவதற்குரிய காரணத்தைப் புரிந்துகொண்டால்ஓரளவிற்கு இலக்கியத்தின் இயல்பினை அறிந்தவராவோம்.

புகைவண்டிகளின் கால அட்டவணை, இந்திய வரலாறு போன்ற புத்தகங்கள் கருத்தைத்தெரிவிப்பன. ஆனால்அவை படிப்பவரின் மனதிற்கு மகிழ்வூட்டுவன அல்ல. மேலும் அவை 'செஞ்சொற்கவியின்பம்' பயப்பனவும் அல்ல.

'இலக்கியம்'எனும் சொல்லை மிகவும் பரந்த பொருளில் பயன்படுத்துவோமானால் மேலே குறிப்பிடப்பட்ட முதல் மூன்று புத்தகங்களையும் 'பயன்பாட்டு இலக்கியம்'(Utilitarian Literature) எனச் சுட்டலாம். ஆனால் பாரதியாரின் கவிதை நூலோ, கற்பனை இலக்கியம் (Imagenative Literature) எனவும் படைப்புஇலக்கியம்எனவும்போற்றத்தக்கதாகும். இச்சிறு விளக்கத்திலிருந்து இலக்கியம் என்பது யாது? என்பதை ஒருவாறுஉணரஇயலும்.

*(இலக்கியக்கலை)*

## கலை, இலக்கியம்



■ ஞானி

நாம்எழுதுவதுமுதலதா இலக்கியமா? நாம்முதல்தரமான இலக்கியவாதிகளா? இதைப்பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம். இதேகேள்வியைவேறுவடிவத்தில் கேட்கலாம். நாம் எழுதித்தான் இலக்கியம் உருப்பட வேண்டுமா? நாம் எழுதாவிட்டால் தமிழ்இலக்கியம்குட்டிச்சுவராகிவிடுமா? இப்படிக் கேட்பதன் பொருள் என்ன? வெறும் புகழ்ச்சிக்காகவோ தற்பெருமைக்ககாகவோ மனத்தில்ஏற்படும்உறுத்தலுக்காகவேஎழுதி இலக்கியத்தை நாம் வளர்க்க முடியாது இல்லது இலக்கிய வளர்ச்சிக்காகவே கருணையோடு நாம் அவதாரம் எடுத்திருப்பதாகக் கருதி, நமது அவதார நோக்கத்தை இலக்கியம் எழுதுவதனால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

இலக்கியம்எழுதுவதைத்தவிரவேறுஎன்னால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வியைப் போடுவதன் மூலம் நாம் இலக்கியமாக்கிவிடவும் முடியாது. இத்தகைய நோக்கங்களுடன் எழுதப்படுபவை, இலக்கியங்களேஅல்லஎன்று நாம்ஒதுக்கிவிடவிரும்பவில்லை. இவைமூன்றாம்தர இரண்டாந்தர இலக்கியங்கள்.

இலக்கியத்திற்கு நம்மை வழங்குகிறோம். நமது ஆன்மாவை உயிர்ப்பை வழங்கி இலக்கியம் படைக்கிறோம். நமது கற்பனையில், படைப்பாபற்றலில், சிந்தனையில், அழகில் மயக்கில், வேதனையில், அனுபவங்களில் நம்மை நாம் தேடுகிறோம். நமது படைப்பில் நம்மைக் காண்கிறோம். நம்மை இணங் கண்டுகொள்கிறோம். புரிந்துகொள்கின்றோம். நம்மைத் திருத்துகிறோம்.

நமதுவாழ்வுக்காகநாம்படைக்கிறோம். நமது வாழ்க்கையைப் படைக்கிறோம். நம்மைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறோம். நமக்குப் பலம்கொடுக்கநம்மைத்தேடுகிறோம். நம்மை நாமே திட்டுகிறோம். கேலி செய்கிறோம். நம்மை நாமே சாகடிக்கிறோம். நமக்கு நாமே புத்துயிர் கொடுக்கிறோம்.

உலகத்தைநாம்நமக்குள்கொண்டுவருகிறோம். சில குறிப்பிட் வரையறைகளில் அதை நமக்கு நாமேவிளக்கிக்கொள்கிறோம்விமர்சனப்படுத்துகிறோம்; திருத்தி வெளியில் விடுகிறோம்.

நாம் வாழ்க்கையை இலக்கியமாக்க விரும்புகிறோம். வாழ்க்கையே சரியாக இருக்கிறது.

இலக்கியம் படைக்க எங்கே நேரம் இருக்கிறது என்றஅழுகைஒலிநம்மிடம்கிளம்புவதில்லை. வாழ்க்கையையே நான் இலக்கியமாக்கிக் கொண்டிருக்கிறேன் என்ற ஆவேசக் குரல் எழுப்புகிறோம். நோய்நொடிகள்நம்மைத்தாக்கும்போது இலக்கிய ஆக்கத்தை நிறுத்தவில்லை. நோய் நொடிகளின் போதும் அதன் வழி, அதனையேமூலப்பொருளாக்கும், அதன் வழிசிந்திக்கும், இலக்கிய ஆக்கம்நடைபெறுகிறது. நமக்கு நேரும் மானக்கேடுகள் நம்மைச் சிதைத்துவிடுவதில்லை. வாழ்வதற்கான தகுதியை - வாழ்க்கை பற்றிய ஓர் அம்சத்தை இது நமக்குவழங்குகிறது. நமதுஇலக்கியத்திற்கான கருப்பொருள் என்பது இதன் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. பிரச்சனைகள் இருக்கும் போது, இலக்கியம் சாத்தியமில்லை என்று கூறும்கொள்கை, இலக்கியத்தைநாசமாக்கும். பிரச்சினைகளைஅணுகும்ஒருமுறையிலயே இலக்கிய ஆக்கம்தொடர்கிறது.

*(மார்க்சியமும்தமிழ் இலக்கியமும்)*

## எழுத்தாளர்கள், கலைஞர்கள்

■ அசோகமித்திரன்



எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஏதோ கவச குண்டலம் அணிந்த தனிப் பிறவிகள் அல்ல. எல்லா மாற்றங்கள், சட்ட திட்டங்கள் முதலிய அனைத்தும் எல்லாரையும் பாதிப்பதைப்போல எழுத்தாளர்கள், கலைஞர்களையும் பாதிக்கின்றன. வெயில் அவர்களையும்வாட்டுகிறது. மழை அவர்களையும் நனைக்கிறது, பனி அவர்களையும் இருமச் செய்கிறது.

'வீழ்ச்சி' என்ற சொல்லில் எனக்குச் சம்மதம் இல்லை. காலம் காலமாக 'உலகம் ரொம்பக் கெட்டுவிட்டது'என்றுசொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சதவீதம் என்று பார்த்தால் நல்லவர் கெட்டவர்ஏறத்தாளஒரேமாதிரிதான்இருக்கும் என்பது என் கணிப்பு.

இதர துறைகளில் அயோக்கியர்கள் இருப்பது போல எழுத்துத் துறையிலும் இருக்கிறார்கள். அரசுப் பரிசுகள், விருதுகள், மான்யங்கள் இவைக்காகஅசாத்தியமாகப்பொய்பேசுகிறார்கள். படிவத்தில் கையெழுத்திடுகிறார்கள். இப்படிவங்களில் கூறியிருப்பவை உண்மைதான என்று காவல்துறை மூலம் சரிபார்த்தால் மற்ற துறை அயோக்கியர்கள் போல இவர்களும் சிறைக்குப்போகவேண்டிவரும்.

*(உயிர்மை 100வது இதழ்)*



# குரும்பட்டித் தேர்



ஜெ.காயா

காற்சட்டையைக் கழற்றி விட்டு அவசர அவசரமாக ஓடுகின்றேன்...! பள்ளி விட்டு வீடு வந்து கொண்டிருக்கும்போதுதான் அதன் உந்துதலும் ஞாபகமும் எனக்கு வந்தது... இன்டைக்கு எங்கட ஐயன் கோயிலில தேர்த்திருவிழா...!

புத்தகப்பையை ஓரம் வைத்துவிட்டு அரைகுறையாக முகத்தைக் கழுவித் துடைத்த நான், வீட்டுக்குள் எனது வேஷ்டியைத் தேடிக் களைத்துவிட்டேன். கடைசியில் அப்பாவின் புதிய சால்வைத் துண்டேன்றுதான் எனது கண்களில் பட்டது. அது எனக்கு அளவாக, வேஷ்டியைப் போன்றதுதான். கையில் கிடைத்த அதை வேகமாக உடுத்தி விரைகின்றேன் கோயிலுக்கு "என்ன இது புதுமையாக மாலை நேரத்தில் நடக்கின்ற தேர்ப்பவனி..." உங்கள் புருவங்கள் உயர்வது எனக்குப் புரிகின்றது எனக்கு.

வீட்டுக்குப் பக்கவாட்டாகவிருக்கின்ற வயற்காணிகளின் அருகேயுள்ள தென்னங்கூடலுக்குள்தான் இருக்கின்றது அந்த ஐயன் கோயில். அது ஒன்றும் பெரிய கோயில் இல்லை. ஒரு சின்னக் கோயில். அதோட பெரியவர்களினுடைய கோயிலுமில்லை...! அந்தத் தென்னந்தோப்புக்குக் கீழே, நாங்கள் மணல் வீடு கட்டி விளையாடுகின்ற இடத்தில் இருக்கின்ற குஞ்சு குருமன்களான எங்கட விளையாட்டுக் கோயில். அதிலைதான் இன்டைக்குப்பின்னேரம் தேர் இழுக்கிறதாகக் கதைச்சிருந்தனாங்கள். ஐயர்கூட நான்தான் என்றால் பாருங்கோவன்...!

பக்கத்து வீடுகளிலேயும் முன்வீட்டிலேயும் இருக்கின்ற என்னுடைய சகாக்கள் இன்றைக்கு என்னவோ அவ்விடத்தில் நேரத்துக்கே கூடிவிட்டார்கள். வழமைக்கு மாறாக இன்று அங்கே அதிகமான சிறுசுகள் பட்டாளம் நிறைந்து, பற்பல சச்சரவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மேளதாளங்களும் தகரத்தில் தட்டி எழும் நாதங்களும் அங்கு குறைவில்லாது ஒலிக்கின்றன. அத்தோடு அங்கே ஒருபுறமாகத் தேர் செய்யும் வேலையும் தடல்புடலாக நடந்துகொண்டிருக்கின்றது.

தென்னை மரங்களின் கூடல் அது. அங்குள்ள தென்னைகளின் கீழே வீழ்ந்து கிடக்கும் குரும்பட்டிகளை ஒன்று சேர்த்துச் செய்யும் தேர்தான் இன்று எமது ஐயன்கோயிலில் இழுக்கப்படவிருக்கிறது. தென்னம்பாளைக்குள்ளிருந்து வெளிவந்த பிஞ்சுக் குரும்பைகளான சில குரும்பட்டிகள் தமது பருவத்திலிருந்து வளர்ச்சி கொள்ளாமல் மாறாகக் கீழே வீழ்ந்துவிடுகின்றன. அவ்வாறு வீழ்ந்தவற்றைப் பொறுக்கி, ஒன்றுசேர்த்து, அவற்றின் தலைப்பகுதியில் காணப்படும் உகுமிழ்களைக் கழற்றி, அந்தக் குரும்பட்டிகளைக் கூம்பு வடிவிலும் முக்கோண மற்றும் சதுர வடிவிலுமாக அமையுமாறு அவற்றில் ஈர்க்குகளைக் குற்றி இணைத்து உருவாக்கப்படுவதுதான் சிறுவர்கள் நாம் விளையாடும் தேர். இப்போது குரும்பட்டிகள் சேர்த்தாயிற்று. மறுபக்கமாக மற்றொரு சிறுவர்பகுதி தென்னோலைகளில் ஈர்க்கும் கிழித்துக் கொண்டிருக்கின்றது.

குரும்பட்டிகளில் ஈர்க்குக் குற்றிக்கொள்வது இலகுவானது. தேரின் உச்சியாக அமையுமாறு (கூம்பின் தலைப்பகுதியாக) மிகச் சிறிய குரும்பட்டி ஒன்றைத் தெரிவு செய்து அதனுடன் தொடர்புறுமாறு அதைவிடப் பெரிய குரும்பட்டிகளைக் கீழ்ப்பகுதியாக ஈர்க்குகள் மூலம் இணைப்போம்.

ஒவ்வொரு பக்கங்களுக்கும் ஏற்ப ஈர்க்குகள் ஒவ்வொன்றும் சமஅளவுகளில் இருக்கும். இவ்வாறு குரும்பட்டிகளில் ஈர்க்குகளைக் குற்றி ஒன்றுடன் ஒன்றை இணைக்கும்போது அவை ஒவ்வொன்றிதும் கோணங் கள் சமமாக அமையாது போய்விட்டால், ஈர்க்கைக் குரும்பட்டிகளிலிருந்து கழற்றி மறுபடியும் சரியாகக் குற்றி இணைப்பதுவும் இலகு. சிறு சிறு பிழைகளிருப்பது தான் சிறுவர் நாம் செய்யும் அந்தக் குரும்பட்டித்தேருக்குப் பெரும் அழகைக் கொடுக்கும். அவ்வாறே இப்போது சிறுவர்கள் நாம் இணைந்து தேர் செய்து முடித்தா யிற்று. வடக்கயிற்றைக் கட்டி அனைவரும் இணைந்து வருசத்தேர் இழுக்கின்றோம். ஐயனுக்கு அரோகரா... ஐயனுக்கு அரோகரா...

குரும்பட்டிகளில் ஈர்க்குக் குற்றிக் கொள்வது இலகுவானது. தேரின் உச்சியாக அமையுமாறு (கூம்பின் தலைப்பகுதியாக) மிகச் சிறிய குரும்பட்டி ஒன்றைத் தெரிவு செய்து அதனுடன் தொடர்புறுமாறு அதைவிடப் பெரிய குரும்பட்டிகளைக் கீழ்ப்பகுதியாக ஈர்க்குகள் மூலம் இணைப்போம்.



# ஒரு நகர்வு...

பரிதி

சிங்கள – தமிழ்ப் புதுவருடம் என்பது களைகட்டி ஓய்ந்திருக்கின்றது. இந்த நாட்டில் ஒற்றுமைப்பட்டு வாழ முடியாதிருந்தாலும் இதைக் கொண்டாடுவதற்கு – இணைந்து கொண்டாடுவதற்கு இங்குள்ள இருபகுதிகளுமே பின்னின்றதில்லை. ஒருபுறம் காணாமலாக்கப்பட்ட உறவுகளும் காணிவேண்டி நிற்கும் உறவுகளும் போராடிக்கொண்டிருக்க மறுபுறத்தில் கோலாகலமாகத் தமிழர்களும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடி முடித்திருக்கின்றார்கள். இனிதே கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றார்கள்!

தமிழர்களுக்குரிய புதுவருடம் தை மாதத்தின் முதலாம் நாள் என்பதாகும். அத்துடன் சித்திரையில் சூரியன் மகர இராசிக்குள் சஞ்சரிக்கும் தருணத்தைக் கொண்டாடும் சிங்களவர்களின் புதுவருடக் கணிப்பும் இந்த நாட்டுக்குள் வாழும் இரண்டு பிரதான இனங்கள் ஆதலால் தமிழர்களைப் பாதித்ததோ என்னவே! அதைத் தமிழர்களும் கொண்டாடுவது வழமையாயிற்று. அந்த வழமையின் நகர்வே இந்த வருடமும் நிகழ்ந்திருக்கின்றது.

சிங்களவர்கள் பெரும்பாலும் பௌத்தர்கள். தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்கள். இவர்கள் இருவரும் பொதுவாகக் கொண்டாடத்தக்க வகையில்கூட இந்தப் பண்டிகை அமைந்திருக்கவில்லை. பௌத்தர்களைப் பொறுத்தவரையில் கேளிக்கை நிகழ்வுகள், பிரமாண்ட விருந்துகள் (மாமிசம் உட்பட), மதுப் பாவனை இதர களிப்பு நடவடிக்கைகள் எனப் பல அம்சங்களை அவர்களின் இந்தச் சித்திரைப் புத்தாண்டு கொண்டிருக்கும். இந்துக்களைப் பொறுத்தவரையில் இதற்கு முற்றிலும் மாறாகவே இந்தச் சித்திரைப் புத்தாண்டு அமையும். அதாவது அன்று ஆலயத்திலிருந்து பெறப்பட்ட 'மருத்துநீர்' வைத்து நீராடுவது, புத்தாடை அணிந்து ஆலயம் சென்று இறைவணக்கம் செய்வது, சைவ உணவுண்பது என்பதாகவே சித்திரைப் புத்தாண்டைத் தமிழர் கொண்டாடுவர்.

உறவினர் வீடுகளுக்குச் செல்தல், வெடி கொழுத்தி மகிழ்தல், கேளிக்கைகள் போன்ற சில நிகழ்வுகள் இவ்விரண்டு கொண்டாட்டக்காரர்களுக்கும் பொதுவனவையாக அமையும். அத்துடன் பௌத்தர்கள் ஆலய தரிசனம் செய்வதும் நிகழும். ஆனால் இந்துக்களிடமே அதிகமாக ஆலயம் ஆன்மிகம் எனும் போக்கு இருக்கும். இந்துக்கள் சித்திரைப் புத்தாண்டைக் கேளிக்கை நிறைந்த பண்டிகை என்பதற்கு முதல்கட்டமாக இறைசார்ந்தே அதைக் கொண்டாடிக் கொள்வர்.

இந்த இரண்டு வேறுபாடுகளும் ஒன்றோடு ஒன்று முட்டிமோதாமல் குறித்த சிங்களப் புதுவருடம் தொடர்ந்து கொண்டிருந்தாலும், சில தருணங்களில் அவை நிச்சயம் முட்டி முரண்பட்டுக் கொள்ளும் என்பது உறுதியே. இம்முறை சித்திரைப்புத்தாண்டை ஒட்டி நிதி அமைச்சால் சதொச மூலம் விலைக் கழிவுடன் வழங்கப்பட்டிருந்த புத்தாண்டுப் பொதியில் என்னென்ன பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன? 500கிராம் கருவாடு, 425கிராம் ரின்மீன்...! இப்போது அந்தப் பொதியிலுள்ள எந்தப் பொருளை புத்தாண்டைக் கொண்டாடும் தூய்மைவாதிகளான எமது இந்துக்களால் பயன்படுத்த முடியும்...?



# 1996

# ஈழத்துத் தமிழ் சினிமாவின் அடையாளங்களில் ஒன்று

சி.ப.வேந்தன்

ஈழத்துத்தமிழ்த்திரைப்பட முயற்சிகள்காலத்துக்குக் காலம் இடைவெளிகளூடேநடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு காலத்தொடர்ச்சியிலும் வெகுவேகமாக மூச்சைப்பிடித்து ஓடும் இந்தப் பந்தயத்தில் ஏதோவொரு காலத்தடங்கல் உள்நுழைந்துஅதன்வீரியத்தைக் குறைப்பதுவும் மீண்டும் அது புதிதாக ஓட்டத்துக்குத்தயாராவதுவும் ஈழத்தமிழ்சினிமாவுக்கு ஒன்றும் புதிதல்ல.

கறுப்பு-வெள்ளை திரைமுயற்சி நிறுத்தப்பட்டதன்பிறகுதசாப்தகால இடைவெளியின் பின்னர் இங்கு அடுத்த கட்ட சினிமா ஆரம்பமானது. அது ஆரம்பிக்கப்பட்டது போர்க்காலம் என்பதால் போரும் போர் சார்ந்ததுமான களங்களை மையமாகக்கொண்ட கதைகள் உருவாகத்தொடங்கின. ஆனாலும் ஓப்பீட்டளவில்இதுஈழத்தமிழ்சினிமாவரலாற்றில்தரமான சினிமாக்களை உருவாக்கியுள்ளது என்பதை இன்றளவிலும் யாராலும் மறுத்துப்பேச முடியாது.

பொ.தாசன்,ஞானரதன்போன்றஅற்புதமானபடைப்பாளிகளோடான பல நல்ல கலைஞர்கள் இதைச் சாத்தியப்படுத்தியிருந்தனர். இந்தப் போர்க்கால சினிமா(போர்ச்சினிமா அல்ல) போருடன் தன்னை நிறுத்திக்கொண்டபின்னர்,2009க்குப்பின்னர்ஈழத்தில்சினிமாமுயற்சிகள்பலராலும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.தொழில்நுட்பவசதிகளில்முன்னேறியிருந்தாலும் கதைக்கருவின் அழகியல் என்பது மிகக் குறைந்தளவில் இருக்கின்றதென்பது குறையே. ஆனாலும் நம்பிக்கையளிப்பதுபோல் ஒன்றிரண்டு படைப்பாளிகளால்சிலநல்லபடைப்புக்கள்வெளிவந்துகொண்டிருப்பது ஆறுதளிக்கின்றது. கடந்துபோன சினிமாவின் காலங்களை ஒப்பிடும்போது இப்போது அதன் வீச்சான வருகையும் அதனுடன் தொடர்ந்தியங்குபவர்களின் அதிகரிப்பும் ஈழத் தமிழ் சினிமாவின் வளர்ச்சி மீதான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அதிகரித்திருக்கின்றது.

இப்படியாகவிருக்கும்ஈழத்தின்சினிமாப்பயணத்தில், சமாதான காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுப்பிரிவு தென்னிந்திய சினிமா ஆளுமைகளை இங்கு வரவழைத்து,திரைத்துறைப்போராளிகளுக்கும் மற்றும்போராளியல்லாதகலைஞர்களுக்கும்பயற்சிகள் வழங்கி, அந்தத் துறைசார் விற்பன்னர்களை உருவாக்கியது.அந்தவரிசையில்இயக்குநர் உதிரிப்பூக்கள் மகேந்திரனால் பயிற்சியளிக்கப்பட்ட ஆதவன் திரைப்படக்கல்லூரி மாணவர்களால்உருவாக்கப்பட்ட33நிமிடங்களைக்கொண்ட '1996'எனும் திரைப்படம் அழகியல் சினிமாவுக்கான அம்சங்களோடு உருவாக்கப்பட்டிருக்கின்றது. எழுத்தாளர் தாமரைச்செல்வியின் மூலக்கதைக்கு திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கின்றார்கள் ஆதவன் திரைப்படக் கல்லூரிப் பயற்சி மாணவர்கள். 1996ஆம்ஆண்டுகிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில்எல்லைப்புறக்கிராமங்களில் குடியேறிய மக்களின் இடப்பெயர்வுவாழ்வையும்அவர்களின் வாழ்வியல் மீதான பிரச்சினைகளையும் மிக யதார்த்தமாக அழகியலோடுபேசுகிறது படம்.

> வெறுமனே போர் பற்றியும் அதன் நேரடிப் பாதிப்புப் பற்றியும் சித்திரிப்பதைக் கூடிய வரையில் தவிர்த்து போரால் மக்களின் வாழ்வியல் மாற்றப் படுவதையும் அதனால் ஏற்படும் உறவுகளின் உணர்வுப் போராட்டங்களையும் வெகு அழகாக பிரதி பலிக்கின்றது இந்தத் திரைப்படம்.

குடிசைவீட்டின் முற்றத்தில் உள்ளபெரியமாமரத்தில் குருவிகள் கலைந்து கத்திக் கொண்டிருக்கின்றன. அதிகாலையில்நாராசமாயிருக்கும்இந்தச்சத்தத்தை அந்தக் குடும்பத்திலுள்ள தாத்தா, மகன், பேரன், பேத்தி,மருமகள்,பக்கத்துவீட்டுப்பெண்முதியவர்என எல்லோரும் புதினமாகப் பார்க்கின்றார்கள் "ஏன் குருவிகள்கத்துகின்றன?" எனும்பேரனின் கேள்விக்கு குருவிகள்இருப்பைத்தொலைத்ததையும்இழந்ததையும் மனிதர்தம்வாழ்நிலையோடுஒப்பிட்டுச்சொல்கிறார். தொடர்ந்து1996ஜூலையில்கிளிநொச்சியில்நிகழ்ந்த இடப்பெயர்வையும்அதன்பின்னர்மகனின்குடும்பத்துடனானதன்னுடையஇருப்பையும்நினைக்கின்றார். மகனுடையவீட்டில்குடும்பத்துக்குத் துணையாயிருப்பதும்அவர்களுடையவீட்டு வேலைகளைச் செய்வதும் அடிக்கடி மகன், மருமகள், பேரப்பிள்ளைகளிடம்ஏச்சுவாங்குவதுமாகத்தலைமுறைஇடைவெளியும்வாழ்வியல் நடைமுறைப் பிரச்சினைகளு மாக அவரது இருப்புத் தொடர்கிறது.

வெளிநாட்டுத் தரகர் மூலம் டோகாவுக்குப் போகும் ஆசை உண்டாகி, அதற்காக வீட்டை ஈடுவைப்பதற்குத் தகப்பனிடம் கையெழுத்தைவாங்கமகன்பிரயத்தனப்படுவதைப் புரிந்து கோபமாயும் மனமின்றியும்அதேநேரம்தன்னுடைய கடமையையும் சரியாக உணர்ந்து கையெழுத்திடுகின்றார் தகப்பன். ஆனாலும் தன்னுடைய பரம்பரைச்சொத்து கைவிட்டுப் போவதைத் தாங்க முடியாத அவர் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகின்றார். விடயம் தெரிந்தமகனும்மருமகளும்குற்றவுணர்வோடு நிற்கக் கடைசிப் பேரன் தேடி ஓடிச்சென்று தாத்தாவை வீட்டுக்குக் கூட்டிவருவதோடுபடம்நிறைவடைகிறது.

வெறுமனே போர் பற்றியும் அதன் நேரடிப்பாதிப்புப்பற்றியும்சித்திரிப்பதைக் கூடியவரையில் தவிர்த்து (ஆனாலும் கதையின் கரு போரை மையப்படுத்தியே இருக்கிறது) போரால்மக்களின்வாழ்வியல்மாற்றப்படுவதையும்அதனால்ஏற்படும் உறவுகளின் உணர்வுப் போராட்டங்களையும் வெகு அழகாக பிரதிபலிக்கின்றது இந்தத் திரைப்படம்.

ஊரில் இருக்கும்போது மருமகள் தங்களுடன்வந்திருக்கும்படிகேட்க தன்னுடைய நிலையை விளக்குவதிலும், குளத்தில்குளிக்கும்போது வேறொருவரால்கூறப்படும்ஊர் பற்றிய பிடிப்பும் தம்சொந்தநிலங்களில்தாம்வைத்திருக்கும்பற்றை மிகஅழகாகநமக்குள்தந்துவிடுகிறது.

குளத்தில் குளிக்கும் பேத்தி, ரியூசன் காசில் படம் பார்க்கும் பேரன், கிணற்றடியில் குளிக்கும் பெண்கள், முட்டுக்காய்த்தேங்காய்வாங்கியதற்காகச் சத்தம்போடும் மருமகள். "போயிலையைத்தின்னுறீங்களோ, விழுங்கிறியளோ" எனக் கேட்கும் மகன் என திரைக்கதை முழுதும் நடைமுறை வாழ்வின் யதார்த்தம் அப்பிக் கிடக்கிறது. மகன் வெளிநாடு போகச் சொல்லும் காரணங்களையும் அதற்குத் தகப்பன் கூறும் விளக்கங்களும்அப்போதையமெய்மையைஒவ்வொருவருக்கும் உணர்த்துகின்றது. 'சொந்தவீட்டுக்கே முகடு கட்டத் தெரியாத நீ வெளிநாடு போய் என்ன செய்வாய்?', "உன்னையும்என்னையும்ஒண்டுமில்லாம ஆக்கின சிங்கள அரசாங்கத்தில தான் கோவப்பட வேணும்'என்பதுபோன்றவசனங்கள்கவனிக்கவும் இரசிக்கவும் வைக்கின்றன. இறுதியில் காணி உறுதிப்பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு "அவ்வளவு கஸ்டத்திலயும் உன்னோட சந்தோசமா இருந்தன்" என்றுவிட்டு அந்த வசனத்தை முடிக்காமலே கடந்துசெல்லும்போது அதன்பின்னரான வெறுமையில்நிறையஅர்த்தங்கள்பொதிந்திருப்பதுஅழகு. படம் முழுக்கஆதிக்கம்செலுத்துகின்றார்தகப்பனாகநடித்திருக்கும் முல்லை யேசுதாசன். வெகு இயல்பாகத்



தனக்குரிய பாத்திரத்தை மிக அழகாகக் கொண்டு செல்கிறார். அவருக்கு அடுத்தபடியாகக் கவனிக்க வைக்கின்றார் பேரனாக நடித்திருக்கும் விதுல்ஜன். இவர்கள் இருவருக்குமிடையிலான காட்சிகள் சட்டென்று மனதில் தங்கிவிடுகின்றன.

அதேபோன்று செல்வம், மாலா, கேசவராஜன், குருசாமி, கௌசி, வினோதன்என அனைவரும்தங்களுடைய பாத்திரங்களில் மிகையின்றி நடித்திருப்பது படத்துக்குப் பலம்.

படத்தின் மற்றுமொரு பாத்திரமாக இருப்பது நிலவனின் ஒளிப்பதிவு. ஒவ்வொரு காட்சிகளையும் மனதுக்கு நெருக்கமாகக் கொண்டுசெல்வதில் முக்கிய பங்கைவகித்திருக்கின்றது அது. கண்ணனின் பிண்ணணி இசை சில இடங்களில் மாத்திரமே கவனிக்க வைக்கின்றது. வினோ மற்றும் ரமேஸின் படத்தொகுப்புபடத்துக்குமேலும்பலத்தைச்சேர்த்திருக்கின்றது. தகப்பன்வீட்டைவிட்டுப்போகும்போதுதனித்தபறவை செல்வதையும்,லாண்ட்மாஸ்ரரில்சாமிவருவதையும் பனிமூட்டத்திற்கிடையே காட்டியிருப்பது, வெளிநாட்டுப்பயணம்பற்றிக்கதைக்கும்போதுபூனையொன்று கால்களுக்கிடையில்வெற்றுபிஸ்கட்பையைஉருட்டி விளையாடுவது,இளநீர்குடிக்கும்போதுபின்னணியில் கூத்துப்பாடல்ஒலிப்பதுஎனஒவ்வொன்றும்குறியீடுகளாகப் படத்தை உயர்வான தளத்துக்குக் கொண்டு செல்வதற்குத் துணை நிற்கின்றன. இடப்பெயர்வுக் காட்சியின்போதும், விமானத்தாக்குதலின் போதும் மாத்திரம் அதன் இயல்பை முவதுமாக காட்ட முடியாதிருப்பது போன்ற குறைகளைத் தவிர 1996 திரைப்படம் ஈழத் தமிழ்சினிமாவில் பேசப்படக்கூடிய ஒரு படமாக அமைந்திருக்கின்றது.





1924இல் யாழ்ப்பாணம்–பொன்னாலையில் பிறந்த வரதர் என்ற தி. ச. வரதராசன் ஈழத்தின் மூத்த சிறுகதை ஆசிரியர். 1940இல் 'கல்யாணியின் காதல்' என்ற ஈழகேசரிச் சிறுகதையுடன் எழுத்துலகில் பிரவேசித்தார். 'கயமை மயக்கம்' அவரது சிறுகதைத் தொகுதி.
புதுக்கவிதையின் பிதாமகர். 'யாழ்ப்பாணத்தார் கண்ணீர்' அவரது நெடுங்கவிதை நூல். 'மறுமலர்ச்சி', 'புதினம்', 'வெள்ளி', 'தேன்மொழி', 'ஆனந்தன்' என்பன அவர் நடாத்திய சஞ்சிகைகள். 'கயமை மயக்கம்', 'வாழ்க நீ சங்கிலி மன்னா', 'நாவலர்', 'மலரும் நினைவுகள்', 'பாரதக் கதை' என்பன அவரது நூல்கள். சிறுகதைகள் மற்றும் எழுத்துக்களால் ஈழமண்ணுக்குப் பெருமை சேர்த்த இவர் 2006இல் இயற்கை எய்தினார்.

## பத்தாயம்

**இனிவரும் மாதங்களில், அவற்றின் மூன்றாவது வாரத்தில் ஈழத்து தமிழ் சிறுகதை உலகுக்கு வளம்சேர்த்த மறைந்த சிறுகதையாசிரியர்களின் சிறுகதை மறுபிரசுரம் செய்யப்படும். அந்த வகையில் இந்த வாரம் அமரர் வரதர் அவர்களின் 'கற்பு' எனும் சிறுகதை பிரசுரமாகின்றது.**

சிறுகதை

# கற்பு

மாலை நாலரை மணி. பிள்ளையார் கோயில் கணபதி ஐயர் வீட்டின் முன் விறாந்தையிலே மூர்த்தி மாஸ்டரும் ஐயரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். எங்கெல்லாமோ சுற்றிவந்து கடைசியிலே இலக்கிய உலகத்திலே புகுந்தார்கள்.

"மாஸ்டர், நீங்கள் 'கலைச்செல்வி'யைத் தொடர்ந்து படித்து வருகிறீர்களா" என்று கேட்டார் ஐயர்.

"ஓமோம், ஆரம்பத்திலிருந்தே 'பார்த்து' வருகிறேன். ஆனால் எல்லா விசயங்களையும் படித்திருக்கிறேன் என்று சொல்லிவிட முடியாது. ஏன்? என்ன விசேஷம்?"

"கலைச்செல்வி' பழைய பிரதியொன்றை இன்றுதான் தற்செயலாகப் படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு சிறுகதை..."

"யார் எழுதியது?"

"எழுதியவர் பெயரைக் கவனிக்கவில்லை. அந்தச்சம்பவம்தான் மனத்தை உறுத்திக் கொண்டே இருக்கிறது"

"சொல்லுங்கள், நினைவு வருகிறதா பார்க்கலாம்?"

"மூன்றாம் வருஷம் இலங்கையில் பெருவெள்ளம் ஏற்பட்டதல்லவா! அந்தச் சூழ்நிலையை வைத்து கதை எழுதப்பட்டிருக்கிறது. குளக்கட்டை உடைத்துக் கொண்டு ஒரு கிராமத்துக்குள் வெள்ளம் பெருகி வருகின்றது; சனங்கள் உயரமான இடத்தைத் தேடி ஓடுகிறார்கள். அந்த ஊரில் ஒரு பணக்காரனின் வீட்டுக்கு 'மேல்வீடு'ம் இருக்கின்றது. அங்கே அவன் தனியாக இருக்கிறான். வெள்ளத்துக்கு அஞ்சி ஒரு ஏழைப் பெண் - இளம் பெண் அந்த மேல் வீட்டுக்குச் செல்கிறாள் ; பணக்காரன் அவளைப் பதம் பார்க்க முயல்கிறான்; அவள் இசையவில்லை; அவன் பலாத்காரம் செய்தேனும் அவளை அடைந்துவிடத்துணிந்துவிட்டான். அவள் உயிரை விடக் கற்பையே பெரிதாக மதிப்பவள். மேல் வீட்டிலிருந்து கீழே குதித்து உயிரைத் துறந்தாள். கற்பைக் காப்பாற்றிக் கொண்டாள்... இந்தக் கதையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மாஸ்டர்?"

"என்ன நினைக்கிறது? புராண காலத்திலிருந்து திருப்பித் திருப்பிப் படித்த 'கருத்து' தான். கதையை அமைத்த முறையிலும் வசன நடையின் துடிப்பிலும்தான் இந்தக் கதைக்கு வாழ்வு கிடைக்கும். நான் படிக்கவில்லை. படித்தால்தான் அதைப்பற்றிச் சொல்லலாம்."

"நான் கதைக்கு விமர்சனம் கேட்கவில்லை மாஸ்டர். புராண காலத்திலிருந்து படித்ததாகச் சென்னீர்களே. அந்தக் 'கருத்தை'ப்பற்றித்தான் உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன்."

"எதைக் கேட்கிறீர்கள் ஐயா? தனது கற்பைக் காப்பாற்ற உயிரைத் துறந்தாளே அதைப்பற்றியா."

"ஓமோம் அதையேதான்"

"ஒரு பெண்ணின் முக்கியமாகத் தமிழ்ப் பெண்ணின் சிறப்பே அதில்தானே இருக்கின்றது! மானம் அழிந்தபின் வாழாமை இனிதென்பதல்லவா தமிழன் கொள்ளை?"

ஐயர் பெரு மூச்சு விட்டார். பிறகு, "நீங்களும் இப்படிச் சொல்கிறீர்களா" என்று கேட்டார்.

மூர்த்தி மாஸ்டர் திகைத்தார். தான் என்ன தவறுதலாகச் சொல்லிவிட்டாரா? இந்த ஐயர் என்ன இப்படிக் கேட்கிறார்?



ஒரு நிமிஷ நேரம் மௌனம் நிலவிற்று. ஏதோ எண்ணித் துணிந்துவிட்டவர் போல கணபதி ஐயரே மீண்டும் மௌனத்தைக் கலைத்தார்.

"மாஸ்டர் எனக்கும் என் மனைவிக்கும் மட்டும் தெரிந்த ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லப்போகிறேன் உங்களுக்குச் சொல்லலாம். சொல்வதால் ஒரு தீமையும் ஏற்படாது. இதைக் கேட்டபிறகு 'கற்பு' பிரச்சினையைப் பற்றிப் பேசுவோம்.

போன வருஷம் பெரியந்தனை முருகமூர்த்தி கோயிலில் நான் பூசை செய்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும். அங்கே தமிழர்கள் தொகை ஐம்பது பேர் கூட இருக்காது. விசேட தினங்களுக்கு மட்டும் பிற இடங்களிலிருந்தெல்லாம் வந்து கூடுவார்கள். சிங்களவர் கூடப் பலர் கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்விப்பது வழக்கம்.

சிங்களவர், தமிழர் கலகம் துவங்கினவுடனே அங்கேயிருந்த தமிழர்களில் முக்கால்வாசிப் பேரும் யாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து விட்டார்கள். நான் பூசையை விட்டுவிட்டு எப்படிப்போக முடியும்? என் மனைவியைப் போகும்படி சென்னேன். எனக்கு வருவது தனக்கும் வரட்டும் என்று அவள் மறுத்து விட்டாள். சிங்களவரும் அக்கோயிலிலே கும்பிட வரும் வழக்கம் இருந்ததால் கோயில் விசயத்தில் தலையிடமாட்டார்கள் எங்களுக்கும் ஆபத்து நேராது என்ற துணிவில் அவளை மேலும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டேன்.

ஒரு புதன்கிழமை. அன்று பேபி நோனா என்ற சிங்களக் கிழவி அவள் எங்களோடு நன்கு பழகியவள். கோயிலுக்கும் நாள் தவறாமல் வருகிறவள் அவள் சென்னாள்: "நீங்கள் இனி இங்கே இருப்பது புத்தியில்லை ஐயா. காலியிலிருந்து சில முரடர்கள் மூன்று லொறிகளில் வருகிறார்களாம். வருகிற வழியெல்லாம் தமிழர்களை இல்லாத கொடுமை செய்கிறார்களாம். இன்றிரவோ நாளையோ இந்தப் பக்கம் வரக்கூடும் என்று கதைக்கிறார்கள். நீங்கள் இப்போதே புறப்பட்டுப் பொலிஸ் ஸ்டேசனுக்குப் போய்விடுங்கள். பிறகு பொலிஸ் துணையோடு கொழும்புக்குச்செல்லலாம்" என்றாள்.

அவள் சென்னதைக் கேட்ட பிறகு "அப்பனே முருகா! என்னை மன்னித்துக்கொள்" என்று மனதுக்குள் வேண்டிக்கொண்டு கையோடு கொண்டுபோகக் கூடிய பொருட்களை இரண்டு பெட்டிகளுள் சேகரித்தோம். என் மனைவியின் நகைகளையும் நூலிற் கட்டிய தாலி ஒன்றைத் தவிர எல்லாவற்றையும் கழற்றிப் பெட்டியிற் பூட்டினோம். இந்த ஆயத்தங்கள் செய்வதற்குள் மாலை ஐந்து மணி ஆகிவிட்டது. நாங்களும் புறப்பட ஆயத்தமானபோது பேபி நோனா அவசரம் அவசரமாக ஓடி வந்தாள். "ஐயா, ஐயா! சில்வாவும் வேறு இரண்டு பேருமாக வாறான்கள். அம்மாவை அவன்கள் கண்ணில் படாமல் எங்கேயாவது எங்கேயாவது ஒளித்திருக்கச் சொல்லுங்கோ. கேட்டால் "நேற்றே ஊருக்குப் போய்விட்டா" என்று சொல்லுங்கோ! நான் இங்கே நின்றால் எனக்கும் ஆபத்து; உங்களுக்கும் ஆபத்து, கவனம் ஐயா.!" என்று சொல்லிவிட்டு பேபிநோனோ ஓடிமறைந்துவிட்டாள்.

சில்வாவை எனக்குத்தெரியும்; ஆள் ஒரு மாதிரி. "ஐயா, ஐயா" என்று நாய் மாதிரிக் குழைந்து ஐம்பது சதம், ஒரு ரூபாய் என்று இடைக்கிடை என்னிடம் வாங்கியிருக்கிறான். ஆள் காடைத் தரவளி. ஆதலால் நானும் பட்டும் படாமல் நடந்து வந்திருக்கிறேன். இரண்டொரு நாள் என் மனைவியை றோட்டில் தனியாகக் கண்டபோது , அவனுடைய பார்வையும் சிரிப்பும் நன்றாக இருக்கவில்லை என்று அவள் சொல்லியதுண்டு. இப்போது அவன் வருகிறான் என்றால்.......

எனக்கு ஒருகணம் ஒன்றும் தோன்றவில்லை. யோசிக்கவும் நேரமில்லை. வீட்டுக்குள் உயரத்திலே பரண் மாதிரி மூன்று மரங்களைப்போட்டு அதன்மேல் சில பெட்டிகளைப் போட்டிருந்தது. என் மனைவியைத் தூக்கி அந்த மரங்களின் மேல் விட்டு மெதுவாக அந்தப் பெட்டிகளின் பின்னால் மறைந்திருக்கும்படி விட்டேன். பிறகு எங்கள் பயணப் பெட்டிகளை எடுத்துச் சற்று மறைவாக ஒரு மூலையில் வைத்து விட்டேன். பிறகு முன் விறாந்தைப் பக்கம் வந்தேன். நானும்வர அந்தக் காடையர்களும் வாயிலில் நுழைந்தார்கள். எனது உள் மனது நடுங்க ஆரம்பித்து விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "என்ன சில்வா இந்தப் பக்கம்?" என்று சிரிக்க முயன்றேன்.

"சும்மாதான், நீங்கள் இருக்கிறீர்களா, இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்துக்குக் கம்பி நீட்டிவிட்டீர்களா என்று பார்க்க வந்தேன்" என்றான்.

"முருகனை விட்டு நான் எங்கேதான் போக முடியும்?" உன்று சொன்ன என் குரலே தெளிவாக இல்லை.

"எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிக்கவேண்டும்" என்றான் சில்வா. நான் சரியென்று குசினிப் பக்கம்போனேன்.

43




போர் விமானி ஒருவனின் வாழ்க்கையில் அடிக்கும் காதல் புயல் தான் 'காற்று வெளியிடை'...!

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் இந்திய இராணுவப் போர் விமானியாகப் பணியாற்றுகிறார் வருண் (கார்த்தி). அதே ஊரில் மருத்துவராக வேலையில் சேருகின்றார் லீலா (அதிதி ராவ்). ஒரு விபத்தில், வருணுக்குக் காயம் ஏற்பட, லீலா சிகிச்சை அளிக்கின்றார். இருவருக்கும் காதல் மலர்கின்றது. வருணின் ஆணாதிக்க, முரட்டுப் போக்கு லீலாவைக் கசப்படையச் செய்தாலும் முரண்பாடுகளுக்கு இடையில் காதல் வளர்கின்றது. முரண்பாடு முற்றும்போது பிரிவு ஏற்படுகின்றது. பிறகு என்ன ஆயிற்று என்பதுதான் மீதிக் கதை.

வெள்ளிப் பனிமலை, துப்பாக்கிச் சூட்டுச் சத்தம், காற்றில் சாகசம் செய்யும் போர் விமானங்கள் என்று விரியும் காட்சிகள் நிமிர்ந்து உட்கார வைக்கின்றன. அந்த நிமிர்வு, அடுத்தடுத்த காட்சிகளில் சரிகிறது. ஏ.ஆர்.ரஹ்மானின் தரமான பின்னணி இசை, மனதில் ரீங்காரிக்கும் பாடல்கள், பனிமலையின் குளிர்மையையும் புத்துணர்வையும் அள்ளித்தரும் ரவிவர்மனின் ஒளிப்பதிவு எனத் திரைக்கதைக்குப் பலமூட்டுவதாக அனைத்து விடயங்களும் இருக்க, திரைக்கதையின் பலவீனம் சலிப்பைத் தருகின்றது.

சில வருட பிரிவுக்குப் பிறகு, அதிதி ராவைச் சந்திக்கும்போது தன்னுடைய கோபம், திமிர் எல்லாவற்றையும் கைவிட்டுத் திருந்திவிட்டதாகக் கார்த்தி சொல்கின்றார். ஆனால் திருந்தியதற்கான எந்தத் தடயமும் இல்லை. மோசமாக நடந்துகொண்டு மன்னிப்பு கேட்கும் தன்னுடைய வழக்கப்படியே அவர் மன்னிப்புக் கேட்கின்றார். காதலியும் (வழக்கம்போல) மன்னித்து விடுகின்றார். இதையே அவர்கள் படம் முழுவதும் செய்துகொண்டிருக்கின்றார்கள்...!

வைத்தியசாலையில் கார்த்தி, அவரது குடும்பம் மற்றும் அதிதி ராவ் ஆகியோர் இடையே நடக்கும் வாக்குவாதக் காட்சியில் மட்டும் யதார்த்தம் கொஞ்சம் எட்டிப் பார்க்கிறது. இருவரும் பரஸ்பரம் ஈர்க்கப்படும் காட்சிகளும், இயற்கை அழகில் மனம் பறிகொடுக்கும் காட்சிகளும் இரசனையோடு எடுக்கப்பட்டிருக்கின்றன.

'நான் குண்டு போடுறவன். நீ உயிர்களைக் காப்பாத்துறவள்' என்று அடிப்படை முரண்பாட்டைக் காட்டுவதில் தொடங்கி. 'பொய் சொல்ற... ஆனா கேட்க சந்தோஷமாத்தான் இருக்கு' என்பது போன்ற வசனங்களில் மணிரத்னம் தெரிகின்றார்.

பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்ட நாயகன் அதிலிருந்து எப்படியும் தப்பித்துவிடுவான் என்பது தெரியும். ஆனால் அவ்வளவு எளிதிலா?! கார்கில் போரின்போது பிடிபட்ட வீரர்களைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் எப்படி எல்லாம் கொடுமைப்படுத்தினார்கள் என்று கூகுளில் தேடினாலே விடயங்கள் நிறையும். இங்கே கைதிகள் ஏகாந்தமாகத் தேநீர் அருந்துகின்றார்கள், வலைப்பந்து விளையாடுகின்றார்கள், நூலகத்தில் புத்தகம் படிக்கின்றார்கள், சிறைச் சுவரில் துளைபோட்டுத் தப்பிச் செல்கிறார்கள். நாயகன், நாயகி தவிர வேறு எந்தக் கதாபாத்திரங்களையும் போதிய விவரிப்பு அல்லது அழுத்தத்துடன் காட்டாதது இன்னொரு குறை. ஆர்.ஜே.பாலாஜி, டெல்லி கணேஷ் கூட பட்டும் படாத பாத்திரங்களாகவே வந்துபோகிறார்கள்.

கார்த்தி போர் விமானியாக உடல் மொழியிலும், கோப நடிப்பிலும் பொருந்துகின்றார். காதலைக் காட்டக் கண்களை விரிக்கின்ற போதுதான் குளுமை போதவில்லை. காற்றைப் போல மென்மையாக நம்மைக் கவர்கின்ற அதிதி ராவ் மாறாகக் காதலில் கசிந்துருகிப் பரவசமடைகிறார்.

மணிரத்னம் – ஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணியின் 25ஆவது ஆண்டில் வெளிவந்திருக்கும் இந்தப் படத்தில், ரஹ்மான் தனது பங்குக்கு அடுத்தகட்டத்தைக் காட்டிவிட்டார். மணிரத்னம் அங்கேயே நின்றுவிட்டார்!






# 8 தோட்டாக்கள்

## திரையரங்கில் பார்க்கத் தகுந்த சினிமா

தனது கைத்துப்பாக்கியைப் பறிகொடுக்கும் இளம் பொலிஸ் அதிகாரியையும், அந்தத் துப்பாக்கியைக் கொண்டு கொலைகளை நிகழ்த்தும் சாதாரண மனிதனையும் மையமாகக் கொண்டு புனையப்பட்ட கதைதான் '8 தோட்டாக்கள்'.

புதிதாகப் பொறுப்பேற்கும் உப பொலிஸ் அதிகாரி சத்யா (வெற்றி) பொலிஸ் வேலைக்குப் பொருந்தாத இயல்பு கொண்டவர். பிழைக்கத் தெரியாதவர் எனப் பெயரெடுப்பவர். அவருடைய கைத்துப்பாக்கி தொலைந்துபோகின்றது. பின்னர் அந்தத் துப்பாக்கியிலிருந்த குண்டு ஒரு கொலைக்கும் கொள்ளைக்கும் காரணமாகின்றது. துப்பாக்கியையும் குற்றவாளியையும் தேடும் வேட்டையில் அடுத்தடுத்துப் பல கொலைகள் நிகழ்கின்றன. துப்பாக்கியில் இருந்த எட்டுக் குண்டுகளும் யார் யாரைக் குறிவைக்கின்றன? சுடுபவரைப் பொலிசாரால் கண்டுபிடிக்க முடிந்ததா? என்பதே 8 தோட்டாக்களின் விறுவிறுப்பான மீதிக்கதை.

இயல்பான பாத்திரங்கள், பெருமளவில் நம்பகத்தன்மை கொண்ட திரைக்கதை, கதாபாத்திரங்களின் பின்னணிகளுக்கும் அவர்களுடைய உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறை, விறுவிறுப்பான காட்சிகள் ஆகியவற்றால் புதுமுக இயக்குநர் ஸ்ரீ கணேஷ் தரமான படைப்பைத் தந்திருக்கின்றார். பாத்திரங்களின் பின்புலங்களை அறிமுகப்படுத்தும் விதமும், புலனாய்வு நகரும் விதமும் பார்வையாளர்களின் கவனத்தைத் திரைக்குள் குவியச் செய்துவிடுகின்றன.

பணமே பிரதானம் என்ற தற்போதைய சூழலால் பாதிக்கப்பட்ட சாதாரண மனிதன் ஒருவன், வெகுண்டெழுந்து சட்டத்துக்கு முரணான பாதையைத் தேர்ந்தெடுத்தால் நிகழக்கூடிய சாத்தியங்களையும், அதன் விளைவுகளையும் இயன்றவரையில் நம்பகத்தன்மையுடன் தந்திருப்பது பாராட்டுக்குரியது. சினிமா அனுபவத்தில் சமரசம் செய்து கொள்ளாமல் சமூக அரசியலை அழுத்தமாகப் பேசிய விதம் நன்று.

முழுமையான திரைக்கதை என்பது கதையில் முக்கிய பங்கு வகிக்கும் அனைத்துக் கதாபாத்திரங்களுக்குமான முழுமையைத் தர வேண்டும். அதற்கு நம்பத் தகுந்த சம்பவங்களும் திருப்பங்களும் வேண்டும். இந்தப் படத்தில் இவை எல்லாமே இருக்கின்றன. எதிர்மறைக் கதாபாத்திரத்தின் மீது பார்வையாளர்கள் இரக்கத்தைப் பொழிவது அத்தனை எளிதாக நடத்துவிடக் கூடியதல்ல. அது இந்தக் கதையில் சாத்தியமாகியிருக்கின்றது. கிருஷ்ணமூர்த்தியின் (எம்.எஸ்.பாஸ்கர்) பாத்திரப் படைப்பும் அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவமும் படத்தைத் தனித்துக் காட்டுகின்றன.

எம்.எஸ்.பாஸ்கரின் திரையுலக வாழ்க்கையில் இது ஒரு மைல் கல். இயல்பு மீறாத நடிப்பாற்றல் மூலம் கதாபாத்திரத்தின் அடர்த்தியைப் பார்வையாளர்கள் சுவைக்கக் கொடுத்திருக்கின்றார் அவர். அடுக்கடுக்கான சோதனைகளால் புண்பட்டு மனம் வெதும்பும் வேதனையையும் அதன் விளைவான ஆவேசத்தையும் நன்கு வெளிப்படுத்தியுமிருக்கின்றார்.

மணிகண்டன், லல்லு, 'மைம்' கோபி, சார்லஸ் வினோத் ஆகியோர் தங்கள் பாத்திரத்தில் கச்சிதமாக நடித்துள்ளனர். நாசரின் நடிப்புப் படத்துக்குப் பெரிய பலம். இளம் பொலிஸ் அதிகாரியாக வரும் வெற்றியின் பாத்திரம் கனதியானது ஆயினும் அதை ஓரளவு சமாளித்திருக்கின்றார். தனக்குரிய ஊடகவியளாலர் எனும் சிறிய பாத்திரத்தில் அபர்ணா குறைவைக்கவில்லை.

ஜெகதீஸ் ரவிச்சந்திரனின் இயல்பான ஒளிப்பதிவும், நாகூரானின் தொய்வு தராத எடிட்டிங்கும், காட்சிகளோடு உறுத்தாமல் பயணிக்கும் கே.எஸ்.சுந்தரமூர்த்தியின் பின்னணி இசையும் முக்கிய பங்காற்றியுள்ளன.

துப்பறியும் படத்தில் உணர்வுபூர்வமான அனுபவத்தைச் சாத்தியமாக்கியது, நேர்த்தியான திரைமொழி, இயல்பான பாத்திரங்கள், குற்றங்களின் பின்னணியைச் சித்திரித்த விதம், வேகமான கதையோட்டம், எம்.எஸ்.பாஸ்கரின் நடிப்பு ஆகியவற்றால் '8 தோட்டாக்கள்'இன் இலக்குத் தவறவில்லை




# அன்புடன் உதவிசெய்!

குட்டி முயல் ஒன்று இரை தேடுவதற்காகத் தனது இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தது. அது ஓரிடத்தில், மண்ணில் புதைந்திருக்கும் கரட் கிழங்கைக் கண்டது. அந்த முயல் சிறியதாக இருந்ததால், அந்தக் கிழங்கைத் தோண்டி எடுக்க முடியவில்லை. அதனைத் தோண்டி எடுக்க என்ன செய்யலாம் என்று யோசித்தது. அருகில் ஒரு மான் அங்கிருந்த பசும் புற்களை மேய்ந்துகொண்டிருந்தது. குட்டி முயல் அந்த மானிடம் சென்று, அந்தக் கிழங்கை எடுத்துத் தந்து உதவும்படி கேட்டது. மானும், கிழங்கு புதைந்திருந்த இடத்தில் தனது கொம்பைக் கொண்டு சிறிது நிலத்தைக் கீளறிவிட்டது. அப்போது முயல் எளிதாக அந்தக் கிழங்கை எடுத்துச் சாப்பிட்டது. அந்த மானுக்கு நன்றி சொன்னது. முயல் மகிழ்ச்சியுடன் திரும்பியது.

புல்வெளிக்கு மீண்டும் ஓடிச்சென்ற மான், வேடன் ஒருவன் விரித்து வைத்த வலையில் சிக்கி அலறியது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து நின்றது. மானின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த முயல், மான் சிக்கியிருந்த வலையில் சில பகுதிகளைத் தனது கூர்மையான பற்களால் கடித்து வலையைத் துண்டித்து மானை விடுவித்தது. வலையிலிருந்து விடுவிக்கப்பட்ட மான் அந்தக் குட்டி முயலுக்குத் தனது நன்றியையும் பேரன்பையும் தெரிவித்தது. அன்றிலிருந்து, மானும் முயலும் சிறந்த நண்பர்கள் ஆயினர்.

**நீதி : நாம் செய்வதே, நமக்குத் திருப்பிக் கிடைக்கும். நல்லதே செய்வோம் நன்மையைப் பெறுவோம்!**





## சிந்தனைக்கு

**பேரன்பைப் போலொரு மாமருந் தில்லை...**

**ஓர் அறிஞர்**

# இருவினா ஒரு விடை

01. கீரை வளர்வது ஏன்? குழந்தை அழுவது ஏன்?
    எடுப்பாரற்று
02. நாவில் சுவைப்பது என்ன? நாய் ஓடுவது எப்படி?
    க(ல்)ற்கண்டு
03. பாறை வளர்வது ஏன்? பாதை மண்டியிருப்பது ஏன்?
    கடப்பாரையற்று
04. வேகமாக ஓடுபவன் வாங்குவது என்ன? நோயாளி எடுப்பது என்ன?
    மூச்சு

நÿயனிகா

# பிராணிகளின் நற்பண்புகள்



வரிசையில் செல்லும் பழக்கத்தை
எறும்பைப் பார்த்துக் கற்றுக்கொள்!
கூடி உண்ணும் பண்பதனைக்
காக்கையைப் பார்த்துக் கற்றுக்கொள்!
நன்றி எனும் நற்பண்பை
நாயைப் பார்த்துக் கற்றுக்கொள்!
சேமித்து வைக்கும் பழக்கத்தைத்
தேனீயைப் பார்த்துக் கற்றுக்கொள்!
வீரம் வாழ்வில் வேண்டுமென்று
சிங்கத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்!
சீக்கிரம் எழுகின்ற பழக்கத்தைச்
சேவலைப் பார்த்துக் கற்றுக்கொள்!
பொறுமை என்னும் பொற்பண்பை
எருமையைப் பார்த்துக் கற்றுக்கொள்!
விடாமுயற்சி என்னும் நற்பண்பைச்
சிலந்தியைப் பார்த்துக் கற்றுக்கொள்!
தலைவனைப் பின்பற்றும் பண்பை
மாட்டைப் பார்த்துக் கற்றுக்கொள்!



# ஆண்டு விழாக்கள்

| | | |
|---|---|---|
| 1ஆண்டு | - | காகித விழா |
| 2ஆண்டு | - | பருத்தி விழா |
| 3ஆண்டு | - | தோல் விழா |
| 4ஆண்டு | - | மலர் மற்றும் பழ விழா |
| 5ஆண்டு | - | மர விழா |
| 6ஆண்டு | - | சர்க்கரை/ கற்கண்டு/ இனிப்பு விழா |
| 7 ஆண்டு | - | கம்பளி/ செம்பு விழா |
| 8 ஆண்டு | - | வெண்கல விழா |
| 9 ஆண்டு | - | மண் கலச விழா |
| 10 ஆண்டு | - | தகரம்/ அலுமினிய விழா |
| 11 ஆண்டு | - | எஃகு விழா |
| 12 ஆண்டு | - | லினன் விழா |
| 13 ஆண்டு | - | பின்னல் விழா |
| 14 ஆண்டு | - | தந்த விழா |
| 15 ஆண்டு | - | படிக விழா |
| 20 ஆண்டு | - | பீங்கான் விழா |

ம.மேரிகா



# இலங்கையின் முக்கிய நிலையங்கள்

01. செய்மதித் தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
02. புடைவைக் கைத்தொழில் நிலையம் - வியாங்கொடை, பூகொட, துல்கிரிய
03. எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
04. கடதாசித் தொழிற்சாலை - வாழைச்சேனை
05. கலாசார முக்கோண வலயம்-கண்டி, அநுராதபுரம், பொலநறுவை
06. சீனித் தொழிற்சாலை - கந்தளாய்
07. காரீயச் சுரங்கம் - போகலை
08. புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம

லாவண்யா



# கர்ணன்

நீண்ட நாள்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. "நம்முடைய அண்ணன் தருமரும் தானம் செய்வதில் சிறந்தவர். இருப்பினும், கர்ணனையே ஏன் எல்லோரும் தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர்?" என்பதுதான் அந்தச் சந்தேகம். இவர்கள் மனதிலுள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன், பாண்டவர்களை அழைத்தார். தங்கமலை, வெள்ளிமலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி, "இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தர்மம் செய்துவிட்டால் தானத்தில் சிறந்தவர் தருமர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

வீமனும், அர்ச்சுனனும், மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும் வெள்ளியையும் வெட்டி எடுத்துக் கொடுக்க, தருமர் அவற்றை மக்களுக்குத் தானம் செய்தார். ஆனால், நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறையவே இல்லை. அதேநேரம், அவ்விரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்துகொண்டே இருந்தன. மாலைப்பொழுது வந்ததும், இனித் தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தருமர், "எங்களால் முடியாது கண்ணா!" என்று தோல்வியை ஒப்புக்கொண்டார். உடனே கிருஷ்ணன் ஓர்



ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார். "கர்ணா! இதோ பார்! இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்கமலை. மற்றொன்று வெள்ளிமலை இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்" என்று கூறினார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது? இப்போதே செய்து காட்டுகிறேன்" என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறித் தனது தர்மத்தை முடித்துவிட்டுப் புறப்பட்டார்.

பாண்டவர்கள் ஆச்சரியமுற்றனர். அவர்களைப் பார்த்துச் சிரித்தார் கிருஷ்ணன். தருமருக்கும் பரந்த மனதுதான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரைக் காட்டிலும் தான தர்மம் செய்வதில் பரந்த மனதுடையவன் கர்ணனே என்பதைச் சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்தினார் கிருஷ்ணன்.

# கைப்புதிர்

1. துன்பத்தில் வரும் கை - அழுகை
2. அண்ணனின் இளையசகோதரியைக் குறிக்கும் கை - தங்கை
3. பெண்ணைக் குறிக்கும் கை - மங்கை
4. சிவனின் தலையில் இருக்கும் கை - கங்கை
5. தாத்தாவின் தலையில் தோன்றுவது - வழுக்கை
6. சிறிய தெருவைக் குறிக்கும் கை - ஒழுங்கை

ம. இசைப்பிரியா





எம்.ஜெபறேம்சன்
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்



ஜெய்சீலன்
அராலி இந்துக் கல்லூரி

# சி...சி....

ஆசிரியர் : அமெரிக்கா எங்கே உள்ளது?

மாணவன் : தெரியாது சேர்

ஆசிரியர் : மேசைக்கு மேல ஏறி நில்லு

மாணவன் : ஏறி நின்றால், தெரியுமா சேர்?

ஆசிரியர் : ??????



# குடிகளே...! 'குடி'யை நிறுத்த முடியாதா...?

சி.கதிர்காமநாதன்

பத்திரிகைகளில் தற்போது அதிகம் வெளியாகின்ற செய்திகளை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அவை மதுபானம் மற்றும் போதைப் பொருள்கள் பற்றியவையாகவே அதிகம் இருக்கும்.
'யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 மாதங்களில் 35இலட்சம் லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடம் (2016) தை மாதம் முதல் ஒக்ரோபர் மாத இறுதி வரையே இவ்வாறு அதிகளவு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
இந்தத் தரவின் அடிப்படையில் யாழ்ப்பாணம் சாராயக் கொள்வனவு. ஸ்பிறிட் வகை, இதர மது வகைகள் கொள்வனவுக்கு முன்னுரிமை அளிக்கின்றது. கடந்த வியாழக்கிழமைப் பத்திரிகையில் "மதுப்பாவனை வீழ்ச்சி; மைத்திரி மகிழ்ச்சி" என்ற செய்தி நாட்டில் அதன் தாக்கம் குறைந்துள்ளதைக் காட்டியது. ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதன் வீரியம் காலம்செல்லச் செல்லக் கூடிக் கொண்டே இருக்கின்றது.

**யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது?**

இவ்வளவு லீற்றர் மதுபானங்களை யார் குடிக்கின்றார்கள்? எதற்காக அதிக பணம் செலவளித்து இதை அருந்துகின்றார்கள்? குடிப்பதில் இவர்களுக்கு என்ன நன்மைகள்தான் கிடைக்கின்றன?
மருத்துவம் கூறுகின்றது: ஒரு மனிதன் குறைந்த பட்சம், சராசரி ஒரு நாளைக்கு 6லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டுமென்று. சில வேளை எமது மக்கள் 'தண்ணி குடியுங்கள்' என்று சொன்னதைத் 'தண்ணி அடியுங்கள்' எனத் தவறாகக் கருதி இவ்வாறு மதுபானங்களைக் குடிக்கப் பழகிவிட்டார்களோ! இவ்வாறே போனால், யாழ்ப்பாண இளைஞர்களின் எதிர்காலம் என்னவாகப் போகின்றது? இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா?
பத்திரிகைகள், இதர ஊடகங்கள், பாடசாலைகள், தனியார் தொண்டர் நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள், மருத்துவர்கள், உளவளத் துணையாளர்கள் எனப் பல்வேறு தரப்பினர். மதுவைக் குடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறிப்பாக சமூகத்தில், உடலில், குடும்ப உறவில், வேலையில், பொருளாதாரத்தில் ஏற்படும் பெரிய பிரச்சினைகள் பற்றிக் கிராமம், கிராமமாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.
சில மாதங்களுக்கு முன்பு குடாநாட்டில் சகல பாடசாலைகளிலும் போதை ஒழிப்பு வாரம்கூட மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இப்போதும் மது, போதைகள் பற்றிய விழிப்புணர்வுகளில் ஈடுபடுபவர்கள் அதன் தீமைகள் பற்றி இடித்துரைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.
இவ்வாறான முயற்சிகள் எல்லாம் மது. போதைப் பழக்கத்தைப் முழுமையாக ஒழித்துவிடுமா? மதுபானங்களை உற்பத்தி, இறக்குமதி, விற்பனை செய்து கொண்டு மதுபானத்தை ஒழிக்கத்தான் முடியுமா? நாங்கள் மதுபானத்தை விற்போம் 'உடல் நலத்துக்குத் தீங்கானது' என்று அதிலயே குறிப்பிடுகின்றோம். சிகரெட்டை விற்போம். 'புற்றுநோயை உண்டாக்கும்' என்று அதிலும் குறிப்போம். நாங்கள் தீமை பற்றிச் சொல்லிவிட்டோம். மக்களே நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும் அவற்றை வாங்குவதா? விடுவதா? என்று. அரசு காலம் முழுவதும் தீமை.. தீமை என்று சொல்லி அதை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும் நீங்கள் குடிக்காவிட்டாலும் குடித்தாலும் அதற்கு மகிழ்ச்சி. இப்படித் தொடர்ந்து மதுவை அருந்தி, ஆட்சிக்கு வரும் எல்லா அரசையும் பொருளாதார ரீதியாகக் கைகொடுத்துக் காப்பாற்றத்தான் போகிறீர்களா?

**மதுபானம் என்றால் என்ன?**

வேறுபட்ட செறிவுகளில் அடைக்கப்பட்டிருக்கின்ற 'எதைல் அற்ககோல்' எனும் இரசாயனப் பதார்த்தத்தை உள்ளடக்கிய திரவங்களே மது அல்லது ம்துபானங்கள். இவற்றுக்கு வெவ்வேறு பெயர்கள் இருந்தாலும், மாறுபட்ட சுவைகளைத் தந்தாலும், இவை எல்லாவற்றிலுமே காணப்படும் இந்த எதைல் என்ற அற்ககோலே அவற்றின்உயிர். கள்2.4வீதம், பியர்4.6-8.8வீதம், வைன்8.2வீதம், சாராயம்32.35வீதம், விஸ்கி37.4வீதம், ரம்40வீதம், பிறண்டி40 வீதம் என்றவாறு சட்ட ரீதியாகத் தயாரிக்கப்படும் மதுபானவகைகளில்; உள்ள அற்ககோல் செறிவு வீதங்கள் அவற்றில் தெரியப்படுத்தி இருப்பார்கள். இதைத் தவிர, சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் மதுபானவகைகளில் (கசிப்பு) இந்த அற்ககோலின் செறிவு மிகவும் அதிகமாகக் காணப்படும்.

**மதுவிலிருந்து எவ்வாறு மீள்வது?**

குடிப்பவர்கள் எல்லாம் குடிகாரர் ஆவதில்லை. அதாவது மதுவைத் தொட்டவர்கள் எல்லோரும் மதுவுக்கு அடிமையான வாழ்வை அடைவதில்லை. மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நோயைப் பூரணமாக ஒழிக்க முடியுமா? அல்லது கட்டுப்படுத்த முடியுமா? நுளம்பால் மனிதர்களுக்கு உண்டாகும் நோயைத் தடுப்பதற்குச் சுகாதார அமைச்சு என்ன செய்கின்றது? எவ்வாறு மலேரியா நோயைப் பரப்பிய நுளம்புகளை அழிக்க முடிந்தது?
அதேபோன்று மதுபானத்தை எப்படி ஒழிப்பது? நுளம்புக்கு அடிக்கும் புகையை பாருக்குள் அடிக்கலாமா? மதுபானங்களை உற்பத்தி செய்வதும் விற்பது இரண்டு கால் நுளம்புகளே. அதை குடிப்பதும் இரண்டு கால் நுளம்பே அப்படியானால் யாரைக் கொல்வது? ஆக மதுபானத்தை ஒழிப்பதுவும் மது இல்லாத நாட்டை உருவாக்குவது மனிதர்கள் நம் அனைவரதும் கைகளில் தான் உள்ளது.
எந்த மனிதனது மனம் குடிக்க வேண்டுமெனத் தூண்டுதலை ஏற்படுத்துகின்றதோ அதே மனம் குடிக்க வேண்டாமெனத் தீர்மானிக்க வேண்டும். திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்.... நில்மை நீளும். அத்தோட குடிக்க விரும்பும் மனிதர்களையும் குடிக்கு அடிமையாகிப் போன மனிதர்களையும் அதிலிருந்து மீட்கும் முயற்சிகளும் தொடர வேண்டும்.
குடிக்கத் தொடங்கும் பலர் நாளடைவில் மதுவுக்கு அடிமையாகி. அதிலே தங்கியிருக்கும் நிலைக்கு ஆளாகின்றனர் குறிப்பாக மிக இளவயதுகளில் குடிக்கத் தொடங்குபவர்களின் பலர் விரைவாக அடிமை நிலைக்குள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். உண்மையில் மது அடிமை நிலை என்பது ஒரு நோய் போன்றது ஒருவருடைய விருப்பத்துடனயே இந்த நோயை அவர் தனக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றார். எனவே அவரவர் சிந்தித்தால் மதுவுக்கு விடுதலையளிக்கலாம்.

**குடியை விடலாமா?'**

மதுப்பழக்கத்துக்கு அடிமையான ஒருவர் மருத்துவ உதவியுடன் அந்தப்பழக்கதை முழுமையாக நிறுத்திவிட முடியும். எமது சமூகத்தில் மதுவுக்கு அடிமையான ஒருவர் மதுபாவனையிலிருந்து விடுபடுவதற்கு முடிவு செய்தாலே, அவர் அதைப் பூரணமாகக் கைவிடுவார் என்பது நடைமுறைச் சாத்தியமான விடயமாக இருக்கும். குடிகாரர் கூறுவது போன்று குடிக்கும் அளவைக் குறைப்பதாலோ. குடிக்கின்ற இடைவெளியை அதிகரிக்கச் செய்வதாலோ, குடிக்கும் மதுபான வகைகளை மாற்றுவதாலோ அவரால் குடிப்பழக்கத்தி லிருந்து வெளிவர முடியாது. இவ்வாறு முயற்சிப்பவர்கள்கூட மிகக் குறுகிய காலத்திலேயே தமது முயற்சியில் தோல்வியடைந்து மதுவைத் தொடர்ந்தும் வழமைபோல் பாவிக்கத்தொடங்குவர். எனவே குடியை நிறுத்துவது என ஒருவர் முடிவு செய்தால், இனி எனது வாழ்நாள் முழுவதும் குடிக்காமல் இருப்பேன் எனத் தீர்மானிப்பதே இந்த நோயிலிருந்து அவர் விடுபடும் ஒரே வழியாக இருக்கும். நீங்கள் (குடிகாரர்)என்ன தீர்மானம் எடுக்கப்போகின்றீர்கள்?



எந்த மனிதனது மனம் குடிக்க வேண்டுமெனத் தூண்டுதலை ஏற்படுத்துகின்றதோ அதே மனம் குடிக்க வேண்டாமெனத் தீர்மானிக்க வேண்டும். திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்.... நிலமை நீளும். அத்தோட குடிக்க விரும்பும் மனிதர்களையும் குடிக்கு அடிமையாகிப் போன மனிதர்களையும் அதிலிருந்து மீட்கும் முயற்சிகளும் தொடர வேண்டும்.

facebook

■ உசிலமணி

# இந்தவார முகநூலில்...

பேஸ்புக்கில எப்பவும் கூட்டமைப்பு –சைக்கிள் கோஷ்டி என்று கன்னை பிரிஞ்சு மோதுவாங்கள். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு விசயத்தை வைச்சு இது நடக்கும். இந்தக் கிழமை, இரண்டு கோஷ்டியும் அடங்கிப் போய்க் கிடக்குது. வருசத்தோட அவங்களும் 'லீவு' எடுத்துப் போட்டாங்களோ தெரியேல்ல.

★★★



கிளிநொச்சி எம்.பியின்ர பிரத்தியேகச் செயலாளர், உதவி கேட்டுப்போன பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கேட்டதாய் ஒரு பதிவு பேஸ்புக்கிலயும், ருவிட்டரிலையும் உலாவுது. பிரத்தியேகச் செயலாளரோட, அந்தப் பெண் 'சற்' பண்ணின ஆதாரங்களையும் அதில இணைச்சு விட்டிருக்கினம். அந்த ஆதாரங்கள் உண்மையா? அல்லது 'போட்டோ சொப்பில கிரியேட்' பண்ணினதா? என்று தெரியேல்ல. குற்றத்துக்குள்ளாகியிருக்கிற தரப்பு பெரும் மௌனமாக இருக்குது...!

★★★



தமிழகத்தில் ஏதாவது போராட்டம் நடந்தா அதின்ர பாதிப்பு–பிரதிபலிப்பை இங்குள்ள 'சோசல் மீடியாப் போராளிகள்' வெளிப்படுத்துவர். டில்லியில் தமிழக விவசாயிகள் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டம் பற்றிய எந்தப் பதிவுகளையும் இவர்களிடமிருந்து இந்த வாரம் முழுக்கக் காணவில்லை. தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் அது தொடர்பில் தொடர்ச்சியாக அக்கறையுடன் பதிவை வெளிப்படுத்தி வருகின்றனர். ஏறு தழுவதலுக்காகத் திரண்ட அவர்கள் விவசாயம் என்றதும் ஏன் மௌனமானார்கள் என்பது புரியவில்லை.

★★★

மணிரத்தினத்தின்ர இயக்கத்தில வெளிவந்த 'காற்று வெளியிடை'யைக் கழுவி ஊத்துவதுதான் கடந்த வாரப் பரபரப்பாக இருந்தது. மொக்கையான படம் என்பதே எல்லோரது கருத்தாகவும் இருக்குது. அதற்கு எதிராக ஒருவரும் [illegible] இடவில்லை. ஒரு சில பதிவர்கள், மணிரத்தினம் ஆரம்ப காலத்திலிருந்து தமிழ்க் கலாசாரத்துக்கு முரணான விடயங்களையே படமாக்கி வருபவர் என்று விமர்சனங்களையும் முன்வைத்தனர். கீரைக் கடைக்கும் எதிர்க் கடை இருந்தால்தான் பஞ்சாயத்து நடக்கும். 'மணி' விடயத்தில் எல்லோரும் ஓர் அணியில் நின்றதால் இந்த விடயமும் சூடாக இல்லாமல் போய் விட்டது.



முகப்புத்தக அரட்டைகள் கடந்த வாரம் கனதியாக அமையவில்லை. இந்த வாரமாவது ஏதாவது சூடாகக் கிடைக்கின்றதா என்று பார்ப்போம்.

# இரண்டு கதைகள்

■ கை[illegible]வண்ணன்

## அழிதல்



பயிர் நிலத்தில் பயிருக்குள் செழித்திருக்கிறது பயனில்லாக் களை. பயிருக்கான அனைத்தையும் உறுஞ்சி ஏப்பமிட்டு இறுமாந்திருக்கிறது பூச்சூடி, அழகுகாட்டி.
பயிரினுஞ் செழிப்புக்கொஞ்சம் கூடத்தான். பயிரினும் வளர்ச்சியும் கூடத்தான். நிதனாமாய் வளரும் பயிரில் ஏளனம் மிகக்கொண்டு தலையை நிமிர்த்திச் சிரித்துக் கொள்கிறது.
அமைதிகாத்த பயிர் நிதானித்து வளர்கிறது. களையெடுப்பின் இறுமாப்புக்களையெல்லாம் களையுண்டங்கே காய்கிறது வெயிலில் பொசுங்கி. பயிர் அமைதிகுலையாநிதானத்தில் உயர்கிறது.
செழிப்புறு நிலமிருந்து காற்றெழுந்து பாடுகிறது தனது பட்டறிவின் பாடலை...
"பயனிலாப் பகட்டு... படுகுழிக்கு வழிகாட்டி."

## வெறுதல்



சோலை மரநிழலில் செக்கொன்றை இழுக்கின்றன இரு மாடுகள் மெதுவாக. உரப்பொலி ஏதுமில்லை. ஏவுவார் யாருமில்லை. பழகிய நடைவழியில் தம்பாட்டில் நடைபயில்கின்றன.
வண்டில் நுகமிழுத்து வீதியில் செல்கின்றன இன்னு மொரு சோடி ஏற்றங்களிலும் இடையிடையும் உரப்பொலிக்கிறது. திருப்பங்களிலெல்லாம் ஏவல்கள் தொடர்கின்றன. உலகைப் பார்த்தபடி நடக்கிறது இழுவைப் பயணம்.
செக்கிழுவைச் சோடி வண்டிச்சோடியின் அலைவு பற்றி ஏளனங்கள் செய்கின்றன. வெயில்... மேடு... பள்ளம்... தூசி .... புழுதி... எல்லாம் அலைவது பற்றியும் உரப்பொலிக்கும் ஏவலுக்கும் சேர்த்து கேலிகள் பலவிதமாய் பேசும். வண்டிச்சோடி தமக்குள் சிரிப்பதில் மட்டும் நிறைவடைகின்றன. வண்டிச்சோடியின் அமைதியைச் சாதகமாக்கிக் கேலிகள் ஓங்கும், உயரும், தொடரும். பார்த்திருந்த காற்றும் சிரித்தபடி புலம்புகிறது.

"அலைவின் பெறுதி அறிவின் உயர்ச்சி
சுற்றலில் கிடைப்பது தாழ்ச்சி"

# நூல் அறிமுகம்

**நூல் - 500 அமுத மொழிகள்**
**(மண்ணில் நல்லவண்ணம் வாழ**
**உலக அறிஞர்களின் அமுத மொழிகள்)**
**தொகுப்பு - அராலியூர் வி.செல்வரத்தினம் (ஜே.பி)**
**வெளியீடு - செல்வரத்தினம் கௌரி**
**விலை - 75 ரூபா**

### வாழ்வாங்கு வாழ்விக்கும் சிந்தனைகள்



மனிதர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அறிஞர்களும் ஆன்றோர்களும் நல்ல வழிமுறைகளையும் சிந்தனைகளையும் நூல் வழி நவின்றுள்ளனர். அத்தகைய 500 அமுத மொழிகள் அடங்கிய இந்த நூல், வையத்தில் மனிதர்கள் வாழ்வாங்கு வாழப் பெரிதும் உதவுகின்றது. புத்தகத்தில் வித்தாக விதைக்கப்பட்டுள்ள இந்த அமுத மொழிகளைச் சிந்தையில் விதைத்தால், வாழ்க்கைப் பயிர் செழிப்பாகும்.
வாழ்வே களிப்பாகும். எளிய மொழிநடையில், அரிய சிந்தனைத் தொகுப்புக்கள். ஒருமுறை படித்தாலே நமக்குள் கொண்டுவரும் நல்ல மாற்றங்கள். சக மனிதர்கள் மீது அன்பையும் பண்பையும் விதைக்கத் தூண்டும் இந்த நூல், ஒவ்வொரு மனிதர்களும் அவசியம் படிக்க வேண்டிய ஒன்று.
அராலியூர் வி.செல்வரத்தினம், ஒரு சிறந்த ஆன்மீக எழுத்தாளர். கணித, விஞ்ஞான உயர்வகுப்பு மாணவர்களுக்கு உகந்த நூல்களை ஆக்கிப் பெரும் புகழ் பெற்றவர். எண்ணற்ற நூல்களின் சொந்தக்காரர். எழுத்துப் பணிக்காகப் பல பட்டங்களும் பட்டயங்களும் பெற்றுள்ள அருளாளர். இன்றும் எழுத்துலகில் இயங்கிக் கொண்டிருக்கும் அயராத ஆளுமை. அவரது எழுத்துலகம் மலர்ந்து, மணம்வீச, வாழ்த்துக்கள்.

**நூல் - மறையாத சூரியன் (நாவல்)**
**ஆசிரியர் - மலரன்னை**
**வெளியீடு - மலரன்னை வெளியீடு, மாங்குளம்.**
**விலை -200 ரூபா**

### ஈழப்போராட்டத்தில் இன்னுமோர் ஆவணம்



ஈழப் போராட்டமும் அது தந்த வலிகளும் எண்ணற்றவை. அந்த வலிகளூடு ஒரு மாவீரனின் வரலாற்றைப் பேசி, ஈழப்போராட்டத்தில் இன்னுமோர் ஆவணமாகத் திகழ்கிறது மறையாத சூரியன் நாவல்.
கூட்டுக் குடும்பத்தில் சிறப்பாக வளர்க்கப்படும் ஆண் பிள்ளைகள் நால்வரில் இளைய மகன், விடுதலைப் போராட்டத்தின் பால் பெருவேட்கையுற்று அந்த வழியில் பயணிக்கின்றான். படித்துப் பெரிய ஆளாக வருவான் என்று பெற்றோரும் மற்றோரும் எதிர்ப்பார்திருந்த நிலையில், அவன் தனது பாதையை மாற்றிக் கொள்கிறான்.
ஈழத்துப் பெண் எழுத்தாளர் பட்டியலில், மலரன்னைக்கும் (திருமதி அற்புதராணி காசிலிங்கம்) ஓர் இடம் உண்டு. 1990களின் ஆரம்பத்தில் போர் அனர்த்தம் உக்கிரமாக இருந்த காலப்பகுதியில் எழுதத் தொடங்கிய இவர், இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார். "வேர் பதிக்கும் விழுதுகள்", "கீறல்" (சிறுகதைத் தொகுப்புக்கள்) முதலான நூல்களை வெளியிட்டுள்ளார். போர்ச் சூழலால்

நடராஜன் மைந்தன்

'வீடு வாசல் கட்டியாச்சு
பட்டுப்புடவையும்
நகை நட்டும் கூடச்
சேர்த்தாச்சு
போய்வர வண்டி
சினுங்கிடும் புதுக் கைபேசி
ரொக்கமாய்ப் பணம்
பெரியதாய் சேமிப்பு
எல்லாமும் கை கூடியாச்சு
அயல் நாடு போய்ச்
சம்பாதித்து
ஆயினும் ஆயினும்
இன்னமும் நெருடுகிறது
எல்லா வசதிகளுக்கும்
அடித்தளம் போட்டு
கைவிட்டுப்போன
அந்தச் சோளக்காடு'



# 'எங்கே தேடுவோம்...?'

> வண்ண மின் விளக்குகள் மூசிக் கொண்டு வரும் வாகனங்கள் எல்லாம் நிறைந்த ஆரவாரங்கள் புதிதாக வந்து விட்டன. ஆனால் சந்தியிலிருந்த அந்தப் பழமை! அதன் இயற்கை அழகு என்பவற்றை எங்கே தேடுவோம்?

வெகுசனசஞ்சிகை ஒன்றில் (இலக்கிய சஞ்சிகை அல்ல) பழைய இதழில் படித்த கவிதை இது. படித்தவுடன் அது மனதில் ஏற்படுத்திய ஒருவகை வேதனை களைய சற்றுநேரம் எடுத்தது.
மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர்(பல வருடங்கள் என்றுகூடக் கொள்ளலாம்) மத்தியானம் 12 மணிக்கு எங்கள் சந்தியில் நிற்கவேண்டி வந்தது. நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக.

விரிந்து அகன்ற காப்பெற் தெரு கடை வாசல்கள் வரை ஆக்கிரமித்திருந்தது. வெயில், தெருவில் தக தகவென்று மின்னியது. அதைவிடக் கொடுமை கடைத் தாழ்வரங்களை விட்டால் ஒதுங்கிக் கொள்ள இடமில்லை. அவ்விதமாக வெயில் பொசுக்கிக் கொண்டிருந்தது.

முன்னர் சந்தியோடு கரைந்த எங்கள் இளம் பொழுதுகளை நினைத்துப் பார்க்கின்றேன். தம்பியின் பேப்பர் கடையோடு ஒரு செரிமரம் கிளைவிரித்துப் பரந்திருந்தது. யாழ்ப்பாணம் போவதற்கு தகரத்திலான பஸ் நிலையம். அதனருகே பூக்கள் செரியும் தேமா மரங்கள். அதற்கப்பால் பிரமாண்டமான மரமும் அதன் நிழலும்.

சுன்னாகத்திலிருந்து இணுவில் ஆஸ்பத்திரி வரை குளிரக் குளிர நிழல் விழுத்தி எத்தனை வகையான பெரிய மரங்கள். தெருவால் களைத்துவரும் சைக்கிள் ஓட்டிகளும் சுமையோடு வருவோரும் அவற்றின் கீழ் ஆறி இமர்ந்து களைப்பாறிப் போவது எத்தனை ரம்மியமானது.

அந்தக் காலத்தில் பொம்பர்கள் குண்டு போடும்போதும் கெலி ஐம்பது கலிபர் துப்பாக்கியால் சுடும்போதும் பெரிய மரங்களுக்குக் கீழே நின்று அந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து விமானங்கள் போகும் திசையைக் கவனித்து தங்களைக் காப்பாற்றிக் கொண்ட மக்கள் எத்தனைபேர்

இப்போது எல்லாமே தலைகீழாகிவிட்டது. எந்தவொரு மரத்தையோ. இல்லை இல்லை...! ஒரு மரக் கொப்பையோ மேற்சொன்ன பகுதிகளில் காண முடியாது. பெரிய மரங்களும் அவை தந்த நிழல்களும் வெறும் கனவுக்காட்சிகளாகி விட்டன.
வியாபாரத் தளங்களோடு போட்டி போடும் நிலைக்கு வந்துவிட்ட கோயில்களாலும் உருப்பெருத்துவிட்ட சிமெந்துக் கட்டங்களாலும் சுற்றிவளைக்கப்பட்ட ஒரு வெம்மைப் பிரதேசமாக மாறிவிட்டது எங்கள் சந்தி.
சந்தியிலிருக்கும் பெரிய சந்தை மிக நீண்டபரம்பரியம் உடையது. கே.கே.எஸ் வீதி ஓரமாகச் சந்தையின் ஒரு எல்லையில் பழமைபேண் அடையாளங்களுடன் ஒரு கிணறும் இருந்தது.
கே.கே.எஸ் வீதி அகல விரிந்து காப்பெற் வீதியான பின்னரும் அந்தக் கிணறு இருந்தது. பிரதேச சபையின் பதவிக் காலாத்தின் இறுதிக்காலத்தில் அவசர அவசரமாக் கே.கே.எஸ் வீதி மானிப்பாய் வீதயைச் சேர்த்து 'ட' வடிவில் கடைத்தொகுதியைக் கட்டினார்கள்.
கிட்டத்தட்ட மூன்று கிணறுகள், பழமை வாய்ந்த வேப்ப மரங்கள் என்பன பலி கொடுக்கப்பட்டு அந்தக் கடைத் தொகுதி அமைக்கப்பட்டது.

வண்ண மின் விளக்குகள், மூசிக் கொண்டு வரும் வாகனங்கள் எல்லாம் நிறைந்த ஆரவாரங்கள் புதிதாக வந்து விட்டன.
ஆனால் சந்தியிலிருந்த அந்தப் பழமை! அதன் இயற்கை அழகு என்பவற்றை எங்கே தேடுவோம்?

இயற்கை வளங்களை எம் முன்னோர்கள் தான் தேடி வைத்தார்கள். நாங்கள் அவற்றை எந்தத் தயக்கமும் இல்லாமல் அழித்து வருகிறோம். இதை மட்டுமா? எங்கள் சொந்தப் பைகள் நிரம்பினால் மாத்திரம் போதுமானதா?

# செரோன் கவிதை

அந்தக் கிராமத்தில் எல்லாமே
அழகானது
பாவாடை தாவணி
இரட்டை ஜடை
ஐயோ என் குரலுக்கு
ஆயிரம் உறவுகள்
எல்லாவற்றுக்கும் மேலாக
தமிழ் மணம் வீசுவதால்

நான் படிப்பதற்காக
கண்விழிக்கும் அம்மா
என் தேவைகளை
அம்மாவிடம் கேட்கும் அப்பா
எப்போதும் என்னைக்
கட்டிக்கொண்டு தூங்கும்
என் தங்கை
என் காலையே சுற்றி வரும் எங்கள்
வீட்டு ஜிம்மி
எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் வீட்டு
அழகி அம்மம்மா
வாடைக்காற்றின் இதமான வருடலும்
மாட்டு வண்டி சலங்கை சத்தமும்

பிள்ளையார் கோவிலின்
காண்டாமணி ஓசையும்
எந்த சிம்பொனியிலும்
வாசிக்க முடியாத இசை

குப்பி விளக்கில் சுற்றி இருந்து
படித்த காலம் அலாரம் அடித்தும்
கண்ணை விட்டகலா தூக்கம்

டைனமோ சுற்றி
செய்தி கேட்ட தருணம்

என் குடும்பமும் வயலும் தோட்டமும்
பூமியில் நான் பார்த்த சொர்க்கம்
எங்கள் குருவிக்கூட்டில்
எறியப்பட்ட கல்
பேரினவாதம் தண்டனை எனக்கு
மோட்டம் என் குடும்பத்துக்கு



கால ஓட்டத்தில் நான்
தனிமரமாகி விட்டேன்
ஆனால் வடுக்கள்
அழியவில்லை
ஆத்திகம் பேசிய நான்,
இப்போது
நாத்திகம் பேசுகிறேன்
கல்லில் வடித்த தெய்வம்
கல்லாக இருப்பதில்
பயனில்லை

கோவப்படும் போதெல்லாம்
கண்களில் கண்ணீரே
வருகிறது
எம்மிடம் எதுவும் இல்லை
இருப்பும் இல்லை
இழப்பதற்கும் இல்லை

விழியோரம் ஒரு துளி நீர்
என் கன்னத்தை நனைக்கையில்
நிஜ உலகுக்கு
வருகிறேன் நான்.

# தென்கிழக்குத் திசையிலிருந்து.....!

## சீண்டாதீர்!

"அமைச்சர் ரிசாத் பதியுதீனை சீண்டிப் பார்க்க நினைக்க வேண்டாம். அப்படி சீண்டிப் பார்க்க நினைப்பது இந்த நல்லாட்சி அரசின் மடத்தனமான செயலாகும்" இப்படி சீறிப்பாய்ந்துள்ளார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித்தலைவரும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல்!

முசலி விவகாரம் தொடர்பிலான முரண்பாடுகள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தமது கொதிப்பை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

## வெள்ளரி பழசீஸன்

அம்பாறை மாவட்டத்தில் உஷ்ண கால நிலை மிகவும் உச்சத்திலிருப்பதால் பொது மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த அதிஉயர் உஷ்ணகால நிலை காரணமாக இந்த மாவட்டத்தில் வைரஸ் காய்ச்சல் , கண் நோய், அம்மைநோய்த்தாக்கங்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை உஷ்ணகாலநிலைக்குப் பொருத்தமான வெள்ளரிப்பழ சீஸனும் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

படுவான் கரை மற்றும் குளனிப் பிரதேசங்களிலிருந்து தினமும் கல்முனைப் பிரதேசத்துக்குக் கொண்டு வரப்படும் வெள்ளரிப் பழங்களை வாங்குவதில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். வியாபாரிகளுக்கும் இதனால் நல்ல வருமானம் கிடைத்து வருகின்றது.



அனார்கலி

## மழை வேண்டித் தொழுகை

இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கும் இங்கினியாகல சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளவென இந்த முறை குறைந்த அளவு ஏக்கர் காணிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் விவசாயிகள் பொது மக்கள் மேற்படி இங்கினியாகல சேனநாயக்க சமுத்திர வளாகத்தில் மழைவேண்டி சிறப்பு தொழுகையும் துஆ பிரார்த்தனையும் நடத்தியுள்ளனர்.

## வரவேற்பு வரவேற்பு




சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தவிசாளராகக் கட்சியின்மூத்த உறுப்பினர் ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை வரவேற்று அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் பதாகைகள், பனர்கள் தொங்கவிடப்பட்டுள்ளன.

குறிப்பாகப் புதிய தவிசாளரின் சொந்த ஊரான சாய்ந்த மருதிலுள்ள விளையாட்டுக்கழகங்கள், பொது அமைப்புகள் பனர்கள், பதாகைகள் மூலம் தம்து வரவேற்பைத் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தைக் கௌரவித்து வழங்கியுள்ள பதவி இதுவெனப் பலரும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

## சிறுபோகம்

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் இந்தமுறை சிறுபோக நெற்செய்கை 42 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்டச் செயலாளர் துஷித பி.வணிகசிங்க தெரிவித்துள்ளார்.

இங்கினியாகல சேனநாயக்க சமுத்திரத்தில் 770,000 ஏக்கர் அடிநீர் தேக்கி வைப்பது வழமையென்றும் மழை வீழ்ச்சி குறைவு மற்றும் வறட்சி காரணமாக 260,000 ஏக்கர் அடிநீர் மட்டுமே தற்சமயம் இந்தச் சமுத்திரத்திலுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே இந்த மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை 42 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## சந்திப்பு சந்திப்பு

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர்மட்டக் குழு ஒன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாணசபை விவசாய மீன்பிடித்துறை அமைச்சருமான கி.துரைராஜசிங்கத்துடன் விசேட சந்திப்பொன்றை நடத்தியுள்ளது.

சங்கத்தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தலைமையிலான மேற்படி உயர்மட்டக் குழுவினர் அமைச்சரின் மட்டக்களப்பு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் தொடர்பாகவும் நீண்ட பல வருடகாலமாகத் தமது தொழிற்சங்கமும், கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அளித்துவரும் ஆதரவு எதிர்கால ஆதரவு தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது மாகாண அமைச்சர் துரைராஜசிங்கத்துடன் கலந்துரையாடப்பட்டது.

குறித்த தேர்தல்களில் தமது தொழிற்சங்கம் மற்றும் தமது கட்சி உறுப்பினர்கள் சிலரையாவது வேட்பாளர்களாக கூட்டமைப்பு சார்பில் இணைத்துக் கொள்ள ஆவன செய்யுமாறும் தலைவர் லோகநாதன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கில் தமது தொழிற்சங்கம் அங்குள்ள தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக முதலமைச்சருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் எதுவும் நடைபெறவில்லையெனவும் தலைவர் லோகநாதன் அமைச்சரிடம் வருத்தமும் வெளியிட்டார்.



## சதியோ சதி



"முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்துவதற்கு பல்வேறு தரப்பினராலும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் சதிகள் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை "என முஸ்லிம் காங்கிரஸின் தேசியத்தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சூளுரைத்துள்ளார். சம்மாந்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறிய அவர் எதிராக செயற்படும் எதிரணியினருக்கு அரசியல் பலம் கிடையாது எனவும் சுட்டிக்காட்டினார்.

## தீர்வு பெற்றுத்தருவாரா?

"நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சகல அதிகாரமும் தன்கையிலிருந்தும் அந்தச் சந்தர்ப்பத்தில் தம்புள்ள பள்ளிவாசல் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத ஒருவராகவிருந்த அமைச்சர் ஹக்கீம் எவ்வாறு மறிச்சுக்கட்டி மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார்? இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நற்பிட்டி முனையில் நவீன வசதிகளுடனான புதிய லங்கா சதொச கிளையைத் திறந்து வைத்து அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட ஏழு லங்கா சதொச கிளைகளை அமைச்சர் ரிசாத் இந்த வாரம் திறந்து வைத்தார்.



# 'எனது தந்தையே 'பிக்காசோ' போன்ற கலைஞர்களைச் சிறுவயதில் அறிமுகப்படுத்தினார்'

## ஓவியர் ட்ராட்ஸ்கி மருது

வேலணையூர்தாஸ்

அண்மையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற ஓவியரும், இயங்குபடக் கலைஞரும், திரைப்படக்கலை இயக்குநரும் ஆன டிராட்ஸ்கி மருது அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரை யாழ் இலக்கிய நண்பர்கள் சார்பாக நேர்காணல் செய்தேன். மிகுந்த அன்புடனும், ஆர்வத்துடனும் இந்த நேர்காணலை அவர் தந்திருந்தார்.

**கேள்வி:** வணக்கம் நீங்கள் ஒரு புகழ்பெற்ற ஓவியர். அத்துடன் இயங்குபடக் கலைஞர் திரைப்படக்கலை இயக்குநர். மரபு ஓவியத்தின் அடிப்படைகளை நவீனத்துக்கு மாற்றியவர். கோட்டோவியங்களிலும், கணிப்பொறி, வரைகலையிலும் முன்னோடியாகக் கருதப்படுபவர் என்ற வகையில் உங்களது கலைப் பிரவேசம் மற்றும் இத்துறைக்குள் நீங்கள் நுழைவதற்கு காரணமாயிருந்த அம்சங்கள் பற்றிச் சொல்வீர்களா?

**பதில்:** எனது சொந்த ஊர் மதுரை. 1940 களில் இலங்கையில் பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்திலே கொல்வினாடி சில்வா, என். எம் பெரேரா ஆகியோர் அரசியல் தஞ்சமாக மதுரைக்கு வந்திருந்தார்கள். அவர்களோடு எனது அப்பாவுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அப்பாவும் டிராட்ஸ்கியவாதி (கம்யூனிசவாதி) ஆகினார். அதனாலேயே எனக்கு டிராட்ஸ்கி மருதென்று பெயர் வைத்தார். இத்தகைய பின்னணியால் சின்ன வயதிலேயே எனக்கு உலக இலக்கியங்கள் படிக்கிற வாய்ப்புக் கிடைத்தது. எனது தந்தையே , பிகாசோ போன்ற கலைஞர்களைச் சிறுவயதிலேயே அறிமுகப்படுத்தினார் . கையால் வரையப்பட்ட நாட்டுத் தலைவர்களின் படங்களும்,எங்கள் வீட்டில் இருந்தன, மேலும் எங்கள் வீட்டுக்கருகிலே பாரதிபுத்தக நிலையம் என்ற புத்தகக்கடை இருந்தது அதை நடாத்தியவர் எனது அப்பாவின் நண்பர். இங்கு ஓவியம் சார்பான பல புத்தகங்களைப் பெறக் கூடியதாக இருந்தது இதுவும் எனது ஓவிய நாட்டத்துக்குக் காரணமாயிற்று. மேலும் நான் வாழ்ந்த சூழல் கோயில்கள், திருவிழாக்கள், இசைநாடகம் என்று அரசியல்ரீதியாகவும், பண்பாட்டுரீதியாகவும் துடிப்புடன் திகழும் மதுரை. எனவே நாட்டுப்புற மரபு என்பனவெல்லாம் இயல்பாகவே எனக்கு ஓவியத்துறையில் நாட்டம் ஏற்ப்படக்காரணமாயின.

**கேள்வி:** அப்படியானால் உங்களுடைய ஆரம்ப ஓவியங்கள் மரபு சார்ந்தவையாகத் தான் இருந்தனவா?

**பதில்:** ஆமாம் ஆரம்ப நிலை அப்படியே அமைந்தது பின்னர் சென்னை அரசுகவின் கலைக் கல்லூரியில் சேர்ந்தேன். அந்நாளில் கல்லூரியின் முதல்வராக சிற்பி தனபால் என்பவர் இருந்தார். இவர் தமிழ்நாட்டில் மிகப்பெரிய ஆளுமை பெரியார், பாரதிதாசன் போன்றவர்களுடன் இவருக்கு நெருக்கமான தொடர்பிருந்தது. அவரது வழிகாட்டலில் நான் ஓவியம் சார்ந்த கலை அறிவைப்பெற்றேன். கல்லூரி முடித்த பின் மத்திய அரசுடைய ஆராய்ச்சி நிறுவனமொன்றில் பத்து வருட்ங்கள் பணியாற்றினேன். கோவில்களில் கீறப்பட்டிருக்கிற மரபு ஓவியங்களை பட்டுச்சேலைகளில் அதன் மரபு அழிந்துவிடாமல் நவீனமாக வடிவமைக்கிற வேலை. அதில் பல ஓவியர்களுடன் பணியாற்றினேன். இக்காலத்தில் ஓவியர் ஆதிமூலத்துடன் நட்பு ஏற்பட்டது. அவருடன் சேர்ந்து பிற்காலத்தில் வெகுசனப் பத்திரிகைகளில் பணியாற்றினேன்.

**கேள்வி:** வெகுசன பத்திரிகைகளில் எப்படியான ஓவியங்களை வரைந்துள்ளீர்கள்?

**பதில்:** 1970களில் சிறுபத்திரிகைகளிலும் 80களிலிருந்து ஆனந்தவிகடன், குமுதம் போன்ற வியாபாரப்பத்திரிகைகளிலும் முப்பது வருடங்களாகப் பணியாற்றினேன். இதில் அந்தக் காலத்தில் அவ்வளவு செலவாகிக் காணப்பட்ட நவீன ஓவியத்தை சாதாரண மக்களிடம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டேன். அந்த நேரம் இதை மக்கள் பெருமளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று அதைப் புரிந்து கொள்கிறார்கள்

**கேள்வி:** கலைத்துவமான ஓவியங்களுக்கும் சிலருடைய புத்தகங்களுக்காக உங்களால் கீறப்படும் ஓவியங்களுக்கும் இடையே எத்தகைய வேறுபாட்டை உணர்கிறீர்கள்.?

**பதில்:** பத்திரிகைளில் கதைக்காகக் கீறுவோம். தனிப்பட நான் வரையும் ஓவியங்கள் அதனுடைய தேவை கருதி சற்றுவேறுபட்டதாக இருக்கும்.

**கேள்வி:** - நீங்கள் ஓவியராக மட்டுமன்றி சினிமாத் துறை சார்ந்து இயங்குபடக் கலைஞர் மற்றும் திரைப்படக் கலை இயக்குநர் ஆகவும் அறியப்படுகிறீர்கள். அது பற்றி?





சின்ன வயதிலேயே எனக்கு உலக இலக்கியங்கள் படிக்கிற வாய்ப்புக் கிடைத்தது. எனது தந்தையே , பிகாசோ போன்ற கலைஞர்களைச் சிறுவயதிலேயே அறிமுகப்படுத்தினார் , கையால் வரையப்பட்ட நாட்டுத் தலைவர்களின் படங்களும்,எங்கள் வீட்டில் இருந்தன, மேலும் எங்கள் வீட்டுக்கருகிலே பாரதிபுத்தக நிலையம் என்ற புத்தகக்கடை இருந்தது அதை நடாத்தியவர் எனது அப்பாவின் நண்பர். இங்கு ஓவியம் சார்பான பல புத்தகங்களைப் பெறக் கூடியதாய் இருந்தது இதுவும் எனது ஓவிய நாட்டத்துக்குக் காரணமாயிற்று.

**பதில்:** எனக்குச் சிறுவயதில் இருந்தே சினிமாக்கலை சார்ந்த விருப்பம் ஏற்படக் காரணம் எனது தாத்தா சோலைமலை அவர்கள். சிறுவயதில் தாத்தாவுடன் தங்கிப் படித்தேன். அவருக்கு திரையுலகத்தோடு நிரம்பிய தொடர்பு இருந்தது. பாகப்பிரிவை, பதிபக்தி, பாவமன்னிப்பு போன்ற பலபடங்களுக்கு வசனகர்த்தாவாக இருந்தார். அந்தக் காலத்தில் அவருடன் இருந்து சினிமா தயாரிப்பு வேலைகளைப் பார்ப்பேன் அதிலிருந்து ஏற்பட்ட ஆர்வம் நான் பின்பு ஓவியத்துக்குள் வந்து பிறகு இயங்கு பட மற்றும் கலை இயக்குநராக 'தேவதை', 'சாசனம்', 'சரியான ஜோடி', 'முகம்', 'அசுரன்', 'ராஜகாளியம்மன்', 'பாளையத்தம்மன்' போன்ற முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்குத் திரைப்படங்களில் பணியாற்றினேன். ஓவியத்திலிருந்துதான் ஒளிப்படக்கலை வளர்ந்தது. அதிலேயிருந்து அனிமேஷன் வந்தது. இப்போ இது எல்லாத்தையும் கணினி ஒன்றாக்கியிருக்கிறது. இப்ப எல்லா ஊடகமும் கலந்து ஒரு ஊடகமாக மாறியிருக்கிறது .

**கேள்வி:** -சிறுவர் ஓவியம் நீங்கள் வரைந்ததுண்டா?

**பதில்:** சிறுவர் ஓவியம் பற்றி புத்தகம் எழுதியிருக்கிறேன் Look the moon என்ற புத்தகத்தைக் குறிப்பி டலாம். இதைத் தவிர ஓவியம் சார்ந்த பல புத்தகங்களை எழுதியுள்ளேன். எனது கோடுகளும் வார்த்தைகளும்என்ற புத்தகம் முப்பத்து மூன்று இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது

**கேள்வி:** எமது ஈழத்துத்தழிழ் அரசியல் சார்பான படங்களை வரைந்திருக்கிறீர்களா?

**பதில்:** 1984, 86களில் பல ஈழத்து அரசியல் அமைப்புகளுக்காக வேலைகளைச் செய்துள்ளேன். 2001 இல் மானுடத்தின் ஒன்று கூடல் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தேன். இல்குலாப், திருமாவளவன் ஆகியோரும் வந்திருந்தோம்.



**கேள்வி:** இலங்கைக்கு இம்முறை எதற்காக வந்திருக்கிறீர்கள் ?

**பதில்:** மட்டக்களப்பிலே உள்ள கவின் கல்லைக் கல்லூரியொன்றின் பாடத்திட்டம் சார்பாக அழைத்திருந்தார்கள். அத்தோடு யாழ்ப்பாணத்தில் நண்பர்களைச் சந்திக்கவும் வந்தேன் பலரை சந்தித்து உரையாட நேரம் போதவில்லை. இன்றே புறப்படுகிறேன்.

உலகக் காண்பியல் தளத்தில் தமிழ் அடையாளத்தை முதன்மையாகப் பதிவு செய்தவர்களில் ஒருவராகவும், வெகுமக்கள் ஊடகங்களில் செயற்பட்டு நவீன ஓவியத்தைக் கொண்டுசென்றவராகவும், காண்பியக் கலை வெளிப்பாட்டுக் கணினியைப் பயன்படுத்தியதில் முன்னோடியான வராகவும், இளங்கலைஞர்களை இயங்குபடத் துறையில் ஊக்கப்படுத்தி வளர்த்துவருபவராகவும் கருதப்படுற ஓவியர் மருது கிடைத்த சிறிதுநேரத்தை பொன்னான பொழுதாகமாற்றி இந்த நேர்காணலை அளித்தமைக்கு இலங்கை இரசிகர்கள் சார்பிலே நன்றிகள் .

ஸ்டோ ஸ்வாமி





# போராட்டக் களமாகியுள்ள இலங்கையின் வடமேற்குக்கரை!

இலங்கையின் வட மேற்கு நிலப்பரப்பை ஊடறுத்துச் செல்லும் மன்னார் - புத்தளம் வீதியை ஒட்டி நிலமீட்பு மற்றும் நிலக்காப்புப் போராட்டங்கள் வலுவடைந்திருக்கின்றன. மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் பிரதேச மக்கள், கடற்படையிடம் பறிகொடுத்த தமது நிலங்களை மீட்பதற்காகத் தொடர் போராட்டத்தைத் முன்னேடுத்த வண்ணம் இருக்கின்றனர். முள்ளிக்குளம் கடற்படை முகாமுக்கு முன்பாகக் கடந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் தற்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அதேவேளை, கடந்த 24ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்னும் வரைபில் கையொப்பமிட்ட பாதுகாக்கப்பட்ட வனப்பிரகடன வர்த்தமானி அறிவித்தல், வடமேற்குத் தேசங்களிலுள்ள மற்றொரு தொகுதி மக்களை போராட்டத்துக்குள் தள்ளியிருக்கிறது. குறித்த வர்த்தமானி அறிவித்தலை வலுவற்றதாக்கக்கோரி மறிச்சுக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்பாக முஸ்லிம் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம், ஊடகங்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

தொடர்ச்சியாக இரண்டு வாரங்களைத் தாண்டியுள்ள மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்களை கடந்த செவ்வாய்க் கிழமை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸிலி சுவாம் பிள்ளை ஆண்டகை அவர்களும் ஏனைய மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களும் சந்தித்திருக்கிறார்கள். இவர்களுடன் மன்னார் மாவட்ட ஜம்இயத்துல் உலமா சபை செயலாளர் மௌலவி அஸீம் மற்றும் புத்தளம் பிரதேச மௌலவிமாரும் போராட்டக் களத்துக்குச் சென்றிருக்கிறார்கள்.

### "முள்ளிக்குள முகாம் நீக்கப்படாது" - பிரதமர்

கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி முள்ளிக்குள முகாம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மானால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், தேசிய பாதுகாப்புக்குத் தேவையான பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த முள்ளிக்குக் கடற்படை முகாம் இடமாற்றப்படாதெனத் தெரிவித்திருந்தார். எனினும் முகாம் ஆக்கிரமித்துள்ளதில் சிறுபகுதி நிலத்தை விடுவிக்கவும் காணியை இழந்தவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவும் இணக்கம் தெரிவித்திருந்த அவர், முசலிப் பிரதேச செயலகத்துக்கு இது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ல் நிர்மலநாதனின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றிய பிரதமர், "குறித்த முகாம் அரசகாணியில் அமைந்திருப்பதால் முகாமை அகற்ற வேண்டிய தேவை இல்லை" என்றும் குறிப்பிட்டார்.

### அரச தலைவரின் வனப்பிரகடனம்!

அண்மையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்குப் பயணம் செய்தபோது ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் வைத்து கையொப்பமிட்டு அறிவிக்கப்பட்ட வனப்பிரகடன வர்த்தமானி அறிவித்தல், தமது வாழிடங்களுக்கும் வாழ்வாதார நிலங்களுக்கும் நிச்சயமற்ற நிலையைத் தோற்றுவித்திருப்பதாக அவலக்குரல் எழுப்புகிறார்கள் மறிச்சுக்கட்டி பிரதேச முஸ்லிம் மக்கள். சர்ச்சைக்குரிய வில்பத்து வனப்பகுதிக்கு வடக்கே உள்ள பிரதேசங்களான மாவில்லு, வெப்பல், கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, விளாத்திக் குளம், பெரியமுறிப்பு பிரதேசங்களை உள்ளடக்கி காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3அ பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட 40030.525 ஹெக்டயர் பரப்புடைய மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனம், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 10 கிராமங்களையும் உள்வாங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், குறித்த பிரதேசம், அரச காட்டுப்பகுதி என்றே வர்த்தமானி அறிவித்தல் குறிப்பிடுகின்றது.

### அரச தலைவர் ஊடகப்பிரிவின் மறுப்பு

குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பிரதேசத்திலிருக்கும் சமயத்தலமோ, கிராமமோ, வீடுகளோ, அரசாலோ அல்லது வனப்பாதுகாப்புத் திணைக்களத்தாலோ எடுத்துக்கொள்ளப்படாது என்று அறிக்கை ஒன்றினூடு தெரிவித்திருக்கும் அரச தலைவர் ஊடகப்பிரிவு, தனிப்பட்ட மற்றும் அரசியல் நலன்களுக்காகத் திரிபுபடுத்தப்பட்ட தகவல்கள் பரப்பப்படுவதாகவும் தெரிவித்திருக்கின்றது.

வில்பத்து வனப்பகுதியோடு இணைந்ததாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பேணற்காடு தொடர்பில் அரசில் அமைச்சு பதவி வகிக்கும் முஸ்லிம் பிரமுகர்கள் அரசதலைவருடன் நிகழ்த்தத் திட்டமிடப்பட்ட சந்திப்பு இன்னமும் கைகூடவில்லை. வர்த்தக, வணிகத்துறை அமைச்சரான ரிசாத் பதியுதீன் அரச தலைவருடன் இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தும் அது பலனளிக்காமல் அரசதலைவரின் செயலாளருடனேயே கடந்த 31ஆம் திகதி கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார். பின்னர் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றினூடாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்க முயற்சித்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அரச தலைவரைச் சந்திக்க எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

### கண்டனத் தீர்மானம்

இதேவேளை, வடமாகாணசபை தனது ஆளுகைக்குள் உள்ள இந்தப் பிரதேசம் தொடர்பில் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப் பெறக்கோரி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மினால் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணை ஆட்சேபனைகள் இன்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டி ருக்கிறது.

கேப்பாப்பிலவில்வேர்விடத்தொடங்கிய நில மீட்புப் போராட்டம் தற்போது வடமேற்கு கரைக்கும் விரிவுபட்டிருப்பதுடன் நிலக்காப்புத் தொடர்பான அச்சத்தையும் தோற்றுவித்திருக்கிறது. மக்களின் போராட்டத்துக்கு இசைந்து போகும் திருப்பங்கள் சில நல்லாட்சியில் நடந்திருக்கும்போது தமது பதவியேற்புக்கு வலுச்சேர்த்த முள்ளிக்குளம் மற்றும் மறிச்சுக்கட்டி மக்கள் தொடர்பில் அரசு எடுக்கப்போகும் தீர்மானம் பல தரப்புக்கள் மத்தியிலும் அது பற்றிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.



# பயிர்களை மேயும் வேலிகள்

சந்திரசேகர ஆசாத்



அண்மையில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள வர்த்தகர்களிடம் கப்பம் பெற்றாகவும், சில பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரியதாகவும் இரண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மீது முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவை தொடர்பாகக் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன.

அதன் பின்பு அது தொடர்பான விசாரணைகள் பற்றிய எந்தச் செய்திகளும் வெளிவராததால் இது மக்கள் மத்தியில் பெரும் கேள்விக்குறியை ஏற்றடுத்தியுள்ளது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸ் தரப்பின் உயர் மட்ட அதிகாரிகள் இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மக்கள் மத்தியில் அதிர்ச்சியும் பொலிஸ் மீதான நம்பிக்கையீனமும் ஏற்படுபடுவது தவிர்க்க முடியாததாகும்.

ஆனால் கடந்த காலங்களில் இடம்பெற்ற சில சம்பவங்களை உற்று நோக்கும்போது இப்படியான விடயங்கள் இந்த நாட்டில் இயல்பானவையாக மாறி விட்டனவோ! என்ற சந்தேகம் எழுகிறது.

**உயர் பொலிஸ் பீடங்களின் குற்றங்கள்**

வர்த்தகர் சியாம் கப்பம் கோரிக் கடத்திக் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக முன்னாள் கொழும்பு, வடக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனா கைது செய்யப்பட்டார். அவர் மீதான குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. தற்சமயம் அவர் சிறையிலுள்ளார்.

ரக்பி விளையாட்டு வீரர் தாஜுதீன் கொலை தொடர்பாகப் பொலிஸால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அந்தச் சாவு விபத்துக் காரணமாக இடம்பெற்றதெனக் கூறப்பட்டு அவரது சடலம் புதைக்கப்பட்டது. எனினும் உறவினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு அது தொடர்பான வழக்கு நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்டது மீள்விசாரணைகளின்போது சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் 2012ஆம் ஆண்டில் நடுவீதியில் வைத்து பலர் பார்த்திருக்கக் கொல்லப்பட்டுள்ளார். என்ற அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. காரில் குண்டடிபட்டுள்ளது என்ற கூறியிருந்தாலும் தற்சமயம் அவரது தலையில் கூறிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மூளை சிதறிச் சாவடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அப்படியானால் இதில் எது உண்மை? 5 வருடங்களின் பின்னர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் மாறியது எப்படி? இதன் விசாரணைகளுக்குப் பொறுப்பாயிருந்த உயரதிகாரிகளின் பாங்கென்ன?

> ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படவில்லை: சட்டத்தையும் நீதியையும் பாதுகாக்க வேண்டியவர்களே அவற்றை மீறுகின்றனர் என்றால் அங்கு நல்லாட்சி நிலவுகின்றது எனச் சொல்ல முடியுமா? மக்கள் நீதியைத் தேடி எங்கு செல்ல முடியும் ஒரு குற்றம் இடம் பெற்றதாக முறைப்பாடு செய்யும்போது அதன் முதல் முறைப்பாட்டைப் பொலிஸாரே பதிவு செய்கின்றனர்.

**மறைக்க முற்பட்ட பல்கலை மாணவர்களின் கொலை**

கடந்த வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். முதலில் அது விபத்து என நம்ப வைக்கப் பொலிஸார் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். சில சாட்சியங்கள் மூலமும். தலைக் கவசத்தைத் துளையிட்டுக் குண்டு பாய்ந்த அடையாளம் மூலமாகவும் பெலிசாரின் துப்பாக்கிச் சூட்டாலேயே அவர்கள் கொல்லப்பட்டார்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. தற்சமயம் இதிலீடுபட்ட பொலிஸார் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் சட்டம் நீதி என்பவற்றைத் தூக்கி எறிந்து குற்றவாளி களைக் காப்பாற்ற மேற்கொள்ளும் அதிகாரத் துஸ்பிர யோகங்களில் சிலவே இவையாகும். இது தொடர்பாக இன்றைய நல்லாட்சி அரசு எதையும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

**தீர்வைத் தீர்மானிக்கும்**
**பொலிஸாரின் செயற்பாடுகள்!**

மக்கள் நீதியைத் தேடி எங்கு செல்ல முடியும் ஒரு குற்றம் இடம் பெற்றதாக முறைப்பாடு செய்யும்போது அதன் முதல் முறைப்பாட்டைப் பொலிஸாரே பதிவு செய்கின்றனர். சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் முன்னிலைப் படுத்தப்படும் போது பொலிசாரால் தயாரிக்கப்பட்ட 'பி' அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் அடிப்படையிலேயே சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவார். அல்லது விளக்க மறியலுக்கு அனுப்பி வைக்கப்படுவார். சாட்சியங்களின் பதிவு உட்பட பொலிஸாரால் தயாரிக்கப்பட்ட சகல அறிக்கைகளும் சட்டமா அதிபர் திணைக்க ளத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கு குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்படும்.

ஒருவர் இன்னொருவரை ஒரு தடியால் தாக்கி காயப்படுத்தப்படும்போதோ கைகலப்பில் ஈடுபடும்போதோ கண்டுபிடிக்கப்பட்டுக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டால் அதற்குரிய தண்டனை மிகச் சிறியளவாக இருக்கும். அதே தாக்குதலைத் திட்டமிட்ட கொலை முயற்சி எனக் குற்றப்பத்திரிகையில் தாக்கல் செய்தால் அது பெரிய, தண்டனைக்குரிய குற்றமாகிவிடும். இதில் இருந்து நாம் ஒரு முக்கியமான விடயத்தை அறிந்து கொள்ள முடியும் அதாவது ஒரு குற்றம் நிகழ்ந்தால் உண்மை கண்டுபிடிக்கப்பட்டு நீதி வழங்கப்படுவதற்கு முதல் முறைப்பாடு 'பி' அறிக்கை சாட்சியங்களின் பதிவு என்பனவே மூல வேராக விளங்குகின்றன இவற்றைப் பொலிஸாரே தயாரிக்கின்றனர்.

பொலிஸாரால் தயாரிக்கப்படும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் குற்றப்பத்திரிகைகளின் பேரிலேயே விசாரணைகள் சட்டவாளர்களின் வாதங்கள் சாட்சியங்கள் என்பன முன் வைக்கப்பட்டு இறுதித் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

ஒரு குற்றத்தை இணங்காணுவதிலும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதிலும் குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படுவதிலும் பொலிஸாரின் பங்களிப்பு இவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

**நம்பிக்கையிழக்கும் மக்கள்**

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய சக்திகளிடமே அதிகார துஸ்பிரயோகம், சட்டவிரோத நடவடிக்கைகள் போன்றன இணங்காணப்படும்போது நியாயங்களையும் நீதியையும் தேடி அடைய முடியுமா என்ற கேள்வி மக்களிடையே எழுவதைத் தவிர்த்துவிட முடியாது. பொலிஸாரின் சட்டவிரோத நடவடிக்கைகள் பதில்பொலிஸ்மா அதிபர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள் என உயர் மட்டத்திலேயே இடம்பெறுவதாகச் செய்திகள் வெளிவரும் போது நீதியை தேடிப் பெறும் நம்பிக்கை எப்படிப் பெறமுடியும்.

குமரபுரம் படுகொலை வழக்கில் குற்றவாளிகள் சரியாக அடையாளம் காணப்பட்டும் சாட்சிகள் திட்டவட்டமாக வழங்கப்பட்டும் குற்றம் உறுதிப்படுத்தபட்ட நிலையில் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்ப்பு வழங்கி அப்படுகொலை சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட இராணுவத்தினர் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்படுகொலை வழக்கிலும் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் கடற்படையினர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

இப்படியான ஒரு புறச்சூழலில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக இடம்பெறவுள்ள விசாரணைகளில் பன்னாட்டு நிபுணர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் உள்ளகப்பொறிமுறை மூலமே விசாரணைகள் இடம்பெறும் எனவும் அரச தலைவர், தலைமை அமைச்சர் உட்பட அரச தரப்பினர் உறுதிப்படக் கூறிவருகின்றனர். அப்படியான உள்ளகப் பொறிமுறை மூலம் குற்றவாளிகளை இனங்காணவும் தண்டிக்கவும் இலங்கையில் தற்சமயம் நிலவும் நீதிக் கட்டமைப்பாலும் அதற்கு வெளியே நின்று அதன் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகளாலும் சாத்தியாமாகுமா?

ஏற்கனவே அரசதலைவர் எந்த ஒரு படையினரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என உறுதிபடக்கூறிவிட்டார் தலைமை அமைச்சரோ காணாமலாக்கப்பட்டோர் என எவரும் இல்லை அப்படியான சிலர் போரில் இறந்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்கு ஓடியிருக்கலாம் எனத் தெரிவித்து விட்டார். அமைச்சர் ராஜித சேனரத்னவோ போர்க் குற்றங்கள் எதுவும் நிகழவில்லை எனக் கூறிவிட்டார். அதாவது உள்ளகப் பொறிமுறை ஊடான தீர்ப்பு அரச உயர்மட்டத்தால் வழங்கப்பட்டு விட்டது இனி நடத்தப்பட வேண்டியது பன்னாட்டையும் தமிழ் மக்களையும் ஏமாற்றுமொரு கண்துடைப்பு நாடகம் தான். ஆனால் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் 2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணை வழங்கி இருந்தது. இப்போது மீண்டும் அவற்றை நிறைவேற்ற இரண்டு வருட அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே எவ்வளவு தான் சவால்களை விட்டாலும் திருகுதாளங்களை மேற்கொண்டாலும் போர்க்குற்றங்களிலிருந்து கொழும்பு அரசு தப்புவது இலகுவாக இருக்கப்போவதில்லை எனினும் இலங்கையின் ஆட்சியாளர்கள் நீதி நியாயத்தை மேயும் வேலிகளாகவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையை முன்வைக்க எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.





# கொரியத் தீபகற்பத்தில் நிலவும் போர்ப் பதற்றம்

## அமெரிக்க வல்லரசுடன் முண்டுகிறது வடகொரியா



பிரகாஸ்

உலக அரசியலின் முழுக் கவனமும் தற்போது கொரியத் தீபகற்பத்தில் மையம் கொண்டுள்ளது. உலக வல்லரசான அமெரிக்காவுக்கும், உலக வல்லரசாவதற்குக் கடும் முனைப்புக் காட்டும் வடகொரியாவுக்கும் இடையில் நேரடி மோதல்கள் வெடிக்க அதிகளவான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதனால் பீதியில் உறைந்துள்ளன உலக நாடுகள்.

**அமெரிக்கா - வடகொரியா பதற்ற நிலையின் பின்னணி**

ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ள பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறு ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதுவரை அந்த நாடு ஐந்து தடவைகள் அணுவாயுதச் சோதனைகளை நடத்தியுள்ளது. கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்காவின் நட்பு நாடுகளாக தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன. இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டுத் தாக்குதலை நடத்தியதால் தற்போது அதற்கான பரிகாரங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது அமெரிக்கா. அதாவது ஜப்பானுக்கு அதிக பாதுகாப்பு வழங்குவதையும் அதன் அபிவிருத்தியையும் அமெரிக்கா பொறுப்பேற்றுள்ளது. இதனால் வடகொரியா நடத்தும் அணுவாயுதச் சோதனைகள் தென்கொரியாவையும் ஜப்பானையும் பாதிக்கும் என்பதால் அதைக் கடுமையாக எதிர்த்தது அமெரிக்கா. அமெரிக்காவின் தலையீட்டைச் சிறிதும் விரும்பாத வடகொரியா, தன்னை உலக வல்லரசாகத் தொடர்ந்தும் தக்கவைக்கவே அமெரிக்கா முயல்கிறது. எமது ஏவுகணைகளில் பல அமெரிக்காவைத் தாக்கவே என்று தெரிவித்தது. இத்தகைய பின்னணியிலேயே இரு நாடுகளுக்கும் மத்தியில் தற்போது நிலவும் போர்ப் பதற்றம் உருவானது.

**பொருளாதாரத் தடை ஒரு விடயமே அல்ல**

பன்னாட்டுச் சட்டதிட்டங்களுக்கு மீறிய வடகொரியாவின் அணுஆயுதச் சோதனைகளைக் கடுமையாகக் கண்டித்த ஐக்கிய நாடுகள் சபை அந்த நாட்டின் மீது பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளை விதித்தது. குறிப்பாக வடகொரியாவின் முக்கிய ஏற்றுமதியான நிலக்கரியை முடக்கியது. நிலக்கரி ஏற்றுமதியை முடக்கினால் வடகொரியா அச்சமடைந்து அணுவாயுதச் சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பு. இதைவிட அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளும் வடகொரியா மீது தனித்தனியாக பொருளாதாரத் தடைகளை விதித்தன. ஆனால் உலகின் கணிப்பை பொய்யாக்கி தனது சோதனைகளை தொடர்ந்துகொண்டேதான் உள்ளது வடகொரியா. நிலக்கரி ஏற்றுமதியை முடக்கிய பின்னரும் வடகொரியாவுக்கு வருவாய் எவ்வாறு வருகிறது



என்று குழம்பிப் போயிருக்கின்றன உலக நாடுகள். ஐக்கிய நாடுகள் சபையும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

**கொரியத் தீபகற்பத்தின் தற்போதைய களநிலை**

சிரியாவுக்கு எதிரான தாக்குதலைத் தொடர்ந்து தனது அடுத்த இராணுவ நடவடிக்கையை வடகொரியா மீது திருப்பியுள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் மிகப்பெரிய விமானம் தாங்கிப் போர்க்கப்பலான வின்சன் தலைமையில் பல போர்க் கப்பல்கள் கொரியத் தீபகற்பத்தில் மையம் கொண்டுள்ளன. அமெரிக்காவின் இந்த நகர்வை அத்துமீறிய ஆக்கிரமிப்பு என்று எச்சரித்த வடகொரியா, நேரடி மோதலுக்குத் தாங்களும் தயார் என்று அறைகூவல் விடுத்தது. இதையடுத்து கிட்டத்தட்ட 25 முதல் 30 வரையான போர் விமானங்களை வின்சனின் மேல் தரையிறக்கியது அமெரிக்கா. பதிலுக்கு தனது போர்க் கப்பல்கள் பலவற்றையும் தயார் நிலையில் வைத்துள்ளது வடகொரியா.

**பக்கா பினான்**

வடகொரியாவுக்கு எதிராக போர் தொடுத்தால், அந்தப் பகுதியில் உள்ள ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகள் அமெரிக்காவுக்கே ஆதரவு தெரிவிக்கும். அமெரிக்காவை எதிர்க்கக்கூடிய கொரியத் தீபகற்பத்துடன் தொடர்புடைய நாடொன்றால் அது சீனா மட்டுமே. தற்போது சீனா தன்னை எதிர்க்க முடியாத நிலையை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் சீன அதிபர் ஜின் பிங் அமெரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்த சுற்றுப் பயணத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ளன. தற்போது பகையைப் புதுப்பிக்க சீனா விரும்பாது. ஆகையால் எதிர்ப்பே இல்லாமல் கொரியத் தீபகற்பத்தை கிட்டத்தட்ட தனது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது அமெரிக்கா.

**பல மடங்கானது சுய பாதுகாப்பு**

வடகொரியா - அமெரிக்கா மோதலென்பது ஒருபுறம் இருக்க ஏனைய நாடுகள் தமது சுயபாதுகாப்பைத் தேடிக்கொள்ள முழு மூச்சில் ஈடுபடுகின்றன. தென்கொரியாவில் வசிக்கும் 60 ஆயிரம் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பில் ஜப்பான் சிந்திக்கிறது. அதேபோல் ஜப்பானில் வாழும் தமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் தென்கொரியா பரிசீலித்து வருகிறது. சீனாவும் தனது சுய பாதுகாப்பை இரட்டிப்பாக்கியுள்ளது.

**ரஷ்யா எந்தப்பக்கம்**

வடகொரியா - அமெரிக்கா மோதலில் ரஷ்யா எந்தப் பக்கம் செல்லப்போகிறது என்பதே தற்போதுள்ள கேள்வி. அமெரிக்காவின் பரம எதிரியாக ரஷ்யா உள்ளது. குறிப்பாக சிரிய விவகாரத்தில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கடும் பகை நிலவுகிறது. அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்க வாய்ப்புத் தேடிக் கொண்டிருக்கும் ரஷ்யா, வடகொரியாவின் பக்கம் செல்லலாம்...! அல்லது நடுநிலை பேணலாம்...! கடந்த வாரம் சிரியாவில் நிலைகொண்டிருந்த மூன்றாம் உலகப்போரின் போர்ப்பதற்றம் இந்த வாரம் கொரியத் தீபகற்பத்தை ஆக்கிரமித்துள்ளது. இது தொடர்பான அடுத்தகட்ட நகர்வுகளைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.







**மேடம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது.

**இடபம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். குடும்பத்தினர் உதவிகரமாக செயற்படுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** சிறிய வேலைக்கும் விடாமுயற்சி தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை உருவாகும். லாபம் சுமாராக இருக்கும். விருந்தினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். நண்பரின் உதவி ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கன்னி:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**விருச்சிகம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உண்டாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பம் நிறைவேற்றும்.

**தனுசு:** முக்கிய செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்குவர்.

**மகரம்:** இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரி மிதமான வளர்ச்சி உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வங்கி நிதி உதவியுடன் விரிவாக்கப் பணியில் ஈடுபடுவீர்கள். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்கள் மனதை பாதிக்கலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | | 4 | | | | | 2 |
| | 6 | | | 2 | 8 | | | |
| | | | | 3 | | | 5 | |
| 8 | | 7 | | | | 1 | 2 | |
| | | | | | | | | |
| | 4 | 2 | | | | 3 | | 5 |
| | 7 | | | 6 | | | | |
| | | | 2 | 1 | | | 8 | |
| 2 | | | | | 3 | | 9 | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 9 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 | 7 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**முறைப் பொண்ணு**
உடன் இருக்கும்போது அருமை தெரியாத விடயங்களின் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் # அம்மா



**நண்பர் 1:** டேய் நாளைக்கு நான் சினிமாக்கு போறேன் நீயும் வாறியாடா
**நண்பர் 2:** முடிஞ்சா வாறேன்
**நண்பர் 1:** முடிஞ்சா பிறகு ஏண்டா வாற? படம் ஆரம்பிக்கும் போது வாடா..
**நண்பர் 2:** ?????

# அதிரடிக் காட்சியில் நடித்தார் த்ரிஷா



கர்ஜனை படத்துக்காக த்ரிஷா அதிரடிக் காட்சிகளில் டூப் இல்லாமல் நடித்துள்ளார்.

த்ரிஷா நடிப்பில் உருவாகிவரும் புதிய படம் 'கர்ஜனை'. இதில் த்ரிஷாவுடன் வம்சிகிருஷ்ணா, வடிவுக்கரசி, தவசி, ஆரியன், அமித், லொள்ளுசபா சுவாமிநாதன், ஸ்ரீரஞ்சனி, மதுரை முத்து, ஜாங்கிரி மதுமிதா உள்ளிட்ட பலரும் நடித்துள்ளார்கள். சுந்தர் பாலு என்பவர் படத்தை இயக்கியிருக்கிறார்.

இந்தப் படத்தின் கதை குறித்து இயக்குநர் சுந்தர் பாலு மனம் திறந்து பேசியுள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, ஐந்து நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து இளம் பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து அதைப் படமாக்கி சமூக வலைத்தளங்களில் பேரம் பேசி விற்று வருகிறார்கள். இந்த நிலையில், காதலிக்க மறுத்த பெண்ணைத் தனது நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்கிறார்கள். இதன் பின்னணியில் நடக்கும் கதையைப் படமாக்கி இருக்கிறேன். உண்மைச்சம்பவத்தை அடிப்படையாகவைத்து உருவாகியுள்ள இந்தப் படத்தில் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் த்ரிஷா நடித்துள்ளார். அதிரடிக்காட்சிகள் நிறைந்த இந்தப் படத்தில் த்ரிஷா தயங்காமல் டூப் இல்லாமல் நடித்துள்ளார்.

**ஒரே மாதிரி உலகத்தில ஏழு பேர் இருப்பாங்களாம்...**



**நம்ம நிலமையே மோசமாயிருக்கு... மிச்ச ஆறு பேரு, எந்த நாட்டில எந்தத் தெருவில பிச்சை எடுத்திட்டு இருக்காங்களோ....**

**டாக்டர்: ``சத்திர சிகிச்சை முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்''.**



**நோயாளி: ``ஓட்டோவுக்குக் கூடக் காசு இருக்காதா டாக்டர்?''**

**அக்கா உங்க வீட்டில சலவை இயந்திரம் இருக்கா...?**



**இப்பதான் அலுவலகம் போயிருக்குமா ஆறு மணிக்கு வந்திடும்...**

# வியர்வையைத் துடைக்காமல் விட்டால் ஏற்படும் பிரச்சினைகள்



கோடைக்காலம் என்பதால் அதிகமாக வியர்க்கும். அதிலும் என்ன தான் நன்கு குளிர்ச்சியான நீரில் குளித்துவிட்டு வந்தாலும், உடனே வியர்வை வெளியேற ஆரம்பிக்கும். அவ்வளவு மோசமான காலம் தான் கோடைக்காலம்.

கோடைக்காலத்தில் இப்படி வியர்க்கும் போது, அந்த வியர்வையை துடைக்காமல் உடலில் அப்படியே காய வைப்பதால் ஒருசில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். இங்கு வியர்வையை துடைக்காமல் காய வைப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

நன்கு வியர்த்து, அது அப்படியே உடலில் காயும் போது, ஒருவித அசௌகரியத்தை மற்றும் அரிப்பைச் சந்திக்கக்கூடும். ஏனெனில் வியர்வையானது அழுக்குகள் மற்றும் பக்றீரியாக்களை ஒன்று சேர்த்து, அரிப்பை உண்டாக்குகிறது.

வியர்வை உடலில் காயும் போது, அது ஆரம்பத்தில் அரிப்பை உண்டாக்கும். அந்த அரிப்பு அப்படியே நீடிக்கும் போது, அது பயங்கரமான தடிப்புக்களை ஏற்படுத்தும். பெரும்பாலும் இம்மாதிரியான நிலை உடலில் மடிப்புக்கள் உள்ள பகுதிகளில் தான் ஏற்படும்.

அதிகமாக வியர்வை வெளியேறும் போது, நம்மில் பலரும் காற்றாடிக்கு கீழே அமர்ந்து, வியர்வையை உலர்த்துவோம். ஆனால் இப்படி செய்யும் முன் மீண்டும் யோசித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இந்த செயலால் உடுத்திய ஆடையில் வியர்வை காயும் போது, அது நாள் முழுவதும் நம்மீது துர்நாற்றத்தை ஏற்படுத்தும்.

# நோய்களைத் தீர்க்கும் சின்ன வெங்காயம்

தினமும் ஒரு சின்ன வெங்காயத்தை சாப்பிட்டுவந்தால் உடலுக்கு பலன் கிடைக்கும். சின்ன வெங்காயத்தை தினமும் உணவில் சேர்த்துவந்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை பார்க்கலாம்.

தடிமன், நெஞ்சு படபடப்பு ஆகியவற்றுக்கு ஒரு சின்ன வெங்காயத்தை மென்று சாப்பிட்டு, வெந்நீர் குடித்தால் தடிமன் குறைவதுடன் தும்மலும் நின்றுவிடும் உடல் சமநிலைக்கு வந்துடும். இதய நோயாளிகளுக்கு இப்படியான பிரச்சினைகள் வரும்போது முதலுதவி சிகிச்சையாக இதை செய்யலாம்.

பொடியாக நறுக்கின சின்ன வெங்காயத்தை நல்லெண்ணெய் விட்டு வதக்கி, தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் இரத்தக்கொதிப்பு குறைந்து, இதயம் பலமாகும்.

மூலநோயால் அவதிப்படுவோர் உணவில் சின்ன வெங்காயத்தை அதிகமாகச் சேர்ப்பது நல்லது. நீர்மோரில் சின்ன வெங்காயத்தை வெட்டிப் போட்டு குடித்தாலும் பலன் கிடைக்கும்.

வெங்காயத்தில் குறைவான கொழுப்புச்சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம்.

வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாக சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக்கட்ட



கட்டிகள் உடனே பழுத்து உடையும். நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.

வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட சூட்டினால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும். வெங்காயச்சாறு சில வயிற்றுக்கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும். வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச்சாறை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும். வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும். வெங்காயத்தை வதக்கி தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட ஆண்மை பெருகும்.

பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தை தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது. வெங்காயம் வயிற்றிலுள்ள சிறு குடல் பாதையைச் சுத்தப்படுத்துகிறது. சமிபாடு அடைவதற்கு உதவுகிறது. வெங்காயம் குருதி அழுத்தத்தை குறைக்கும். இழந்த சக்தியை மீட்கும்.

வெங்காயம் சாப்பிட தொண்டை கரகரப்பு நீங்கி குரல் வளமாகும். தினமும் மூன்று வெங்காயம் சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் உதிரச் சிக்கல் நீங்கும். வெங்காயத்தைத் துண்டு துண்டாக நறுக்கி விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட, மலச்சிக்கல் குறையும். வெங்காயத்தை அரைத்து முன் நெற்றி, பக்கவாட்டு நெற்றியில் பற்றுப் போட தலைவலி குறையும்.

மாரடைப்பு நோயாளிகள், இரத்தநாள கொழுப்பு உள்ளவர்கள் சின்ன வெங்காயம் சாப்பிடுவது நல்லது. சின்ன வெங்காயச்சாறு கொழுப்பை உடனே கரைக்கும். வெங்காயத்தை ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டுவர உடல் குளிர்ச்சியும், மூளை பலமும் உண்டாகும். வெங்காயத்தை வதக்கிக் கொடுத்தால் பிள்ளைகள் விரும்பி சாப்பிடுவர். ஊட்டச்சத்து கிடைக்கும்.

# உடல் வெப்பத்தை குறைக்கும் சுரபி முத்திரை

சுரபி முத்திரையின் மற்றொரு பெயர் 'காமதேனு முத்திரை.' இதில் பஞ்ச பூதங்களும் மாறி மாறித் தூண்டப்படுவதால், காரணம் தெரியாத பல்வேறு நோய்கள் குணமாகின்றன. உடலில் உள்ள குணமாக்கும் சக்திகள் தூண்டப்படுகின்றன.

செய்முறை :

விரிப்பின் மீது சப்பணம் இட்டு அல்லது நாற்காலியில் அமர்ந்து கால்களைத் தரையில் ஊன்றிச் செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு முறை என ஒவ்வொரு முறையும் 10 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை செய்யலாம்.

இரண்டு கைகளையும் ஒன்றோடு ஒன்று இணைப்பதுபோல வைக்கவும்.

நடு மற்றும் ஆள்காட்டி விரல் ஒன்றாகவும், சுண்டுவிரல் மற்றும் மோதிர விரல் ஒன்றாகவும், கட்டை விரல் தனி என பிரித்து கொள்ள வேண்டும்.

இடது கை ஆள்காட்டி விரல் நுனியால் வலது கை நடுவிரலைத் தொட வேண்டும்.

இடது கை நடு விரல் நுனியால் வலது கை ஆள்காட்டி விரலைத் தொட வேண்டும்.

இடது கை சுண்டு விரல் நுனியால் வலது கை மோதிர விரலைத் தொட வேண்டும்.

இடது கை மோதிர விரல் நுனியால் வலது கை சுண்டு விரலைத் தொட் வேண்டும். கட்டை விரல்களை எதனுடனும் சேர்க்காமல், நெஞ்சைப் பார்த்தபடி நீட்ட வேண்டும்.

பலன்கள் :



★ அதிகப்படியான உடல் வெப்பம் குறையும்.

★ 'கௌட்' எனப்படும் வாதநீர் தேக்கத்தையும், ரூமேட்டிசம் (Rheumatism) எனப்படும் மூட்டு நோய்த் தாக்கத்தையும் குறைக்கும்.

★ செரிமானச் செயற்பாட்டைச் சீரமைத்து, நெஞ்செரிச்சல் மற்றும் வயிற்றுப் புண்கள் குணமடைய உதவுகிறது.



வீட்டுக்குள் செருப்பு பாவிக்கும் பழக்கம். தற்போது எம்மவர் மத்தியிலும் பெருகி வருகின்றது. குளியலறையில் சாதாரணமான செருப்புகளுடன் செல்லும் போது சறுக்கும் தன்மை உண்டு. இதனைத் தடுக்கும் வகையிலும் மற்றும் கோடை காலத்தி வியர்வையைச் சமாளிக்கும் வகையிலும் கொரியன் தயாரிப்பில் ஆண்களுக்கான செருப்புகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. **இவை 890 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.**

# கற்பு

(30ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குப் பின்னால் அவர்கள் தொடர்ந்து வருவதை உணர்ந்தேன். ஆனாலும் திரும்பிப் பார்க்கவில்லை. ஒரு செம்பில் தண்ணீரை வார்த்துக்கொண்டு நிமிர்ந்தேன். எனக்கு முன்னால் அந்த மூன்று காடையர்களும் நின்றார்கள். செம்பைப் பிடித்த எனது கையில் நிதானமில்லை.

"அது சரி ஐயா, எங்கே அம்மாவைக் காணவில்லை?"

நான் திரும்பித் திரும்பி மனத்துக்குள் ஒத்திகை பார்த்து வைத்திருந்த வசனங்களை ஒப்புவித்தேன். "அவ நேற்றே ஊருக்குப் போய் விட்டாவே"

'பளீர்' என்று என் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. செம்பும் தண்ணீரும் உருண்டு சிதறிற்று. என் கண்களுக்குப் பார்வை வருமுன்பே என் மடியில் கையைப் போட்டு ஒருவன் இழுத்தான் மற்றக் கையினால் வயிற்றில் ஒரு குத்து விட்டான்.

"தமிழ்ப் பண்டி பொய்யா சொல்லுகிறாய்? இன்று காலையிற் கூட உன் பெண்டாட்டியைப் பார்த்தேனே!"

மற்றவன் கேட்டான் "சொல்லடா! அவளை யார் வீட்டில் கொண்டு போய் ஒளித்து வைத்திருக்கிறாய்?" எனக்கு நெஞ்சிலே கொஞ்சம் தண்ணீர் வந்தது. இந்த முரடர்கள் நான் அவளை வேறு யார் வீட்டிலோ ஒளித்து வைத்திருப்பதாக நினைத்து விட்டார்கள். ஆகையால் இந்த வீட்டில் அதிகம் பார்க்கமாட்டார்கள். என் உயிர்போனாலும் சரி; அவள் மானம் நிலைக்கட்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

"என்னடா பேசாமல் நிற்கிறாய்?" குத்து! அடி! உதை! குத்து! அடி! உதை! குத்து! அடி! உதை!...... நான் இயக்கமின்றிக் கீழே விழுந்து விட்டேன். அம்மட்டிலும் அவர்கள் விடவில்லை. இரண்டுபேர் என்னைப் பிடித்துத் தூக்கினார்கள்.

"அவள் இருக்கிற இடத்தை நீ சொல்லமாட்டாய்?...கடைத்தெருப்பக்கம் காலியிலிருந்து லொறியில் வந்திருக்கிறான்கள். அவன்களிடம் உன்னைக் கொண்டுபோய்க் கொடுத்தால், உன்னைத் தலைகீழாகக் கட்டித்தூக்கித் தோலை உரித்தபிறகு கீழே நெருப்பைக் கொழுத்திச் சுடுவான்கள், உனக்கு அது தான் சரி!... வாடா!" என்று சொல்லி இழுத்தார்கள். என்னால் நடக்கவும் முடியவில்லை. அவ்வளவு அடி அகோரம். அவர்கள் என்னை இழுத்துக் கொண்டு நடு வீட்டுக்கு வந்துவிட்டார்கள். மேலே என் மனைவி... அந்த அறையையும் கடந்து வெளியே காலை வைத்துவிட்டார்கள்.

"நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்ற கூச்சலோடு என் மனைவி பறணிலிருந்து குதித்தாள்.

"அவரை விட்டுவிடுங்கள்!" என்று அலறிக்கொண்டே என்னிடம் ஓடி வந்தாள். அவர்கள் என்னை விட்டு விட்டார்கள். ஆறு முரட்டுக் கரங்கள் அவளை மறித்துப் பிடித்தன.

பிறகு...என்னை ஒரு மேசையின் காலோடு பின்கட்டாகக் கட்டினார்கள். அவளை - என் மனைவியை - குசினிப்பக்கம் இழுத்துக் கொண்டு போனார்கள். இரண்டொரு நிமிஷங்களில் இவளுடைய அலறல் கேட்டது. பிறகு அவள் அலறவில்லையோ, அல்லது நான்தான் இரத்தம் கொதித்து, மூளை கலங்கி, வெறி பிடித்து மயங்கி விட்டேனோ!

மறுபடி எனக்கு நினைவு வரும்பொழுது யாரோ ஒருவருடைய மடியில் படுத்திருப்பதை உணர்ந்தேன். என்னை அவ்விதம் ஆதரவாகத் தூக்கி மடிமீது வைத்திருப்பது யாரோ என அறிய ஒரு ஆவல். கண்களைத் திறந்து பார்த்தேன். என் மனைவி! மானம் அழிந்த என் மனைவி...

எத்தனையோ நூற்றாண்டுகளாக ஊறிப்போன 'கருத்து' என்னைச் சித்திரவதை செய்தது. மானத்தை இழந்த என் மனைவியின் மடிமீது தலை வைத்துப் படுத்திருக்கிறேனே..... என் உடம்பு கூனிக் குறுகியது. எழுந்து வெளியே நிலத்தில் விழுந்துவிட வேண்டுமென்று மனம் உன்னிற்று. என் முகத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர்; இன்னொன்று, இன்னொன்று. என் முகமும் அவள் கண்ணீரால் நனைய, மனம் சிந்திக்கத் தொடங்கியது. மூன்று விஷப் பாம்புகள் அவளைக் கடித்து இன்பத்தை உறிஞ்சின. அவள் உடலும் உள்ளமும் வேதனையால் துடித்தன. எரிந்துபோகிற உடலை யாரோ என்னவோ செய்தார்கள். மனம் சிறிதும் சம்பந்தப்படாதபோது அவளுடைய மானம் போய்விடுமா? செய்யாத குற்றத்துக்கு அவள் தண்டனை அடைய வேண்டுமா? மனம் சம்பந்தப்படாதபோது வெறும் உடலுக்கு நேர்ந்த தீங்கினால் மானம் அழிந்துவிடமென்றால் பிரசவத்துக்காக டாக்டரிடம் போகும் பெண்களெல்லாம்...

என் மனதில் எழுந்த அருவருப்பை வெளியே இழுத்தெடுத்துத் தூர வீசினேன். பரிதாபப்பட வேண்டிய, பாராட்டப்படவேண்டிய என் மனைவியின் பெருமை என் நெஞ்செல்லாம் நிறைந்தது. மெதுவாக அவள் கைகளைப் பற்றி என் மார்போடு அணைத்துக் கொண்டேன்.

பிறகு பொலிஸ் வந்தது. பேபி நோனாதான் அந்த உதவியைச் செய்தாளென்று பின்னால் தெரிந்து கொண்டேன், என்னவோ கஷ்டங்கள் எல்லாம் பட்டு, அகதி முகாமில் கிடந்துழன்று எப்படியோ இங்கே வந்து சேர்ந்தோம்.....

"இப்பொழுது சொல்லுங்கள் மாஸ்டர். பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறு செய்யப்பட்டால் அவள் மானம் அழிந்து விடுமா? அதற்காக அவள் உயிரையும் அழித்துவிட வேண்டுமா?......அப்படி உயிரை விட்டவளைப் பத்தினித் தெய்வமென்று கும்பிட வேண்டுமா? கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறியவள். அப்படிச் செய்வதே கற்புடைய மகளிர் கடமை என்ற சமூகக் கருத்தினால் உந்தப்பட்டு ஏற்றப்பட்டவள் பத்தினித் தெய்வமா, அல்லது பகுத்தறிவற்ற சமுதாயத்துக்குப் பலியான பேதையா?... சொல்லுங்கள் மாஸ்டர்...!"

கணபதி ஐயர் உணர்ச்சி மேலீட்டால் பொருமினார்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா! இப்படித்தான் பரம்பரை பரம்பரையாக இரத்தத்தில் ஊறிப்போன பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்காமலே அபிப்பிராயம் கொண்டு விடுகிறோம். நான்கூட எவ்வளவு முட்டாள்தனமாக அபிப்பிராயம் சொல்லிவிட்டேன்...ஐயா! பகுத்தறிவு, பகுத்தறிவு என்று சொல்லிக்கொண்டு தேவையில்லாத விஷயங்களில் எல்லாம் வாய்வீச்சு வீசுகிற பலரை எனக்குத் தெரியும். ஆனால் உண்மையான ஒரு பகுத்தறிவுவாதியை இன்றைக்குக் கண்டுபிடித்துவிட்டேன்" என்று சொன்னார் மூர்த்தி மாஸ்டர். ஐயர் வீட்டுச் சுவரிலே இருந்த மகாத்மாகாந்தியின் படம் அதிலே ஐயரின் சாடை தெரிவதுபோலத் தோன்றிற்று மூர்த்தி மாஸ்டருக்கு.

## சொற்சிலம்பம் போட்டி இல: 467

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | |
| 6 | | | 7 | | ■ | | ■ |
| | ■ | 8 | | | | ■ | 9 |
| | ■ | | ■ | | ■ | 10 | |
| ■ | 11 | | 12 | ■ | 13 | | |
| 14 | | ■ | | ■ | 15 | | |
| 16 | | 17 | | | ■ | | ■ |
| ■ | 18 | | | ■ | 19 | | |

**அனுப்புபவர் பெயர்:..............................................**
**முழுமையான தபால் விலாசம்: ..............................**
..............................................................................
**கையொப்பம்:.......................................................**

### இடமிருந்து வலம்

1. சீதைக்கு மற்றொரு பெயர்
4. மோதல்
6. புல்வெளி
8. விரைவானவன்
10. இணங்காதிரு
11. பெரும்பாலும் வீட்டுச் சுவர்களில் காணப்படும் ஒரு சிறிய உயிரினம்
13. கருத்திற் கொள்
14. சந்திரன்
15. உடம்பின் சில பகுதிகளில் படருவது
16. பாதுகாத்து வைக்கும் இடம்
18. தங்கத்தை உருக்கிச் சுத்தம் செய்தல்
19. ஒரு காட்டு மிருகம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நிகழ்வு
2. அழகு
3. நொண்டி நடத்தல்
4. நீர் நிலையிலிருந்து நிலப் பகுதியைச் சென்றடை
5. யானை
7. கம்பு
9. சூடு தணிதல்
10. மகளது கணவன் / சகோதரியின் மகன்
11. பதித்தல்
12. சிவனது மறு வடிவம்
13. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேர்மனியின் முக்கிய எழுத்தாளர்.
14. மிகப் பெரிய
17. உராய

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 465 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பகுப்பு (4) அவதி (6) தவறு (7) கவிஞன் (9)சுருதி (10) துவை (11) மேலிடம் (12) ஆவி (14) சால (15)மரியாதை (16)மிதி (17)ஆல் (18)கயிறு (19)அம்மி

**மேலிருந்து கீழ்**
(1) பதிகம் (2) குருவி (3) புதன் (4) அறுசுவை (5)திகதி (8)ஞமலி (10)தும்மல் (11)மேலதிக (12)ஆயாசம் (13) விதை (14)சாமி (17) ஆறு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 465இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
எஸ்.சுவிற்சனா,
"பால கிருஷ்ணா", உடையாவளவு,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
வி.ரகு சர்மா,
தாழங்குளம் பிள்ளையார் கோவில்,
அத்தாய், பூநகரி.

**3 ஆம் பரிசு**
செல்வி கு.அஸ்வினி,
இல. 29 சந்தன மாதா கோவில் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
செ.நடேசன்,
உப தபாற்கந்தோரடி, 6 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு,
வேலணை.

**5 ஆம் பரிசு**
ச.கணபதிப்பிள்ளை,
கிந்துசிட்டி, புலோலி தெற்கு,
புலோலி.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி ப.சந்திராதேவி,
செபஸ்தியார் வீதி, சில்லாலை,
பண்டித்தரிப்பு.

சூ.ஞானப்பிரகாசம்,
4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தேவிகா பத்மராஜா,
மடுமாதா வீதி, பெற்றா,
மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி இல.467 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள். நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (26.04.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.467இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.04.2017 ஞாயிறு உத்யனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 465 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்தவாரம்

## 16.04.2017 முதல் 22.04.2017 வரை

உங்களுக்கு எப்படி?

### மேடம்

சுக்கிரன், கேது நற்பலன் தருவர். சாதனை நிகழ்த்துவீர்கள். தம்பி, தங்கைக ளுக்கு உதவுவீர்கள். வாகனப் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பர்களின் பேச்சு வருத்தம் தரலாம். மனைவி வழி உற வினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபா ரத்தில் இடையூறு ஏற்பட்டாலும் சரி செய்யும் அள வுக்கு இருக்கும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு அதிகமாகும். பெண்கள், செலவில் சிக்க னம் பின்பற்றுவர். மாணவர்களுக்குப் படிப்பில் கவனம் வேண்டும்.

### இடபம்

சூரியன், புதன், குரு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும். வசீகரமா கப் பேசுவீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும். புத் திரர்கள் பெற்றோர் சொல் கேட்டுச் செயற்படுவர். எதிர்ப்பு விலகும். மனைவியின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். வெளி யூர் பயணத்தில் பாதுகாப்பு வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பணியாளர்கள், அதிக தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள், பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது.

### மிதுனம்

பெரும்பான்மை கிரகங்களால் ராஜ யோக பலன் கிடைக்கும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். பணிகளை ஆர்வமு டன் நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் புதிய விஷயங் களை அறிந்து கொள்வர். நோய் தொந்தரவு குறையும். நண்பர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக் கும். மனைவியின் சொல்லும் செயலும் குடும்ப நலன் பேணு வதாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள், நிர் வாகத்திடம் நற்பெயரும், சலுகையும் பெறுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக் கும். மாணவர்களுக்கு, படிப்பில் ஞாப கத்திறன் மேம்படும்.

### கடகம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு நற்ப லன் தருவர். சூழ்நிலைக்கேற்ப முடிவெ டுப்பது நல்லது. உங்களை அவமதித்தவர் கள் அன்பு காட்டும் சூழல் உருவாகும். பய ணங்களால் நன்மை ஏற்படும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். புத்திரர்கள் விரும்பிக் கேட்ட பொருள்களைச் சிக்கனச் செலவில் வாங்கித் தருவீர்கள். உடல்நிலையில் கவனம் வேண்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். மனைவி கருத்து இணக்கமுடன் செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். பணியாளர்கள், நிர்வா கத்தை அனுசரித்து செல்வது நல்லது. மாணவர்களுக்குப் படிப்பில் முன்னேற் றம் ஏற்படும்.

### சிங்கம்

புதன், குரு, சுக்கிரனால் நன்மை ஏற்படும். மனதில் அமைதி நிறைந்தி ருக்கும். உங்களின் அறிவுரை நண்பர்கள் மனதில் நல்ல மாற்றம் தரும். வாகனத்தில் பரா மரிப்பு தேவைப்படும். புத்திரர்களின் படிப்பு, செயல் திறன் மேம்படும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர் கள். மனைவியுடன் இருந்த கருத்து வேறுபாடு விலகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிக உழைப்பால் சீராகும். பணியாளர்கள், பாதுகாப்பில் உரிய கவனம் பின்பற்ற வேண்டும். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது. மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர் வழி காட்டுதல்படி செயற்பட வேண்டும்..

### கன்னி

கேது, சந்திரன், சனீஸ்வரர் நல்ல பலன் தருவர். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை நடக்கும். வீடு, வாகன பாதுகாப் பில் கவனம் வேண்டும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். பூர்வீக சொத்தால் வளர்ச்சி யும், வருமானமும் கூடும். விவகாரங்கள் அணுகாத சுமுக வாழ்வு அமையும். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க அதிக உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள், பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிய வேண் டும். பெண்கள், இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள், சாகச விளை யாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

### துலாம்

சூரியன், புதன், ராகு அளப்பரிய நன்மை தருவர். உற்சாகமாகப் பணிபுரிவீர்கள். திட் டங்கள் முழு அளவில் பலன் தரும். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். புத்திரர்களின் எதிர்கால நலன் சிறக்க பணி செய்வீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செய் வீர்கள். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணிகளை நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்களுக்கு, சமையலறை பணிகளில் கவனம் வேண்டும். மாணவர்களுக்குப் படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்

செவ்வாய், குரு, சுக்கிரன் அனுகூலமாக உள்ளனர். பேச்சில் உண்மை நிறைந்திருக்கும். உறவி னர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பயணங் களை பயன் அறிந்து மேற்கொள்வீர்கள். புத்திரர்கள் விரும்பிய பொருளை தாராள செலவில் வாங்கித் தருவீர் கள். பூர்வ புண்ணிய பலன் நன்மை தரும். மனைவியின் அன்பு மனதை நெகிழச் செய்யும். சுற்றுலா சென்று வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்க ளின் ஆதரவு அதிகரிக்கும். பணியாளர்கள், அலு வலகத்தில் விண்ணப்பித்த கடன் கிடைக் கும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் மனம் அறிந்து நடந்து கொள்வர்.

### தனுசு

கேது, சுக்கிரன், புதன் தாராள பணம் தருவர். உங் களை குறை சொல்பவர்களி டம் இருந்து விலகி இருங்கள். கடும் முயற்சியால் திட்டங்கள் வெற்றி பெறும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாக னத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் மகிழ்ச்சி யாக இருப்பதுடன் படிப்பு, வேலையில் முன்னேறுவர். உடல் நிலையில் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பணியாளர்க ளுக்கு, மேலதிக நேரத்துக்கு ஊதியம் உள்ளிட்ட சலுகைகள் கிடைக்கும். பெண் கள், குழந்தை கள் நல னுக்கான திட்டங்களை வகுப்பர்.

### மகரம்

சூரியன், சுக்கிரன், குரு, சனீஸ்வரர் நிறைந்த பலன்களைத் தருவர். தாமதமான திட்டங்களில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் பேச்சு பிறர் மனதை வசீகரிக்கும். வாகனத்தில் பராம ரிப்பு செய்வதால் பயணங்கள் எளிதாக அமையும். புத்தி ரர்களுடன் சுமூகமான உறவு இருக்கும். அவர்களது திட்டங்கள் பலன் தருவதாக இருக்கும். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் கருத்துக்கு முக்கியத்து வம் கொடுங்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற் பட்டு லாபம் கூடும். பணியாளர்கள், பணியில் ஆர்வ முடன் ஈடுபடுவர். பெண்கள், உறவினர் குடும்ப நிகழ்ச்சி களுக்கு உதவுவர். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவர்.

### கும்பம்

செவ்வாய், சுக்கிரன் ஓரளவு நன்மை தருவர். உடன்பிறந்தவர் களின் உதவி உண்டு. பயணத்தால் நன்மை உண்டு. புத்திரர்களால் பிரச்சினை. ஏற்பட்டு விலகும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வழக்கு, விவகாரங்களில் அனுகூ லம் ஏற்படும். மனைவி அன்புடன் நடந்து கொள்வார். வெளியூர் பயணம் ஓரளவு நன்மை தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று இலாபம் கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பில் மனம் மகிழ்வர். மாணவர்கள், படிப்பில் சிறப் பான தேர்ச்சி பெறுவர்.

### மீனம்

குரு, சுக்கிரன், ராகு அனுகூல பலன் தருவர். திட்டங்கள் கடும் முயற்சி யால் நிறைவேறும். உடன்பிறந்தவர்களு டன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வாகனங்க ளில் செல்லும்போது கவனமாக இருக்கவும். புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப் பதால் எதிர்கால சிரமங்களைத் தடுக்கலாம். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தாருங்கள். வீட்டில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரம் செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நேர்த்தியாகப் பணிபுரிவர். பெண்கள், உற வினர் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள், சிறப்பாகப் படிப்பர்

# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!



எம்.ஐ.முபாறக்



## சந்திரிகாவைத் தகாத வார்த்தைகளால் திட்டிய மகிந்த

அசைக்கவே முடியாது என்று எல்லோராலும் கருதப்பட்ட மகிந்தவின் ஆட்சி, 2015 ஆம் ஆண்டில் கவிழ்வதற்கு மூல காரணமாக இருந்தவர் முன்னாள் அரசதலைவர் சந்திரிகா தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் கிடையாது.
2005இல் அரச தலைவர் பதவியில் இருந்து சந்திரிகா ஓய்வு பெறத் தயாரான போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவராகவும் 2005இன் அரச தலைவர் வேட்பாளராகவும் மகிந்தவை அவரே நியமித்தார். சிறீமாவுக்கு எதிராக மகிந்த செய்த சதிகள் அனைத்தையும் நினைவுபடுத்தி மகிந்தவை நியமிக்க வேண்டாம் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கூறியும், அதைப் பொருட்படுத்தாமல் சந்திரிகா அவரையே நியமித்தார். இருந்தும், 2005ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே அவர் அவரது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினார். தேர்தலில் வெற்றி பெற்ற மகிந்தவுக்கு வாழ்த்துச் சொல்வதற்கு சந்திரிகா தொலைபேசி அழைப்பை எடுத்தார். சந்திரிகா தனக்கு இப்படியொரு வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி கூறாத மகிந்த அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டத் தொடங்கினார்.
இதைச் சற்றும் எதிர்பார்த்திராத சந்திரிகா நிலை குலைந்து போனார். எதற்காக இப்படி நடந்துகொள்கின்றார் என்று சந்திரிகாவுக்கு விளங்கவில்லை. சந்திரிகா எதுவும் பேசாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். சில நிமிடங்கள் வரை திட்டித் தீர்த்தார் மகிந்த.
இறுதியில் 'நன்றி' என்று கூறி தொலைபேசியை வைத்துவிட்டார் சந்திரிகா. இதன் பிறகு சந்திரிகாவின் பாதுகாப்பைக் குறைத்து சந்திரிகாவுடன் தேவை இன்றி மோதத் தொடங்கினார் மகிந்த .
அன்றிலிருந்து ஆரம்பமானது தான் மகிந்தவுக்கு எதிரான சந்திரிகாவின் ஆட்டம். பின்னர் அந்த ஆட்டம் வெற்றியும் பெற்றது. இந்தச் சம்பவத்தை மகிந்தவின் சகாக்கள் சிலர் அண்மையில் மகிந்தவுக்கு நினைவு படுத்தினார்களாம்.



## எட்டிப் பார்க்கிறார் விமலின் மகன்

அரச வாகனத்தைத் தனது தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டின்கீழ் கைதாகித் தடுப்புக் காவலில் இருந்து இப்போது பிணையில் வெளியில் வந்திருக்கின்றார் விமல்வீரவன்ச.
விமல் இவ்வாறு கைது செய்யப்பட்டமை அவரது பிள்ளைகளுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டதாம். இதனால் அவர்கள் ஒழுங்காகப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லையாம். அவரது மகன் மைதானத்துக்குச் சென்று நண்பர்களுடன் இணைந்து விளையாடுவதற்கும் தயங்குகிறாராம்.
மாலைப் பொழுதில் விளையாடச் செல்வதற்கு அவரது மனம் ஆசைப்பட்டாலும் நண்பர்கள் கிண்டலடிப்பார்கள் என்று அஞ்சி வீட்டுக் குள்ளேயே முடங்கிவிடுகின்றாராம். இருந்தும், அவர் வீட்டில் உள்ள மரம் ஒன்றின் கீழ் நின்று மைதானத்தில் விளையாட்டு நடப்பதை எட்டிப் பார்த்து இரசித்து வருகின்றாராம்.
விமல் வீரவன்சவின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயஷாந்த அண்மையில் வீர வன்சவின் வீட்டுக்குச் சென்றபோது இந்தக் காட்சியைக் கண்டு மிகவும் கவலைப்பட்டாராம்.



## மோடியாக மாறிய மேர்வின் சில்வா

மகிந்தவின் ஆட்சியில் அவரது செல்லப் பிள்ளையாகத் திகழ்ந்தவர் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா. மகிந்தவின் அதி 'விசுவாசியாகத் திகழ்ந்த அவர், ஏதாவது ஓர் அடாவடியில் இறங்கிச் சர்ச்சையில் சிக்கிக்கொள்வது வழமை. அவரைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகாரத்தைக் கையில் எடுத்துச் செயற்பட்டவர்அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களனித் தொகுதிக்கு அமைப்பாளராக இருந்து அந்தத் தொகுதியையே ஓர் ஆட்டம் ஆட்டினார்.
ரூபவாகினிக்குள் புகுந்து அவர் நடத்திய தாக்குதலால் அவர் மேலும் பிரபல்யமானார். இவ்வாறு ஒரு புலி போன்று வலம் வந்த அவர் இப்போது பூனையாக அடங்கிக் கிடக்கின்றார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குச் சுதந்திரக் கட்சியின் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்காததால் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி உலகப் பிரபலங்களைப் பிரதிபண்ணத் தொடங்கிவிட்டார். அவ்வாறு இவரிடம் சிக்கியவர் தான் இந்தியப் பிரதமர் மோடி.
மேர்வின் தற்செயலாகத் தாடி வளர்க்க அந்தத் தாடி மோடியின் சாயலை மேர்வினுக்குக் கொடுக்க அதை அப்படியே பிடித்துக் கொண்டார்.
ஏதோ ஒரு காரணத்துக்காக மேர்வின் தாடியை வளர்த்தார். சில நாள்களாக அதை அவர் வழிக்கவில்லை. மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா திருமணம் முடிக்கப் போகும் பெண் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்கு மேர்வின் தாடி சகிதம் குடும்பத்துடன் ஈரான் சென்றார்.
ஈரானில் வைத்து மாலக மேர்வினை ஒளிப் படம் எடுத்து அவரது நண்பர்களுக்கு அனுப்பினார். அந்தப்படத்தைப் பார்த்த நண்பர்கள் மேர்வின் வெள்ளைத் தாடியுடன் மோடிபோல் இருக்கின்றார் என்று சொல்லிவிட்டனர்.
அவ்வளவுதான் இப்போது அந்தத் தாடியுடனேயே வலம் வருகின்றார் மேர்வின். மோடியைப் போன்று கையசைக்கின்றார். மோடிபோல் செல்பியும் எடுக்கின்றாரோ தெரியவில்லை...? இப்போது அவர் தன்னை ஒரு மோடியாகவே நினைத்துக்கொண்டு திரிகிறார்.

## இவரும் பஸ்சில்தான் செல்கிறாராம்

ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகிவிட்டால், அன்றிலிருந்து அவரது ஆடம்பர வாழ்க்கை ஆரம்பமாகிவிடும். மக்கள் சேவை என்பதை விடவும் பணம் சம்பாதிக்க வேண்டும், ஆடம்பரமாக வாழ வேண்டும், தேர்தலில் தான் செலவழித்த பணத்தை மீளப் பெற வேண்டும் என்ற நோக்கில்தான் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் காய் நகர்த்துவர்.
ஓடுவதற்கு மோட்டார் சைக்கிள்கூட இல்லாமல் இருக்கும் ஒருவர் நாடளுமன்றம் வந்ததும் 5கோடி ரூபா பெறுமதியான வாகனத்துக்குச் சொந்தக்காரராகின்றார்...! கொழும்பிலும் அவரது சொந்த ஊரிலும் பல கோடி ரூபா மதிப்புள்ள மாளிகைகள் அவரால் கட்டப்படுகின்றன. ஆனால், இவ்வாறான வாழ்க்கையில் இருந்து வேறுபட்டவர்கள்தான் ஜே.வி.பியினர். அவர்கள் பயணம் செய்வது சாதாரண வாகனங்களில்தான். நடைபாதைக் கடைகளில் பொருள்கள் கொள்வனவு செய்வர். அவர்களுள் அதிகமானவர்கள் சாதாரண மக்களுடன் சேர்ந்து பேருந்துகளில் பயணம் செய்வர். ஏனைய கட்சிகளில் உள்ளவர்கள் இவ்வாறு பேருந்துகளில் பயணம் செய்வது அபூர்வம். அந்த வகையில், மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ரமேஷ் பத்திரணவும், காலஞ்சென்ற முன்னாள் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரணவின் புதல்வரும் அதிகமாகப் பேருந்துகளில்தான் பயணம் செய்வார்களாம்...! ஓர் ஊடகவியலாளர் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது இந்த விடயம் பற்றிக் கூறி இருக்கின்றார்.
அப்போது தானும் பேருந்துகளிலும் தொடருந்துகளிலும் பயணிப்பதாக அவர் கூறினாராம். அது மாத்திரமன்றி, தான் தொடருந்தின் பயணித்த பற்றுச் சீட்டுக்களையும் அந்த ஊடக வியலாளரிடம் காட்டினாராம் அவர்.

## நரைக்குப் பயந்து தாடியை வழித்த அமைச்சர்

எந்த நேரமும் பளபளவென இருந்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இப்போது நரைத்த தாடியுடன் திரிகின்றார். ஆனால், எந்த நேரமும் தாடியுடன் இருந்த அமைச்சர் விஜித முனி சொய்சா இப்போது தாடியை வழித்துவிட்டுத் திரிகின்றார். அதற்கு அவர் கூறும் காரணம்தான் விசித்திரமானது.
வேறு ஒன்றுமில்லை. இதுவரை காலமும் கருகருவென இருந்த அவரது தாடி இப்போது நரைக்கத் தொடங்கிவிட்டதாம். நரைத்த தாடியுடன் இருந்தால் அது முதுமைத் தோற்றத்தைத் தந்துவிடும் என்று அஞ்சியே தாடியை முழுவதுமாக எடுத்துவிட்டாராம்.
தாடியை நீக்காமல் நரையை மறைப்பதற்குச் சில கறுப்புச் சாயங்களை அவரது நண்பர்கள் பரிந்துரை செய்தபோதிலும் அவை கிருமித் தாக்கங்களை ஏற்படுத்திவிடும் என்று அஞ்சி அவற்றை நிராகரித்துவிட்டாராம்.

# நம்பிக்கையும் முயற்சியுமே வாழ்க்கை

அ.அஜந்தன்

சமகாலச் சமூகத்தின் இளைய தலைமுறையினர் சிறுசிறு இழப்புக்களாலும், தோல்விகயாலும், ஏமாற்றங்களாலும் தமது உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். வாழ்வின் மீதும் தம்மீதும் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளாது அவசர முடிவுகளால் தவறான தீர்வைத் தெரிவு செய்கின்றனர். மீண்டும் மீண்டும் முயற்சி செய்வதன் மூலம் வாழ்வை வெற்றிகொள்ள முடியும் என்ற யதார்த்தத்தின் பக்கம் அவர்கள் தம் பார்வையைச் செலுத்துவதில்லை. பெற்றோரின் அல்லது அவருக்கு நன்கு தெரிந்தவர்களின் தவறான தீர்வுகளையே தாமும் மேற்கொள்ள முனைகின்றனர். தமது வாழ்வின் இலக்கையும் பொருத்தமான மாதிரிகளையும் தேர்ந்தெடுக்காமையும் இதற்கு ஒரு காரணமாகும். வாழ்க்கை என்பது நம்பிக்கையுடனான விடா முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் வரம். இழப்புக்களும், தோல்விகளும், ஏமாற்றங்களுமே எப்பொழுதும் எமக்குள் எம்மை வெற்றியை நோக்கி பயணிக்க வைக்கின்றன.

இந்தப் பயணமே எமக்குள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றது, எமது எதிர்காலப் பாதையைச் செப்பனிடுகின்றது, எமது பலம் - பலவீனத்தையும் மதிப்பிட உதவுகின்றது.

### இழப்புக்கள்

இழப்புக்கள் சில சமயங்களில் கையறுநிலைக்கும், குற்றவுணர்வுக்கும் எம்மை இட்டுச் சென்றுவிடும். இழப்புக்களின் பெறுமதி என்பது மற்றவர்களால் மதிப்பிட முடியாதது மாறாக இழந்தவர்களால் மட்டுமே அது மதிப்பிடப்படவேண்டும். ஒரு உயிரிழப்பு என்பது உறவுமுறையில் அல்லது வயதடிப்படையில் மட்டும் தாக்கத்தைச் செலுத்தாது. உயிரிழந்தவருடனான அன்பு, அவர்களில் தங்கியிருந்த விடயங்கள், எந்த அளவுக்கு சமூகத்தைத் தாங்கக்கூடிய நபராக அவர் இருந்துள்ளார், அவர் செய்த நன்மைகள் எனப் பல விடயங்கள் அதன் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும்.

பொருளை இழந்தால் அதன் தாக்கம் என்பது பொருளின் பெறுமதியில் மட்டும் தங்கியிருப்பதில்லை. பொருளைத் தந்தவர்கள், அந்தப் பொருளுக்குப் பின்புலத்தில் இருக்கக்கூடிய மறக்கமுடியாத சம்பவங்கள், ஞாபகார்த்தமாகப் பாதுகாத்த பொருள் போன்ற காரணிகளும் இழப்பின் தாக்கத்தை நிர்ணயிக்கும். மனித இழப்புக்களும் எமக்குள் பல சாதகமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. ஒன்றை இழக்கும்போது அதன் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாம் பல வழிகளில் சிந்திக்கின்றோம் பல திறன்களை வளர்த்துக்கொள்கின்றோம். உதாரணமாகக் கைகளை இழந்தவர்கள் கால்களால் தமது கடமைகளைச் செய்யக் கற்றுக்கொள்வதால் தனக்கு இருக்கும் விசேட திறனை கண்டுகொள்கின்றனர். இவ்வாறு அவயவங்கள் இழப்பின் பின் தமது நம்பிக்கையாலும் விடா முயற்சியாலும் உலகை வென்றவர்கள் பலரை நாம் கண்டுள்ளோம்.

### தோல்விகள்

தோல்வியால் எமக்குக் கிடைக்கும் அவமானம் எம்மைப் பிறரிடமிருந்து பிரித்துவைப்பனால் சமூகத்துக்கு முன் முகம்காட்ட முடியாத அச்சத்தையும் தோற்றுவிக்கின்றது. தோல்விகளே நமது வாழ்வின் முன்னேற்றத்தை நோக்கி எங்களை உந்துகின்றசக்திகளாக மாறவல்லன. ஆனால் நாம் அந்தத் தோல்விகளை ஏற்றுக்கொள்ள அஞ்சுவதால் அதனைச் சாதகமான ஒருசக்தியாக மாற்ற முடியுமென்ற உண்மையை உணர மறுத்துவிடுகின்றோம். பரீட்சை, காதல், தொழில் முயற்சி என்பன வாழ்க்கையில் தோல்விகளை நாம் சந்திக்கும் சில சந்தர்ப்பங்களாக பார்க்கலாம். எந்தவொரு விடயத்தையும் இலகுவில் அடைந்துவிடமுடியாது அதேபோல் அதனை அடைவதற்கு பல வழிகளும் பல வலிகளும் உள்ளன. தோல்விகள் எப்பொழுதும் நமது தவறுகளைத் தரம் பிரித்துக் காண்பிக்கின்ற ஒரு கண்ணாடியாகச் செயற்படுகின்றன. எமது வாழ்வின் இலக்கைத் தீர்மாணிக்கும் ஒரு திருப்புமுனையாக அமைகிறது. பல வெற்றிபெற்றவர்களின் பின் அவர்களை உந்தியவை அவர்கள் சந்தித்த தோல்விகளே. தோற்றுப் போனவர்களை பலவீனமாகப் பார்ப்பதைவிட தோல்வியின் அனுபவமுள்ள ஒரு அனுபவசாலியாகப் பார்ப்பது அவசியம். ஒருவர் தோற்றுவிட்டால் தோற்றவர் வெற்றிக்கான முதற்படியில் கால்வைத்தவிட்டார் என்பதே பொருள். தோல்வி என்பது நாம் முயன்ற தற்கான சான்றுதான்.

### ஏமாற்றம்

ஏமாற்றத்தால் ஏற்படும் வெறுப்பும் விரக்தியும் அவர்களை நிலைகுலையச் செய்கிறது. அவர்களின் சுயமதிப்பை இழக்கச் செய்கிறது. பலரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்க வைப்பதால், உறவுமுறைகளில் சிக்கல் ஏற்படுத்துகின்றன. இன்னும் சிலர் ஏமாற்றியவர்களைப் பழிதீர்க்கும் எண்ணத்துடனும் அவர்கள்ளயே தமது எதிரியாக எண்ணி தம்மை அறியாமலேயே அவர்களுக்கு மனங்களில் சிம்மாசனமிட்டு விடுகின்றனர். வேலை செய்யும் போதும், உணவுண்ணும் போதும், உறங்கும் போதும் அவர்களைப் பழிதீர்ப்பதற்கான முனைப்பான சிந்தனைகளுக்குள் சிக்குண்டு விடுகின்றனர். இதனால் தம்மையே இழந்து தம் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைகளைப் போட்டுவிடுகின்றனர்.

ஏமாற்றம் ஏற்படும்பொழுதுதான் நாம் நிதானித்துச் செயற்படத் தொடங்குகின்றோம். ஏமாற்றம் எம்மை விழிப்புடன் செயற்பட வைக்கின்றது. ஏமாற்றியவர்கள் முன்நிலையில் வாழ்ந்து காட்டுவதே சிறந்த வழியென்பதை உணரும்துபோது அது ஒரு ஆரோக்கியமான செயல் என்ற திருப்தி கிடைப்பதோடுநாமும்பலமுன்னேற்றப்படிக்கற்களைத் தாண்டியிருப்போம். இதுவே எமது வாழ்வின் வெற்றிக்கு வழிவிடும். இழப்புக்கள், தோல்விகள், ஏமாற்றங்கள். பல்வேறுவகையான சவால்களை எமக்குத் தருவதால் பலர் இவற்றிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்குத் தற்கொலையே சிறந்த வழி என எண்ணித் தவறாக முடிவெடுத்துவிடுகின்றனர்; எம்மை வளமாக்கி வல்லுவாக்கும் சக்திகள் இவையே என்று உணர்தல் அவசியம். இழப்பவை எதுவாக இருப்பினும் வளமாவது நாமாக இருப்போம். என்ற நம்பிக்கை நம்முள் வளர வேண்டும். ஏமாற்றங்களை ஏணிகளாக்கி ஏறிநடைபோடுவதே ஏற்புடையது. எமது திறன்களை ஒழுங்குபடுத்துவதனூடாக இது சாத்தியப்படும். எமக்கான இலக்கையும் சிறந்த மாதிரிகளின் வாழ்க்கைவரலாற்றையும் கற்றறிவதனூடாக வாழ்வில் நம்பிக்கையோடு முயற்சி செய்தால் வாழ்வு வளமாகும் போதும் எமக்கே அது வசமாகும்.



தோல்வியால் எமக்குக் கிடைக்கும் அவமானம் எம்மைப் பிறரிடமிருந்து பிரித்துவைப்பதோடு சமூகத்தின் முன் முகம்காட்ட முடியாத அச்சத்தையும் தோற்றுவிக்கின்றது. தோல்வி களே நமது வாழ்வின் முன்னேற் றத்தை நோக்கி எங்களை உந்துகின்ற சக்தியாக மாறவல்லது.

தமது வாழ்வின் இலக்கையும் பொருத்தமான மாதிரிகளையும் தேர்ந்தெடுக்காமையும் ஒரு காரணமாகும். வாழ்க்கை என்பது நம்பிக்கையுடனான விடா முயற்சியின் மூலம் கிடைக்கப்பெறும் வரம். இழப்புக்களும், தோல்விகளும் , ஏமாற்றங்களுமே எப்பொழுதும் எமக்குள் எம்மை நோக்கி பயணிக்க வைக்கின்றன. இந்தப் பயணமே எமக்குள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றது.



# வருகிறது சென்னை

## பகிரங்க வெளிப்படுத்தல்கள்



நடப்புவருடத்துக்கானஐ.பி.எல். தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவதற்குள் இன்னும் துல்லியமாகச் சொல்லவேண்டுமாயின்அதன் பாதிக்கட்டத்தை எட்டுவதற்குள் அடுத்த வருட ஐ.பி.எல். தொடர் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் எகிற ஆரம்பித்துள்ளன. இதற்கெல்லாம் ஒரே காரணம் சென்னையின்இரண்டாம்வருகை.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில், சென்னை, ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து அந்த அணிகளுக்கு இரு வருடம்தடைவிதிக்கப்பட்டது. இந்தத்தடைநடப்பு வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அடுத்த வருட ஐ.பி.எல். தொடரில் இந்த இரண்டு அணிகளின் குறிப்பாக சென்னையின் இரண்டாம் வருகையின் மீது ஏராளமான எதிர்பார்ப்புக்கள்நிலவுகின்றன. அது தொடர்பான வெளிப்படுத்தல்களும் தற்போதிருந்தே ஆரம்பித்துள்ளன.

சென்னை அணியின் உரிமையாளர்களில் ஒருவரான சீனிவாசன், அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அடுத்த வருடம் மஞ்சள் சீருடையில் சென்னை மீண்டும் களமிறங்கும். அதன் தலைவராக டோனி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். தற்போதுடோனியின்மனைவிசாக்சியும்அவ்வாறான ஓர் வெளிப்படுத்தலை காட்டியிருக்கிறார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில்மும்பையைவென்றதுபுனே. இந்த ஆட்டத்தில் டோனி தான் எதிர்கொண்ட பந்துகளுக்கு நிகரான ஓட்டத்தையே குவித்தார். அதிரடி என்பது அவரிடம்இருக்கவில்லை. அதேநேரம்டோனியிடம் இருந்து தலைமைத்துவம்கைமாற்றப்பட்ட சிமித், மிகச் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இதனையடுத்து புனே அணியின் உரிமையாளரான சோயங்காவின் சகோதரர், டோனியிடம் இருந்து சிமித்துக்குதலைமைத்துவம்கைமாற்றப்பட்டது சரி என்று சிமித் நிரூபித்துள்ளார் என்று தனது ருவிற்றரில் பதிவிட்டார். இதற்கு பதிலடியாக டோனியின் மனைவி சாக்சி, சென்னை அணியின் தலைக்கவசத்தை அணிந்தவாறு தனது ருவிற்றரில் ஒளிப்படம் பதிவுசெய்துள்ளார். மொத்தத்தில் சென்னை அணி மீதான எதிர்பார்ப்புக்களும்அதுதொடர்பான்பகிரங்க வெளிப்படுத்தல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேசெல்கின்றன.




# ரியல் மட்ரிட்டை சமாளிக்குமா பார்சிலோனா

ஸ்பானியக்கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான லாலிகா தொடரில் நெய்மர் இல்லாமல் ரியல் மட்ரிட்டை எதிர்கொள்ள வேண்டிய மிக நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது பார்சிலோனா.

பார்சிலோனாவைப்பொறுத்தமட்டில்அந்த அணியின்வெற்றிக்கு மெஸ்ஸி, சுவாரஸ், நெய்மர் என்ற கூட்டணியே காரணமாக இருந்து வருகிறது. லாலிகா தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இரண்டுதடவைகள் விதிமுறை மீறல்களில் ஈடுபட்டமைக்காக பார்சிலோனா அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவராக உள்ள நெய்மருக்குத் 3 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

பார்சிலோனாவின் லா லிகா தொடர் அட்டவணையின்படி அந்த அணி அடுத்ததாகஎதிர்கொள்ளும்மூன்று ஆட்டங்களில்மிகவும் பலம் வாய்ந்த கழகமான ரியல்மட்ரிட்டும் உள்ளடங்குகிறது. எனவே நெய்மர் இல்லாமல் ரியல் மட்ரிட்டை எதிர்கொள்ளும் நிலைக்கு பார்சிலோனா தள்ளப்பட்டுள்ளது. ரொனால்டோ, பேல், ராமோஸ், லூக்காஸ், மார்சல்லோ, பென்சிமாஎன்றரியல்மட்ரிட்டின் கூட்டணியைவெறுமனேமெஸ்ஸி, சுவாரஸ்இணையால்சமாளிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.



# பழிவாங்கினாரா விராட் கோக்லி

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூர் அணியில் இருந்துவற்சன் நீக்கப்பட்டமையானது சில அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

பெங்களூர் அணியின் தலைவரான கோக்லி, காயம்காரணமாகபெங்களூர் அணியின் முதல் மூன்று ஆட்டங்களிலும் களமிறங்க்வில்லை. இதனால்வற்சன் பொறுப்புத்தலைவராகநியமிக்கப்பட்டார். மும்பைக்குஎதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அணிக்குத் திரும்பினார் கோக்லி. அவருக்குப் பதிலாக எவர் அணியில் இருந்து நீக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. சற்றும் எதிர்பாரா விதமாக பொறுப்புத் தலைவர் வற்சனையே நீக்கினார் கோக்லி.

முன்னதாக முடிவடைந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் நிறைவில், ஆஸ்திரேலிய வீரர்கள் எனது நண்பர்கள் அல்லர் என்று கோக்லி தெரிவித்திருந்தார். வற்சன் ஒரு ஆஸ்திரேலிய வீரர்.

எனவே நேற்றுமுன்தின ஆட்டத்தில் வற்சனின் நீக்கத்துக்கும், ஆஸ்திரேலியத் தொடரின் நிறைவில் கோக்லி பதிவுசெய்த கருத்துக்களுக்கும் முடிச்சுப் போடும் பணிகள் தற்போது இந்திய மற்றும் பன்னாட்டு ஊடகங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



வவுனியா விபுலானந்தக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரியின் முதல்வர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் உக்குளாங்குளம் சீர்திருத்த மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்து சிறப்பித்தார். (ஐ)







செட்டிகுளம், அரசடிக்குளம், பாவற்குளம் படிவம் - 03, கனிஸ்ட உயர் தர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் எஸ்.ஜனந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளர்.யேசுதாசன், கிராம அலுவலகர் இளஞ்செழியன் மற்றும் சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், அயற் பாடசாலை அதிபர்கள், சமூக அமைப்புக் களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



வேலணை மத்திய முன்பள்ளியும்; முடிப்பிள்ளையார் முன்பள்ளியும் இணைந்து நடத்திய விளையாட்டு விழா வங்களாவடி முருகன் ஆலய வீதியில் முன்பள்ளி ஆசிரியர் அ.கிரிசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரெத்தினமும், சிறப்பு விருந்தினராக யாழ்.வலகய ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும் கலந்து கொண்டனர். (ஐ-167)






சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் முருகமூர்த்தி ஆலய நாவலர் மணிமண்டபத்தில் நிலையத்தலைவர் சொ.சிவயோகலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. (ஐ-167)



யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.சிறிரதன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொள்வனவு செய்யப் பட்ட இரு மல்ரி புறொ ஜெக்டர்களை வட மராட்சி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு, பாடசாலை அதிபர் இரவீந்திரனிடம் கையளித்தார். (ஐ)





வயாவிளான் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மாணவர் நாடாளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு அண்மையில் இடம்பெற்றது. (ஐ)





மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் முல்லைத்தீவு தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. 15 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் இந்தத் தேர்தலில் 20 பேர் போட்டியிட்டனர் 96 வீதமான வாக்குகள் பதிவானது. (ஐ-7)







முள்ளிவாய்க்கால் கிழக்கு சந்திரன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. 44 மாணவர்களைக் கொண்ட இந் தப் பாடசாலையில் விருந்தினர்களை வரவேற்றல், ஒலிம்பிக்தீபமேற்றல், மாணவருக்கான விளை யாட்டுக்கள், உடற்பயிற்சிகள், வினோதவுடை நிகழ்வுகள், பெற்றாருக்கான விளையாட்டுக்கள், எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ)





கல்வியில் மேன்நிலை அடைந்த அல் வாயைச்சேர்ந்த கல்விச்சாதனையாளர்கள் அந்தப் பகுதி சனசமூக நிலையத்தால் பாராட் டிக் கௌரவிக்கப்பட்டனர். அல்வாய் மனோகரா சனசமூகத்தின் ஏற்பாட்டில் பாலர்பாடசாலை மண்டபத்தில் நிலையத் தலைவர் க.ஜெயதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலாநிதி சு.குணேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சி.வன்னியகுலமும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் அல்வாய் கிராமத்தில் இருந்து கல்விச் சாதனை படைத்த மாணவர்களான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், ஜீ.சி.ஈ. சாதாரண தரம் சித்தி யடைந்தோர், பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டதுடன், பாலர் பாடசாலை ஆசிரியை நவரட்ணராஜா ரவிதராவின் சேவை நயப்பு விழாவும் நடைபெற்றது. (ஐ-108)






புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியி[illegible] ஏற்பாட்டில் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் [illegible] றாண்டை முன்னெடுக்கும் முகமாக அண்மை[illegible] நடாத்தப்பட்ட ஆய்வரங்கில் தோழர் சி. சிவசே[illegible] ஆய்வுரையை வழங்கினார்.



கொழும்பு தமிழ்ச் சங்க பவளவிழாவை முன்னிட்டு அண்மையில் இடம்பெற்ற தமிழிசை சங்கம நிகழ்வை, இணுவையூர் சகோதர்கள் இருவர் இசை நிகழ்வை நிகழ்த்தினர். (ஐ)




வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரிக்கு நிழற் பிரதி இயந்திரம் ஒன்றை மேற்படி பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வின் போது வழங்கினார். (ஐ-122)



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புனித சகாய மாதா முன்பள்ளிப் பாடசாலைக்கு, அண்மையில் வருகை தந்த தொண்டுநாத சுவாமிகள் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களைச் சந்தித்து உரையாடினார். அத்தோடு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார். (ஐ)





காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய மாசி மக பெரு விழாவின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் நூற் றுக்கணக்கான பக்தர்களின் அரோகராக் கோசம் வானைப்பிளக்க வர்ணபகவான் மழை பொழிய அம்பாள் தேரிலே வலம் வந்து அடி யார்களுக்கு அருள்க்காட்சி வழங்கினார். (ஐ-250)



பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக் கூட்டத்தின் போது, நிதிய மூத்த அங்கத்தவர், நிதியத்தின் மாவட்டத்தலைவர் பீ.கமல நாதனால் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலகக் கணக்காளர் எஸ்.கிருபாகரன் கலந்து கொண்டார். (ஐ)





புதுக்குடியிருப்பு வேணாவில் சிவயோக சுவாமிகள் அறநெறிப்பாடசாலை ரிஷி தொண்டுநாத சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோசினி கனகரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தெல்லிப்பழைத் துர்க்காதேவி அம்மன் ஆலயத் தலைவர் ஆறு. திருமருகன், வன்னி மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் அறநெறிப்பாடசலை மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு, கல்வியமைச்சின் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதன்மை ஆணையாளர் கே.எம்.எச். பண்டார அண்மையில் வருகை தந்தார். அவரின் வருகையை வரவேற்று, யாழ். கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் நினைவுக்கேடயம் வழங்கினார். கல்லூரியின் உப பீடாதிபதிகள் கலாநிதி, பா.தனபாலன், திருமதி ஜே.சிவபாதம், திருமதி எஸ்.அன்ரனி தவச்செல்வம் மற்றும் கல்வியியலாளர்களுடன், கலை நிகழ்வுகளில் பங்கு கொண்ட முகிழ்நிலை ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (ஐ-29)



ரிஷி தொண்டுநாத சுவாமிகளால் வழங்கி வைக்கப்பட்ட நெஸ்ரமோல்ட் பைக்கற்றுக்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் விடுதியில் தங்கியிருந்த 60 நோயாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ப.சத்தியரூபன், விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக தலைவர் தவக்குமார் ஆகியோர் அவற்றை வழங்கி வைத்தனர். (ஐ)



சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் வேண்டுகோளையேற்று புங்குடுதீவு வைத்தியசாலைக்கான புதிய பெயர்ப்பலகையை, வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கடந்த ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து வழங்கி வைத்தார். பெயர்ப்பலகை திரைநீக்க விழாவில் வடமாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம், ஒன்றியப்பொருளாளர் த.சுலோசனா, மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பிரதேசத்தில் உள்ள நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களை இனங் காண்பதற்கான நடமாடும் பரிசோதனை முகாமை அண்மையில் சாவகச்சேரி பொதுச் சந்தையில் நடத்தினர். இந்த நடமாடும் சேவையில் சந்தை வியாபாரிகள் வர்த்தகர்கள் பொதுமக்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு குருதியில் சீனிச் சத்துப் பரிசோதனை களை மேற்கொண்டனர். (ஐ-9)



சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ-9)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தோற்றுப் போன முயற்சி

## கோவா நகரில் உள்ள புதுமை மாதா சொரூபத்தை யாழ். கொண்டு வருவதில்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

சிங்கள தமிழ்ப் புத்தாண்டு மற்றும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா கொண்டாடப்படும் வேளை, அனைவர்க்கும் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது புத்தாண்டு ஈஸ்ரர் வாழ்த்துச் செய்தியில் அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்கு தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் வேளை, உண்மையை மூடி மறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் இலாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாக செயற்படுங்கள் என வேண்டுகிறோம் என்ற அழைப்பை அரசு விரைவாக செயற்படுத்த இறை வரம் வேண்டுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

**குருநகர் பங்குத்தந்தை எம்.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் கோவா நகரில் உள்ள புதுமைமாதா சொரூபம் பற்றித் தெரிவிக்கும் போது**

யாழ்ப்பாணப் பட்டினத்தின் புதுமை மாதா என்று அறியப்படும் திருச்சொரூபம், போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கோ அந்தோனியோ என்ற போர்த்துக்கேய மறைப் பணியாளர் தாம் கோவாவில் இருந்து எடுத்து வந்த ஒரு மரக்குற்றியில் அன்னக்குட்டி என்னும் உள்ளூர் சிற்பியின் உதவியோடு செதுக்கி எடுத்த குழந்தை இயேசுவை கையில் தாங்கி நிற்கும் மரியன்னையின் திருச்சொரூபமாகும். இதனை அவர் யாழ்ப்பாணக் கோட்டையில் அமைந்திருந்த வெற்றி மாதா ஆலயத்தில் கொலுவேற்றினார். இந்தச் சொரூபம் செய்யப்படத் தொடங்கிய நாள் முதல் நடைபெற்றதாக பதியப்பட்டுள்ள புதுமைகள் காரணமாக இந்தச் சொரூபம் யாழ்ப்பாணப் பட்டினத்தின் புதுமை மாதா என அறியப்படுகிறது.

யாழ்ப்பாணப் பட்டின மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட இந்தச் சொரூபம் ஒல்லாந்தரின் முற்றுகையை அடுத்து போர்த்துக்கேயர் வெளியேறியபோது போர்த்துக்கேய மறைப் பணியாளர்களால் அவர்களோடேயே எடுத்துச்செல்லப்பட்டு தற்போது கோவாவில் யாழ்ப்பாணப் பட்டினத்தின் மாதா என்ற பெயரில் பேணப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணப் பட்டினமக்கள் இந்தப் புதுமை மாதா மீது கொண்டிருந்த பக்தி அருட்சி காரணமாக கோட்டைக்கு அண்மித்துள்ள குருநகர் பிரதேசத்தில் இந்த அன்னையின் பெயரால் புதுமை மாதா ஆலயம் ஒன்றை அமைத்துப் பூசித்து வந்துள்ளனர். இந்த ஆலயத்தின் ஆரம்பகாலம் பற்றிய தெளிவான தகவல்கள் இல்லாவிட்டாலும் ஒல்லாந்தர் காலத்திலேயே மாற்றலாக இவ்விடத்தில் சிறு கொட்டில் அமைத்து மக்கள் புதுமை மாதாவுக்கு வணக்கம் செலுத்தி வந்திருக்க வேண்டும் என 1958இல் யாழ்ப்பாணத்து புதுமை மாதாவின் வரலாற்றை எழுதிய கவிஞர் ஞா.ம.செல்வராஜ் தமது நூலில் தெரிவிக்கிறார். இப்போது குருநகரில் அமைந்துள்ள புதுமை மாதா ஆலயம் இவ்வாலயத்தின் தொடர்ச்சியாகும்.

கோவாவில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்துப் புதுமை மாதாவின் திருச்சொரூபத்தை திரும்பக் கொண்டுவர யாழ். ஆயர் எடுத்து வரும் முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் அந்தச்சொரூபம் இவ்வாலயத்தில் கொலுவேறி புதுமை மாதாவின் பரிந்துரை அவரை நாடி வரும் அனைவர்க்கும் கிட்ட வேண்டும் என்பதே அன்னையின் பக்தர்களின் பெருவிருப்பாகும் என குருநகர் பங்குத்தந்தை எம்.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் தெரிவித்தார்.



**1958ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்**

கவிஞர் ஞா.ம.செல்வராஜ் (காவலூர் உதயதிசை கவிஞர்) அவர்களால் எழுதப்பட்ட "வட இலங்கை பரிபாலினியாகிய யாழ்ப்பாண பரிசுத்த புதுமை மாதாவின் ஆலயச் சரித்திர வரலாறு" என்ற நூலை இங்கு சான்றுப்படுத்தலாம். 1958ஆம் ஆண்டு, பதிப்புரிமை புதுமை மாதா கோவில் நிர்வாகத்தினருக்கு எனக் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்த நூலுக்கான பதிப்பிடும் உரிமையை அப்போது குருமுதல்வராய் இருந்த கென்றி லெக்குத்தூர் அ.ம.தி அடிகளார் 1957ஆம் ஆண்டு வழங்கியுள்ளார். இந்நூல் நல்லூர் வண. எஸ். ஞானப்பிரகாசம் அ.ம.தி அடிகளாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பதிப்பு மாசி மாதம் 2008ஆம் ஆண்டு ஆர்.எக்ஸ் சகாய நாயகம் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



புதுமை மாதாவின் திருச்சொரூபம் வைக்கப் பட்டுள்ள பேதுருவானவர் தேவாலயம்


கோவா உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு கலாநிதி பிலிப் நேரி பேறோ


யாழ். மறை மாவட்டஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்

**நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முயற்சி தோல்வி**

இந்தத் தகவலை மேலே குறிப்பிட்ட நூலில் இருந்தே பெற்றுக்கொண்டோம். 1922ஆம் ஆண்டு வைகாசி மாதம் புனித சவேரியாரின் உடல் காட்சிக்கு வைக்கப்பட்டபோது கோவா சென்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் புதுமை மாதா சொரூபத்தைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை. பின்னர் பொறுப்புக் குருவானவர் பிரான்சீஸ் சேவியர் என்பவருடன் தொடர்புகொண்டு பழைய கோவாவில் இருப்பதாக அறிந்து வண. எட்மன் பீரீஸ் (மறைந்த சிலாப ஆயர்) அடிகளாருடன் சென்று பேதுருவானவர் தேவாலயத்தில் அன்னையையும் சொரூபத்தைச் செய்த சிற்பியான அன்னக்குட்டி வீட்டில் நடைபெற்ற புதுமைகளின் 6 படங்களையும் கண்டுள்ளார்.

"திருச்சொரூபத்தை மீண்டும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து நிறுவும் பொருட்டு வெகு ஆசையோடும் அபிமானத்தோடும்எத்தனையோபழைய ஏதுக்களை எடுத்துக்காட்டி உரிமை பாராட்டி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் கேட்டவிடத்தும் அது பயனளிக்காது போயிற்று" என அந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பரபரப்புடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொடர்பு கொண்ட பலர்**

எசப்பியூஸ் டெஸ்மன், குருநகர் 5ஆம் குறுக்குத்தெரு இல.15/6 குருநகர் என்ற விலாசத்தில் இருந்து ஒரு மடல் அனுப்பியுள்ளார். அதில், அவர் புதுமை மாதா பற்றிய நாம் அறியாத பல புதிய விடயங்களை உதயன் பத்திரிகையில் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தொடர்ச்சியாக எழுதிவரும் கட்டுரை வழியாகப் படித்து அறிந்தேன். விறுவிறுப்பாக ஆர்வம் ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டு புதுமை மாதா மேல் அன்பை அதிகரிக்கும் விதமாக எழுதப்படும் இந்தக் கட்டுரைகளுக்கு இடம் தரும் உதயன் பத்திரிகைக்கு அன்பான நன்றிகள். கோட்டையில் இருந்து புதுமை மழை பொழிந்து வந்த புதுமை மாதாவை எம்மிடம் திரும்ப ஒப்படைக்கும்படி வேண்டுங்கள். வெள்ளப் பெருக்குப் பற்றிய கட்டுரையின் இறுதித் தொடர்ச்சியை ஆவலுடன் பார்த்தருக்கிறேன். இந்த மடலைப் பிரசுரித்து அன்னையின் பக்தியும் அதன்வழி புதுமைகளும் இன்னும் அதிகரிக்க வழி செய்யுங்கள் எனத் தெரிவிக்கிறார்.

குருநகர் புதுமை மாதா ஆலயத்துக்கு அருகில் வசிக்கிறேன். குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் மீதும் அளவு கடந்த பக்தி கொண்டுள்ளேன். கோட்டையில் இருந்த புதுமை மாதா பற்றி அறிந்திருந்தேன். உதயன் பத்திரிகையில் விவரமாக வெளிவரும் கட்டுரைகளை ஆவலுடன் படிக்கிறேன். இதனால் பல புதிய விடயங்களை அறிந்துள்ளேன், அந்த அன்னையின் சொரூபம் வருமா? எப்போது வரும்? ஆவலாய் இருக்கிறேன். இது தொடர்பாக ஆயரின் அனைத்து முயற்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என குருநகர் புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியில் வதியும் செ.மைக்கல் ஆஞ்சலோ தெரிவிக்கிறார்.

குருநகர் இல.24/1 பால உடையார் வீதியில் வசிக்கும் கே.நித்தியானந்தா என்பவர் எழுதிய நீண்ட மடலும், வேறும் பலர் எழுதிய சிறிய மடல்களும் கூறியது கூறல் என்பதால் பிரசுரிக்கவில்லை.

**1627ஆம் ஆண்டின் பெரு வெள்ளம்**

1627ஆம் ஆண்டு மாசி மாதம் 20ஆம் திகதி யாழ். நகரில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் அச்சமும் நடுக்கமும் கொண்டவர்களாய் மக்கள் அழுகுரலால் வானத்தை நிரப்பிக் கொண்டு புதுமை மாதா ஆலயத்தை நோக்கி ஓடினார்கள் என்று முன்னர் பார்த்தோம்.

ஓடும் வழியில் பெரும் வெள்ளத்தையும் சூறாவளி ஏற்படுத்திய அழிவுகளையும் பார்த்தவர்களில் சில பெண்கள் மயங்கி விழுந்தனர். வெள்ளத்தில் மயங்கி விழுந்தவர்கள் சிலரை ஏனையவர்களும் அவர்களது வீட்டுக்காரர் அல்லது போர் வீரர்களும் காப்பாற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

வெள்ளத்திலிருந்து தப்பியோடும்போது பெற்றோர் பிள்ளைகளையோ கணவன் மனைவியையோஉற்றார்உறவினரையோ சிந்திப்பதற்குப் பொழுதுகூடக் கிடைக்கவில்லை. எல்லோரும், எவ்வளவு சீக்கிரமாகப் புதுமை மாதாவின் ஆலயம் போய்ச் சேர முடியுமோ அவ்வளவு வேகத்தில் ஓடினார்கள்.

பெண்களும் ஆண்களும், சிறியவர்களும், பெரியவர்களும் ஆலயத்தை சென்றடைந்தவுடன் பலத்த குரலொலியுடன் கடவுளிடம் இரக்கத்தையும் புதுமை மாதாவின் துணையையும் உருக்கமாக வேண்டினார்கள். துறவியர்களும் இயேசு சபைக் குருக்களும் இவர்களோடு சேர்ந்து அமைதியான சூழ்நிலையும் ஆபத்து அனைத்தும் நீங்க வேண்டுமென்று இறைவனிடம் இரங்கினார்கள். குருக்களின் வேண்டுதலுக்கிணங்க அனைவரும் ஒப்பரவு எனும் அருட்சாதனத்தையும் பெற்றார்கள்.

இந்த நேரத்தில் தண்ணீரின் மட்டம் ஆலயத்தின் நிலமட்டம்வரை உயர்ந்து வந்துவிட்டது. அதேநேரம் காற்றும் பலத்த வேகமாக வீசி ஆலயத்தின் கட்டமைப்பே அசைந்து போகும் போல (மெல்லிய தடிகளால் கட்டப்பட்ட கட்டமைப்புப் போல) தோன்றியது.

இவ்வாறான ஒரு பேரிடரில் அனைவரும் இறக்கப் போகின்றோம் என்ற இன்னலுற்ற நிலையில் அன்னையின் பிராத்தனையை பெருமூச்சுடனும் கண்ணீரும் கம்பலையுமாய், அன்னையின் ஆலயம் தங்களின் கல்லறைகளாக மாறக்கூடாது என எல்லோரும் மன்றாடினர்.

ஆலயம் முழுவதும் தரைமட்டமாகிப் போய்விடும், நாமும் முழுமையாக அழிந்து போகப்போகின்றோம் என்ற அதிகமான பயம் அனைவரையும் ஆட்கொள்ளத் தொடங்கியது. இந்தப் புதுமையின் இறுதிப் பகுதியையும் தொடரையும் அடுத்த பகுதியுடன் முடிப்போம். அடுத்த கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கும் வரை.

கோவாவில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்துப் புதுமை மாதாவின் திருச்சொரூபத்தைத் திரும்பக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடும் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கோவா உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு கலாநிதி பிலிப் நேரி பேறோ ஆகியோரின் படங்களும் புதுமை மாதாவின் திருச்சொரூபம் வைக்கப் பட்டுள்ள பேதுருவானவர் தேவாலய படம் இணைக்கப்பட்டுள்ளது. கோவாவில் வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்துப் புதுமை மாதாவின் திருச்சொரூபத்தை திரும்பக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடும் யாழ். ஆயரின் முயற்சி வெற்றியளிக்க புதுமைத் தாயிடமே வேண்டுவோம்.

## கொக்கிளாய்...

சகல தரப்பினருக்கும் முன்பாக நாளைமறுதினம் 18ஆம் திகதி மீண்டும் அளவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் உள்ளூர் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்காக வழங்கப்பட்ட நிலம் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரை வலைப்பாட்டுப் பகுதிக்குள் அடங்குகின்றது. எனவே உள்ளூர் மீனவர்களின் வாடிகளைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி தென்னிலங்கை மீனவர்கள் மூவரின் சார்பில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கடந்த ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தது.

வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிமன்று, உள்ளூர் மீனவர்கள் அந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட இடைக்காலத் தடை விதித்தது. வழக்கு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றன. கடந்த மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரினால் மன்றில் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

"உள்ளூர் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப் பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை" என்று அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணத்தின் சான்றுடன் பிரதேச செயலாளரால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் இந்த வழக்கு கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நீதிபதி சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சார்பில் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம் பரஞ்சோதி, ரனேஸ்வரன, ராதிகா உள்ளிட்டோர் முன்னிலையாகி னர்.

"வாடி அமைந்துள்ள பகுதி தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பகுதியில் இருந்து 375 மீற்றருக்கும் அப்பாலேயே உள்ளது என்று பிரதேச செயலாளரால் அரச நில அளவையாளர் மூலம் மேற்கொண்ட அளவீட்டின் ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது. நில அளவை ஆவணத்தில் மாகாண நில அளவைத் திணைக்களப் பிரதிநிதி உறுதி செய்துள்ளார்" என்று உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சட்டத்தரணிகள் மன்றில் எடுத்துரைத்தனர்.

"நில அளவை அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் தென்னிலங்கை மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்துக்கும் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட இடத்துக்கும் இடையே 375 மீற்றர் இடைவெளி உள்ளது. அதனால் கரைவலைப்பாட்டுக்கு தடை ஏற்படும் எனக் கூறமுடியாதே?" என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் மன்று கேள்வியெழுப்பியது.

பிரதேச செயலாளரால் மன்றில் முன்வைக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை நீக்கிவிட்டு அந்தப் பகுதியை கரைவலைப்பாடு தொழில் புரிபவர்களிடமே வழங்கப்பட வேண்டும் என்று நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் சார்பில் மன்றில் கோரப்பட்டது.

இதனை ஆட்சேபித்த உள்ளூர் மீனவ அமைப்புக்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிரதேச செயலாளரின் வரைபடம் நில அளவைத் திணைக்களத்தால் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. நீண்டகாலமாக உள்ளூர் மீனவர்களுக்கு தொழிற்தடை விதிக்கப்பட்டுள்ளதனால் அதனை நீக்கம் செய்து அவர்கள் அந்தப் பகுதியின் ஊடாக படகு இறக்கும் அனுமதியை வழங்க வேண்டும் என்று மன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி, "பிரதேச செயலாளரால் முன்வைக்கப்பட்ட நில அளவை வரைபடத்தை நீக்கிவிட முடியாது. ஆனால் அந்தப் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் , கிராம அலுவலர் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் மீண்டும் அளவீடு செய்து மன்றுக்கு ஆவணத்தைச் சமர்ப்பிக்க பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

இதன் பிரகாரம் சகல தரப்பினரின் பிரசன்னத்துடன் நாளை மறுதினம் 18ஆம் திகதி கொக்கிளாய்ப் பகுதியில் மீண்டும் நில அளவை மேற்கொள்ளப்படவுள்ளது என்று பிர்தேச செயலாளரால் அறிவிக்கப்பட்டது. (வ-101)

## கால அட்டவணையை...

மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

உதயனின் சித்திரைப் புதுவருட விழா நேற்று சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் இம்பெற்றது. மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தற்போது பன்னாட்டு ரீதியில் வலுத்து வருகிறது. அரசு இதனை உதாசீனம் செய்ய முடியாது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த 47 நாடுகளும் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் எங்களுக்கு ஆதரவாக உள்ளன.

ஆனாலும் தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அரசு தொடர்ந்தும் அசமந்தமாகவே இருந்து வருகிறது. தீர்மானத்தில் ஒரு சிலவற்றை மட்டுமே நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 90 வீதமான பகுதி நிறைவேற்றப்படாதுள்ளது.

தீர்மானத்துக்கு ஆதரவளித்த 47 நாடுகளும் அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசுக்கு கடுமையான அழுத்தத்தை வழங்கி வருகிறது.

எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக நாம் ராஜதந்திர ரீதியிலான சந்தர்ப்பங்களை ஆதரிக்கின்றோம். மக்கள் தந்த ஆணையை திடீரென தூக்கி வீசி செயற்பட முடியாது.

இந்த ஆட்சிக்கு எதிராக போராட வேண்டிய சூழல் வந்தால் அதைச் செய்யவும் நாங்கள் தயங்க மாட்டோம். அதுவரை நாம் பன்னாடுகளின் ஆதரவுடன் ராஜதந்திர ரீதியில் செயற்படுவோம்.

காணிகள் இப்போது விடுவிக்கப்பட்டு வருகின்றன. இன்னம் பெருமளவான காணிகளை ராணுவம் வைத்திருக்கின்றது. அவற்றையும் விடுவிப்பதற்கு அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப்போம் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ. சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை நடைபெற்ற பாரம்பரிய விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு, கலாசார நிகழ்வுகள், இசை நிகழ்ச்சி என்பனவும் நடைபெற்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இதில் பங்கேற்றனர். (த-21)

## வடமாகாண...

அமர்வை நிறுத்துவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது. இதற்காக அமைச்சர்களிடம் கையெழுத்து வாங்குவதற்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர், அமைச்சுக்கள் ஒவ்வொன்றும் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளன, மாகாணத்திற்கு கிடைத்த நன்மைகள் என்ன என்பது தொடர்பில் ஆராய்வதற்கு இரு நாள்கள் சிறப்பு அமர்வை நடத்த வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவரா சாவும், ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கூட்டாக ஒப்பமிட்டு, அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் இந்த விவாதத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. மாகாண சபைகளில் இனிமேல் அமைச்சுக்கள் தொடர்பில் விவாதம் நடத்தக்கூடாது என்று கோரும் கடிதத்தில் அமைச்சர்களிடம் கையெழுத்து வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் கையெழுத்து வாங்கும் நடவடிக்கைகளில் அமைச்சர் ஒருவரே மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இருப்பினும் இந்தக் கடிதம் இன்னமும் அவைத் தலைவரிடம் கொடுக்கப்படவில்லை. 'சிறப்பு அமர்வு நடத்தும் கோரிக்கை எனக்கு எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்பில் அடுத்த அமர்வில் அறிவிக்கப்படும். உரிய நடைமுறைகள் பின்பற்றப்படும். சபையின் சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்டு உரிய முடிவு அறிவிக்கப்படும்' என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (த-5-101)

## அமெரிக்காவை...

வுக்கும் அமெரிக்காவுக்கும் போர்ப் பதற்றம் நிலவுகிறது. அமெரிக்காவின் விமானம் தாங்கிப் போர்க்கப்பலான வின்சன் உள்ளிட்ட முக்கிய கப்பல்களும் போர் விமானங்களும் கொரியத் தீபகற்பத்தில் மையம் கொண்டுள்ளன. விரைவில் வடகொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா எடுக்கும் என்று எதிர்பார்க்கையில் தனது ஆயுத பலத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த மிகப்பெரும் இராணுவ மற்றும் இராணுவ தளபாட அணிவகுப்பை நேற்று நடத்தியது வடகொரியா.

பேரணியின் பின்னர், அமெரிக்காவை அணுவாயுதப் போரிலும் சந்திக்கத் தயார் என்று வடகொரியாவின் இரண்டாம் நிலை தலைமை அதிகாரியும், ஆளும்கட்சி தலைவரும், இராணுவத் தளபதியுமான சோய் ரியாங் அறைகூவல் விடுத்தார். (ம)

## இன்று...

ணம் செலுத்துவார்.

அமைச்சர்களான மகிந்த அமரவீர, ஹரீன் பெர்னாண்டோ, மனோ கணேசன் உள்ளிட்டவர்களும் இந்த பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேயினால் விடுக்கப்பட்ட சிறப்பு அழைப்பின் பேரில் தற்போது ஜப்பானுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில், அந்த சுற்றுப் பயணத்தை நிறைவுசெய்து கொண்டு வியட்நாமுக்கான பயணத்தை தொடர்வார்" என்று அயலுறவு அமைச்சு மேலும் தெரிவித்தது. (வ-10)

## பாலியல்...

காத ஆட்சியாளர்கள், ஹெய்ட்டியில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இராணுவத்திற்கு எதிராகவும் எந்த நடவடிக்கையையும் எடுக்கமாட்டார்கள். இலங்கை இராணுவத்தினர் மீதான குற்றங்களுக்குப் பன்னாட்டு விசாரணையின் ஊடாக நீதியை வழங்க முடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதி காக்கும் படையணியில் உள்வாங்கப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குற்றச் சாட்டுக் களுக்கு உள்ளான படையினரைத் தண்டிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவத்தினரின் மனோநிலை எப்போதும் ஒன்றுதான். இங்கு எமது பெண்களை மானபங்கப்படுத்திய இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரினோம். அரசு ஒன்றும் செய்யவில்லை. மாறாக, எமது இராணுவத்தினர் ஒழுக்கமானவர்கள் என்று அவர்களுக்கு நற்சான்றுப் பத்திரங்களைத்தான் வழங்கினார்கள்.

ஆனால் இலங்கை இராணுவத்தினரின் உண்மை முகத்தை இப்போது உலகம் கண்டுகொண்டிருக்கும். நாம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியபோது இலங்கை இராணுவத்திற்குச் சாமரம் வீசிய ஆட்சியாளர்கள் இப்போது என்ன சொல்லப் போகின்றார்கள். கடமைக்குச் சென்ற இராணுவத்தில் 130 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்களில் 114 பேர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது. ஆட்சியாளர்கள் இராணுவத்தைப் பாதுகாப்பதிலேதான் குறியாக இருக்கின்றார்கள். இப்போதாவது, பன்னாட்டு விசாரணையை நடத்த இலங்கை அரசு முன்வரவேண்டும். குற்றம் சுமத்தப்பட்ட இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத்தைப் பாதுகாக்கும் வகையில், அவர்களை மேலும் குற்றச் செய்யத் தூண்டும் வகையில், ஆட்சியாளர்கள் இராணுவத்துக்குச் சார்பாக கருத்துக்களையும் வெளியிடக் கூடாது என்றார். (த-5-101)

## மீதொட்டமுல்ல...

புத்தாண்டை முன்னிட்டு நேற்று நடைபெற்ற தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

மீதொட்டமுல்ல குப்பைப் பிரச்சினை தனக்குரியது அல்லவெனவும், அது மத்திய அரசு தான் கருத்திற் கொள்ளவேண்டும் எனவும் மாகாண சபை கூறியது. அதேபோன்று, மத்திய அரசும் இதனை மாகாணத்துக்கு பொறுப்புச் சாட்டுகின்றது. இவ்வாறுதான் ஒவ்வொரு அரச காலத்திலும் கயிறு இழுத்தல் நடைபெறுகின்றது.

எமது அரச காலத்தில் இதற்கு தீர்வாக இப்பிரதேச மக்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுஎன்றார். (த)

## மைத்திரி...

அவர்களிடம் தெரிவிக்கிறேன்" என்று நேற்றுத் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தெரிவித்தார் அரச தலைவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இருவரும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, அரச தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் தனித்துச் சந்தித்துப் பேசினர். இந்தப் பேச்சுக்களின் போதே மேற்படி விடயத்தை அரச தலைவர் குறிப் பிட்டார்.

"திங்கட் கிழமை (நாளை), காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகள், அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம். அதற்கு முன்னோடி யாகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. சுமார் அரை மணி நேரம் வரையில் பேச்சு நீடித்தது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி விடுவிப்புத் தொடர்பில் முதலில் பேசப்பட்டது. காணிகளை விடுவிக்கு மாறு ஒரு வருடத்துக்கு முன்னரே பணிப்புரை விடுத்து விட்டேன், இதற்கான செயலணியை அமைத்து பகுதி பகுதியாகவேனும் காணி விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளேன். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகளுடன் நீங்கள் பேசவுள்ளதால் இது தொடர்பான அறிவித்தலை அவர்களுக்கு மீண்டும் விடுக்கின்றேன் என்று அரச தலைவர் மைத்திரி, எதிர்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் கூறினார். மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டங்கள் தொடர்பில், அரச தலைவருக்கு, இரா.சம்பந்தன் எடுத்துரைத்தார்.

அரசியல் கைதிகளின் விடுவிப்புப் பற்றி பேசப்பட்டது. பன்னாட்டு வெசாக் தினத்தை முன்னிட்டு தமக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு அரசியல் கைதிகளின் கோரிக்கையை; இரா. சம்பந்தன், அரச தலைவரிடம் தெரியப்படுத்தினார். இதற்கு அரச தலைவர் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யக் கூடிய கைதிகளின் விவரங்களைத் தருமாறு கோரிக்கை விடுத்து ஒரு வருடமாகின்றது. அதுவும் இன்னமும் வழங்கப்படவில்லை. இதனை விரைவுபடுத்திப் பெற நடவடிக்கை எடுக்கின்றேன் என்று கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

மேலும், காணாமற்போனோரின் உறவுகள் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பிலும் அரச தலைவரிடம், எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார். இது தொடர்பிலும் கவனம் செலுத்துவார் என அரச தலைவர் குறிப்பிட்டார் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (வ-5-101)

## பால் புரைக்கேறி...

தும்பளை மணல் ஒழுங்கையில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் தாயார் குழந்தைக்குப் பாலூட்டிய பின்னர் குழந்தையை நித்திரையாக்கியுள்ளார். நேற்று அதிகாலை 3 மணியளவில் குழந்தை மூர்ச்சையுற்று இருப்பதனைக் கண்டு உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர், குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதை உறுதிப்படுத்தினார்- என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-4-26)

## பழைய மாணவர் சங்கத்தின் கலந்துரையாடல்

தென்மராட்சி ஏப். 16 மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் கல்லூரி அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் கல்லூரியின் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் உட்பட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (கு-9)

### விற்பனைக்கு

6 மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் விற்பனைக்குள்ளது.
தொடர்பு. 0772497082

### VACANCIES

இலங்கையின் பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் கிளைகளுக்கு

DEUTSCH TEACHER
FRENCE TEACHER
DUTCH TEACHER

தொடர்பு : 0777-596148
BRITISH COLLEGE OF EDUCATION
email.- britishcollegekandy@gmail

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடம், பலாலி வீதிக்கு அருகில் சகல வசதிகளுடன் 6 அறைகள் கொண்ட வீடு, காரியாலயத்திற்கு அல்லது குடியிருப்பதற்கு உகந்தது. வாடகைக்கு விடப்படவுள்ளது.
தொடர்பு: 077 680 5386

### உடனடி விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் லைட் எஞ்சின் நிலையத்தின் KWV-25, KWV-15, KWV-31 என்ஜின்களும் மற்றும் அதனுடன்சேர்ந்த பொருள்களும் விற்பனைக்கு உண்டு. 077 355 2981
இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

### காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, K.K.S.வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1- 3/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 711 1400

### போட்டோக்கொப்பி மெசின் விற்பனைக்கு

ரொசிபா போட்டோக்கொப்பி மெசின், கணினி கண்ணாடி சோக்கேஸ், அலுமாரிகள் விற்பனைக்கு
தொடர்பு: 077 116 3338

### வாடகைக்கு

யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 50m தூரத்தில் களஞ்சிய அறைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு :- 076 410 9374

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்துக்கு
* Bill Clerk
* அலுவலக உதவியாள்கள் தேவை.

தொடர்பு :- 077 325 8492

### வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள 10 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
*பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
077 494 1750, 021 224 1604

### வீடு விற்பனைக்குண்டு

சுன்னாகம் மேற்கு செல்லவளவில் ஒரு பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
077 038 0602, 077 063 7852

உடல் எடை குறைய வேண்டுமா?
உடல் எடை கூட வேண்டுமா?
தலைமுடி நன்றாக வளர வேண்டுமா?
முகத்தில் உள்ள கருமைநிறம் நீங்க வேண்டுமா?
அனைத்திற்குமான பக்க விளைவற்ற 100% ஆயுள்வேத ஔடதம் பாவித்து பலனடைய,

பதிவு இல. 16168
077 210 6155
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் ஆயுள்வேத உதவியாளராக கடமைபுரியும் **ந.மௌலீசன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பராசக்தி நடேசன்**

அவர்கள் 13.04.2017 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிசங்கம்**
**அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி.**

### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் சிவலிங்கம்**



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவலிங்கம் நேற்று 15.04.2017 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.55, ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

077 986 5206

## இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி

**ஒளி அழகன் ஸ்ரூடியோ**

**British College of Beauty Studies** இணைந்து நடத்தும் பெண்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்.

அழகுக்கலை | தையற்கலை | சிங்களம்
கேக்ஐசிங் | ஆங்கிலம் | சிகையலங்காரம்
Ladies Skills Development | சமயற்கலை



- அனைத்து பயிற்சி வகுப்புக்களும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சி அளிக்கப்படும்.
- 3, 6 மாதகால பயிற்சி வகுப்பாகவும் குறுகிய கால வகுப்பாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பை பெற கூடிய தரமான சான்றிதழை வழங்கி வருகின்றோம்.

01. Ladies Skills Development
02. Self Makeup
03. Self Hairstyle
04. Self Threading
05. Self Cleanup and Facial
06. Self Saree draping
07. Personality Development



புதிய பிரிவு நாளை 17.04.2017 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.
இணையும் மாணவர்களுக்கு Discount வழங்கப்படும்.

பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி

வயதெல்லை கிடையாது **076 701 1645**

கஸ்தூரியார் வீதி (உதயன் பணிமனை அருகில்), யாழ்ப்பாணம்.

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்புத்தெய்வமே இனிமையான சகோதரனே
ஈகை கொண்ட மைத்துனரே
அன்பான ஆசையப்பாவே ஆசைமாமாவே
உத்தம தோழனே
உங்கள் மாறா நினைவுகளுடன்
தவியாய்த் தவிக்கின்றோம்.



**கடந்த 14.03.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்**

**அமரர்**

**வயிரவி தவராசா**

**(ராசா)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் நோயுற்ற இருந்த வேளை அவருக்கு சிகிச்சை அளித்த யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கும், குறிப்பாக 10 ஆம் வாட் வைத்தியர்கள், தாதியர்கள் ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் துண்டுப்பிரசுங்களை வெளியிட்டவர்களுக்கும் எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரமனன் ஒடை, பூதர்மடம், கோப்பாய்.

**குடும்பத்தினர்.**

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 16

**கே.ஸி.ஸிஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

**நியூபைட் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நியூபைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் ஏ அணியை எதிர்த்து அல் இக்பால் ஏ அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண் சைய்ன் அணியை எதிர்த்து சுப்பர்ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)





# ஆவரங்கால் மத்தி. வென்றது கிண்ணம்

கரணவாய், ஏப். 16

கரவெட்டி வளர்மதி விளையாட்டுக் கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

கரவெட்டி வளர்மதி வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்டதாக இறுதி அமைந்தது.

முதல் செற்றை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. மூன்றாவது செற்றை 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்தியும், நான்காவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமதி விளையாட்டுக் கழகமும் கைப்பற்றின.

முதல் 4 செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளுடன் இருந்தன. ஆட்டத்தின் இறுதி செற்றைக் கைப்பற்றும் அணியே சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 15:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-108)

# தேசியத்துக்கு நேரடியாகச் செல்வதால் வீரர்களின் அனுபவம் இழக்கப்படுகிறது

*பெருவிளையாட்டு நடைமுறையில் விளையாட்டு ஆர்வலர்கள் கடும் விசனம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 16

பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் கோட்டமட்டம் இம்முறை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. சில விளையாட்டுக்கள் வலய மட்டத்தில் இருந்து ஆரம்பமாகின்றன. இன்னும் சில விளையாட்டுக்கள் நேரடியாக மாகாணத்துக்கும் பிறிது சில விளையாட்டுக்கள் நேரடியாக தேசியத்துக்கும் கொண்டுசெல்லப்படுவதால் வீர வீராங்கனைகளின் அனுபவத்தன்மை என்பது இல்லாமல் போகிறது என்று விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் சாடுகின்றனர்.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலின் படி நேரடியாக மாகாண மட்டத்தில் நடைபெறும் போட்டிகளாக சதுரங்கம், கராத்தே, பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், நீச்சல், எறிபந்தாட்டம், கரம், ஜிம்னாஸ்டிக், எரோபிக் ஜிம்னாஸ்டிக், ரகர், கபடி என்பன உள்ளன.

தேசிய மட்டத்தில் நேரடியாக நடைபெறவுள்ள போட்டிகளாக ரென்னிஸ், ஹொக்கி, கூடைப்பந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டம், மல்யுத்தம், குத்துச்சண்டை, ஜூடோ, தைக்கொண்டோ, பளுதூக்கல், உடற்பயிற்சி, சைக்கிள் ஓட்டம், அரைமரதன் போன்றன அமைந்துள்ளன.

இந்தப் போட்டிகளை வலயம், மாகாணம், தேசியம் என நடத்திய காலங்களில் வீர, வீராங்கனைகள் கூடுதல் அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுவந்துள்ளனர். ஆனால் இந்த வருடம் அவ்வாறில்லாமல் நேரடியாக மாகாண மற்றும் தேசியத்தில் நடைபெறுவதால் அனுபவத்தன்மை என்பது வீர வீராங்கனைகளுக்கு இல்லாமல் போகவுள்ளது. அத்துடன் விலகல் முறையில் நடத்துவதனால் சிறந்த அணிகள் முதல் சுற்றுக்களுடன் வெளியேறவும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக வடமாகாண உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "சில போட்டிகளை மாகாண மட்டத்தில் நடத்தி தேசியத்துக்கு அனுப்புவது என்று முடிவு செய்தோம். ஆனால் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலின் படி நேரடியாக தேசிய மட்டத்தில் பங்கேற்பதற்கான போட்டிக்கு மாகாண மட்ட போட்டியை நடத்தி சான்றிதழ் வழங்கினால் அந்தச் சான்றிதழ் செல்லுபடி அற்றதாகி விடும். இதனாலேயே கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய நாம் வடமாகாண போட்டிகளை நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம்" என்றார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற போதிலும் மாகாண மற்றும் தேசியத்தில் நேரடியாக பங்கேற்பதனால் சில நன்மைகளும் அடங்கியுள்ளன. சில போட்டிகளுக்கு வலயம் அல்லது மாகாணம் சார்பில் 3 அணிகள் மட்டுமே பங்கு பற்றலாம். அனால் புதிய நடைமுறையின்படி எத்தனை அணிகளும் தேசியத்தில் பங்கேற்க முடியும். இதனால் அதிகப்படியான அணிகளின் பங்குபற்றல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

(ம-422)



அக்கினிச் சிறகுகள் அமைப்பு நடத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், வடமராட்சி லீக்கில் இருந்து கரணவாய் கொலின்ஸ் அணி மாகாணமட்டச் சுற்றுக்குத் தகுதிபெற்றது. அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே கொலின்ஸ் அணி மாகாணமட்டச் சுற்றுக்குத் தகுதிபெற்றது. (ம-108)

# யாழ்ப்பாண மாவட்ட பி.செயலகங்களின் கரப்பந்தாட்டம்

கரணவாய், ஏப். 16

யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன. ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலகமும், சங்கானை பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும், காரைநகர் பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும், கரவெட்டிப் பிரதேச செயலகத்தை எதிர்த்து வேலணைப் பிரதேச செயலகமும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலகமும், யாழ்ப்பாண பிரதேச செயலகத்தை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலகமும் மோதவுள்ளன.

பெண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலகமும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து வேலணை பிரதேச செயலகமும், கரவெட்டிப்பிரதேச செயலகத்தை எதிர்த்து நெடுந்தீவுப்பிரதேசசெயலகமும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலகமும், சங்கானைப் பிரதேச செயலகத்தை எதிர்த்து தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் மோதவுள்ளன. (ம-108)







# தகுந்த வசதிவாய்ப்புக்கள் இல்லாதமையே கபடியில் சாதிக்காமைக்கு முக்கிய காரணம்

## சென். தோமஸ் அணியின் தலைவர் சுலக்சன் கவலை


சுலக்சன்

யாழ்ப்பாணம், ஏப். 16

"தகுந்தவசதிவாய்ப்புக்கள்கிடைக்காமல் இருப்பதாலேயே தேசியமட்ட கபடியில் சாதிக்க முடியாதுள்ளது" இவ்வாறு பருத்தித்துறை சென். தோமஸ்அணியின்தலைவர்சுலக்சன் தெரிவித்தார்.

பாடசாலைமட்டப்போட்டிகளில்வடமாகாணப் பாடசாலைகள் தேசியத்தில் சாதிக்கின்ற போதிலும் திறந்த வயதுப் பிரிவினருக்கான கபடியில் வடமாகாண அணிகள் சாதிக்கத் தவறுகின்றன. அவற்றில்வடமாகாணத்தில் சிறந்த அணிகளுள் ஒன்றாக உள்ள பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழகமும் உள்ளடங்குகிறது. வடமாகாணத்தில்இவர்களின்சாதனைதொடர்ந்த போதிலும் தேசிய மட்டத்தில் சாதனைபடைப்பதென்பதுஒருகனவாகவே அமைகிறது.

இது தொடர்பாக அந்த அணியின் தலைவர்சுலக்சனுடன்மேற்கொண்ட பிரத்தியேகசெவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமதுஅணியில்இருக்கும்வீரர்கள் விளையாட்டை வருமானத்தை நோக்கமாகக் கொண்டு விளையாடுவதில்லை. அதே நேரம் வீரர்களுக்கான நிதி உதவியையும் எவரும் வழங்க முன்வருவதில்லை. எமது வீரர்கள் பலரின் வாழ்வாதாரம்கடற்றொழிலையும்கூலிவேலையையும் நம்பியதாகவே உள்ளது. பாடசாலைமட்டப்போட்டிகளில்எல்லோரும்ஒரேவலு, ஒரேபோசணை, ஒரே சிந்தனை என இருப்பவர்கள் தான் பங்கு பற்றுகிறார்கள்.

ஆனால் தேசியத்தில் கடற்படை அணி, பொலிஸ் அணி, இராணுவ அணி, போன்ற பலம்மிக்க அணிகளுடன்நாம்போட்டியிடுகின்றோம். இவர்கள்அரசஊதியத்துடன்விளையாட்டில் ஈடுபடுகின்றனர். ஆனால் நாங்கள் அவ்வாறில்லை. போட்டியில் கலந்து கொள்ளும் நாட்களில் கூட நாம் தொழிலுக்குச் சென்று வந்தே கலந்து கொள்கின்றோம். இதனால்உடலளவிலும்நாம்சோர்வடைகிறோம். எமதுஅணிக்குஎன பிரத்தி யேக அனுசரணையாளர்கள் இருந்தால் அது மிகச் சிறப்பாக இருக்கும். செயற்கையான மைதானம்இல்லாமையினாலும்எம்மால் சாதிக்க முடியாதுள்ளது. எனவே வடமாகாணத்தில் விளையாட்டை வளர்க்க வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர்கள், விளையாட்டு வீரர்கள் அல்லது அணிகளை தெரிவு செய்து அவர்களுக்கான பயிற்சி, பொருளாதாரம், உபகரணங்கள் என்பவற்றை வழங்கும் போது வடமாகாணம் கபடியிலும் ஏனைய விளையாட்டுக்களிலும் சாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-422)

# நரைன், யாதவ் சுழலில் மடங்கியது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்றஆட்டத்தில்கொல்கத்தாவின்சுழல்பந்துவீச்சுத்தாக்குதலில் அடங்கிப் போனது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கொல்கத்தாவின் ஆரம்ப வீரர்களாக நரைன் மற்றும் கம்பீர். 6 ஓட்டங்களுடன் புவனேஸ்வர் குமாரின் பந்துவீச்சில்போல்ட்செய்யப்பட்டார்நரைன். 15 ஓட்டங்களுடன் கம்பீரை வெளியேற்றினார் ரசிட் கான். உத்தப்பா, மனீஸ்பாண்டேஇணைஅணியை சரிவில் இருந்து மீட்டெடுத்தது. மனிஸ் பாண்டே இலக்குச் சரிவில்லாமல்காத்துநிற்க மறுமுனையில் அடித்தாடினார் உத்தப்பா. அவரின் அரைச்சதம் 27 பந்துகளில் பதிவானது. 68ஓட்டங்களுடன்உத்தப்பா ஆட்டமிழந்தார். 46 ஓட்டங்களுடன் பாண்டே பவிலியனுக்குத் திரும்பினார். முடிவில் 6 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது கொல்கத்தா.

பந்துவீச்சில்புவனேஸ்வர்குமார்3 இலக்குகளையும், நெக்ரா, கட்டிங், ரசிட் கான் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத்துக்கு ஆரம்ப வீரர்களான வோர்ணர் மற்றும் தவான் இருவரும் அதிரடி காட்டவில்லை. வோர்ணர், தான்சேர்த்த26ஓட்டங்களுக்காக 30 பந்துகளையும், தவான், தான் சேர்த்த 23 ஓட்டங்களுக்காக 22 பந்துகளையும் எடுத்துக் கொண்டனர். யுவராஜ் அடித்தாடி ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முனைந்தார். அவராலும் நிலைக்க இயலவில்லை. அவர்26ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பப்பட்டார். 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை நிலைத்தாலும் 155 ஓட்டங்களையே ஹைதராபாத்தால் எடுக்க முடிந்தது.

நரைன் 4 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 18 ஓட்டங்களையும், குல்தீப் யாதவ்4பந்துப்பரிமாற்றங்கள்வீசி 23 ஓட்டங்களையும் மட்டுமே விட்டுக்கொடுத்தனர். (ம)






# டோனிக்கு சேவாக் ஆதரவு

ஐ.பி.எல். தொடரில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி பலரின் விமர்சனங்களுக்குஆளாகியுள்ளடோனிக்கு சேவாக்தனது ஆதரவைத்தெரிவித்தார். டோனி மீதான விமர்சனங்கள் அவர் இல்லாத இந்திய அணியை உருவாக்குவதற்கானஅச்சாரமே. அவர்இல்லாமல்இந்தியஅணிசம்பியன்ஸ்கிண்ணத்தொடரில் (மினி உலகக்கிண்ணத்தில்) களமிறங்கும் என்று எதிர்பார்க்காதீர்கள். அவர் ஓர் ஆபத்தான வீரர். அவர் போன்ற வீரர்களின் திறமையை ஐ.பி.எல்லை வைத்து மதிப்பிடக்கூடாது என்று சேவாக் நேற்றுத் தெரிவித்தார். (ம)

# கலைமதியின் கால்பந்தாட்டம் மிக விரைவில்

கரணவாய், ஏப். 16

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)

# புனேக்கு மற்றொரு தோல்வி குஜராத்திடம் சரணடைந்தது

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்திடம் தோல்வியடைந்தது புனே.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 8 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைச் சேர்த்தது. அணித்தலைவர் சிமித் பெற்ற 43 ஓட்டங்களே அதிகபட்சம். அவரைவிட திரிபதி 33 ஓட்டங்களையும், திவாரி 31 ஓட்டங்களையும் பெற்றனர். டோனியால் முடிந்தது வெறும் 5 ஓட்டங்கள் மட்டுமே.

பந்துவீச்சில் ரை 5 இலக்குகளையும் பிரவீன் குமார், ஜடேயா, டுவைன் சிமித் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் 12 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது. ஆரம்ப வீரரான மக்கலம் 49 ஓட்டங்களையும் சக ஆரம்ப வீரர் சிமித் 47 ஓட்டங்களையும் குவித்தனர். அணித்தலைவர் ரெய்னா ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களைச் சேர்த்தார். (ம)



# கிரன் பொலார்ட் அதிரடியாட்டம் பெங்களூரை வென்றது மும்பை

## பத்ரியின் ஹற்றிக் வீண்

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்றது மும்பை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. பெங்களூர் அணியில் ஆரம்ப வீரர்களாக கெய்ல் மற்றும் கோக்லி. தான் சேர்த்த 22 ஓட்டங்களுக்காக 27 பந்துகளை எடுத்துக்கொண்டார் கெய்ல். வில்லியர்ஸும் ஏமாற்றினார்.

21 பந்துகளை எதிர்கொண்ட அவர் வெறும் 19 ஓட்டங்களையே பெற்றுக்கொடுத்தார். அணித்தலைவர் கோக்லி அரைச்சதம் கடந்தார். அவரின் ஆட்டமொன்றே பெங்களூருக்கு ஆறுதல் கொடுத்தது. 62 ஓட்டங்களுடன் கோக்லி ஆட்டமிழந்தார். முடிவில் 5 இலக்கு களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

பந்துவீச்சில் மக்கெலிநகன் 2 இலக்குகளையும், குருனல் பாண்டியா, ஹார்டிக் பாண்டியா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணியின் ஆரம்ப வீரரான பட்லர் பின்னியால் வீழ்த்தப்பட்டார். மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பந்துகளில் முறையே பார்திவ் பட்டேல், மக்கெலிநகன், ரோகித் சர்மா ஆகியோரை வீழ்த்தி ஹற்றிக் படைத்தார் பத்ரி. 33 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்தது மும்பை. குருநல் பாண்டியா, பொலார்ட் இணைந்து ஆட்டத்தின் போக்கை மாற்றினர். அரைச்சதம் கடந்தார் பொலார்ட். அவர் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிக்சர் விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ஹார்டிக் பாண்டியா. (ம)

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான A1 டொச் பரீட்சைக்கு ஏற்ற வகையில் திரு.S. கோணேஸ்வரன் அவர்களால் இலகுவான வழியில் கற்பிக்கப்படுகிறது.

தொடர்பு: ஆரியகுளம் சந்தி
(புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி) யாழ்ப்பாணம்.
077 970 7322

**வீடு வாடகைக்கு**

767,மானிப்பாய் வீதி ,ஆறுகால்மடம் ,யாழ்ப்பாண முகவரியில் உள்ள Modern Hospital வளவுள் இயற்கை தழுவும் மாஞ்சோலை,தென்னம் சோலையில் உள்ள ஐந்து அறைவீடு, அறைகளில் மின்விசிறி இணைந்த மலசலகூடம், சவர் ஆகிய வசதிகளை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.பொருத்தமானவர்கள் நேரில் வரவும்.

மருத்துவர் கைபேசி எண் . 077 4833 303

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா

**Video Editing**

பயிற்சி முடிவில் 100% வேலைத் திறனிற்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்

10 Days
20 Hours

Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Looks, Adorage filter, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Gold Make-up, Song Editing Technic, Blu-ray Burning

AUTODESK 3DS MAX
3D Building Modeling & Animation

விபரங்களிற்கு: MCS IT Campus-Jaffna 0773903123

**VACANCY**

We are printing and advertising centre &
we have the following vacancy

**Receptionist**

Preferably a female below 25 years of age
Good speaking skill
Basic computer knowledge (Ms Office)
G.C.E. A/L

உங்கள் சுயவிபரக்கோவையுடன் இம்மாதம் 20,21 திகதிகளில் காலை 9.00 மணிக்கு நேரில் சமூகமளிக்கவும்

ideaS ADVERTISING & PRINTING
936A, K.K.S Road, Naachimar Kovil, Jaffna.
(near the naachimar kovil )
021 222 7788

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

**பிரெஞ்சு மொழி**

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCHEMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTI FICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)
International Diploma A I பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4200/= ஏனையோருக்கு 10800/= யாழில் எங்கு படித்தாலும்இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்

ஆரம்பம் சில தினங்களில், உடன் அழைத்து பதியவும்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

## மரண அறிவித்தல்கள்

### கைலாசபிள்ளை இரத்தினசிங்கம் (நடேசு)



மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது இல.01,பணிக்கர்வளவு,திருநெல்வேலியை வசிப்பிடமாகவும்கொண்ட கைலாசபிள்ளை இரத்தினசிங்கம் (நடேசு) நேற்று (15.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய கைலாசபிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ் சென்றவர்களாகிய கணபதிப்பிள்ளை செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற நாகேஸ்வரியின் (சின்னம்மா) அன்புக்கணவரும் பவானியின் அன்புத் தந்தையும் தனரங்கனின் அன்பு மாமனாரும் கஜா, கிஷானி, லிஷானி, ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற தவமணி, பாக்கியவதி, மகேஸ்வரி (மணி), தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவக்கொழுந்து, பாக்கியம், காலஞ்சென்ற செல்லையா காலஞ்சென்ற இராசரத்தினம்; இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01, பணிக்கர்வளவு,
திருநெல்வேலி.

தகவல்:
தனரங்கன் (மருமகன்)

077 169 8165 , 076 8851424

### திருமதி துவாரகை (துளசி) ஜெயக்குமார்

( இணுவில் மேற்கு)



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி துவாரகை (துளசி) ஜெயக்குமார் (14.04.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கு ஜெயக்குமாரின் அன்புமனைவியும் விநாயகமூர்த்தி - மல்லிகாதேவி தம்பதியரின் அன்பு மகளும் சண்முகரத்தினம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் அனுக்சயன், லக்சயன் ஆகியோரின் அன்புத்தாயும் யுகானந்தன், கயல்விழி (பிரான்ஸ்) காலஞ்சென்ற மலர்விழி மற்றும் சதாநந்தன், வதனி (ஆசிரியை கிளி/கனகாம்பிகை ம.வி), குகானந்தன் (அமெரிக்கா), ரதிகரன் (அமெரிக்கா), கீர்த்திசன் (அமெரிக்கா), அருள்சோதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாளினி (செல்லா), சுபாஜினி, றொபியா (அமெரிக்கா), ரங்கநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2017) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. ஜெயக்குமார் ( கணவர்)

**வாடகைக்கு**

யாழ்நகரின் மத்தியில் கடைகள் வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும். ஏற்றது. தொடர்புகளுக்கு 0777651826

**வேலையாள்கள் தேவை** கனகராயன்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணியாளர்கள் தேவை.
01. முகாமையாளர் (ஆங்கிலம்/சிங்களம் பேசத்தெரிந்தவர்)
02. தேநீர் தயாரிப்பாளர் (Teamaker)
03. உணவு பரிமாறுபவர்
தொடர்பு- 077 606 9188/077 308 6837

**வேலையாள் தேவை**

செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் இடத்திற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு : 021 791 2997

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் Sisilworld நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. வயது 25இற்கு உட்பட்டவர்கள்.
தொடர்புகளுக்கு: 077 248 7854

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில், தென் கிழக்கு பகுதியில் நிலப்பரப்பு 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்த காணி பொற்பதி றோட்டில் அமைந்துள்ளது. (தாயகத்திற்கு அருகில்)
077 220 8432, 077 791 7691, 077 390 2994

**CCTV TECHNICIAN COURSE**

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
16th Batch : 03-May-2017

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021-7306000, 076-7013060

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.